# சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி



## கடந்த 50 ஆண்டுகள்
## (1965 – 2015)


STTU

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

Singapore Tamil Teachers' Union

சிங்கப்பூரில் கடந்த 50 ஆண்டுகளாகத்
தமிழ்மொழிக் கல்வியில்
ஏற்பட்ட வளர்ச்சியையும் மாற்றங்களையும்
ஆவணப்படுத்தும் 25 கட்டுரைகள்.

# சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி - கடந்த 50 ஆண்டுகள் (1965 - 2015)

STTU

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்
Singapore Tamil Teachers' Union

**An archival project by:**

Singapore Tamil Teachers' Union

**Copyright ©2016**

All rights reserved. This publication or any part of this publication shall not be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without prior written permission of the copyright owner.

All information contained in this publication is correct at the time of printing.

For further queries or permission to use material from the book please contact us:
sttu.gensec@gmail.com

ISBN: 978-981-11-1370-3

# நூற்பதிப்புக் குழு

**மதியுரைஞர்கள்**

முனைவர் சுப. திண்ணப்பன்
சி. சாமிக்கண்ணு

**நிர்வாக ஆசிரியர்கள்**

முனைவர் பொன். சசிகுமார்
தனபால் குமார்

**பதிப்பாசிரியர்**

சுப. நல்லுராஜ்

**கட்டுரையாசிரியர்கள் :**

முனைவர் சுப. திண்ணப்பன், சி. முத்தையா, சி. சாமிக்கண்ணு,
த. வேணுகோபால், கோ. கிருஷ்ணமூர்த்தி, புஷ்பலதா சரவணன்,
நந்தினி இளங்கோவன், சி சுப்புலட்சுமி, மு.தமிழ்வாணி , செ.உஷாராணி,
மஞ்சுளா தங்கப்பன், சிலம்பாயி முத்துசாமி, இரத்தினமாலா பரிமளம்,
ஜமுனாராணி ஜெயகுமார், சுப்பிரமணியம் நடேசன், முனைவர் பொன். சசிகுமார்,
ம.ஞானசேகரன், முனைவர் ரா.விமலன், முனைவர் க.ஷண்முகம்,
முனைவர் சீதா லட்சுமி, தமிழரசி சுப்பிரமணியம், ஜெயராஜதாஸ் பாண்டியன்,
முனைவர் மா. இராஜிக்கண்ணு, கலைமணி இரத்தினசாமி,
முஹைதீன் நிசார் அன்வர்,
கலாரத்னா செ.ப. பன்னீர்செல்வம்,
மீனாட்சி சபாபதி, பொன் சுந்தரராசு.

# அணிந்துரை

தமிழ்க் கல்வி என்னும் தொடருக்குத் தமிழ்வழிக் கல்வி, தமிழ்மொழிக் கல்வி, தமிழ் பற்றிய கல்வி என மூவகையாகப் பிரித்துப் பொருள் காணலாம். தமிழ்வழிக் கல்வி என்பது தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதாகும். தமிழ்மொழிக் கல்வி என்பதோ தமிழ்மொழியில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களைக் கற்பிப்பதாகும். தமிழைப் பற்றிய கல்வி என்பது தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியியல், பண்பாடு முதலிய-வற்றைத் தமிழிலோ பிறமொழியிலோ கற்பிப்பதாகும்.

நம் சிங்கையில், தமிழ்வழிக் கல்வி தொடக்க காலத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட பள்ளிகளில் தொடக்க நிலையிலும் உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளியிலும் இருந்தது. இப்போது இல்லை என்பதை நாம் அறிவோம். எனினும் இன்று தமிழ்மொழிக் கல்வி பயிற்றுவிக்கும் ஆங்கில வழிப் பள்ளிகளில் தொடக்கநிலை அறநெறி தொடர்பான பாடம் தமிழ்வழி பயிற்றுவிக்கப்படுகிது. நம் குடியரசின் இருமொழிக் கல்விக் கொள்கை காரணமாகத் தமிழ் மொழிக் கல்விச் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் சிறப்பாகப் பாலர் பள்ளி முதல் தொடக்கக் கல்லூரி வரை உள்ளது. 25000க்கு மேற்பட்ட மாணவர்களும் 750க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக் கழகத்திலும் தமிழால்லாதார் இரண்டாம் மொழி நிலையில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் பற்றிய கல்வி, தமிழ் இளங்கலைப் பகுதிநேரப் பட்டப்படிப்பு யுனிசிம் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டுப் பலர் பட்டம் பெற்றுள்ளனர். தேசியக் கல்விக் கழகத்தில் இந்த ஆண்டு ஆசிரியப் பயிற்சிப் பட்டயத்துடன் கூடிய இளங்கலைப் பட்டப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் முதுகலை, முனைவர் பட்டம் பெற்றவர்களும் உளர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்திலும் விருப்பப் பாடமாக உள்ளது.

இம்மூவகைத் தமிழ்க் கல்விக்கும் உரிய பாடத்திட்டம் கலைத்திட்டம், பயிற்றுக் கருவிகள் உருவாக்கம், பயிற்று முறைப் பயிற்சித்திட்டம், கணிப்பு, மதிப்பீடு, தொழில்நுட்ப துணைநிலை ஆகியவற்றை உருவாக்கும் பணிகளில் படிப்படியான வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் சென்ற ஐம்பது ஆண்டுகளில் நம் சிங்கையில் காண முடிகின்றது. நம் சிங்கை அரசின் உன்னத நிலைக் கொள்கைக்கு இணங்க இவை தரத்தால் உயர்ந்து காணப்படுகின்றன. அனைத்துலகத் தமிழ்க் கல்வி-யாளர்களின் பாராட்டினையும் பெற்று விளங்குகின்றன. அமெரிக்கா, கனடா முதலிய நாடுகளிலுள்ள தமிழ்ப் பள்ளிகளாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எனவே இந்தத் தமிழ்க் கல்வியின் பல்வேறு வகையான வளர்ச்சி நிலைகளை வரலாற்று நோக்கில் ஆவணப்படுத்தும் நோக்கத்திலும், இளையர் பலரும் அறிய வழி செய்யும் எண்ணத்திலும் சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் பல தமிழாசிரியர்-

களைக் கொண்டு இந்தக் கூறுகள் பற்றிக் கட்டுரை எழுதச்செய்து அவற்றைத் தொகுத்து ஓர் அரிய நூலக வெளியிட இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறேன். சென்ற ஆண்டு பொன்விழாக் கொண்டாடிய நம் சிங்கைத்தாய்க்கு – தமிழை அதிகாரத்துவ மொழியாக ஆக்கி அகமகிழும் சிங்கை அன்னைக்கு நல்லதோர் பொன்விழாப் பரிசாக இந்நூல் இலங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்நூலை எல்லாரும் வாவழிப் படித்துப் பொன்போல் போற்றிப் பயன்பெறுவார்கள் என நம்புகிறேன். சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்திற்கு இந்தச் சிறந்த தமிழ்பணியைச் செய்து முடித்தமைக்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் சுப. திண்ணப்பன்
சார்புநிலைப் பேராசிரியர்,
சிம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

# முன்னுரை

சிங்கப்பூர் விடுதலை பெற்று 50 ஆண்டுகள் ஆகின்றன. கடந்த அரை நூற்றாண்டில் இங்குத் தமிழ்மொழிக் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறை இயங்கத் தொடங்கியது. தமிழாசிரியர்-கள் இந்தியா சென்று தமிழில் பட்டக்கல்வி பெறுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. கல்வி அமைச்சு பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தை அமைத்து தமிழ்மொழிக்குப் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், கற்பித்தல் வளங்கள் ஆகியவற்றை உருவாக்கியது. தமிழ்மொழிக்கு மூன்று முறை பாடத்திட்ட மறுஆய்வுகள் நடைபெற்றுள்ளன. தமிழாசிரியர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்வதற்குச் 'சிம்' பல்கலைக் கழகம் தமிழ்த்துறையைத் தொடங்கியது. இவ்வாண்டுமுதல் கல்விக் கழகத்தில் பயிற்சி பெறும் மாணவ ஆசிரியர்களுக்குத் தமிழில் முழுநேரப் பட்டக் கல்வியைத் தொடங்கியிருப்பதும், கல்வி அமைச்சில் துணை இயக்குநர், உதவி இயக்குநர்கள், நிலைய இயக்குநர், தலைமை முதன்மையாசிரியர் ஆகிய பதவி உயர்வுகளைத் தமிழாசிரியர்கள் பெற்றிருப்பதும் அம்மாற்றங்களுள் சிலவாகும்.

தமிழ் கற்றல் கற்பித்தல் பற்றிய விவாதங்கள் உலக அளவில் நடைபெற-வேண்டும் என்பதற்காகச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் தொடங்கிய உலகத் தமிழாசிரியர் மாநாடு கடந்த 25 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது. இந்த மாநாடு சிங்கப்பூரைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு இயங்கிவருகிறது. வருடந்தோறும் தமிழ்மொழி விழாவை ஒருங்கிணைத்து நடத்திவரும் வளர்தமிழ் இயக்கம் தோன்றுவதற்கு மூல காரணமாக இருந்தது சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் தொடங்கிய தமிழில் பேசுவோம் என்ற இயக்கம் ஆகும்.

இவற்றையெல்லாம் ஆவணப்படுத்தும் முகத்தான் பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல் ஆகும். கட்டுரைகளை எழுதியவர்களுக்குச் சங்கம் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த நூல் முழுமையானது என்று கூறவியலாது. ஆகவே, எதிர்காலத்தில் சிங்கப்பூரில் தமிழ்க் கல்வியைப் பற்றி மேலும் விரிவான தகவல்களையும் தரவுகளையும் கொண்ட ஒரு முழுமையான நூல் வெளிவரவேண்டியது அவசியமாகும். அதற்குத் சிங்கப்பூர்த் தமிழாசரியர் சங்கம் தன்னாலான ஆதரவை நிச்சயம் அளிக்கும்.

**சி சாமிக்கண்ணு**
தலைவர்
சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | சிங்கப்பூரில் தமிழ்<br>முனைவர் சுப. திண்ணப்பன் | 1 |
| 2. | சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி : தோற்றமும் வளர்ச்சியும்<br>சி. முத்தையா | 5 |
| 3. | சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் தமிழ்மொழிக் கல்வியும்<br>சி. சாமிக்கண்ணு | 13 |
| 4. | தமிழ்மொழிக் கல்வியும் மறுஆய்வு நடவடிக்கைகளும்<br>த. வேணுகோபால், கோ. கிருஷ்ணமூர்த்தி | 17 |
| 5. | பாலர் பள்ளித் தமிழ்க் கல்வி<br>புஷ்பலதா சரவணன், நந்தினி இளங்கோவன் | 23 |
| 6. | தொடக்கப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டம்<br>சி சுப்புலட்சுமி | 29 |
| 7. | தொடக்கப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கம்<br>தமிழ்வாணி, உஷாராணி | 39 |
| 8. | தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பயிற்றுமுறைகள்<br>மஞ்சுளா தங்கப்பன் | 45 |
| 9. | உயர்நிலைப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டம்<br>சிலம்பாயி முத்துசாமி, இரத்தினமாலா பரிமளம் | 53 |
| 10. | உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கம்<br>சிலம்பாயி முத்துசாமி, ஜமுனாராணி ஜெயகுமார் | 61 |
| 11. | உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பயிற்றுமுறைகள்<br>சுப்பிரமணியம் நடேசன் | 69 |
| 12. | தொடக்கக் கல்லூரிகளுக்கான பாடத்திட்டமும் பாட வளங்களும்<br>ம. ஞானசேகரன், முனைவர் பொன். சசிகுமார் | 75 |

| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|


13. தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத்திட்டம் (NETP) 81
முனைவர் ரா. விமலன்

14. பல்கலைக்கழகங்களில் தமிழ்க் கல்வி 85
முனைவர் க. ஷண்முகம்

15. தேசியக் கல்விக் கழகத்தில் தமிழாசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் 93
முனைவர் சீதா லட்சுமி

16. தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாடு – அன்றும், இன்றும் 105
தமிழரசி சுப்பிரமணியம்

17. தமிழ்மொழிக் கல்வியில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் பங்கு 113
ஜெயராஜதாஸ் பாண்டியன்

18. தமிழ்மொழிக் கல்வியும் தேர்வுகளும் 121
முனைவர் மா. இராஜிக்கண்ணு

19. தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சியில் கணினி மென்பொருள்கள் 127
கலைமணி இரத்தினசாமி

20. பள்ளிக் குழும நடவடிக்கைகள் 133
முஹைதீன் நிசார் அன்வர்

21. ஊடகங்களில் தமிழ்மொழிக் கல்வி - வானொலி 139
கலாரத்னா செ.ப. பன்னீர்செல்வம்

22. ஊடகங்களில் தமிழ்மொழிக் கல்வி - தொலைக்காட்சி 145
மீனாட்சி சபாபதி

23. தமிழ்க் கல்வி வளர்ச்சியில் அமைப்புகளின் சீரிய பங்கு 151
மு. அ. மசூது

24. சிங்கப்பூரில் தமிழ் வளர்த்த அறிஞர்கள் 161
முனைவர் மா. இராஜிக்கண்ணு

25. சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் தமிழாசிரியர்கள் 169
பொன் சுந்தரராசு

# சிங்கப்பூரில் தமிழ்

**முனைவர் சுப. திண்ணப்பன்**
சார்புநிலைப் பேராசிரியர்,
சிம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

சிங்கப்பூரில் தமிழ் ஓர் அதிகாரத்துவ மொழித் தகுதி பெற்றுள்ள காரணத்தால் தமிழ்மொழியும், தமிழ் இலக்கியமும் பெற்ற பேறுகள் பலவாகும். அரசாங்கத்தின் இருமொழிக் கொள்கை காரணமாகத் தமிழ் இன்று ஏறத்தாழ 140க்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிகளிலும் 93க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளிலும் 12 மொழி நிலையங்களிலும் 16 தொடக்கக் கல்லூரிகளிலும் தாய்மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இக்கல்வி நிலையங்களில் ஏறத்தாழ 25,000 மாணவர்கள் தமிழ்மொழி பயில்கிறார்கள். ஏறத்தாழ 750 தமிழாசிரியர்கள் பணிபுரிகின்றார்கள்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் தெற்கு ஆசிய இயல் துறையிலும், மொழிகள் படிப்பு நிலையத்திலும் தமிழ்மொழி, தமிழியல் பாடங்கள் விருப்பப்பாடங்களாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியான தேசியக் கல்விக் கழகத்தின் தமிழ்மொழிப் பிரிவு தமிழாசிரியர்களுக்கு உரிய பயிற்சிப் பட்டயப் படிப்பு கற்பிப்பதுடன், தமிழ் கற்றல், கற்பித்தல், மொழி இலக்கியம் தொடர்பான ஆய்வுகளும் செய்துவருகிறது. மேலும், இளங்கலை (கல்வியியல்) பட்டப் படிப்பு, கல்வியியல் முதுநிலை, முனைவர் பட்டக்கல்வி வகுப்புகளும் நடத்தி வருகிறது. யுனிசிம் பல்கலைக் கழகம் தமிழ் இளங்கலை (பி.ஏ) பட்டப்படிப்பினைப் பகுதி நேரப் படிப்பாக நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையங்களில் மொழி மட்டுமின்றி இலக்கியமும் வளர்ச்சி பெற வழி வகுக்கப்படுகின்றது.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் தமிழில் உறுப்பினர்கள் பேசுவதற்குரிய வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் தமிழில் பேசுவதையும் பிற மொழிகளில் பேசுவதையும் உடனடி மொழிப்பெயர்ப்புச் செய்யும் பணியும் இருந்து வருகிறது.

அரசாங்க அலுவலகங்கள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் முதலான கல்வி நிலையங்களில் அறிவிப்புகள் முதலியன நான்கு அதிகாரத்துவ மொழிகளிலும் இடம்பெற்றிருப்பதைச் சிங்கப்பூரில் பார்க்கலாம். பெருவிரைவுப் போக்குவரத்து இரயிலிலும் தமிழில் அறிவிப்புச் செய்யப்படுகின்றது. சென்னை, கோவை முதலிய தமிழகப் பகுதிகளுக்குச் செல்லும் சிங்கப்பூர் வானூர்திகளில் தமிழில் அறிவிப்புகள் செய்யப்படுவதுடன் தமிழிசை கேட்கவும் தமிழ்த் திரைப்படம் பார்க்கவும் வசதிகள் உள்ளன. பெருவிரைவுப் போக்குவரத்து இரயில்களில் (எம்.ஆர்.டி) தமிழ் எழுத்தாளர்களின் கவிதைகள் சில இடம்பெற்று உலா வருகின்றன.

தமிழ்மொழிப் பாடநூல்களும் பயிற்றுக் கருவிகளும் சிங்கப்பூரிலேயே உருவாக்கப்படுகின்றன. உலகிலேயே தமிழ் கற்றல் கற்பித்தலுக்கு அதிக அளவில் தரமான பயிற்றுக் கருவிகளை உருவாக்கித் தந்த பெருமை சிங்கப்பூருக்கு உண்டு. தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தையும் இணையத்தையும் மிகுதியாகப் பயன்படுத்தி வரும் நாடு சிங்கப்பூரே ஆகும். தொடக்கநிலை மாணவர்களுக்குத் தமிழ்மொழிப் பாடத்துடன் அறநெறிக் கல்வியும் தமிழில் பயிற்றுவிக்கப்படுகின்றது. எனவே அறநெறிக் கல்வி தொடர்பான பயிற்றுக் கருவிகளும் தமிழில் உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்றுக் கருவிகளிலும் தமிழ் இலக்கியக் கூறுகள் இடம்பெற்றுள்ளன.

சிங்கப்பூரில் தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவை செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி முதலிய ஊடகங்களே ஆகும். *சிங்கை நேசன், தமிழ் முரசு, தமிழ் மலர், மலாயா நண்பன், தமிழ் நேசன்* முதலிய தமிழிதழ்கள் சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் சார்ந்த பகுதிகள் அவ்வவ்போது வெளியிட்டு எழுத்தாளர்கள் தொடர்ந்து படைப்புகளை உருவாக்க உதவியுள்ளன. இப்போது 'தமிழ் முரசு' என்னும் செய்தித்தாள் மட்டுமே உள்ளது. அது தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களால் 1935இல் தோற்றுவிக்கப்பட்டது. *மாணவர் மணி மன்றம்* பகுதியை இணைப்பாக வெளியிட்டு மாணவர்களின் இலக்கியப் படைப்புகள் வெளிவரத் *தமிழ் முரசு* உதவி வருகிறது. வானொலியிலும், தொடர் நாடகங்கள் சிறுகதைகள், கவிதைகள் ஒலிபரப்பப்படுகின்றன. தொலைக்காட்சியிலும் இவ்வகை முயற்சிகள் தொடரப்பட்டு வருகின்றன. எனவே இந்த ஊடகங்களின் பணி இங்கு இலக்கிய வளர்ச்சிக்கு பலவகைகளிலும் உரமாக இருந்துள்ளதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

சிங்கப்பூரில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்கம் நல்லாதரவு நல்கி வருகிறது. இலக்கியம், கலை ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களுக்குக் 'கலாச்சார விருது' (Culture Medallion) வழங்குகிறது. தமிழ் எழுத்தாளர்கள் இதுவரை ஆறு பேர் இந்த விருது பெற்றுள்ளனர். மேலும் தேசிய புத்தக மேம்பாட்டுக் கழகம் சிறந்த புத்தகங்களுக்கான விருது (National Book Development Council Award) வழங்கிப் படைப்பாளர்களை ஊக்குவித்துள்ளது. மேலும் ஈராண்டுகளுக்கு ஒருமுறை சிங்கப்பூர்ப் புத்தகப் பரிசு என்று 10,000 வெள்ளிப் பரிசினை நான்கு மொழிப் புத்தகங்களுக்கும் வழங்கி வருகிறது. இதனால் தமிழ் இலக்கியப் புத்தகங்களும் பரிசு பெற்றுவருகின்றன. சிங்கப்பூர்த் தேசிய கலை மன்றம் (National Arts Council) 1986 முதல் ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடத்திவரும் எழுத்தாளர் வாரம் என்னும் நிகழ்ச்சிக்கு வெளிநாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் இருவரும் உள்ளூர் எழுத்தாளர்கள் இருவரும் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்படுகின்றனர். அவர்கள் எழுத்தாளர்க்கு ஏற்ற பயிலரங்கு, நூல் வாசிப்பு முதலிய நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடவும் கலை மன்றம் மானியம் வழங்கி வருகின்றது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே வழங்கப்படும் ஒரு மதிப்புமிக்க விருது தென்கிழக்கு ஆசிய இலக்கிய விருது (South East Asia Write Award). இது

1979லிருந்து தாய்லாந்து மன்னரால் வழங்கப்பட்டு வருகிறது. தென்கிழக்கு ஆசியாவில் ஆசியான் கூட்டமைப்பில் உள்ள இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, புருனை, மியான்மார், கம்போடியா, லாவோஸ் முதலிய நாடுகளின் அதிகாரத்துவ மொழிகளில் படைக்கப்படும் தலைசிறந்த இலக்கியங்களை உருவாக்கிய எழுத்தாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பாளர்கள் மட்டுமே இவ்விருதைப் பெறும் தகுதியை உடையவர்களாகத் திகழ்கின்றனர். காரணம் தென்கிழக்காசிய நாடுகளில் சிங்கப்பூரில் மட்டுமே தமிழ் அதிகாரத்துவ மொழியாக உள்ளது. இதன் காரணமாக இதுவரை ஏழு தமிழ் எழுத்தாளர்கள் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர், தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் நாடு. அதனால் இணையத்தில் தமிழ் இலக்கியப் பக்கங்கள், 2.2.96 முதல் சிங்கப்பூர் அந்நாளைய அதிபர் ‘ஒங் டெங் சியோங்’ அவர்களால் திறக்கப்பட்டு உலா வரத் தொடங்கின. தேசிய நூலக வாரியமும் சிங்கப்பூர் இலக்கியங்களைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டுப் பாதுகாக்கும் பணியைச் செய்து வருகிறது.

சிங்கப்பூர் அரசின் சார்பாக இயங்கும் வளர்தமிழ் இயக்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம் முதலிய சமூக அமைப்புகளும் அவ்வவ்போது பல இலக்கிய நிகழ்ச்சிகள், ஆய்வரங்குகள் நடத்திச் சிங்கையில் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன. சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகக் கலை மன்றம் ‘Singa’ என்னும் ஆங்கில இதழ் வாயிலாகத் தமிழ் இலக்கியம் பற்றிய செய்திகளையும், படைப்புகளையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வெளியிட்டு வருகிறது. மேலும் சிங்கப்பூர்க் கவிதைகள், நாடகங்கள், புனை கதைகள் ஆகியவற்றில் நான்கு மொழிப் படைப்புகளையும் ஆங்கில மொழியாக்கத்துடன் அவ்வவ்போது தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

இவ்வாறு பல்லாற்றானும் வளர்ந்து வரும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் தோற்றத்தையும் வரலாற்றையும் தொகுத்துக் காணும் முயற்சிக்கு விதையாக நா.கோவிந்தசாமி, சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை 1973இல் நடத்திய தமிழ்மொழி இலக்கியக் கருத்தரங்கில் ‘சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சி ஒரு சமூக இயல் கண்ணோட்டம்’ என்னும் தலைப்பில் படித்த கட்டுரை அமைந்தது என்று கூறலாம்.

பிறகு 2002இல் சுப. திண்ணப்பன், ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன் இருவரும் இணைந்து எழுதிச் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகக் கலைமன்றம் வெளியிட்ட ‘சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு கண்ணோட்டம்’ என்னும் நூல் ஒரு செடியாக வளர்ந்தது. அதன்பின் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் வெளியிட்ட சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு பல கிளைகளுடன் கூடிய மரமாக இப்போது திகழ்கிறது. இடைக்காலத்தில் வெளிவந்த தமிழ்ப்பேரவைக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு நூல்கள் சிலவும், சிங்கப்பூர்த் தமிழ்

எழுத்தாளர் கழகம் தனது 20ஆம் ஆண்டு விழாவை ஒட்டி வெளியிட்ட ஆய்வரங்கக் கோவையும் (1996) முனைவர் அ. வீரமணி பதிப்பாளராக இருந்து சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மன்றத்தின் சார்பாக 1994இல் வெளியிட்ட சிங்கப்பூரில் தமிழ்மொழி தமிழ் இலக்கிய வளர்ச்சி (1965 1990) என்னும் நூலும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றினை மரமாக வளர்க்க உரமாக இருந்து உதவியுள்ளன.

1965 முதல் 2015 வரையில் பதிப்பிக்கப்பட்ட சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய நூல்களை மின்வடிவமாக்குவதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட மின்-மரபுடைமைத் திட்டம் ஒன்று அண்மையில் தொடங்கி ஒரு தனிப்பட்ட குழுவினர் செயலாக்கம்படுத்தி வருகின்றனர். தேசிய நூலக வாரியம், தேசியமரபுடைமைக் கழகம், தேசிய கலை மன்றம், சிங்கப்பூர்ப் புத்தக வளர்ச்சி மன்றம் முதலிய அமைப்புகளும் இத்திட்டத்திற்கு ஆதரவு அளித்து வருகின்றன. 2015 சிங்கப்பூர் தனது 50வது ஆண்டு சுதந்திர விழாவைக் கொண்டாடும்போது இந்த மின்தொகுப்பினை முடித்து நாட்டிற்கு வழங்குவதாக உள்ளனர். இதனால் சிங்கப்பூர் இலக்கியங்களும் உலகினர் அனைவரும் எளிதில் படிக்கத்தக்கனவாக மாறும்.

வளர்தமிழ் இயக்கம் என்னும் அரசாங்கச் சார்புடைய இயக்கம் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதத்தில் பல அமைப்புளுடன் இணைந்து தமிழ்மொழி விழா ஒன்றை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது. சிறுவர், இளையர், முதியோர், மாணவர் எனப்பல திறப்பட்டவர்களுக்குத் தமிழ்மொழி தொடர்பாகப் பல்வேறு நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நடத்தப்படுகின்றன. இவ்விழா தமிழ்மொழிப் புழக்கம் கூடுவதற்கு வழி செய்கிறது.

# சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி: தோற்றமும் வளர்ச்சியும்

**சி. முத்தையா**
(ஓய்வுபெற்ற) மூத்த பாடத்திட்டச் சிறப்பு அதிகாரி
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

---

"… if we were monolingual in our mother tongues, we would not make a living. Becoming monolingual in English would have been a setback. We would have lost our cultural identity, that quiet confidence about ourselves and our place in the world." *(Taken from Memoirs of Lee Kuan Yew, From Third World to First)*

## காலனித்துவ ஆட்சியில் தமிழ்க் கல்வி

'சிங்கப்பூர் என்றுமே ஒரே மொழியைப் பொது மொழியாகக் கொண்டிருந்ததில்லை. அது பன்மொழிச் சமூகமாகவே இருந்து வந்திருக்கிறது. மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு எப்படிக் கல்வி புகட்ட வேண்டும் என்பதைப் பிரிட்டிஷார் அவர்களிடமே விட்டுவிட்டார்கள்' என்று திரு லீ தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் ஆங்கிலப் பள்ளிகளையும், மலாய்க்காரர்கள் நாட்டின் தொல்குடியினர் என்பதால் அவர்களுக்கு மலாய் மொழித் தொடக்கப் பள்ளிகளையும் மட்டுமே அமைத்தது. இந்தியர்கள் தங்களுக்கு வேண்டிய தமிழ் அல்லது பிற இந்திய மொழிப் பள்ளிகள் அல்லது வகுப்புகளைத் தாங்களே அமைத்துக் கொண்டனர். சீனர்கள் தங்கள் சமூகத்தில் வெற்றி பெற்றவர்கள் அளித்த நிதி ஆதரவைக்கொண்டு பள்ளிகள் கட்டிக்கொண்டனர்.

சிங்கப்பூருக்கு வந்த இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இந்தியர்கள் சிங்கப்பூருக்கு வரப் போக இருந்தார்களே ஒழிய இங்கு அவர்கள் நிரந்தரமாக தங்கி வாழவில்லை. இருபதாம் நூற்றாண்டிலேயே அவர்களில் பெரும்பாலோர் சிங்கப்பூரில் நிரந்தரமாகத் தங்கி வாழத் தலைப்பட்டனர். அதன் பின்னரே தங்கள் பிள்ளைகளின் கல்வியில் நாட்டம் கொள்ளலாயினர். 1941இல் பதினெட்டுப் பதிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பள்ளிகள் சிங்கப்பூரில் இருந்திருக்கின்றன. ஆனால் ஜப்பானியப் போர் முடிவுற்ற பிறகே தமிழ்க் கல்வியில் ஒரு வளர்ச்சி நிலையைக் காணமுடிகிறது. 1947-1950 காலக் கட்டத்தில் சிங்கப்பூரில் செயற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் பற்றிய விவரங்களைப் அடியிலுள்ள அட்டவணையிலிருந்து தெரியலாம். இவை எல்லாமே தொடக்கப் பள்ளிகள். பெரும்பாலானவை ஆண்களும் பெண்களும் படித்த கலப்புப் பள்ளிகள். ஓரிரு பள்ளிகளே ஆண்கள் பள்ளிகளாகவோ, பெண்கள் பள்ளிகளாகவோ இருந்தன. பள்ளிகளின் நிர்வாகத்தை வைத்து இவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

- மிஷன் பள்ளிகள் - கிறித்தவ மற்றும் இராமகிருஷ்ணா மிஷன்கள் நடத்திய பள்ளிகள்
- தனியாரை உரிமையாளராகக் கொண்ட பள்ளிகள்
- தொழிற்சங்கங்கள் மற்றும் சமூகக் குழுக்கள் ஆகியவற்றால் நடத்தப்பட்ட பள்ளிகள்

**அட்டவணை**

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட பள்ளிகள்/ எண்ணிக்கை | | மொத்த மாணவர்கள் | பதிவு செய்யப்படாத பள்ளிகள் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | பிற இந்தியப் பள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| **1947** | உதவிபெற்றவை | 5 | 919 | 29 | - | *குசராத்தி - 1, *பஞ்சாபி - 1 |
| | உதவிபெறாதவை | 6 | | | | |
| **1948** | உதவிபெற்றவை | 11 | 1012 | 26 | 950 | *குசராத்தி-1, *பஞ்சாபி - 1 |
| | உதவிபெறாதவை | 4 | | | | |
| **1949** | உதவிபெற்றவை | 10 | 1315 | 20 | 770 | - |
| | உதவிபெறாதவை | 9 | | | | |
| **1950** | உதவிபெற்றவை | 23 | 1486 | 14 | 330 | **குசராத்தி - 1, **பஞ்சாபி – 1, **மலையாளம் - 1 |
| | உதவிபெறாதவை | - | | | | |

**குறிப்பு:** *i)* *1947, 1948 ஆகிய ஆண்டுகளில் இயங்கிய குசராத்தி மற்றும் பஞ்சாபி பள்ளிகள் பதிவு செய்யப்படாத பள்ளிகள்.

*ii)* **1950இல் இயங்கிய குசராத்தி, பஞ்சாபி மற்றும் மலையாளப் பள்ளிகள் பதிவு செய்யப்பட்டவை.

இவற்றுள் மிஷன்களால் நடத்தப்பட்ட பள்ளிகளே நல்ல நிர்வாகத்தைப் பெற்றுச் சிறப்பான முறையில் இயங்கின. மற்ற நிர்வாகங்களின்கீழ் இயங்கிய பள்ளிகள் பலவற்றில் நிலைமை மனநிறைவு தருவதாக இல்லை எனக் கல்வி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இவற்றின் நிதி நிலையும் கற்பித்தல் தரமும் மோசமாக இருந்ததோடு நிர்வாகக் குழுக்களுக்குக் கல்வியில் உண்மையான அக்கறை கிடையாது. பள்ளிகள் பலவற்றின் கட்டடங்கள் மோசமான நிலையில் இருந்தன. அரசாங்கம் அளிக்கும் நிதி உதவியைக் கொண்டு அவற்றை மேம்படுத்த இயலவில்லை. காரணம் கட்டடங்கள் பள்ளி நிர்வாகங்களுக்குச் சொந்தமானவை அல்ல. ஜப்பானியப் போர் முடிந்த பின்னர் நடப்புக்கு வந்த அவசரகாலத்தின்போது, தொழிற்சங்கங்களால் நிர்வகிக்கப்பட்ட பள்ளிகளின் நிர்வாகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்தால் ‘தேடப்படுவோராக’ இருந்தார்கள். சிலர் கைதாயினர்; சிலர் தலைமறைவாகினர். அதன் காரணமாகப் போதுமான உறுப்பினர்கள் இல்லாததாலும் போதுமான நிதி ஆதரவு இல்லாததாலும் பள்ளிகள் மூடப்படும் நிலை ஏற்பட்டது.

1949இல் பொது நல உணர்வுள்ள சிலர் தமிழ்க் கல்விக் கழகம் என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தனர். இந்த அமைப்பு, மிஷன் பள்ளிகள் அல்லாத இதர பள்ளிகளுள் பதினொரு பள்ளி களின் குறைகளைக் களைவதில் அவற்றுக்கு உதவியது.

1949 இறுதியில் சில பள்ளிகளின் ஆசிரியர்களுக்குச் சில மாதங்களாகச் சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை. அவை மூடப்படும் நிலையில் இருந்தன. இத்தகைய சூழ்நிலையில் இடைக்கால நடவடிக்கையாக 1950 முதல் அரசாங்கம் எல்லா இந்தியப் பள்ளிகளையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரத் தீர்மானித்தது. இதன்மூலம் எல்லா ஆசிரியர்களின் கல்வித் தகுதியையும் மதிப்பீடு செய்வது முதல் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது வரை பொறுப்புகளை அரசாங்கம் தானே எடுத்துக் கொண்டது.

1950 - 1959 வரை தமிழ்ப் பள்ளிகள் அனைத்தும் அரசாங்க உதவிபெறும் பள்ளிகளாகவே இருந்தன. தமிழ்த் தொடக்கப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் ஏழாம் ஆண்டு இறுதியில் மலாயாக் கூட்டரசு நடத்திய ஆசிரியர் பயிற்சிக்கான தகுதித் தேர்வினை எழுதினர். அதற்கான சான்றிதழ் இந்தியப் பள்ளிச் சான்றிதழ் எனப்பட்டது. இத்தேர்வு 1959 இறுதி வரை நடந்தது. 1960 முதல் சிங்கப்பூரின் பொதுக் கல்வி முறையின்கீழ்த் தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வு ஆறாம் ஆண்டு இறுதியில் நடத்தப்பட்டு வருகிறது.

1960இல் இரு முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்தன. செயிண்ட் ஜியார்ஜஸ் தமிழ்ப் பள்ளியும் அரவிந்தர் தமிழ்ப் பள்ளியும், அரசாங்க நிலத்தில் இருந்தனவாதலால், அரசாங்கப் பள்ளிகளாயின. அதே ஆண்டில் 1946 முதல் செயற்பட்டு வந்த உமறுப்புலவர் தமிழ்த் தொடக்கப்பள்ளி, மேக்ஸ்வெல் சாலையில் தேசிய வளர்ச்சி அமைச்சுக்கும் மேக்ஸ்வெல் சந்தை மற்றும் உணவு அங்காடி நிலை யத்துக்கும் இடையே புதிய கட்டடம் கட்டப்பட்டு, உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி எனத் தொடக்க நிலை, உயர்நிலை என இரு நிலைகளையும் உள்ளடக்கிய முழுப் பள்ளியாகச் செயற்படத் தொடங்கியது. தன்னாட்சி பெற்ற சிங்கப்பூரில் தமிழ்ப் பள்ளிகளின் நிர்வாகம் பெரிதும் மேம்பட்ட தால், பள்ளிகளுக்குத் தமிழ்க் கல்விக் கழகத்தின் சேவை 1961 முதல் தேவையில்லாது போயிற்று.

**ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்**

1950 வரை சிங்கப்பூரில் இயங்கிய தமிழ்ப் பள்ளிகள் அனைத்தும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவை. முதல் முறையாக, 1951இல் ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகள் சிலவற்றில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் சோதிக்கப்பட்டது. அது வெற்றி அளிக்கவே அடுத்த ஆண்டில் 32 பள்ளிகளில் தமிழ் கற்பித்தல் தொடங்கியது. 1958இல் 110 பள்ளிகளுக்கு அது விரிவுபடுத்தப்பட்டது. அவற்றுள் நாற்பது பள்ளிகளிலேயே தமிழ் படிப்பதற்குப் போதுமான மாணவர்கள் இருந்தனர். மற்ற எழுபது பள்ளிகளில் மிகவும் குறைவான மாணவர்களே இருந்ததால், இந்தப் பள்ளிகளின் மாணவர்களுக்கு 26 பள்ளிகளில், சனிக்கிழமைகளில் தமிழ் வகுப்புகள் நடைபெற்றன.

1955இல் முதல் முறையாக, ஆங்கில உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1956 மற்றும் 1957 ஆம் ஆண்டுகளில் முறையே பீட்டி உயர்நிலைப் பள்ளி மற்றும் ராஃபிள்ஸ் கல்வி நிலையம் ஆகியவற்றில் பகுதி நேரத் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டன. இவற்றில் பிற்பகலில் ஏறத்தாழ 300 மாணவர்கள் தமிழ் பயின்றார்கள். 1959இல் கான் எங் செங் மற்றும் பார்ட்லி

உயர்நிலைப் பள்ளிகளில் பகுதி நேரத் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் ஒரு முழு நேரத் தமிழ் ஆசிரியர் நியமிக்கப்பட்டார். 1958இல் மொத்தம் 450 மாணவர்கள் பகுதி நேரத் தமிழ் வகுப்புகளில் தமிழ் பயின்றார்கள்.

இவ்வாறு ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் தொடங்கப்பட்டு வளர்ச்சி கண்டது.

### *1959 – 1979 ஆண்டுகளில் தமிழ்க் கல்வியின் வளர்ச்சி*

1959ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் செயல் கட்சி (மசெக) அமோக வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்தது. அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் தன்னாட்சி பெற்ற நாடானது. தன்னாட்சி பெற்ற நாட்டின் முதல் பிரதமராக அமரர் திரு லீ குவான் இயூ பொறுப்பு ஏற்றார்.

காலனித்துவ ஆட்சியின்போது, சிங்கப்பூரில் ஆங்கிலப் பள்ளிகள், மலாய்ப் பள்ளிகள், சீனப் பள்ளிகள், தமிழ்ப் பள்ளிகள் என நான்கு விதமான மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகள் தனித்தனியாக இயங்கின. அவற்றுக்கு இடையே எந்த விதமான ஒருங்கிணைப்பும் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் பல இன, பல சமய மக்களிடையே தாங்கள் அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்னும் உணர்வு தோன்ற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆனால், அவர்களிடம் மொழி உணர்வும், பண்பாட்டு உணர்வும் மேலோங்கி இருந்தன.

அப்போது சிங்கப்பூரில் வேலையின்மை விகிதம் 12 விழுக்காடாக இருந்தது. சிங்கப்பூர் மக்களில் பெரும்பாலோர் படிப்பறிவு இல்லாதவர்கள்; அதோடு அவர்கள் தொழில்திறன் அற்றவர்கள். ஆண்டுதோறும் 62,000 குழந்தைகள் பிறந்தனர். மக்கள் தொகை ஆண்டுக்கு 4 விழுக்காடு என்ற விகிதத்தில் வளர்ந்தது. இந்நிலையில் வேலை வாய்ப்பினை அளிக்கத் தொழிலாளர் அதிக எண்ணிக்கையில் தேவைப்படும் தொழில்களில் முதலீடுகளை ஈர்க்கத் தொழில்மயத் திட்டத்தைச் செயற்படுத்த அரசாங்கம் முடிவு செய்தது. அதே சமயம் பள்ளி செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் எல்லாருக்கும் இலவசப் பத்தாண்டுக் கல்வி வழங்கும் திட்டத்தையும் அரசாங்கம் வகுத்தது. புதிதாகப் பள்ளிகள் கட்டப்பட்டன. ஏற்கெனவே உள்ள பள்ளிகள் இருநேரப் பள்ளிகளாகச் செயல்பட்டன.

அரசாங்கம் இரு நோக்கங்களை அடிப்படையாக வைத்துப் புதிய கல்விக்-கொள்கையை வகுத்தது. வேலை இல்லாதிருந்தோர் பெரும்பாலும் தொழில்திறன் அற்றவர்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும். அதே சமயம் பள்ளி செல்லும் வயதிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் குறைந்த பட்சம் பத்தாண்டுக் கல்வி கற்க வசதிகள் செய்து தரவேண்டும்.

நாட்டின் தற்போதைய தேவையையும் எதிர்காலத் தேவையையும் கவனத்தில் கொண்டு புதிய கல்விக் கொள்கை வகுக்கப்பட்டது. கட்டுரையின் தொடக்கத்தில் திரு லீ

அவர்களின் மேற்கோள் சுட்டுவது போல பிள்ளைகளுக்கு அவரவர் மொழியில் ஒருமொழிக் கல்வி வழங்கினால் அவர்களுக்கு எதிர்கால வாழ்க்கை இல்லை. அதே சமயத்தில் எல்லாரும் ஆங்கிலத்தை மட்டுமே கற்றால் அவர்கள் தங்கள் இன அடையாளத்தையும் பண்பாட்டையும் இழந்துவிடுவார்கள். எனவே கல்வியின் மைய நோக்கம் எதிர்கால வாழ்க்கைக்கு இளையர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான திறன்களையும் சிறந்த விழுமியங்களையும் அவர்களுக்குக் கற்றுத் தந்து, அவர்கள் பெரியவர்கள் ஆகும்போது தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயலாற்றும் குடிமக்களாகவும் திகழுமாறு செய்யவேண்டும். கல்விக் கொள்கைகள் காலத்திற்கு ஏற்ப அவ்வப்போது மாறினாலும் மேலே சொல்லப்பட்ட அடிப்படைக் கொள்கைகள் மாறாதிருந்தன.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கை அண்மைய எதிர்காலத்தில் உருவாகவிருக்கும் மலேசியாவோடு இணைந்து சிங்கப்பூர் சுதந்திரம் பெறுவதை அடிப்படையாகக் கொண்டது. இதன்படி மலாய் மொழி தேசியமொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆங்கிலம் அனைத்துலக மொழியாகவும், அறிவியல் தொழில்நுட்ப மொழியாகவும், உயர்கல்விக்கு வாயிலாகவும், அரசாங்கத்தின் பணிமொழியாகவும் விளங்கியது. மேலும், அது சீனர், மலாய்க்காரர், இந்தியர் முதலான எல்லா இனத்தவரையும் இணைக்கும் பாலமாகவும் திகழ்ந்தது. இக்காரணங்களால் ஆங்கிலம் நாட்டின் பொது மொழியாகத் தெரிவு செய்யப்பட்டது. மூன்றாவதாக சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் அதிகாரத்துவ மொழிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டன. இந்தப் பன்மொழிக் கொள்கைப்படி அரசாங்கம் 1960இல் தொடக்கப் பள்ளிகளில் கட்டாய இருமொழிக் கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் ஆங்கிலப் பள்ளிகளில் சீனம், மலாய், தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் இரண்டாம் மொழிகளாகக் கற்பிக்கப்பட்டன. அதே சமயம் சீனம், மலாய், தமிழ்ப் பள்ளிகளில் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டது.

இந்த ஏற்பாடு எல்லாருக்கும் ஏற்புடையதாக இருந்தது. நாட்டின் பல்வேறு இனத்தவரிடையே தாங்கள் சிங்கப்பூரர் என்னும் ஒற்றுமை உணர்வை வளர்க்க நான்கு மொழிப் பள்ளிகளிலும் ஒரே பாடத்திட்டம் பயன்பாட்டுக்கு வந்தது. இதன் மூலம் எல்லா மொழிப் பள்ளிகளிலும் ஒரே மாதிரியான கல்வி முறை பின்பற்றப்படுவதாயிற்று. தொடக்கக் கல்வி ஆறு ஆண்டுகளாகவும், உயர்நிலைக் கல்வி நான்கு ஆண்டுகளாகவும் ஆயிற்று.

1963இல் சிங்கப்பூர் மலேசியாவோடு இணைந்து சுதந்திரம் அடைந்தது. ஆனால், அது நிலைக்கவில்லை. அடுத்த ஈராண்டுகளில், 1965இல் மலேசியாவிலிருந்து பிரிந்து முழுதும் சுதந்திரம் பெற்ற நாடாயிற்று. அதனைத் தொடர்ந்து 1966இல் உயர்நிலைப் பள்ளிகளில் இரண்டாம் மொழி கற்பது கட்டாயமாக்கப்பட்டது. தொடக்க நிலையில் 1966இலும், உயர்நிலையில் 1969இலும் இரண்டாம் மொழித் தேர்வு (வாய்மொழி மற்றும் எழுத்துத் தேர்வை உள்ளடக்கியது) கட்டாயப் பாடமாக்கப்பட்டது.

அரசாங்கம் அமலுக்குக் கொணர்ந்த, இருமொழிக் கல்விக் கொள்கை எந்த ஓர் இனத்துக்கும் கூடுதல் சாதகமாகவோ பாதகமாகவோ இல்லை. அதனால் இதனை மக்கள் ஏற்றுக் கொண்டனர். மேலும், ஆங்கிலக் கல்வி தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல வேலை வாய்ப்பினை நல்கும் என்றும் நினைத்ததால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்பத் தொடங்கினர். இதனால் தாய்மொழிப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை விரைந்து சரியத் தொடங்கியது. தமிழ்ப் பள்ளிகளில் 1975இல் தொடக்கநிலை ஒன்றாம் வகுப்புக்கு மாணவர் எவரும் பதிவுசெய்யப்படவில்லை. இதன் காரணமாக 1979 இறுதியில் தமிழ்த் தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்தன. ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளியான உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி, 1982 இறுதியில் மூடப்பட்டது. அப்போது பள்ளியின் நிர்வாகக் குழு கல்வி அமைச்சிடம் உமறுப்புலவர் என்னும் பெயரை ஏதேனும் ஒரு கல்வி நிலையத்துக்குச் சூட்டும்படி வேண்டுகோள் விடுத்தது. அதனை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சு செயிண்ட் ஜியார்ஜஸ் தமிழ் மொழி நிலையத்தின் பெயரை உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையம் என மாற்றியமைத்தது. இதன்மூலம் 1983இல் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்தன. இதன் பின்னர் ஆங்கிலப் பள்ளிகளில் மட்டுமே தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் தொடர்ந்தது.

அதே சமயத்தில், தேர்வுக்குரிய பாடங்களாக இரு மொழிகள் (ஆங்கிலம் மற்றும் தாய்மொழி) பயில்வது எதிர்பார்த்ததுபோல் மாணவர்களுக்குச் சுலபமாக இருக்கவில்லை. 1970களின் தொடக்க ஆண்டுகளில் ஒவ்வோர் 1000 பிள்ளைகளுக்கும் அவர்களில் 350 பேர்களே, பத்து ஆண்டு முடிவில் (மொத்த மாணவர் எண்ணிக்கையில் 35%) மூன்று அல்லது அதற்கும் அதிகமான பாடங்களில் தேர்ச்சி பெற்றனர். இதனால் மாணவர் பலர் உயர்நிலைக் கல்வியை முடிக்க முடியாமல் பாதியிலேயே பள்ளிப் படிப்பை முடித்து வெளியேற நேர்ந்தது.

1979இல் கல்வி பற்றிய திரு கோ கெங் ஸ்வீ'யின் அறிக்கை வெளியிடப்பட்டது. அது இரு மொழிகள் பயில்வது எல்லாராலும் இயல்வதன்று என்று கண்டறிந்து மூன்றாம் வகுப்பு இறுதியில், மாணவர்களின் கற்கும் ஆற்றலுக்கு ஏற்ப மூன்று கல்விப் பிரிவுகளில் – வழக்கக் கல்வி, நீட்டிப்புக் கல்வி, ஒரு மொழிக் கல்வி - கல்வியைத் தொடர்வதற்கு ஏதுவாக அவர்கள் தரம் பிரிக்கப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ்த் தொடக்கப் பள்ளிக் கல்வியை, வழக்கப் பிரிவு மாணவர்கள் மொத்தம் ஆறு ஆண்டுகளில் முடிக்க, நீட்டிப்புப் பிரிவு மாணவர்களும், ஒரு மொழிக் கல்விப் பிரிவு மாணவர்களும் தொடக்கக் கல்வியை எட்டு ஆண்டுகளில் முடித்தனர். அதே சமயத்தில் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் மாணவர்-களின் தேர்ச்சி அடிப்படையில் சிறப்புப் பிரிவு, விரைவுப் பிரிவு, வழக்கப் பிரிவு என்னும் மூன்று கல்விப் பிரிவுகளில் தரம் பிரிக்கப்பட்டனர். எல்லாப் பிரிவு மாணவர்களும் ஆங்கிலத்தை முதல்மொழியாகப் பயின்றனர். சிறப்புப் பிரிவு மாணவர்கள் தாய்மொழியை முதல் மொழி நிலையிலும், விரைவுப் பிரிவு மாணவர்களும் வழக்கப் பிரிவு மாணவர்களும் தாய்மொழியை இரண்டாம் மொழி நிலையிலும் பயின்றார்கள். சிறப்புப் பிரிவு மாணவர்களும்

விரைவுப் பிரிவு மாணவர்களும் உயர்நிலைக் கல்வியை நான்கு ஆண்டுகளிலும் வழக்கப் பிரிவு மாணவர்கள் உயர்நிலைக் கல்வியை ஐந்து ஆண்டுகளிலும் முடித்தனர்.

இந்த அறிக்கையால் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரிந்த மேலும் இரு முக்கியப் பயன்கள்: i. பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தின் தோற்றம்; ii. தமிழ் மொழி நிலையங்களை மூடுவதை இலக்காகக் கொண்டு 25 தொடக்கப் பள்ளிகளிலும் 25 உயர்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி நேரத்திலேயே தமிழ் கற்பிக்க ஏற்பாடு செய்யும் ஐந்தாண்டுத் திட்டம். 1980இல் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது. பாடநூலாக்கக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. 1984இல் தொடக்கநிலை மற்றும் உயர்நிலைகளுக்கான முதல் தொகுதி பாடநூல்களும் பயிற்றுக் கருவிகளும் பயன்பாட்டுக்கு வந்தன. அன்று முதல் நமக்கு வேண்டிய கற்பித்தல் துணைப்பொருள்களை நாமே தயாரித்து வந்தோம். 1996 டிசம்பரில் பாடத்திட்ட மேம்பாட்டுக்கழகம் மூடப்பட்டது. ஆனால் அதன் தாய்மொழிகளுக்கான பாடநூலாக்கக் குழுக்கள் மட்டும் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவுப் பிரிவுடன் இணைக்கப்பட்டன. அதனால் பாடத்திட்ட வரைவுப் பிரிவு என்பது பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு ஆனது.

### உயர்நிலைப் பள்ளிகளில் முதல்மொழியாகத் தமிழ்

1985இல் பள்ளிகள் மன்றக் கூட்டத்தில், உயர்நிலைப் பள்ளிகளில் மலாய், மற்றும் தமிழ் மொழிகளை முதல் மொழி நிலையில் பயில்வதற்குப் போதுமான மாணவர்கள் இருந்தால் 1986இலிருந்து அவற்றை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்று கல்வி அமைச்சர் அறிவித்தார். அதே போல் 1986இல் உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தில் உயர்தமிழ் கற்பித்தல் தொடங்கப்பட்டது. ஆனால், இன்று 30க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் நிலையங்களிலும் உயர்தமிழ் கற்பிக்கப்படுகிறது.

### தொடக்கப் பள்ளிகளில் முதல்மொழியாகத் தமிழ்

1991இல் 'தொடக்கப் பள்ளிக் கல்வியை மேம்படுத்துதல்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை, 1979இல் அறிமுகமாகி அப்போது நடப்பிலிருந்த தொடக்கப் பள்ளிக் கல்விமுறையில் சில நுட்பமான மாறுதல்களைப் பரிந்துரைத்தது.

அதன்படி தொடக்கக் கல்வி ஆறு ஆண்டுகளைக் கொண்டதாக மாற்றப்பட்டது. நான்காம் வகுப்புக்குத் தரம் பிரித்தல் மாற்றப்பட்டது. நான்காம் ஆண்டு இறுதியில் மாணவர்களின் செயல்திறன் மற்றும் பெற்றோர்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் EM1, EM2, EM3 என்னும் மூன்று கல்விப் பிரிவுகளில் அவர்கள் தரம்பிரிக்கப்பட்டனர். இதன்படி EM1 பிரிவுக்குத் தரம் பிரிக்கப்பட்டவர்கள் தாய்மொழியை முதல் மொழி நிலையில் பயின்றனர்.

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி நிலைக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பிரிவு, விரைவுப் பிரிவு, வழக்கப் பிரிவு (ஏட்டுக் கல்வி),

வழக்கப் பிரிவு (தொழில்நுட்பம்) என நான்கு பிரிவுகளில் மாணவர்கள் தரம்பிரிக்கப்பட்டுத் தங்களின் கல்வியைத் தொடர்ந்தனர். இவற்றில் சிறப்புப் பிரிவு மாணவர்கள் தமிழ் மொழியை முதல் மொழி நிலையில் பயின்றனர்.

1990களின் நடுப்பகுதியில் அதிகமான உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தலை அறிமுகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதனை ஒட்டி 1993, 1995, 1996 ஆகிய ஆண்டுகளில் இந்தியத் தலைநகரிலும், தமிழகத் தலைநகர் சென்னையிலும் நேர்காணல் நடத்தப்பட்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருபத்தைந்துக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் புதிதாகத் தமிழ் கற்பித்தல் அறிமுகம் கண்டது. தற்போது தொடக்க நிலையிலும் உயர்நிலையிலும் 90 விழுக்காட்டுக்கு மேற்பட்ட பள்ளிகளில் பள்ளி நேரத்திலேயும், உயர்நிலையில் 12 மொழி நிலையங்களில் பள்ளி நேரத்துக்கு அப்பாலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. உயர்நிலையில் 34 பள்ளிகளிலும் நிலையங்களிலும் உயர்தமிழ் கற்பிக்கப்படுகிறது.

1998, 2005, 2010ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மறு ஆய்வுகள் தமிழ்மொழிக்கெனச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டவை. இவை சிங்கப்பூரில் தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்க்க உதவின. உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம் 2000இல் மேம்படுத்தப்பட்டதும், அது புதுக் கட்டடமாக 2012இல் திறந்துவைக்கப்பட்டதும், தேசிய தமிழ் மொழி விருப்பப்பாடத் திட்டம் அறிமுகம் கண்டதும் ஆகிய இவை எல்லாம் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த முயற்சிகள்.

***இக்கட்டுரை எழுதுவதற்குப் பயன்பட்டவை :***


சிங்கப்பூர் ஆவணக் காப்பகம்: Education Reports of 1948, 1949, 1950, 1951, 1954, 1956, 1965, 1966

சிங்கப்பூர் 150 ஆம் ஆண்டு விழாச் சிறப்பு மலர், கட்டுரை 1: தமிழ்க் கல்வி வரலாறு, கட்டுரை 2: ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்

150 Years of Education, 1969 by T Doraisamy

Article: Recent development in Education in Singapore: Ho Wah Kum, RELC, & S Gopinathan , RELC

Article: Singapore: Rapid Improvement Followed by Strong Performance, www.oecd.org/countries/singapore/46581101.pdf

Article: Bilingual Education Policy in Singapore: Implications for second language Acquisition, L Quentin Dixon, Havard University Gradute School of Education

Article: Education in Singapore,: Development since 1965, Goh C B, & Gopinathan S

# சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் தமிழ்மொழிக் கல்வியும்

**சி. சாமிக்கண்ணு**
தலைவர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

---

## முன்னுரை

1951ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தோன்றிய சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று தமிழ்மொழியும் தமிழ்மொழிக் கல்வியும் வளரப் பாடுபடுவதாகும்.

ஆங்கிலப் பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியர்கள் பெற்றுவந்து சம்பளத்துக்கு இணையான சம்பளத்தை சங்கம் தமிழாசிரியர்களுக்கு 1956இல் பெற்றுத் தந்தது. சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி வேர்விட்டு வளர்வதற்கான முக்கியக் காரணங்களில் இதுவும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

## 1960களில் ஏற்பட்ட முன்னேற்றம்

மலேசியா (ஜொகூர்பாரு) சென்று ஆசிரியர் பயிற்சி பெற்று வந்த தமிழாசிரியர்களுக்குத் உள்ளூரில் தமிழாசிரியர் பயிற்சி வழங்குவதற்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1964-1965-ஆம் ஆண்டுகளில் தமிழ்த்துறை தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

1964லிருந்து உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலை 4 முடித்த மாணவர்கள் வெளிவரத் தொடங்கிய பிறகுதான் தமிழாசிரியர்கள் பெரும்பாலோர் உயர்நிலைக் கல்வி பயின்றவர்கள் என்ற நிலை ஏற்பட்டது. இவர்களின் வருகையால் தமிழாசிரியர்களின் தகுதியும் தரமும் உயர்ந்தது. உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து வெளிவந்த மாணவர்களின் வருகை சிங்கப்பூர் தமிழ்க் கல்வி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

1968-ஆம் ஆண்டு தமிழ்க் கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டும் என்ற சங்கத்தின் வேண்டுகோளின்படி தமிழகத்திலிருந்து இரண்டு கொழும்புத் திட்டப் பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர்.

## 1970களில் வளர்ச்சி

1971ஆம் ஆண்டு சங்கம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியுடனும் கல்வி அமைச்சுடனும் இணைந்து முதல் தமிழ் கற்றல், கற்பித்தல் ஆய்வரங்கு ஒன்றை நடத்தியது.

கல்வி அமைச்சில் தமிழ்ப் பகுதிக்கு தமிழ் அறிந்த ஆங்கில ஆசிரியர்களே நியமிக்கப்பட்டனர். கல்வி அதிகாரிகளாகத் தமிழாசிரியர்களே நியமிக்கப்பட வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கை கல்வி அமைச்சு 1976ஆம் ஆண்டு நிறைவேறியது.

1970ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டுவரை மாணவர்களுக்கு இலக்கியப் போட்டிகளைச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், தொடர்ந்து நடத்தி வந்தது.

1978ஆம் ஆண்டில் தமிழக அரசு பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டபோது, அதனை ஆதரித்துச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் சங்க ஏடான ‘தமிழாசிரியர் குரலில்’ அதன் அந்நாள் துணைச் செயலாளர் திரு. சி. சாமிக்கண்ணு அவர்கள் எழுதிய கட்டுரையின் விளைவாக, 1983ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 26ஆம் நாளில் வெளியிடப்பட்ட கல்வி அமைச்சின் அறிவிப்பின்படி, 13 எழுத்துகள் குறித்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் நடப்புக்கு வந்தது.

### 1980களில் தோன்றிய எழுச்சி

தமிழாசிரியர்கள் பட்டதாரிகள் ஆவதற்கு வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்ற சங்கத்தின் பல்லாண்டுகாலக் கோரிக்கையின்படி, 1985ஆம் ஆண்டு முதல் தமிழாசிரியர்கள் தமிழ்நாடு சென்று, தமிழ் இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம் பெற ஏற்பாடு செய்யப்பட்டது.

### 1990களில் தமிழ்மொழிக் கல்விக்கு முன்மாதிரி

1991ஆம் ஆண்டு சங்கம் தமிழாசிரியர்களின் கணினியறிவை வளர்க்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தியது. அப்போது ‘பாரதி’ என்னும் மென்பொருள் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

சங்கம் 1991ஆம் ஆண்டில் சிங்கப்பூர்த் தொலைத் தொடர்பு வாரியத்துடன் இணைந்து, உலகில் முதன்முதலில் Teleview - ‘ஸ்மார்ட்’ என்னும் மின்னியல் தமிழ்ப்பாடங்கள் தயாரித்து ஒளிபரப்பியது.

1992ஆம் ஆண்டு முதலாம் உலகத் தமிழாசிரியர் மாநாட்டைத் தொடங்கி வைத்தது. இதுவரை பதினொரு மாநாடுகள் பல்வேறு நாடுகளில் நடைபெற்றுள்ளன. இந்த மாநாட்டை ஒருங்கிணைத்து நடத்துவதற்கு உலகத்தமிழசிரியர் பேரவை ஒன்று அமைக்கப்-பட்டுள்ளது. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அந்தப் பேரவை சங்கத் தலைவர் சி சாமிக்கண்ணு அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ் மாணவர்களின் பேச்சுப் புழக்கம் குறைந்து வருவதை உணர்ந்த சங்கம் 1992ஆம் ஆண்டு தமிழில் பேசுவோம் என்ற இயக்கத்தைப் பள்ளிகளில் தொடங்கி நடத்தி

வந்தது. பிறகு நாடு தழுவிய நிலையில் நடத்தினால் மிகுந்த பயன் விளையும் என்று எண்ணியது. ஆகவே சிங்கப்பூரில் உள்ள சமூக அமைப்புகளை ஒன்று திரட்டி, நோக்கத்தை விளக்கியது. இறுதியில் துணைக்குழு ஒன்றை அமைத்தது. அக்குழு 1994, 1996 ஆகிய ஆண்டுகளில் தமிழ்மொழி வாரம் என்ற தமிழ் இயக்கத்தை சிறப்பாக நடத்தியது. அந்த இயக்கம் தொடர முடியாத நிலை ஏற்பட்டதால் தமிழ்மொழி வாரம் நின்று போனது. தமிழ் மாணவர்களுக்காகத் தமிழ்மொழி இயக்கம் மீண்டும் நடத்தப்படவேண்டும், என்ற கோரிக்கையைச் சங்கம், மறைந்த திரு. V.T. அரசு அவர்களிடம் கொண்டு சென்றது. அன்றைய துணைப்பிரதமர் திரு. ஜயக்குமார் அவர்களின் அனுமதியுடன் 1999ஆம் ஆண்டு அரசாங்கத்தின் ஆதரவுடன் வளர்தமிழ் இயக்கம் அமைக்கப்படடது. பல சமூக அமைப்புகளுடன் சங்கமும் அதில் தொடர்ந்து அங்கம் பெற்று வருகிறது. அந்த அமைப்பு இன்று ஆண்டுதோறும் தமிழ்மொழி விழாவை நடத்தி வருகிறது.

1994ஆம் ஆண்டுமுதல் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களோடு (பாண்டிச்சேரி, சென்னை, மதுரை, தஞ்சாவூர்) இணைந்து தமிழாசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. புதுவை மொழியியல் நிறுவனத்துடன் இணைந்தும் ஆசிரியர் பணியிணைப்புத் திட்டம் நடத்தப்பட்டது. இதுபோன்ற 8 திட்டங்கள் இதுவரை நடத்தப்பட்டுள்ளன.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் கடந்த 20 (1992) ஆண்டுகளாகத் தொடக்க உயர்நிலை மாணவர்களுக்குத் தமிழ்த் துணைப்பாட வகுப்புகள் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

### *2000-முதல் 2015-வரை*

2002ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தமிழ் முரசுடன் இணைந்து தமிழாசிரியர்களைக் கௌரவிக்கும் பொருட்டு, நல்லாசிரியர் விருது வழங்கி வருகிறது. மேலும் ஓய்வுபெற்ற தமிழாசிரியர்களுக்கு வாழ்நாள் நல்லாசிரியர் விருதும் வழங்கப்பட்டு வருகிறது.

கல்வி அமைச்சு அமைதுத்துள்ள தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவிலும் 2006ஆம் ஆண்டுமுதல் சங்கம் அங்கத்துவம் பெற்று தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்களித்து வருகிறது.

அம்புலிமாமா என்னும் மாணவர் இதழினை 2008ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வந்தது. பிறகு, 2010ஆம் ஆண்டு முதல் வளர்நிலா என்னும் புதிய இதழினைச் சங்கம் உருவாக்கிச் சிங்கப்பூர்ப் பள்ளி மாணவர்களுக்காக வெளியிட்டு வந்தது. தற்பொழுது சுட்டி மயில் என்னும் மாணவர் இதழையும் வெளியிட்டு வருகிறது.

சங்கத்தின் முயற்சியால் 2005ஆம் ‘சிம்’ பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியர்கள் இளங்கலைப் பட்டம் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. 2014-ஆம் ஆண்டு சங்கம் கல்வி அமைச்சருக்கு கடிதம் எழுதியதுடன் பேச்சுவார்த்தையும் நடத்தியதால் 2016ஆம் ஆண்டு முதல் கல்விக் கழகத்தில் முழுநேரப் பட்டக்கல்வி தொடங்கப்பட உள்ளது

கல்விக் கொள்கைகள் மற்றும் தமிழ்மொழி, தமிழ்க்கல்விக்கு அக்கறைக்குரிய-வற்றைப் பற்றிக் கருத்துரைப்பதோடு அவ்வப்போது தோன்றும் சிக்கல்களைக் களை-வதையும் தமிழாசிரியர்களின் திறன் மேம்பாட்டுக்கு ஆவன செய்வதையும் சங்கம் முக்கியப் பணிகளாகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

# தமிழ்மொழிக் கல்வியும் மறுஆய்வு நடவடிக்கைகளும்

**த. வேணுகோபால்**
**கோ. கிருஷ்ணமூர்த்தி**
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

## முன்னுரை

பல இன மக்களைக் கொண்ட சிங்கப்பூரில் 1959ஆம் ஆண்டு முதற்கொண்டு தமிழ் அதிகாரத்துவ மொழிகளுள் ஒன்றாக வீற்றிருக்கிறது. இதன்வழி ஏனைய தாய்மொழிகளான சீனம், மலாய் மொழிகளுக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்பு வசதிகளும் தமிழ்மொழிக்கும் கிடைக்கப்பெறுகிறது. 1955இல் கல்வி அமைச்சு அமையப்பெற்றது. அன்று முதல் நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் ஏற்பக் கல்வித் துறை படிநிலை வளர்ச்சி கண்டு வருகிறது. 1966ஆம் ஆண்டு முதற்கொண்டு, சிங்கப்பூரில் இருமொழிக் கல்விக்கொள்கை நடப்பில் உள்ளது. இக்கொள்கைக்கேற்பப் பள்ளிகளில் ஆங்கிலமும், அதிகாரத்துவ தாய்மொழிகளும் முறையே கற்பிக்கப்படுகின்றன. சீனம், மலாய், இந்திய இனத்தவர் யாவரும் பள்ளிகளில் முதன்மை மொழியாகவும் தொடர்பு மொழியாகவும் ஆங்கிலத்தைப் பயில்கின்றனர். மாணவர்கள் தாய்மொழியோடும் பண்பாட்டோடும் உள்ள பிணைப்பை வளர்த்துக்கொள்வதற்காக அவரவர் தாய்மொழியை ஒரு பாடமாகப் பயில வேண்டும் என்பது நம் கல்விக் கொள்கையாகும். கடந்த 50 ஆண்டுகளாக இந்த இருமொழிக் கல்விக் கொள்கை நம் நாட்டின் பல இன சமுதாயத்தின் தனித்தன்மையைக் கட்டிக்காக்க உதவுவதோடு துரித கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வருகிறது.

சமூகத்திலும் வீட்டுப் பின்னணியிலும் நிகழும் மொழிச்சூழல் மாற்றங்களுக்கு ஏற்பச் சிங்கப்பூர் அரசாங்கம் அவ்வப்போது தாய்மொழிக் கல்வியில் ஆய்வுகளையும் கற்றல் கற்பித்தலில் தகுந்த மாற்றங்களையும் செய்து வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும், கல்வி அமைச்சு தாய்மொழிக் கல்வியில் மூன்று மறுஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த மறுஆய்வு நடவடிக்கைகள் சீனம், மலாய் மொழிகளோடு தமிழ் மொழியையும் உள்ளடக்கி நடத்தப்பட்டன. தமிழ்மொழி மறுஆய்வு நடவடிக்கைகளாக 1996, 2005 ஆகிய ஆண்டுகளிலும், மூன்று தாய்மொழிகளுக்கு ஒட்டுமொத்தமாக ஓர் ஆய்வும் என 2010இல் நடைபெற்றன. இந்த மூன்று மறுஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும் சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் அபரிமிதமான மாற்றங்களைக் கொண்டுவர உதவின.

## 1996 தமிழ்மொழி மறுஆய்வு நடவடிக்கை

சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தால் நியமிக்கப்பட்ட தமிழ்க் கல்வி மறுஆய்வுக் குழு பள்ளிகளில் தமிழ் கற்பித்தலில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை வழங்கும்படி பணிக்கப்பட்டது. அந்த ஆய்வுக்குழு மூன்று முக்கியக்கூறுகளை மையமாகக்கொண்டு தம் ஆய்வினை மேற்கொண்டது. அவையாவன:

1. சிங்கப்பூர் சமுதாயத்திற்குப் பாடத்திட்டம், பயிற்றுகருவிகளின் பொருத்தப்பாடு

2. பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட கற்றல் எதிர்பார்ப்புகளின் கடினத்-தன்மையும் வகுப்பறைச் சூழலுக்குப் பொருந்தும் மொழித்தரமும்

3. தமிழ்மொழிக் கல்வியின் தரம்

இந்த மறுஆய்வின் முடிவில், பாடத்திட்டமும் அதன் உள்ளடக்கமும் இன்றைய சிங்கப்பூர்ச் சூழலுக்கு ஏற்புடையனவாக உள்ளன என்பதை ஆய்வுக்குழு உறுதிப்படுத்தியது. மேலும், பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட கற்பித்தல் முறைகளும் புத்தாக்கமும் பன்முகத்தன்மை கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டன. ஆயினும், சிங்கப்பூரில் தமிழ்க் கல்வியின் தரத்தை மேம்படுத்தச் சில முக்கியப் பரிந்துரைகளை ஆய்வுக்குழு முன்வைத்தது. அவையாவன:

1. தமிழ்மொழி கற்பித்தல் தரத்தை உயர்த்தும் வகையில் தமிழாசிரியர்களுக்குப் பட்டப்படிப்புக்கான வாய்ப்புகளைக் கல்வி அமைச்சு ஆராய்தல் வேண்டும்.

2. தமிழாசிரியர்களுக்குக் கற்பித்தல் பணிகளோடு பள்ளி நிர்வாகப் பொறுப்பு-கள் வழங்கப்படல் வேண்டும்.

3. பள்ளிச் சூழலில் தரமான பேச்சுத்தமிழை அறிமுகப்படுத்துதல் குறித்து ஆராய்தல் வேண்டும்.

ஆய்வுக்குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்டு பாடத்திட்டமும் பயிற்று-கருவிகளும் சீரமைக்கப்பட்டன. 2000ஆம் ஆண்டு முதற்கொண்டு திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டமும் புதிய பயிற்றுகருவிகளும் பள்ளிகளில் அமல்படுத்தப்பட்டன.

## 2005ஆம் ஆண்டுத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறுஆய்வு நடவடிக்கை

சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்பதையும் கற்பிப்பதையும் விரிவாக ஆராய்வதற்குத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறுஆய்வுக் குழு ஒன்றைக் கல்வி அமைச்சு 2004ஆம் ஆண்டு டிசம்பரில் அமைத்தது. பாடத்திட்டம், கற்பித்தல்-முறை, தேர்வு முறைகள் ஆகியவற்றை மறுஆய்வு செய்வதே இக்குழுவின் முக்கியப் பணியாக அமைந்தது. இந்த ஆய்வின்போது, கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர், மொழி ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன.

### ஆய்வின் பின்னணி

சிங்கப்பூர் மக்கள் தொகையில் குறைந்த சதவீதத்தினரே தமிழ் பேசுவதால், பள்ளிக்கு வெளியே அம்மொழியைப் பயன்படுத்தும் தேவையும் வாய்ப்பும் அதிகம் இல்லை.

ஒரு மொழியைப் பயன்படுத்தும் அளவைப் பொறுத்தே அம்மொழியில் திறன்வளர்ச்சி ஏற்படுமாம். ஆகையால், நம் தமிழ் மாணவர்களில் பெரும்பான்மையினர் ஆங்கில மொழியோடு ஒப்பிடுகையில் தமிழ்மொழியில் திறன் குன்றியே இருந்தனர். சிங்கப்பூர்த் தமிழர்களைப் பொறுத்தமட்டில், தமிழ் முதன்மையான வீட்டுமொழியாக இருந்த நிலை கடந்த 30 ஆண்டுகளில் பெரும் மாற்றத்தைக் கண்டது. பெரும்பான்மையான தமிழ்க் குடும்பங்களில் இருமொழி அறிந்தவர் இருந்தாலும், பெரும்பாலும் குடும்பங்களில் அதிகம் பயன்படுத்தப்படும் தொடர்புமொழியாக இருப்பது ஆங்கிலமே. 2005இல் தொடக்கநிலை முதல் வகுப்பில் சேர்ந்த தமிழ் மாணவர்களில் 55 சதவீதத்தினர் இத்தகைய குடும்பங்களிலிருந்து வந்தவர்களாவர்.

### எதிர்காலச் சிங்கப்பூரில் தமிழ் – நம் இலக்கு

வருங்காலச் சிங்கப்பூர்த் தமிழ்ச் சந்ததியினரிடையே தமிழ் வாழும் மொழியாகத் திகழ வேண்டும் என்பதும், பலவகைப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கொண்டு உலக நகராக விளங்கும் சிங்கப்பூரின் தனித்தன்மைக்கு வலுவூட்டும் அம்சமாக அது விளங்க வேண்டும் என்பதையும் ஆய்வுக்குழு இலக்காக அமைத்துக் கொண்டது. இந்த இலக்கை அடையக்கூடிய வகையில் தமிழ்மொழிப் பாடத்திட்டம், பாடவளங்கள், கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்னும் நோக்கில் ஆய்வுக்குழு செயற்பட்டது.

### சிங்கப்பூர்த் தமிழ்ச்சமூகத்தில் எதிர்பார்க்கப்படுவன:

1. சிங்கப்பூர்த் தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் உரையாடும் திறம் பெற்றிருத்தல்

2. இல்லங்களில் ஆங்கிலத்தோடு தமிழையும் பயன்படுத்தும் நிலை; பெற்றோர் பிள்ளைகளிடையே தமிழ் தொடர்புமொழியாக இருத்தல்

3. தமிழ் பயின்றோர் தமிழ் நாளேடு படிக்கும் ஆர்வமும் திறனும் கொண்டவர்களாயும், வானொலி, தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கும், பார்க்கும் வழக்கமுடைவர்களாயும், தகவல் தொடர்புச் சாதனங்கள், இணையம் போன்றவற்றில் தமிழை அன்றாடம் பயன்படுத்துபவர்களாயும் இருத்தல்

### ஆய்வுக்குழுவின் முக்கியப் பரிந்துரைகள்:

தமிழ் பயில்வோரிடையே எதிர்பார்க்கப்படும் தமிழ்மொழித் தேர்ச்சியினை அடைதற்கு இந்த ஆய்வுக்குழு சிலவற்றை முக்கியப் பரிந்துரைகளாக முன்வைத்தன.

1. தமிழ் வகுப்பறைகளில் வாய்மொழித் திறன்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். அன்றாட உரையாடலில் பேச்சுத்தமிழ் முக்கியத்துவம் பெறுமாறு பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும்.

2. தமிழ் நூல்கள் படித்தலையும், தமிழில் எழுதிப் பயிற்சி பெறுதலையும் தொடர்ந்து வலியுறுத்துதல் வேண்டும்.

3. தமிழ்மொழியில் மாணவர்கள் திறன்வளர்ச்சி பெறும் வகையில் வெவ்வேறு கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் உத்திகளையும் ஆசிரியர்கள் கையாளுதல் வேண்டும். மாணவர்கள் மனங்கொள்ளும் வகையில் திறனறிந்து கற்பிக்கும் ஆற்றலை ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ளல் வேண்டும்.

4. மாணவர்களிடையே தமிழ் நூல் வாசிப்பை வளர்த்திடப் பொருத்தமான வளங்களை உருவாக்கித் தருதல் வேண்டும்.

5. தேர்வு மதிப்பீடுகளும் சோதனைகளும் மாணவர்கள் மொழிமீது ஈடுபாட்டை வளர்க்கும் வகையில் அர்த்தமுள்ளதாயும் திறன் அடைவுநிலைகளை விளக்குவதாயும் அமைதல் வேண்டும்.

6. தமிழாசிரியர்கள் தொடர்ந்து தங்களை மேம்படுத்திக்கொள்வதற்குப் பொருத்தமான பணியிடைப் பயிற்சி வகுப்புகள், பட்டறைகள் முதலானவை திட்டமிட்டு நடத்தப்பட வேண்டும்.

7. பெருகி வரும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டைக் கற்றல் கற்பித்தலுக்கு ஏதுவாகப் பயன்படுத்தி மாணவர்களின் தமிழ்மொழி கற்கும் ஆர்வத்தை வளர்த்தல் வேண்டும். தொழில்நுட்பம் சார்ந்த தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை ஊக்குவித்தல் வேண்டும் .

கல்வி அமைச்சுக்கு ஆய்வுக்குழு வெளியிட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்மொழிப் பாடத்திட்டம், பயிற்றுவளங்கள் உருவாக்கம், கற்பித்தல் முறைகள், ஆசிரியர் பயிற்சி உள்ளிட்ட கூறுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. வகுப்பறைகளிலும், வகுப்பறைக்கு அப்பாலும் பேச்சுத்தமிழைப் பயன்படுத்துமாறு பெரிதும் வலியுறுத்தப்பட்டது. தமிழ்மொழிக் கல்வி என்பது பள்ளி சார்ந்த நிலையில் மட்டும் தனித்து இயங்காமல், இல்லம், பள்ளி, சமூகம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியில் நடவடிக்கை சார்ந்த அனுபவக்கல்வியாக அமையப் பெற்றது. இந்த மாற்றங்களைச் சமூகமும் பெற்றோரும் நல்லாதரவு தந்து வரவேற்றனர்.

**கல்வியமைச்சின் தாய்மொழிகள் மறு ஆய்வு 2010**

2005ஆம் ஆண்டு நடைபெற்ற மறுஆய்வு நடவடிக்கையில் குறிக்கப்பட்ட பரிந்துரைகள் அமலாக்கம் பெறுகின்ற நிலையில், வீட்டிலும் சமூகத்திலும் மாறிவரும் மொழிச் சூழலுக்கேற்ப இருமொழிக் கொள்கை தொடர்ந்து பயனும் பொருத்தமும் உடையதாக விளங்குவதைக் கல்வியமைச்சு மறுவுறுதிப்படுத்தியது. அதற்கேற்பச்

சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தாய்மொழி கற்பித்தல், மதிப்பீடு ஆகியவற்றைக் கல்வியமைச்சு ஆய்வுக்குழு மீண்டும் 2010ஆம் ஆண்டு மறு ஆய்வு செய்தது .

**தாய்மொழிகள் மறு ஆய்வுக்கான அவசியம்**

இரண்டு முக்கியக் காரணங்களுக்காக இந்தத் தாய்மொழிக் கல்விக்கான ஆய்வு நடத்தப்பட்டது. சிங்கப்பூரர்களின் இல்லங்களில் மொழிச்சூழல் தொடர்ந்து துரித மாற்றம் கண்டு வருவது ஒரு காரணம். உலக அளவில் அதிகமானோர் இரண்டாம் மொழியைக் கற்க ஆர்வங்கொள்வதால், மொழிக்கல்வியில் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்து உலகமய-மாக்கலுக்கு வழிவகுத்துள்ளன என்பதும் மற்றொரு காரணமாகும். மேலும், தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புத்தாக்கம் மொழிகளைக் கற்பதற்கும் கற்பிப்பதற்குமான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளன. இவை சிங்கப்பூரில் தாய்மொழி கற்றல் கற்பித்தலில் ஏற்படுத்தியுள்ள வளர்ச்சியையும் தாக்கத்தையும் கணித்து அதற்கேற்றாற்போல் ஒவ்வொரு தாய்மொழியும் வாழும் மொழியாகத் திகழ்வதை உறுதிசெய்யக் கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியவற்றிற்குப் பொருத்தமான உத்திகளைப் பரிந்துரைப்பதற்காக ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது .

**முக்கியப் பரிந்துரைகள் – கற்றலில் ஆர்வம்; பயன்பாட்டில் திறமை**

மூன்று தாய்மொழிகளுக்குமாக நடைபெற்ற இந்த ஆய்வில் கற்றல் கற்பித்தல் தொடர்பான பல முக்கியக் கூறுகள் மீண்டும் ஆராயப்பட்டன. மாணவர்கள் தாய்மொழியை ஆர்வத்தோடு கற்றலும், அதைத் திறம்படப் பயன்படுத்துதலும் என்பவை இலக்குகளாக அமைக்கப்பட்டன. தாய்மொழி கற்றல் கற்பித்தலை மேலும் செம்மைப்படுத்த ஆய்வுக்குழு நான்கு முக்கியப் பரிந்துரைகளை முன்வைத்தது.

1. திறமையை மேம்படுத்துவதற்குக் கற்பித்தலையும் மதிப்பீட்டையும் தொடர்பு உடையதாக்குதல்;

2. வெவ்வேறு திறன்கள் கொண்ட மாணவர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு கற்றல் வளங்களை உருவாக்குதல்;

3. தாய்மொழி கற்றலுக்கும் பயன்பாட்டிற்கும் உகந்த சூழலை அமைத்தல்;

4. அதிகமான தாய்மொழி ஆசிரியர்களைப் பணியில் நியமித்தலும் அவர்தம் தரத்தை மேம்படுத்துதலும் .

ஆய்வுக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கல்வி அமைச்சு தாய்மொழிப் பாடக்-கலைத்திட்டத்தைச் சீரமைத்தது. மாணவரை மையமாகக் கொண்டு பாடக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. அவ்வாறு கற்றல் கற்பித்தலில் நிகழ்த்தப்பட்ட மாற்றங்களில் குறிப்பிடத்தக்கன வருமாறு:

1. மாணவர்களின் வேறுபட்ட தொடங்குநிலைகளைக் கண்டறிந்து அவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்பக் கற்பித்தல் நிகழ்த்தப்பட்டது;

2. தொடர்ந்து வாய்மொழித் திறன்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்தல்; குறிப்பாக வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத்தில் நல்ல அடிப்படையைத் தொடக்க ஆண்டுகளிலேயே அமைத்தல்;

3. சிறு வயதிலேயே வாசித்தலில் ஈடுபாட்டை வளர்த்து மொழி கற்றலில் வலுவான அடிப்படையை அமைத்துத் தருதல்;

4. மொழியைத் திறம்படப் பயன்படுத்துபவராக மாணவர்களை உருவாக்கிட ஆசிரியர்களுக்குத் தெளிவான முறையில் மொழித் தேர்ச்சிநிலை விளக்கக்-குறிப்புகள் தயாரித்துத் தருதல்;

5. இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களான, பேச்சுவழிக் கருத்துப்-பரிமாற்றம், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் வகுப்பறைகளில் அதிகமான மொழி நடவடிக்கைகள் நிகழ்த்தப்-படுதல்.

6. தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் மாணவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைத் தக்க முறையில் தாய்மொழிக் கல்விக்குப் பயன்படுத்திக்-கொள்ளக் கூடுதல் வளங்களை உருவாக்கித் தருதல் .

**முடிவுரை**

கடந்த 20 ஆண்டுகளில், தமிழ்மொழிக் கல்வியில் நிகழ்த்தப்பட்ட இந்த மூன்று மறுஆய்வு நடவடிக்கைகளும் சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வியில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளைக் காண்பதற்கு உதவியுள்ளன. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட மாற்றங்களும் பெறப்பட்ட முன்னேற்றங்களும் தமிழ்மொழிப் பாடக்-கலைத்திட்டம், பயிற்றுகருவிகள், கற்பித்தல் முறைகள், மதிப்பீடுகள் முதலானவற்றைத் தரப்படுத்தவும் தகுதிப்படுத்தவும் பேருதவியாய் அமைந்துள்ளன. இவற்றின் விளைவாகச் சிங்கப்பூரின் தமிழ்க் கல்வி உலக அரங்கில் பல நாடுகளின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது. மேலும், உலகளாவிய நிலையில் தமிழ் கற்றல் கற்பித்தலுக்குப் புதிய பரிமாணங்களை அமைத்துத்தரவும் இந்த ஆய்வுகள் உதவியுள்ளன.

**கட்டுரைக்கான துணைநூற் பட்டியல்:**

1. Report of The Tamil Education Review Committee - SINDA October 1996
2. தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை, நவம்பர் 2005
3. தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை 2010

# சிங்கப்பூரில் பாலர் பள்ளித் தமிழ்க் கல்வி

**புஷ்பலதா சரவணன்**
**நந்தினி இளங்கோவன்**
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

**முன்னுரை**

சிங்கப்பூரில் ஆங்கிலம், சீனம், மலாய் ஆகிய மொழிகளுடன் தமிழும் ஓர் அதிகாரத்துவ மொழியாக விளங்குகிறது. பிள்ளைகள் ஆங்கிலத்துடன் தமது தாய்-மொழியையும் கற்கவேண்டும் என்னும் நோக்கில் இருமொழிக் கொள்கை வகுக்கப்பட்டது. பாலர் பள்ளிகளில் தொடங்கித் தொடக்கக் கல்லூரிகள் வரையிலும் மாணவர்கள் தமிழைக் கற்க இங்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் பாலர் பள்ளிகளில் தமிழ்க் கல்வி என்பதைப்பற்றிக் காண்போம்.

**பாலர் பள்ளிகளின் தோற்றம்**

நம் இளம் பிள்ளைகளுக்கு அறிவாற்றல், திறன்கள், பண்புநலன் முதலியவற்றில் வலுவான ஆரம்பத்தைக் கொடுக்க வேண்டும். அவர்களைத் தொடக்கப்-பள்ளிகளுக்குத் தயார் செய்யவேண்டும். இந்த நோக்கங்களை நிறைவேற்று-வதற்காகச் சிங்கப்பூரில் பாலர் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. பாலர் பள்ளிகள் மூன்றாண்டு கல்வியை வழங்குகின்றன. இது நான்கு வயது முதல் ஆறு வயது பிள்ளைகளுக்கென நடத்தப்படுகிறது. பிள்ளைகள் பிறருடன் பழகிச் சமூகப் பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடவும் முறையான கல்விக்குத் தயாராகவும் பாலர் பள்ளிச் சூழல் வழிவகுக்கிறது. பாலர் பள்ளிப் பிள்ளைகள் ஆங்கிலத்தோடு தாய்மொழியையும் கற்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. இந்தப் பாலர் பள்ளிகளைச் சமூக அமைப்புகள், சமய அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் முதலியவை நடத்தி வருகின்றன.

**ம.செ.க. சமூக அறநிறுவன பாலர் பள்ளிகள்** [1]

1960களின் தொடக்கத்தில் மக்கள் செயல் கட்சி பாலர் பள்ளிகளை அமைத்தது. இப்பள்ளிகளில் ஆங்கிலத்தோடு சீன மொழியையும் கற்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. 1970களில் மக்கள் செயல் கட்சியின் பாலர் பள்ளிகள் சிங்கப்பூரர்களிடையே மிகவும் பிரபலமடைந்தன. அதிகமான பிள்ளைகள் பாலர் கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காகத் தீவு முழுவதும் மேலும் பல நிலையங்கள் நிறுவப்பட்டன.

---

[1] PAP Community Foundation Kindergartens

1986-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் தேதியன்று மக்கள் செயல் கட்சி சமூக அறநிறுவனம் ஒன்றை நிறுவியது. அந்த நிறுவனத்தின்கீழ் மக்கள் செயல் கட்சியின் எல்லா பாலர் பள்ளிகளும் இடம்பெற்றன. 1980களின் இறுதியிலும் 1990களின் தொடக்கத்திலும் இந்தப் பாலர் பள்ளிகளின் பாடக்கலைத்திட்டமும் வசதிகளும் மேம்படுத்தப்பட்டன. இதே காலக்கட்டத்தில் ம.செ.க. சமூக அறநிறுவனம் பாலர் பள்ளிகளில் தாய்மொழியாகத் தமிழும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**சரஸ்வதி பாலர் பள்ளி**

இந்திய சமூகத்தின் பாலர் பள்ளிக் கல்வித் தேவையை ஈடுகட்டுவதற்காகச் சரஸ்வதி பாலர் பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இது இந்து அறக்கட்டளை வாரியத்தின் ஆதரவில் 1990ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டுவரை, இந்தப் பாலர் பள்ளி ஸ்ரீ வைராவிமட காளியம்மன் ஆலய மண்டபத்தில் வகுப்புகளை நடத்தி வந்தது. தற்போது இது கிம் கியெட் அவெனியூவில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் ஆங்கிலத்தோடு தமிழும் கற்பிக்கப்படுகிறது.

**பாலர் கல்வித் தொடர்பான ஆய்வு**

1991ஆம் ஆண்டு இந்தியக் கல்விச் செயற்குழு இந்தியக் கல்வி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அந்த ஆய்வறிக்கையில் பாலர் கல்வித் தொடர்பான கீழ்க்காணும் திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டன.

- பிற சமூகத்தினருக்கு வழங்கப்படும் ஆயத்தக் கல்விக்கு ஒப்பாக இந்திய பிள்ளைகளுக்கும் ஆயத்த கல்வி வழங்கப்பட வேண்டும்.
- குறைந்தது ஆங்கிலமும் தமிழும் வழங்கக்கூடிய இன்னுமொரு பாலர் பள்ளியை 1992ஆம் ஆண்டில் தொடங்க வேண்டும். 1993லும் 1994லும் ஆண்டுக்கு ஒன்றாக ஆங்கிலமும் தமிழும் வழங்கக்கூடிய பாலர் பள்ளியைத் தொடங்க வேண்டும்.

**கல்வி அமைச்சின் ஆயத்தக் கல்வித் திட்டம்**

கல்வி அமைச்சு 1991ஆம் ஆண்டில் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டுக்குமான ஆயத்தக் கல்விப் பாடத்திட்டத்தை உருவாக்கியது [2]. இப்பாடத்திட்டம் தொடர்பான கூடுதல் தகவல்கள் கிடைக்கவில்லை.

**சாரதா பாலர் பள்ளி**

1992ஆம் ஆண்டின் இறுதியில் சாரதா பாலர் பள்ளி அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது. 1993-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாடங்கள் முறையாக ஆரம்பிக்கப்பட்டன. அக்காலக்கட்டத்தில் தமிழைத் தாய்மொழியாக வழங்கிய சில

[2] Ministry of Education. (1991). Preparatory Year Programme – General Manual. Singapore.

பாலர் பள்ளிகளுள் சாரதா பாலர் பள்ளியும் ஒன்றானது. இச்சேவை இந்திய சமூகத்தினரிடையே பெரிதும் வரவேற்கப்பட்டது.

**கல்சா பாலர் பள்ளி**

கல்சா பாலர் பள்ளி 1992ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது அது ஆங்கிலத்துடன் பஞ்சாபி மொழியை மட்டுமே வழங்கியது. பள்ளியின் சுற்று வட்டாரத்தில் அதிகமான இந்தியர்கள் வாழ்ந்து வந்ததாலும் அக்காலக்கட்டத்தில் தமிழ்மொழியை வழங்கக்கூடிய பள்ளிகள் மிகவும் குறைவாக இருந்ததாலும் கல்சா 1993ஆம் ஆண்டில் தமிழ்மொழியையும் இந்திமொழியையும் வழங்கியது. இது இந்திய சமூகத்தினரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. கல்சா பாலர் பள்ளி பொங்கல் போன்ற விழாக்களைக் கொண்டாடுவதன்மூலமும் இந்திய மரபுடைமை கழகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதன்மூலமும் இந்திய பாரம்பரியத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் பிள்ளைகளிடையே ஏற்படுத்துகிறது.

**சரஸ்வதி தர்ம முனீஸ்வரன் பாலர் பள்ளி**

2005ஆம் ஆண்டு, இந்து அறக்கட்டளை வாரியமும் தர்ம முனீஸ்வரன் ஆலயமும் இணைந்து சரஸ்வதி தர்ம முனீஸ்வரன் பாலர் பள்ளியைத் துவக்கி-வைத்தன. இந்திய சமூகத்தின் பாலர் கல்வித் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கத்தோடு இப்பள்ளி அமைக்கப்பட்டது. இது ஆங்கிலத்தையும் தமிழையும் வழங்கி வருகிறது. சரஸ்வதி தர்ம முனீஸ்வரன் பாலர் பள்ளியில், பிள்ளைகள் அடிப்படை மொழித் திறன்களை வளர்த்துக்கொள்கிறார்கள். மேலும், அவர்கள் பிற இனத்தவரின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் மதிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் பரிவு காட்டுதல், பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவையும் பிள்ளைகளுக்கு வலியுறுத்தப்-படுகின்றன.

பாலர் பள்ளிகளை நடத்தும் அமைப்புகள் தங்கள் பிள்ளைகளின் தேவை-களுக்கேற்பப் பாலர் கல்விப் பாடக்கலைத்திட்டத்தை உருவாக்கி அமலாக்கம் செய்து வருகின்றன. அதனால், 2012ஆம் ஆண்டு முறைப்படுத்தப்பட்ட பாலர் கல்வியை உருவாக்கும் திட்டத்தில் கல்வி அமைச்சு ஈடுபட்டது.

**கல்வி அமைச்சின் பாலர் பள்ளி நிலையங்கள்**

ஆரம்பக் காலப் பருவம் ஒரு பிள்ளையின் முழுமையான வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. தரமான பாலர் கல்வி பிள்ளைகளின் தன்னம்பிக்கை, சமூகத் திறன்கள், பண்புகள் ஆகியவற்றை வளர்க்க உதவுகிறது. இவை பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்கு வலுவான அடித்தளத்தை உருவாக்கித் தருகிறது. இவற்றைக் கருத்திற்கொண்டே சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத்திட்டம் 2013ஆம் ஆண்டு உருவாக்கம் கண்டது. இப்பாடக்கலைத்திட்டம் தரமான பாலர் கல்வியை வழங்கும் முயற்சியில் ஈடுபடுவதுடன் ஆங்கில மொழியோடு

தாய்மொழியையும் (தமிழ்/மலாய்/சீனம்) வழங்குகிறது. இதனையொட்டித் தாய்மொழிகளுக்கான இளம் மாணவர்களைப் பேணி வளர்க்கும் பணிச்சட்டம் உருவாக்கம் கண்டது. தாய்மொழிகளுக்கான பணிச்சட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்காகக் கல்வியாளர் வழிகாட்டி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கூடுதலான விளக்கங்களும் எடுத்துக்காட்டுகளும் இடம்பெற்றிருக்கின்றன.

பாலர் பள்ளியில் தமிழ்மொழியைப் பயிலும் பிள்ளைகள் அதை ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கற்க உதவுவதற்காக 'விண்மீன்கள்' என்னும் பயிற்றுகருவிகளின் தொகுப்பு உருவாக்கப் பெற்றிருக்கிறது. இத்தொகுப்பில் பெரிய புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், வண்ணப் பட அட்டைகள், எழுத்து, சொல்லட்டைகள், பாடக்குறிப்புகள் முதலியன இடம்பெற்றுள்ளன. மேலும், மின்னிலக்க வளங்கள் தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பெரிய புத்தகங்கள், வண்ணப் பட அட்டைகள், எழுத்து, சொல்லட்டைகள் ஆகியவற்றின் துணையுடன் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்கள் வளர்க்கப்படுகின்றன. மாணவர்கள் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல் திறன்களில் தகுந்த தேர்ச்சியினையும் படித்தல், எழுதுதல் திறன்களில் ஆரம்ப நிலையினையும் பெறும் நோக்கில் பாடக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான புத்தகங்களையும் வண்ணப் படங்களையும் பிள்ளைகள் அதிகம் விரும்புவர். அப்படங்களோடு சில எளிய தொடர்களும் இருந்தால் அவர்களுக்கு அவற்றைப் படிக்க வேண்டும் என்னும் ஆர்வம் இயல்பாக ஏற்படும். இதைக் கருத்திற்கொண்டே கல்வி அமைச்சின் பாலர் பள்ளி பிள்ளைகளுக்குப் பெரிய புத்தகத்தின்வழித் தமிழ்மொழி கற்றல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பெரிய புத்தகத்தின்வாயிலாகக் கருத்தையும் கவனத்தையும் கவரும் ஆர்வமூட்டும் கதைகளைக் கூறிப் பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கம், வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்கள், பண்பாடு முதலியவற்றை ஆசிரியர்கள் வளர்க்கிறார்கள். மேலும், ஆசிரியரின் துணையோடு பெரிய புத்தகங்களிலுள்ள தொடர்களை வாய்விட்டுப் படிக்கும்போது பிள்ளைகள் பல சொற்களைச் சரியாக ஒலிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். மேலும், மற்றவர்களுடன் உரையாடுவதற்கும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இவ்வாறு தமிழ்மொழி வாழும் மொழியாக நிலைத்திருக்கும் என்பது தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்ட உருவாக்க குழுவினரின் நம்பிக்கை.

ஒவ்வொரு தவணைக்கும் (10 வாரங்கள்) 4 பெரிய புத்தகங்களும் 8 கதைப்புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. பெரிய புத்தகங்களிலுள்ள கதைகள் சிங்கப்பூர்ச் சூழலில் பிள்ளைகளின் அனுபவத்திற்குட்பட்ட நிலையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பெரிய புத்தகம், கதைப்புத்தகம் இரண்டையும் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குரிய அணுகுமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பிள்ளைகளின் கேட்டல், பேசுதல் ஆகிய மொழித்திறன்களை வளர்ப்பதற்கு உதவும் வகையில் பாடல்கள், கதைகள், அர்த்தமுள்ள விளையாட்டுகள், கற்றல் நிலையங்கள், சொல்வளப்பெருக்கம், குடும்பத்-

தினருடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கை, படம் பார்த்துப் பேசுதல், பொருளைக் காட்டிப் பேசுதல் முதலிய நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பிள்ளைகள் இயல்பான வாழ்க்கைச் சூழலில் பயன்முனைப்புமிக்க வகையில் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தை நிகழ்த்துவதற்கு உதவும் நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் தொடர்புள்ளப் பெரும்பாலும் பயன்படுவது பேச்சுத்தமிழே ஆகும். இதனால், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திற்குப் பேச்சுத்தமிழ்தான் பயன்படுத்தப்படுகிறது.

பிள்ளைகள் முறையாக எழுதத் தொடங்குவதற்கு முன்னர், பலவகையான தசைநார் இயக்கப்பயிற்சிகளில் ஈடுபடுவார்கள். மேலும், புள்ளிகளை இணைத்தல், சுழிகள், வளைவுகள், கோடுகள் வரைதல், முதலிய பயிற்சிகள் தமிழ் எழுத்துகளைச் சரியான வடிவில் முறையாகவும் தெளிவாகவும் எழுதிப் பழகத் துணைபுரியும்.

பிள்ளைகளின் கற்றலில் குடும்பத்தினரும் பங்கெடுக்க வேண்டும் என்னும் நோக்கில் குடும்பத்தினருடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும்போது குடும்ப உறுப்பினர்களுடன் தமிழில் உரையாடும் வாய்ப்பு அதிகரிக்கிறது; குடும்ப உறவு வலுப்படுகிறது; பிள்ளைகள் பள்ளியில் என்ன கற்கிறார்கள் என்பதைக் குடும்ப உறுப்பினர்களும் அறிந்துகொள்ள முடிகிறது.

பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத்திட்டம் 2014ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் ஐந்து பாலர் பள்ளி நிலையங்களில் சோதனை செய்யப்பட்டது; 2015ஆம் ஆண்டு மேலும் ஐந்து பாலர் பள்ளி நிலையங்களில் சோதனை செய்யப்படுகிறது. அதோடு, 2016ஆம் ஆண்டு மேலும் ஐந்து பாலர் பள்ளி நிலையங்களில் சோதனை செய்யப்படும். 2016ஆம் ஆண்டு பாலர் பள்ளி முதலாம் ஆண்டுக்கு இப்பாடக்கலைத்திட்டம் அமலாக்கம் காணும். இதனைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டு பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டுக்கு இப்பாடக்கலைத்திட்டம் அமலாக்கம் காணும்.
(காண்க: அட்டவணை-1).

| ஆண்டு | பாலர் பள்ளி முதலாம் ஆண்டு | பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு |
|---|---|---|
| 2014 | முன்னோட்டச் சோதனை | |
| 2015 | முன்னோட்டச் சோதனை | முன்னோட்டச் சோதனை |
| 2016 | அமலாக்கம் | முன்னோட்டச் சோதனை |
| 2017 | | அமலாக்கம் |

**அட்டவணை-1**

**முடிவுரை**

கிடைக்கப்பெற்ற தகவல்கள் வாயிலாகப் பாலர் பள்ளியில் தமிழ்க் கல்வியைப்பற்றி அறிந்துகொண்டோம். அதுமட்டுமின்றிக் கல்வி அமைச்சின் பாலர் பள்ளிப் பாடக்-கலைத்திட்டம் இளம் பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்தி அவர்களைப் பேணி வளர்க்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இதனால், பாலர் பள்ளிகளிலும் இருமொழிக் கொள்கை வலுப்பெறும். பாலர் பள்ளியிலேயே பிள்ளைகள் தமிழ்-மொழியின்மீது ஆர்வம்கொண்டு அதை ஈடுபாட்டுடன் கற்றுத் தமிழை வாழும் மொழியாக்குவர் என்பது திண்ணம்.

**மேற்கோள் சான்றாதாரங்கள் :**


கல்வி அமைச்சு. (2014). *இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல், சிங்கப்பூர்ப் பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத்திட்டம், தாய்மொழிகளுக்கான பணிச்சட்டம்*. சிங்கப்பூர்.

Action Committee on Indian Education. (1991). *At the Crossroads: Report of the Action Committee on Indian Education*. Singapore.

Khalsa Kindergarten. (2009). *About Khalsa Kindergarten*. Retrieved from http://kindergarten.singaporekhalsa.org.sg/index.php?option=com_content&view=article&id=46&Itemid=54.

Ministry of Education. (1991). *Preparatory Year Programme – General Manual*. Singapore

Ministry of Education. (20 Feb 2013). *Refreshed Kindergarten Curriculum Framework Spells Out Clearer Learning Outcomes, Emphasises Holistic Development. Singapore*. Retrieved from http://www.moe.gov.sg/media/press/2013/02/refreshed-kindergarten-curricu.php.

Ministry of Education. (17 Dec 2014). *MOE Kindergartens, Our Centres*. Retrieved from http://www.moe.gov.sg/moekindergarten/our-centres.html.

PAP Community Foundation. (2015). *About us, Our History*. Retrieved from http://www.pcf.org.sg/ABOUT-US/Our-History/Content.

Ramakrishna Mission Sarada Kindergarten. (2006-2012). *About us, History*. Retrieved from http://www.sarada.edu.sg.

Saraswathy Kindergarten. (2008). *About school*. Retrieved from http://www.skg.sg/aboutschool.html.

Saraswathy Darma Muneeswaran Kindergarten. (2011). *About school*. Retrieved from http://www.sdmkg.sg/aboutschool.html.


☙ ❧

# தொடக்கப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டம்

சி சுப்புலட்சுமி
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

**முன்னுரை**

தமிழின் மேன்மை அதன் தொன்மையில் மட்டுமன்றி அதன் தொடர்ச்சியிலும் உள்ளது. தமிழ்மொழி தொடர்ந்து சிங்கப்பூரில் புழக்கத்திலிருக்க வேண்டுமெனில் காலத்திற்கு ஏற்ற மாற்றங்கள் தேவை. தமிழ்மொழி கற்றல் என்பது மாணவர்களுக்குச் சுகமான ஓர் அனுபவமாக இருக்க வேண்டும்; சுமையாகிவிடக்கூடாது என்பதில் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. மாணவர்களின் மாறிவரும் வீட்டுப்-பின்புலத்திற்கேற்பவும், அவர்களின் தேவைகளுக்கேற்பவும், நாட்டுருவாக்கத்திற்கு ஏற்பவும் காலந்தோறும் தமிழ்மொழிப் பாடத்திட்டம் பல ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கண்டு வருகிறது.

**தொடக்கக்காலங்களில்**

சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் வரலாறு 1834ஆம் ஆண்டு சமூக ஆர்வலர்கள் சிலரின் முயற்சியால் தொடக்கம் கண்டது [1]. ஆரம்பத்தில் தமிழ்ப் பள்ளிக்-கூடங்கள் தமிழர்கள் அதிகம் வாழும் வட்டாரங்களில் தோற்றுவிக்கப்பட்டன. ஆங்கிலேயர், ஜப்பானியர் எனத் தொடக்கக்காலங்களில் ஆட்சி கைமாறிய வண்ணம் இருந்ததால் தமிழ்மொழிக் கல்வியில் ஏறுமுகமான மாற்றங்கள் அதிகம் நிகழவில்லை. 1950க்கு முன்னர்த் தமிழ் முதன்மொழி நிலையில் மட்டுமே பள்ளிகளில் கற்பிக்கப்பட்டது. சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதற்கென்று பிரத்தியேகமாகப் பாடத்திட்டமோ பயிற்றுகருவிகளோ உருவாக்கப்படவில்லை.

1951ஆம் ஆண்டு சோதனை நிலையில் சில ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளிலும் தமிழ் இரண்டாம் மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு நல்ல வரவேற்பு கிடைக்கவே பல பள்ளிகளில் தமிழ் இரண்டாம் மொழிநிலையில் கற்பிக்கப்பட்டது. டிசம்பர் 1957இல் வெளிவந்த கல்வி அறிக்கை நான்கு மொழிகளுக்கும் (ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ்) சம மதிப்பு, இருமொழிக் கல்விக்கொள்கை, எல்லாப் பள்ளிகளுக்கும் பொதுவான பாடத்திட்டம்[2] போன்ற கூறுகளை வலியுறுத்தியது. அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர்த் தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கான முதல் தமிழ்மொழிப் பாடத்திட்டம் 1958இல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது.

[1] பழனிசாமி. கே., *உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 - 1982*, பக்கம் 18

[2] Ministry of Education, (2007), *Many Pathways. One Mission, Fifty Years of Singapore Education*, Nu Colours Print, Singapore, Pages 11-12

## 1958இல் வரையப்பெற்ற முதல் பாடத்திட்டம்

(Syllabus for the Teaching of Tamil in Primary and Secondary Schools in Singapore)



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாடத்திட்டமிது. இதற்கு முகவுரை வழங்கிய ஜி.பி. டார்க், [3] *'தமிழர்கள் சிறுபான்மையின-ராயினும் விறுவிறுப்பும் செறிவும் வாய்ந்த தொன்மையான நாகரிகத்திற்குச் சொந்தக்காரர்கள். தமிழ்மொழியில் புலமை பெற்றிருத்தல் அளவிடுவதற்கரிய இலக்கியச் செல்வத்திற்கான வாயிலைத் திறந்து வைக்கும். .... ... ... பள்ளிக்குச் செல்லும் முன் ஓரளவு தமிழ் தெரிந்தவர்களுக்கு மட்டுமன்றித் தமிழ் அறவே தெரியாதவர்களையும் கருத்திற்கொண்டு இந்தப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது,* [4] என்று குறிப்பிட்டுள்ளார். இப்பாடத்திட்டம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகளுக்கும் தமிழைப் பேச அறிந்திருக்கும் தமிழரல்லாத பிள்ளைகளுக்கும் உரியது. தமிழ்மொழியறிவு அறவே இல்லாத பிள்ளைகள் முதலில் வாய்மொழிப் பயிற்சிகளை ஆறு மாதங்களுக்குப் பெற்ற பிறகே இந்தப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் பயில முடியும் என்ற செய்தி பாடத்திட்டத்தின் முதற்பக்கத்தில் முன்னுரையாக இடம்பெற்றுள்ளது.

தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் தமிழ்மொழிப் பாடத்தின்போது என்னென்ன கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்கான குறிப்புகள் இப்பாடத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன. இப்பாடத்திட்டம் தற்போது வழங்கப்படுவதுபோல் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருக்குமா என்ற கேள்வி எழுகிறது. காரணம் இப்பாடத்திட்டத்தின் விலை 30 காசு என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

| **பக்கம்** | **உள்ளடக்கம்** |
|---|---|
| பக்கங்கள் 1 – 22<br>தொடக்கநிலை 1 - 6 | பாடத்திட்டம் – சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் கற்பித்தல் |
| பக்கங்கள் 23 – 27<br>படிவம் II – படிவம் V | பாடத்திட்டம் – சிங்கப்பூர் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் கற்பித்தல் |
| பக்கம் 28<br>படிவம் IV – V | தமிழ் இலக்கியம் |

தொடக்கநிலையில் எழுத்துகள் நேர்கோட்டு வரிவடிவமுறையில் அறிமுகப்படுத்தப்-பட்டுள்ளன. மேலும் அவை அசைகளாகப் பிரித்துக் கற்பிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையிலும் 4 மொழித்திறன்கள் அடிப்படையில்

---

[3] G.P. Darke, Deputy Director (Professional), Ministry of Education, Singapore

[4] Ministry of Education, (1958). Tamil Language Syllabus, Government Printer, Singapore, Foreword
'Even though the Tamil Community is the smallest of the main communities which makeup Singapore, its members are the heirs of a very ancient and vigorous civilisation. Proficiency in the Tamil Language will open the door to a great and profound literature… '

என்னென்ன கற்பிக்கப்பட வேண்டும் எனச் சுருக்கமான விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றோடு ஒவ்வொரு நிலைக்குமான இலக்கணக் கூறுகளும் செய்யுள்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோல உயர்நிலையில் படிவம் 2 முதல் 5 வரை கற்பிக்கப்பட வேண்டியவை ஐந்தே பக்கங்களில் மிகவும் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. படித்தலுக்கும் கருத்துணர் திறனுக்கும் உயர்நிலையில் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இலக்கியம், இலக்கணம், கருத்தறிதல், சுருக்கி வரைதல், கட்டுரை, மொழிபெயர்ப்பு, வகுப்பு நூலகம் எனப் பலவற்றைப்பற்றிய குறிப்புகளும் இப்பாடத்-திட்டத்தில் உள்ளன.

தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடும் மொழியில் ஓரளவு தேர்ச்சியுமுடைய ஆண் மாணாக்கர் மட்டுமே உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் இலக்கியப்பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்க முற்படலாம்[5] என்ற குறிப்பு, பால் பாகுபாட்டை வெளிப்படுத்தியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அப்படியென்றால் 1950களில் பெண்பிள்ளைகளின் கல்வி நிலை என்ன என்ற சிந்தனையை இது எழுப்புகிறது.

## 1961இல் வெளியிடப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள்

1958இல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பாடத்திட்டத்தின் தமிழ் வரைவாக மலர்ந்தன 1961இல் எழுதப்பட்ட பாடத்திட்டங்கள். ‘தமிழ்த் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்’ (Syllabus for the Teaching of Tamil Language in Primary and Secondary Tamil Schools in Singapore) ஒன்றும், ‘ஆங்கில, மலாய், சீனத் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்’ (Syllabus for the Teaching of Tamil in Primary and Secondary Non-Tamil Schools in Singapore) ஒன்றும் தமிழிலேயே எழுதப்பட்டன. தமிழ்ப்பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தின் எளிய வரைவாக அமைந்தது தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்பவர்களுக்கான பாடத்திட்டம். தமிழை முதன்மொழியாகப் பயில்பவர்களும் இரண்டாம் மொழியாகப் பயில்பவர்களும் கற்க வேண்டியவற்றுள் உள்ள வேறுபாட்டை விளக்கப்படுத்தும் வண்ணம் இவை வரையப்பட்டிருந்தன. இவற்றிலும் தமிழ் எழுத்துகளைக் கற்பிப்பதற்கு நேர்கோட்டு வரிவடிவமுறையே வலியுறுத்தப்பட்டிருந்தது. மேலும், ‘சொற்களைத் தனித்தனி எழுத்துகளாகக் கற்பிக்காமல் அசைகளாகப் பிரித்துக் கற்பித்தால் மாணவர்கள் விரைவில் கற்றுக்கொள்கிறார்கள் என்பதை நடைமுறையில் காணலாம்,’ என்ற குறிப்பும்6 உள்ளது.

## 1979 – தமிழ்மொழிப் பாடத்திட்டம் (இரண்டாம் மொழி)

*[Tamil Langauge Syllabus (Second Language)]*

அடிப்படை மொழித்திறன்களை மாணவர்கள் பெற்றிடச் செய்வதைத் தலையாய நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது 1979இல் வெளிவந்த இப்பாடத்திட்டம். ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களைக் கருத்திற்கொண்டு இது வடிவமைக்கப்பட்டது. தொடக்கக்கல்வியை முடிக்கும் நிலையில் மாணவர்கள்;

---

[5] Ministry of Education, (1958). *Tamil Language Syllabus*, Government Printer, Singapore, page 28
*‘It is suggested that only boys who have cultivated an interest in Tamil literature and who show more than average ability in the language should attempt this paper in the School Ceritificate Examination ...’*

[6] சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, (1961), *தமிழ்த் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்*, பக்கம் 2.

- பேச்சு வழக்கிலுள்ள இயல்பான தமிழ்மொழியினைக் கேட்டுப் புரிந்துகொள்வர்
- தம் அனுபவங்களையும் கருத்துகளையும் எளிய தமிழில் தெளிவாகவும் பிழையின்றி-யும் எடுத்துச் சொல்வர்
- எளிய உரைநடையில் அமைந்த நூல்கள், இதழ்கள், செய்தித்தாள்கள் முதலியவற்-றைப் படித்துப் புரிந்துகொள்வர்
- தம் அனுபவங்களையும் எண்ணங்களையும் எளிய நடையில் பிழையின்றி எழுதுவர் என்ற எதிர்பார்ப்புகளுடன் இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**1980 – தமிழ்மொழிப் பாடத்திட்டம், புதிய கல்விமுறைக்குரியது**

( Tamil Language Syllabus for New Education System)

இப்பாடத்திட்டத்தின் முகவுரையில் இப்பாடத்திட்டம் *'வழக்கமான (ஆறாண்டு) தொடக்கக் கல்விக்குரிய தமிழ்ப் பாடத்திட்டம்'* எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழியைப் பயிலும் மாணவர்களுக்கென இது தயாரிக்கப்பட்டது.

**1981 – புதிய கல்விமுறைக்கான தமிழ் இரண்டாம் மொழிப் பாடத்திட்டம்**

(Syllabus for Tamil as Second Language in the New Education System)

1979-இல் புதிய கல்விமுறை நடைமுறைக்கு வந்தது. மாணவர்கள் அவரவர் திறனுக்கு ஏற்பத் தொடக்கநிலை 3-இன் இறுதியில் அரசாங்கத் தேர்வு எழுதுவர். அதன் அடிப்படையில் தொடக்கநிலை நான்கிலிருந்து மாணவர்கள் தரம்பிரிக்கப்பட்டனர். ஆறு ஆண்டுகள் பயிலும் மாணவர்கள் வழக்கக் கல்விப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சற்று உதவி தேவைப்படுவோருக்கு எட்டு ஆண்டுகள் நீட்டிப்புக் கல்வியும், சிரமப்படும் மாணவர்களுக்கு எட்டு ஆண்டுகள் ஒருமொழிக் கல்வியும் வழங்கப்பட்டது. 1981இல் வெளிவந்த புதிய கல்விமுறைக்கான தமிழ் இரண்டாம் மொழிப் பாடத்திட்டம் வழக்கக் கல்விப் பிரிவினருக்கும், நீட்டிப்புக் கல்வி பயிலும் மாணவர்களுக்குமாக எழுதப்பட்டதாகும். இஃது அடிப்படை மொழித்திறன்களில் மாணவர்கள் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பதோடு *'பேச்சு வழக்கிலுள்ள தமிழைக் கேட்டுப் புரிந்துகொள்ளவும் தம் கருத்துகளையும் அனுபவங்களையும் எளிய தமிழில் பிழையின்றி எடுத்துச் சொல்லவும், ... ... ... படித்துப் புரிந்துகொள்ளவும், தம் எண்ணங்களையும் அனுபவங்களையும் எளிய நடையில் பிழையின்றி எழுதவும் தேவையான திறமைகளைப் பெறும்படி செய்யும் வகையில் அமைந்துள்ளது [7].'*

இதில் ஒவ்வொரு நிலையிலும் கற்பிக்கப்பட வேண்டியவை ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளது போல, வாய்மொழிப்பயிற்சி, வாசிப்பு, எழுத்து, கதை, பாடல்/செய்யுள்/பழமொழி, மொழிப்பயிற்சி, கட்டுரை, கருத்தறிதல் ஆகிய தலைப்புகளில், தெளிவாக வழங்கப்-பட்டுள்ளன. நீட்டிப்புக் கல்விப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு நான்காம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரை கற்பிக்கப்பட வேண்டிய பாடப்பகுதிகளின் பட்டியல் குறிப்பிடப்-பட்டிருந்தது. ஒருமொழிக் கல்விப் பிரிவுக்கான பாடத்திட்டம் கேட்டலுக்கும் பேசுதலுக்கும் அதிக முக்கியத்துவமளித்து வரையப்பட்டிருந்தது.

[7] சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, (1981), *புதிய கல்விமுறைக்கான தமிழ் இரண்டாம் மொழிப் பாடத்திட்டம்,* பக்கம் 1

## 1993 – தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை)

[Tamil Language Syllabus (Primary)]

வழக்கம், நீட்டிப்பு, ஒருமொழிக் கல்விப் பிரிவுகள் 1992-இல் உயர்தமிழ் (மீத்திறன் மாணவர்கள்), தமிழ் (சராசரிநிலை மாணவர்கள்), அடிப்படைத்தமிழ் (பையப்பயிலும் மாணவர்கள்) என மாற்றங்கண்டன. இம்மூன்று பிரிவு மாணவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு 1993-இல் வெளிவந்த பாடத்திட்டம் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவுப் பிரிவால் வடிவமைக்கப்பட்டது. *'மாணவர்கள் ஆறாண்டுத் தொடக்கக்கல்வியை முடிக்கின்றபோது, தமிழைப் பயன்படுத்துவதில், எதிர்பார்க்கின்ற அளவு மொழித்திறனும் கருத்துப்பரிமாற்றத் திறனும் பெற்றுத் திகழ்வதற்கும், அவர்களின் தேர்வுத் தேவையை நிறைவேற்றுவதற்கும் ஏதுவாக இப்பாடத்திட்டம் வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது [8] .'* கருத்துப்பரிமாற்றத் திறனுக்கு முக்கியத்துவமளித்துப் பாடத்திட்டம் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக அடிப்படைத்தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கேட்டல், பேசுதல் திறன்களோடு கருத்துப்பரிமாற்றத் திறனும் அதிகம் வலியுறுத்தப்பட்டது. அடிப்படைத்தமிழ் பயிலும் மாணவர்களுக்கு என்னென்ன கற்பிக்கப்பட வேண்டும் என்பவை பாடத்திட்டத்தில் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டத்தில்தான் முதன்முதலில் கருப்பொருள்கள் அறிமுகங்கண்டன. மனித உறவுகள், சமூகமும் நாடும், உலகமும் நாமும், கற்பனை உலகம், அறிவியலும் தொழில் நுட்பமும், இயற்கை, கலையும் பண்பாடும், சுகாதாரமும் உடல்நலமும் என எட்டுக் கருப்பொருள்கள் அறிமுகங்கண்டன. கருப்பொருள்களுக்கு ஏற்ற தலைப்புகளும் பாடத்-திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டன. இவற்றின் அடிப்படையிலேயே பயிற்றுவளங்கள் உருவாக்கப்பட்டன.

| **பக்கம்** | **உள்ளடக்கம்** |
|---|---|
| **இயல் 1** | நோக்கங்களும் குறிக்கோள்களும் |
| **இயல் 2** | அணுகுமுறை |
| **இயல் 3** | கருப்பொருள்கள், தலைப்புகள், நடவடிக்கைகள் |
| **இயல் 4** | நுண்திறன்களும் கருத்துப்பரிமாற்றப் பயன்பாடுகளும் |
| **இயல் 5** | மொழிக்கூறுகள் |
| **இயல் 6** | மதிப்பீட்டு விளக்கக் குறிப்புகள் |
| **பின்னிணைப்புகள்** | கற்றல் விளைவுகள், செய்யுள்களும் பழமொழிகளும், அடிப்படைத் தமிழ்ப் பாடத்திட்டம் |

[8] சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, (1993), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை),* பக்கம் 1


## 2002 – தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை)

[Tamil Language Syllabus (Primary)]

2002இல் வெளிவந்த இப்பாடத்திட்டம் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவால் வடிவமைக்கப்பட்டது. இப்பாடத்திட்டம் 1999இல் கல்வி அமைச்சு மேற்கொண்ட தமிழ்மொழி ஆய்வின் பரிந்துரைகளையும் 1997இல் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்திய தேசியக் கல்வி, படைப்புத்திறனும் சிந்தனைத்திறனும், தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள் ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு வரையப்பட்டதாகும். *'மாணவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாகத் திகழச் செய்வதில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டி உதவுவதற்காகக் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.*[9] *'* தமிழ் பயிலும் மாணவர்கள் அவரவர் திறனுக்கு ஏற்பத் தமிழ்மொழியில் அவர்களது திறனை வளர்த்துக்கொள்ள வேண்டித் தொடக்கநிலை ஐந்தாம், ஆறாம் வகுப்புகளில் உயர்தமிழ், தமிழ், அடிப்படைத்தமிழ் என மூன்று நிலைகளில் தமிழ்மொழி தொடர்ந்து கற்பிக்கப்பட்டது. இம்மூன்று நிலைகளிலும் என்னென்ன கற்பிக்கப்பட வேண்டும் என இப்பாடத்திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்தமிழ் பயிலும் மாணவர்கள் கல்வி முடித்துப் பணிபுரியும் காலத்தில் தமிழ்த் திறனாளர்களாகத் திகழ்வர் என்ற எண்ணத்தில் அவர்களுக்கான பாடத்திட்டமும், பயிற்றுவளங்களும் கேட்டல், பேசுதல் படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களுக்கும் சம முக்கியத்துவமளித்து உருவாக்கப்பட்டன. முழுமையான மதிப்பீட்டின் அவசியமும் இப்பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 2008 – தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008 (தொடக்கநிலை)

2008 Syllabus, Tamil Language (Primary)




*'முன்பெல்லாம் பாடத்திட்டங்கள் பெரும்பாலும் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு ஆய்வு செய்யப்பட்டுத் திருத்தியமைக்கப்படும். ஆனால், இப்போது திருத்தியமைக்கப்பட்ட ஒரு பாடத்திட்டம் அமலுக்கு வந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளிலேயே இடைக்கால ஆய்வு செய்யப்படுகிறது,'* [10] என்று மேனாள் கல்வி அமைச்சின் தமிழ்த்துறைத் தலைவர் சி.முத்தையா தமது கட்டுரையில் குறிப்பிட்டதுபோல 2002 பாடத்திட்டம் அமலாக்கம் கண்டு மூன்று ஆண்டுகளுக்குள் 2005-இல் மிகப் பெரிய அளவில் தமிழ்மொழி மறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

- *பாடத்திட்டமும் பாடநூல்களும் மாணவர்கள் தமிழை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் எளிமையாக்கப்பட வேண்டும்.*
- *மொழிப் பயன்பாட்டுக்கு உதவும் இலக்கணக் கூறுகள் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும்.*

---

[9] சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, (2002), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை),* பக்கம் 1

[10] முத்தையா, சி. (2004), *சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தலும் கற்பித்தலோடு தொடர்புடைய பிரச்சினைகளும்,* 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

- *பேச்சு மொழிக்கே முதலிடம் தர வேண்டும். எளிய பேச்சுத்தமிழை மாணவர்கள் இயல்பாகவும் சரளமாகவும் பேசுவதற்கு உதவும் வகையில் பாடத்திட்டம் அமைய வேண்டும்.*
- *பாடநூல்கள் எளிய தமிழ் நடையில் அமைய வேண்டும்.*

என்று பா.கேசவன் தமது கட்டுரையில்[11] பரிந்துரைத்திருந்தார். இவ்வாறு மறு ஆய்வின்போது கல்வியாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், பெற்றோர், மாணவர், ஆசிரியர் எனப் பலரின் கருத்துகள் சேகரிக்கப்பட்டன. தமிழ் கற்பிக்கப்படும் பிற நாடுகளுக்குக் கற்றல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் அங்கெல்லாம் எவ்வாறு கற்பிக்கப்படுகிறது என்று கண்டறியப்பட்டது. கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் பல ஆக்ககரமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இப்பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு 2008இல் அமலாக்கம் கண்ட பாடத்திட்டம் வரையப்பட்டது. பேச்சுத்தமிழை முன்னிலைப்படுத்தித் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டது. தமிழ் வெறுமனே வகுப்பறை மொழியாக மட்டுமல்லாது மாணவர்கள் பள்ளி வாழ்க்கைக்குப் பின்னும் பயன்படுத்தக்கூடிய பயன்பாட்டு மொழியாகத் துலங்க வேண்டும் என்னும் உயரிய நோக்கமே இதற்குக் காரணம். கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

பாடக்கலைத்திட்டம் (curriculum) என்னும் புதிய கலைச்சொல் அறிமுகங்கண்டது. சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக்குதல் என்னும் இலக்கை முன்னிறுத்தித் தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்திற்கென்று பணிச்சட்டம் ஒன்றும் வடிவமைக்கப்பட்டது. மாணவர்களை மையமாகக்கொண்டு வரையப்பட்ட இப்பாடக்கலைத்திட்டம் தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மை, ஆர்வமூட்டும் கற்பித்தல்முறை, அர்த்தமுள்ள மதிப்பீடு ஆகிய மூன்று முக்கிய அடிப்படைக் கூறுகளைக் கொண்டு அமைந்தது. இக்கூறுகளைச் செம்மையாக அமைப்பதன்வழித் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் இலக்கை வீடு, பள்ளி, சமூகம் ஆகியவற்றின் முத்தரப்புக் கூட்டு முயற்சியின் வாயிலாக அடையலாம் என்ற நம்பிக்கை பாடத்திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.[12] பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செய்திகளுக்குக் கூடுதல் விளக்கமளிக்கும் வகையில் இரு பாடத்திட்ட வழிகாட்டிகள் உருவாக்கப்பட்டன.

*'2005-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தமிழ்மொழி மறு ஆய்வின் பரிந்துரைகள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படக் காரணமாயின. தமிழ் பயிலும் மாணவர்களின் மொழித் தேவைகளுக்கேற்பப் பொருத்தமான முறையில் பாடக்கலைத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. தமிழைத் தேர்வுப்பாடமாக மட்டுமே கற்பிக்காமல், மகிழ்வூட்டும் வகுப்பறைச் சூழலில் உயிரோட்டம் நிறைந்த பாடமாகக் கற்பிக்க உதவும் வகையில் கற்பித்தல் அணுகுமுறைகளும் உத்திகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. அடிப்படை மொழித்திறன்களில் மாணவர்கள் அடைந்துள்ள வளர்ச்சிநிலையினை அளவிட முழுமையான மதிப்பீட்டு நடவடிக்கைகள் பெரிதும் உதவும்,'*[13] என்று 2008 பாடக்கலைத்திட்டத்தின்

[11] கேசவன், ப. (2004), *சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி,* 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்


[12] சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, (2008), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008 (தொடக்கநிலை),* பக்கம் 4

[13] சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, (2015), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 (தொடக்கநிலை),* பக்கம் 3

சிறப்பியல்புகள், 2015 தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் குறிப்பிட்டிருப்பது, இங்குக் குறிப்பிடத்தக்கது.

**2015 – தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 (தொடக்கநிலை)**

2015 Syllabus, Tamil Language (Primary)




2005 ஆய்வின் பரிந்துரைகளால் விளைந்த பயன்களை வலுப்படுத்தும் வகையில் 2010ஆம் ஆண்டில் தாய்மொழிகளுக்கென மேலும் ஒரு மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்விரண்டு முக்கிய மறு ஆய்வுகளின் பரிந்துரைகளை வழிகாட்டியாகக்கொண்டு தொடக்கநிலைப் பாடத்திட்டம் மேம்படுத்தப்பட்டது. 2008 பாடத்திட்டத்தின் பயன்மிகு கூறுகளைத் தக்கவைத்துக்கொள்வதோடு, மொழி கற்றல் கற்பித்தலை வலுப்படுத்தும் சில முக்கியக் கூறுகளும் 2015 பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தாய்மொழி கற்கும் மாணவர் **ஆர்வத்துடன் மொழியைக் கற்று அதனைத் திறம்படப் பயன்படுத்த வேண்டும்** என்பது எதிர்பார்க்கப்பட்டது. அதற்காகக் கருத்துப்பரிமாற்றம், பண்பாடு, தொடர்பிணைப்பு என்னும் மூன்று குறிக்கோள்கள் அடையாளம் காணப்பட்டன.

இந்த ஆய்வில் கற்பித்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் இடையே நிலவும் இடைவெளியைக் குறைத்து அவற்றுக்கிடையே உள்ள தொடர்பினைத் தெளிவுற விளக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. மேலும், பல்வேறு மொழித் தொடங்குநிலைகளில் இருக்கும் மாணவர்கள் அனைவருக்கும் பயன்படுமாறு பாடத்திட்டம் நெகிழ்வுத்தன்மை கொண்டதாக அமைய வேண்டும் என்பதும் நினைவுறுத்தப்பட்டது. மொழித்திறன் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையிலும் மாணவர்கள் பெற வேண்டிய தேர்ச்சிநிலைகளை விளக்கும் வகையில் தேர்ச்சிநிலை விளக்கக்குறிப்புகள் உருவாக்கப்பட்டன.

பள்ளி வாழ்க்கைக்குப் பிறகும் தாய்மொழிக் கல்வி மாணவர்க்குப் பயன்மிக்கதாக இருக்க வேண்டுமென இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் (பேச்சுவழி, எழுத்துவழி) அறிமுகம் கண்டன. இவற்றைச் செயற்படுத்துவதற்கு ஏதுவாகப் பாடக்கலைத்திட்டத்தில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடும் அதிகரிக்கப்பட்டது. **மாணவர்களை மையமாகக்கொண்ட விழுமியங்கள் சார்ந்த கல்வி** வலியுறுத்தப்பட்டது. 2008, 2015க்கான பாடத்திட்டங்கள் பொது மக்களின் பார்வைக்காக இணையத்தில் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன.

**முடிவுரை**

கல்வியாளர்களுள் ஒருவரான ஜார்ஜ் சாம்சன் என்பார், *'தாய்மொழி, பள்ளி வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அது பள்ளியாகிய உடலுக்கு உயிராக உள்ளது. அறிவை வளர்த்துக்கொள்ளும் ஒரு கருவியாக இருப்பது மட்டுமன்றிக் குழந்தையை வாழ்க்கையில் ஈடுபடுத்தும் இன்றியமையாத உறுப்பாகவும் உள்ளது,'* என்று குறிப்பிட்டுள்ளார். இப்படிப்பட்ட

தாய்மொழியாகிய தமிழ்மொழியே சிங்கப்பூர்த் தமிழர்கள் தம்மை அடையாளம் காண்பதற்கு உயிர்நாடியாக விளங்குகிறது. *'அச்சமோ தயக்கமோயின்றித் தமிழ்மொழியைக் கற்பதற்கு மாணவர்களுக்கு உதவும் வகையில் வெவ்வேறு வகையான கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் கையாள வேண்டும். குறிப்பாகத் தொடக்கநிலை முதல் சில ஆண்டுகளுக்கு இது மிகவும் அவசியம்.'* [14] என்று தமிழ்மொழி மறு ஆய்வு அறிக்கையில் (2005) வலியுறுத்தப்பட்டுள்ளது. 'நிறைவான கல்விக்கு அளவாகக் கற்பித்தல்,' (Teach Less, Learn More) என்னும் சிங்கப்பூர்க் கல்விக் கொள்கைக்கு ஏற்ப மாணவர்களின் திறனையும் தேவையையும் அறிந்து தமிழ்மொழி கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உகந்த பாடக்கலைத்-திட்டமும் பாடத்திட்டமும் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டுவருகின்றன. தமிழுக்கு மேற்-கொள்ளப்படும் முயற்சிகள் வருங்காலச் சிங்கப்பூர்த் தமிழ்ச் சந்ததியினரிடையே, தமிழை ஒரு வாழும் மொழியாக நிலைபெறச் செய்யும் என்பது உறுதி.

## தொடர்புநூல்கள்


கல்வி அமைச்சு, (1961), தமிழ் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம், சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (1981), *புதிய கல்விமுறைக்கான தமிழ் இரண்டாம் மொழிப் பாடத்திட்டம்,* சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (1993), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை),* பாடத்திட்ட வரைவுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2002), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை),* பாடத்திட்ட வரைவுப் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2005), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை,* சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2008), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008 (தொடக்கநிலை),* பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2015), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 (தொடக்கநிலை),* பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2010), *தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல்,* சிங்கப்பூர்

கேசவன், ப. (2004), *சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி,* 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம்,

பழனிசாமி, கே. (1987*), உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982*, சிங்கப்பூர்


[14] கல்வி அமைச்சு, (2005), தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை, பக்கம் 6

முத்தையா, சி. (2004), *சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தலும் கற்பித்தலோடு தொடர்புடைய பிரச்சினைகளும்,* 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

Ministry of Education, (1958), *Syllabus for the Teaching of Tamil in Primary Schools in Singapore*, Government Printer, Singapore

Ministry of Education, (2005), *Report of the Tamil Language Curriculum and Pedagogy Review Committee*, Oxford Printers, Singapore

Ministry of Education, (2007), *Many Pathways. One Mission, Fifty Years of Singapore,* Nu Colours Print, Singapore

Ministry of Education, (2010), *2010 Mother Tongue Languages Review Committee Report, Naturing Active Learners and Proficient Users,* Singapore

☙ ❧

# தொடக்கப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கம்

**மு தமிழ்வாணி**
**செ உஷாராணி**
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

---

## முன்னுரை

சிங்கப்பூரில் தமிழ்மொழி தொடர்ந்து புழக்கத்திலிருப்பதை உறுதி செய்வதற்காகவும் வருங்காலச் சந்ததியினரிடையே தமிழ் வாழும் மொழியாக நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும் கற்றல் கற்பித்தலில் அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்பட்டன. நமது இலக்கை அடையத் தடையாக உள்ளவை யாவை, அவற்றை மாற்றுவதற்கான வழிவகை-கள் என்னென்ன என்பனவற்றைக் கண்டறியும் பொருட்டுக் கல்வியமைச்சு அவ்வப்போது கற்றல் கற்பித்தல் குறித்து ஆய்வுகள் நடத்திக் காலத்திற்கேற்ற பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இப்பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு அந்தந்தக் காலக்கட்டத்திற்கு ஏற்பப் பாடத்திட்டமும் பயிற்றுவளங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

1834ஆம் ஆண்டு தமிழ்மொழிக் கல்வி சிங்கப்பூரில் தொடக்கம் கண்டு இன்றுவரை நிலைபெற்று நிற்கிறது. தொடக்கத்தில் தமிழ்ப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு முதல் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படத் தொடங்கியது. இருப்பினும், தமிழைக் கற்பிப்பதற்கெனச் சிங்கப்பூரிலேயே தமிழ்ப் பாடநூல்கள் ஏதும் தயாரிக்கப்படவில்லை. மலேசியா, தமிழகப் பாடநூல்களே தமிழ் கற்பிக்கப் பயன்படுத்தப்பட்டன. 1970களுக்குப் பிறகே சிங்கப்பூர் மாணவர்களுக்காகச் சிங்கப்பூரிலேயே தமிழ்ப்பாடநூல்கள் உருவாக்கப்பட்டன.

## சிங்கப்பூர்த் தமிழ் வாசகம்

முதன்முதலில் 1973இல் சிங்கப்பூர்ப் பாடத்திட்டத்தையொட்டித் தமிழாசிரியர்கள் சீ. வரதப்பன், அ. இராமசாமி, சே. செல்வராசு, பொ. மணிவாசகம் ஆகியோரின் கூட்டு-முயற்சியில் 'சிங்கப்பூர்த் தமிழ் வாசகம்' என்னும் தலைப்பில் அமைந்த பாடநூல் வரிசையும், 'சிங்கப்பூர்த் தமிழ்ப் பயிற்சிநூல்' என்னும் தலைப்பில் அமைந்த பயிற்சிநூல்களும் எழுதப்பட்டன. ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்ற மாணவர்கள் தமிழ் எழுத்துகள் அனைத்தையும் ஓராண்டில் கற்றுக்கொள்ளச் சிரமப்படுவர் என்பதைக் கருத்திற்கொண்டு தொடக்கநிலை 1-இல் நேர்கோட்டு வரிவடிவமுறையில் 132 எழுத்துகளும் தொடக்கநிலை 2-இல் 115 எழுத்துகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. 'இந்நூல்கள் ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் கற்கும் மாணாக்கர்க்கு நன்முறையில்

பயிற்சி அளிக்கக்கூடியவையாகும்,' என்று புத்தகத்தைப் பதிப்பித்த அன்னை பதிப்பகத்தார் தம் பதிப்புரையில் குறிப்பிட்டிருந்தனர்.

**சிறுவர் தமிழ்**

1979இல் மாணவர்களின் மாறுபட்ட கற்றல் திறனுக்கு ஏற்பக் கல்விமுறையில் டாக்டர் கோ கெங் ஸ்வீ தலைமையில் செயற்பட்ட ஆய்வுக்குழுவால் பல முக்கிய மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டன. தொடக்கநிலை மூன்று இறுதித்தேர்வு முடிவுகளுக்கு ஏற்ப மாணவர்கள் நான்காம் வகுப்பில் ஆய்வறிக்கையில் பரிந்துரைத்திருந்ததற்கு ஏற்பத் தரம் பிரிக்கப்பட்டனர். வழக்கக் கல்வி, நீட்டிப்புக் கல்வி, ஒருமொழிக் கல்வி என மாணவர்கள் அவரவர் திறனுக்கு ஏற்பத் தரம் பிரிக்கப்பட்டனர். நீட்டிப்புக் கல்விப் பிரிவிலும் ஒருமொழிக் கல்விப் பிரிவிலும் பயின்ற மாணவர்களுக்குத் தொடக்கக்கல்வி எட்டு ஆண்டுகள்வரை நீட்டிக்கப்பட்டது.

இவ்வாறு தரம்பிரிக்கப்பட்ட சிங்கப்பூர் மாணவர்களுக்காகப் பிரித்தியேகமாகப் பயிற்று வளங்களைத் தயாரிப்பதற்காக 1980-இல் சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது. பாடநூலாக்கக் குழுவினரின் முயற்சியில் 1983-ஆம் ஆண்டு 'சிறுவர் தமிழ்' பாடநூல் வரிசை அறிமுகங்கண்டது. ''*கல்வி அமைச்சால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய கல்வி முறைக்கான தொடக்கப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பாடநூல்கள் எழுதப்பட்டன. நம் நாட்டுப் பள்ளிகளில் தமிழ் பயிலும் மாணவர்களின் பட்டறிவுக்கும், சிங்கப்பூர்ச் சூழலுக்கும் ஏற்பப் பாடங்கள் அமைந்துள்ளன,*'' எனப் பாடநூலின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கக் கல்வி, நீட்டிப்புக் கல்வி, ஒருமொழிக் கல்வி ஆகிய மூன்று பிரிவினருக்குமான பாடநூல்களும் பயிற்சிநூல்களும் உருவாக்கப்பட்டன. பாடநூல்கள் மாணவர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் வண்ணப்படங்களைக் கொண்டு அமைந்திருந்தன. மொழியின் அடிப்படைத் திறன்களின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் இந்நூல்கள் உருவாக்கப்பட்டன. பாடநூல்கள், பயிற்சிநூல்கள் ஆகியவற்றோடு முதன்முறையாக, இவற்றின் தொடர்பான ஆசிரியர் கையேடுகளும், கண்வழி-செவிவழித் துணைக்கருவிகளும் உருவாக்கப்பட்டன.

1991இல் தமிழ் எழுத்துகளையெல்லாம் ஓராண்டுக்குள் அறிமுகப்படுத்திவிடலாம் என்ற எண்ணத்தோடு கீழ்த்தொடக்கநிலைப் பாடநூல்கள் சில மாற்றங்களுடன் திருந்திய பதிப்பாக மறுபதிப்புக் கண்டன. தமிழ் படிக்கும் மாணவர்கள் தமது பள்ளி வாழ்க்கைக்கு அப்பால் எத்தகைய திறன்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் மொழி கற்றலில் வெவ்வேறு திறன் நிலைகள் கொண்டவர்கள் என்பதையும் கருத்திற்கொண்டு பாடநூல்கள் மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டன.

**வளர்தமிழ்**

1991இல் தொடக்கப்பள்ளிக் கல்வி மேம்பாடு குறித்த அறிக்கையில் தொடக்கநிலை 5-ல் மாணவர்களைத் தரம் பிரித்தல் ஏற்புடையதாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் வழக்கம், நீட்டிப்பு, ஒருமொழிக் கல்விப் பிரிவுகளுக்குப் பதிலாகத் தொடக்கநிலை 4 தேர்வு முடிவுகளின் அடிப்படையில் தொடக்கநிலை 5-இல் மாணவர்கள் உயர்தமிழ் (EM1), தமிழ் (EM2), அடிப்படைத்தமிழ் (EM3) எனத் தரம் பிரிக்கப்பட்டனர். இம்மூன்று பிரிவு மாணவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு 1993இல் புதிய பாடத்திட்டம் அமலாக்கம் கண்டது. இப்பாடத்திட்டத்தையொட்டி வளர்தமிழ்ப் பாடநூல் வரிசை 1995-இல் அறிமுகம் கண்டது. இப்பாடநூல் வரிசையில் தமிழ்மொழியைச் சூழல் அடிப்படையில் கற்பிப்பதற்காகக் கருப்பொருள்கள் முதன்முறையாக அறிமுகம் கண்டன. மனித உறவுகள், சமூகமும் நாடும், உலகமும் நாமும், கற்பனை உலகம், அறிவியலும் தொழில் நுட்பமும், இயற்கை, கலையும் பண்பாடும், சுகாதாரமும் உடல்நலமும் ஆகிய 8 கருப்பொருள்களை மையமாகக் கொண்டு பாடங்கள் எழுதப்பட்டன. அதோடு பாடநூல்கள் பயன்பாட்டுச் சூழலுக்கும் பண்பாட்டுச் சூழலுக்கும் ஏற்ப எழுதப்பட்டன. மேலும் மொழித்திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் வகையிலும் பாடங்கள் வடிவமைக்கப்பட்டன. இதனுடன் மாணவரது தமிழ்மொழிப் பயன்பாட்டை அதிகரித்தல், சிந்தித்தல் திறனை வளர்த்தல் முதலிய நோக்கங்களின் அடிப்படையிலும் வளர்தமிழ்ப் பாடநூல் வரிசை உருவாக்கப்பட்டது. கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையில் பாடங்கள் நடத்தப்படவேண்டும் என்பதையும் இது வலியுறுத்தியது. 1997ஆம் ஆண்டு தொடக்கநிலை 5இல் தமிழ்ப்பாடநூல்கள் தமிழ், உயர்தமிழ், அடிப்படைத் தமிழ் ஆகிய மூன்று நிலைகளுக்கும் உருவாக்கப்பட்டன. 1998இல் தகவல் தொழில்நுட்பம், சிந்தனைத்திறன்கள் ஆகியவற்றை இணைத்துக் கற்பிக்க வாய்ப்பளிக்கவேண்டிப் பாடத்திட்டக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டது. எனவே இயற்கை, சுகாதாரமும் உடல்நலமும், அறிவியலும் தொழில்நுட்பமும் ஆகிய கருப்பொருள்கள் நீக்கப்பட்டன. கலையும் பண்பாடும் என்னும் கருப்பொருள் மரபும் பண்பாடும் என்று மாற்றங்கண்டது.

**அரும்பு**

இந்தப் பாடநூல் வரிசை இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஒன்று தமிழ் மொழியில் மாணவர்களின் திறனை வளர்ப்பது; மற்றொன்று தமிழ்ப் பண்பாட்டையும் மரபையும் மாணவர்கள் அறிந்துகொள்ளத் துணை புரிவது. இதனுடன் ‘அரும்புக்கு விருந்து’ என்னும் கணினி வட்டும் உருவாக்கப்பட்டுத் தமிழ்மொழிக் கல்வியில் பல தொழில்நுட்ப வளங்கள் சேர்க்கப்பட்டன. இதனுடன் வளர்தமிழ்ப் பாடநூல் வரிசையின் பயன்மிகு கூறுகளான கருப்பொருள் அடிப்படையில் அமைந்த பாடங்கள், கருத்துப்பரிமாற்ற அணுகுமுறை, சிந்தனைத் திறன் வளர்ச்சி ஆகியவை இந்தப் பாடநூல் வரிசையிலும் தக்கவைத்துக்கொள்ளப்பட்டன.

**தமிழோசை**

தமிழோசைப் பாடநூல் வரிசை பின்வரும் மூன்று அடிப்படை நோக்கங்களைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டது –

- அடிப்படை மொழித் திறன்களில் முறையான பயிற்சியளித்தல்
- தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையும் பாரம்பரியக் கூறுகளையும் அறியச்செய்தல்
- நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான பண்புநலன்களைப் பெற்றிடச்செய்தல்

வகுப்பறையில் தமிழில் குறிப்பாகப் பேச்சுத்தமிழில் கலந்துரையாடும் சூழலை உருவாக்கித் தந்து, அதன்வழி மாணவர்களின் தமிழார்வத்தை வளர்க்கத் துணைபுரியும் வகையில் தமிழோசைப் பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டன. கருத்துப்பரிமாற்ற அணுகு-முறையை மையமாகக் கொண்டு எளிய நடையில் பாடங்களும், மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டிக் கற்றலில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளும் இத்தொகுப்பில் தரப்-பட்டுள்ளன. அடிப்படை மொழித் திறன்களோடு சிந்தனைத் திறன்களையும் ஒருங்-கிணைத்து வளர்ப்பதற்கான பல்வேறு கற்பித்தல் நடவடிக்கைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**தேன் தமிழ்**

தேன் தமிழ்ப் பாடநூல் வரிசை 2015-ஆம் ஆண்டு அமலாக்கம் கண்டது. 2005, 2010 தமிழ்மொழி மறு ஆய்வுகளின் முக்கியப் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு இப்பாடநூல் வரிசை உருவாக்கம் கண்டு வருகிறது. தமிழைத் தாய்மொழியாகப் பயிலும் மாணவர்கள் மொழியை ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவதோடு நல்ல பண்பாளர்களாகவும் திகழ வழிகாட்டி உதவுவதை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு தேன் தமிழ்ப் பாடநூல் வரிசை தயாரிக்கப்பட்டுள்ளது. பள்ளி வாழ்க்கைக்குப் பிறகும் தாய்மொழிக் கல்வியானது மாணவர்களுக்கு ஈடுபாடுமிக்கதாகவும் பயன்மிக்கதாகவும் இருப்பதற்கு அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள், 21-ஆம் நூற்றாண்டுத் திறன், சிந்தனைத் திறன் முதலிய திறன்களும் இத்தொகுப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

மாணவர்கள் இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பயன்முனைப்புமிக்க வகையில் தமிழ்மொழியைப் பயன்படுத்திப் பேச்சுத்தமிழில் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசவும் தமிழில் கலந்துரையாடித் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் பாடங்கள் கற்றல் களங்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு ஏற்ற சூழலை

உருவாக்கித் தந்து அதன்வழி மாணவர்களின் தமிழார்வத்தை வளர்க்கத் துணைபுரியும் வகையில் இப்பாடநூல் தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

சிங்கப்பூர்க் கல்விக் கொள்கைக்கு ஏற்ப மாணவர்களின் திறனையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு தமிழ்மொழிப் பாடநூல் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன; தமிழ்மொழி கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உகந்த அணுகுமுறைகளும் பயன்முனைப்புமிக்க நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டு வந்துள்ளன. சிங்கப்பூரில் தமிழ் மாணவர்களிடையே தமிழை ஒரு வாழும் மொழியாக நிலைபெறச் செய்ய இவை துணைபுரியும் என்பது திண்ணம்.

## தொடர்புநூல்கள்


கல்வி அமைச்சு, (1983). சிறுவர் தமிழ்ப் பாடநூல் வரிசை, சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (1995), வளர்தமிழ்ப் பாடநூல் வரிசை, சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2002), அரும்புப் பாடநூல் வரிசை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2008), தமிழோசைப் பாடநூல் வரிசை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2010), தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல், சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2015), தேன் தமிழ்ப் பாடநூல் வரிசை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கேசவன், ப. (2004), சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி, 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம்

முத்தையா, சி. (2004), சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தலும் கற்பித்தலோடு தொடர்புடைய பிரச்சினைகளும், 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

வரதப்பன், சீ., இராமசாமி, அ., சிங்கப்பூர்த் தமிழ் வாசகம், மூன்றாம் வகுப்பு, அன்னை பதிப்பகத்தார், சிங்கப்பூர்

# தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பயிற்றுமுறைகள்

**ரா. மஞ்சுளா தங்கப்பன்**
முதன்மை ஆசிரியர் (தமிழ்மொழி)
தரநிலை ஆய்வுப் பிரிவு
சிங்கப்பூர் ஆசிரியர் கலைக்கழகம்

## முன்னுரை

ஒரு மொழியைச் சரியாகவும் சரளமாகவும் சூழலுக்கு ஏற்பப் பொருத்தமாகவும் பயன்படுத்துவதற்கு அன்றுமுதல் இன்றுவரை தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கேற்ற பல்வேறு பயன்முனைப்புமிக்க பயிற்றுமுறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். 1965ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை மாணவர்களின் கற்றல் பின்புலத்திற்கேற்பத் தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்கள் மேற்கொண்டு வந்துள்ள பயிற்றுமுறைகளை இக்கட்டுரை விளக்குகிறது.

## 1965ஆம் ஆண்டுமுதல்

1960ஆம் ஆண்டிற்கு முன்பு தொடக்கப்பள்ளிகளுக்கிடையே ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டமோ முறையான பாடநூல்களோ இல்லை. தமிழாசிரியர்கள் மலாயா, தமிழகம் ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பயிற்றுவளங்களையே பயன்படுத்தினர். வகுப்பறைகளில் கற்பித்தலின்போது ஆசிரியரே முதன்மை பெற்றார். ஆசிரியர் கூற மாணவர்கள் கேட்கும் விரிவுரை பாணியே பின்பற்றப்பட்டது. எழுத்தறிமுகத்திற்கு நெடுங்கணக்கு முறை மேற்கொள்ளப்பட்டது. 1960இலிருந்து தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு இரண்டாம் மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. அக்காலக்கட்டத்தில் பெரும்பாலான தமிழ் மாணவர்களின் வீட்டுமொழி தமிழாக இருந்ததால் மாணவர்களால் சரளமாகத் தமிழில் பேசுவதற்கு முடிந்தது. மலாயா மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பாடநூல்கள் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று ‘ஆங்கிலப் பாடசாலைகளுக்கான தமிழ் வாசகங்கள்’ என்னும் பாடநூல் வரிசை. ஆசிரியர்கள் மேற்கொண்ட பயிற்றுமுறைகள் பாடநூல்களைச் சார்ந்தே இருந்தன.

## 1970ஆம் ஆண்டுமுதல்

1970களின் இறுதியில் உள்நாட்டுத் தேவைக்கேற்பத் தமிழ்ப் பாடநூல்களும் பயிற்சிநூல்களும் தயாரிக்கப்பட்டன. தொடக்கப்பள்ளிகளில் எழுத்து அறிமுகம் நெடுங்கணக்கு முறையிலிருந்து நேர்கோட்டு வரிவடிவ முறைக்கு மாற்றப்பட்டது. ‘டம் டம், டமாரம், பட பட, பட் பட்’ என்னும் ஒலிப்பு முறையிலிருந்து வரிவடிவ எழுத்துமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வெழுத்துகளோடு அவற்றை எழுதுவதற்கான கையெழுத்துப் பயிற்சிகளும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டன.

அக்காலக்கட்டத்தில் சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழாசிரியர் குழுவொன்று எழுதி வெளியிட்ட 'சிங்கப்பூர்த் தமிழ் வாசகம்' என்னும் பாடநூல் வரிசை பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டன. எழுத்துகள் ஒன்றுசேர்ந்து சொற்களாதலையும் சொற்கள் பலசேர்ந்து சொற்றொடர்களாகி ஒரு கருத்தை விளக்குவதையும் தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்கள் தம் வகுப்பறைக் கற்பித்தலில் மேற்கொண்டனர். இவ்வாறே காரணகாரிய முறைப்படி எழுத்து, சொல், தொடர்மொழி என்னும் முறையில் கற்பித்தல் நடைபெற்றது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, பழமொழி, திருக்குறள் போன்ற செய்யுள் பகுதிகளும் மொழி கற்பித்தலுடன் ஒருங்கிணைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டன. இப்பகுதிகளைக் கற்பிப்பதற்குச் சொற்பொருள், கருத்துரை என்னும் முறையில் ஆசிரியர் எடுத்துக்கூறுவது, அவற்றை மாணவர்கள் கேட்டுக்கொண்டிருப்பது, முதல் நாள் கற்பித்தவற்றை மறுநாள் ஒப்புவிக்கச் செய்வது போன்ற பயிற்றுமுறைகளைத் தமிழாசிரியர்கள் மேற்கொண்டனர். இலக்கணப் பாடம் விதிவிளக்க முறையில் கற்பிக்கப்பட்டது. அக்காலத்தில் தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் பெற்ற ஆழ்ந்த இலக்கண அறிவு அவர்கள் தாமாகவே பல இலக்கியங்களை நயமுணர்ந்து கற்கத் துணைபுரிந்தன.

### 1984ஆம் ஆண்டுமுதல்

1984ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளிகளுக்கான பாட நூலாக்கக் குழு எழுதி வெளியிட்ட 'சிறுவர் தமிழ்' பாடநூல்வரிசைக்கு ஏற்புடைய பல்வேறு பயிற்று முறைகளைத் தமிழாசிரியர்கள் பின்பற்றினர். கேட்டல் கருத்தறிதல் பயிற்சிகளும் முதன்முறையாக இந்தப் பாடநூல் வரிசையில் இணைக்கப்பட்டன.

அக்காலக்கட்டத்தில், கல்விக்கழகத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கற்பித்தல் தொடர்பான வகுப்பறை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. தமிழாசிரியர்கள் தம் பயிற்றுமுறைகளை மாற்றியமைப்பதற்கு இவை உறுதுணையாக இருந்தன. தமிழ் மாணவர்களின் உச்சரிப்புத் திறனை மேம்படுத்துவதற்காகச் 'செந்தமிழும் நாப்பழக்கம்' (திண்ணப்பன் சுப, 1986) என்னும் பயிற்றுகருவித் தொகுப்பின் மூலம், பள்ளிகளில் மாணவர்களுக்குத் தமிழ் உச்சரிப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

1984இல் தமிழ் எழுத்துகளில் மாற்றத்தைச் சிங்கப்பூர் அரசு ஏற்றுக்கொண்ட நிலையில் திருத்தம் செய்யப்பெற்ற 13 தமிழ் எழுத்துகளைக் கற்பிப்பதற்கான பயிற்றுமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்குப் பகுதியில் விடுப்பட்ட இடங்களை ஊகித்து நிரப்பும் 'குளோஸ்' (Cloze) பகுதிமுறை (கோவிந்தசாமி. நா, 1987) அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழாசிரியர்கள் மாணவர்களிடையே கதை நூல்கள் படிக்கும் ஆர்வத்தையும் தூண்டினர். வகுப்பறையில் நூலகங்கள் அமைக்கப்பட்டன. வாய்விட்டு வாசித்தலோடு வாய்க்குள் படிக்கும் பழக்கத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களின் வாசிப்புத்திறன் வளர்க்கப்பட்டது. இத்துடன் கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையின் அடிப்படையில் வழிகாட்டு கட்டுரை, சொல்வதெழுதுதல், கேட்டல்

கருத்தறிதல், நோக்கல் கருத்தறிதல் முதலிய மொழிக்கூறுகளைக் கற்பிப்பதற்குத் தமிழாசிரியர்கள் பல்வேறு பயிற்றுமுறைகளைப் பின்பற்றினர். அக்காலக்கட்டத்தில் பிழை ஆய்வு ஒரு சிறந்த கற்பித்தல் முறையாகக் கருதப்பட்டது. கற்பித்தலின்போது தமிழாசிரியர்கள் பெரும்பாலும் தமக்குக் கிடைத்த அனுபவத்தையே மூலதனமாகக்-கொண்டு தம் பயிற்றுமுறைகளை உருவாக்கிக் கற்பித்தனர்.

## 1993ஆம் ஆண்டுமுதல்

1993ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாடத்திட்டம் ஒருங்கிணைந்த பாடத்தொடர் (Integrated Lesson Sequence) சார்ந்த கற்பித்தலை வலியுறுத்தியது. நடைமுறை வாழ்க்கையில் எந்தவொரு கருத்துப்பரிமாற்றச் சூழலிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழித் திறன்கள் பயன்படுத்தப்படுவதால் இவை மொழி நடவடிக்கைகளின்போது ஒருங்கிணைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டன. மாணவர்கள் கற்றுக்கொண்ட ஒன்றில் இன்னும் ஆழமான அறிவு பெறவேண்டும் என்பதற்காக ஒரு தலைப்பையொட்டி அவர்களுக்குக் குவிநோக்குப் பாடங்களும் நடத்தப்பட்டன. இக்காலக்கட்டத்தில் 'வளர்தமிழ்' பாடநூல்-வரிசை பயன்படுத்தப்பட்டது. மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்கும் நோக்கத்தில் கற்பித்தல் பயிற்றுமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு பிரச்சினையுடன் தொடர்புடைய எல்லாக் காரணிகளையும் ஒரு குறிப்பிட்ட பயன் கருதி முழுமையாக ஆராய்தல், புதிய கருத்துகளை உருவாக்கவும் புது அர்த்தம் தரவும் புதுத்தொடர்புகளை ஆராய்ந்து அறிதல், ஆக்கத்திறனுடன் சிந்தித்தல், தகவல்களைப் பகுத்தாய்தல், மதிப்பீடு செய்தல் போன்ற சிந்தனைத் திறன்களை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்கத்தில் தமிழாசிரியர்கள் தம் வகுப்பறைக் கற்பித்தலை வழிநடத்தினர். நன்மை தீமைகளைக் கண்டறிதல், ஒற்றுமையில் வேற்றுமை அல்லது வேற்றுமையில் ஒற்றுமை காணல், தொடர்புபட அமைந்திராத கருத்துகளை விலக்குதல் அல்லது சிதறிக் கிடக்கும் ஒரு பொருளின் பாகங்களை ஒன்று சேர்த்தல், கிடைத்துள்ள சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு ஏற்புடைய முடிவுக்கு வருதல் அல்லது பொதுவான கருத்துகளைத் தீர்மானித்தல் போன்ற கற்பித்தல் உத்திமுறைகள் வகுப்பறைக் கற்பித்தலின்போது மேற்கொள்ளப்பட்டன. இவற்றைத் தவிர்த்து மொழி கற்பித்தலுடன் பண்பாட்டுச் செய்திகளும் ஒருங்கிணைத்துக் கற்பிக்கப்-பட்டன. கருப்பொருள் சார்ந்த கற்பித்தலின்போது மாணவர்களின் மொழித் தேவைகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு செயல் சார்ந்த நடவடிக்கைகளில் தமிழாசிரியர்கள் அவர்களை ஈடுபடுத்தினர்.

## 2002ஆம் ஆண்டுமுதல்

'சிந்திக்கும் பள்ளிகள் கற்கும் நாடு' என்னும் கல்வி அமைச்சின் கோட்பாட்டிற்கு ஏற்ப இக்காலக்கட்டத்தில் சிந்தனைத் திறன்கள், தேசியக் கல்வி, தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகிய புதிய முயற்சிகள் பாடங்களின்போது அறிமுகப்படுத்தப்-பட்டன. 1990களைப்போன்று ஆசிரியர்களின் பயிற்றுமுறைகள் கருத்துப்பரிமாற்றத்தை

மையமாகக் கொண்டமைந்திருந்தன. மேலும் எல்லா நிலைகளிலும் பண்பாட்டுக்கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமிழாசிரியர்கள் பாடங்களைக் கற்பித்தனர்.

2002ஆம் ஆண்டின் கல்விக் கொள்கைக்கு ஏற்பத் தமிழாசிரியர்கள் மாணவர்களைச் சுயமாகக் கல்வி கற்பவர்களாகவும் படைப்பாக்கச் சிந்தனையாளர்களாகவும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பவர்களாகவும் உருவாக்கும் நோக்கில் மொழி கற்பித்தலோடு சிந்தனைத் திறனை வளர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும் நாட்டை நேசித்தல், சமூகத்திற்கும் நாட்டுக்கும் கடப்பாடுகொள்ளுதல் போன்ற தேசியக் கல்விச் செய்திகளும் பாடங்களுடன் இணைத்துப் புகட்டப்பட்டன. இக்காலக்கட்டத்தில் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்றுமுறைகளையும் தமிழாசிரியர்கள் பின்பற்றினர். பாடங்களின்போது மொழித்திறன்களைத் தவிர்த்துச் செய்முறைத் திறன்களை (Process Skills) வளர்க்கும் நோக்கத்தில் அவற்றிற்குத் தொடர்புடைய உத்திகள் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. இப்பயிற்றுமுறைகள் அனைத்தும் 'அரும்பு' பாடநூல்வரிசையின் ஆசிரியர் கையேட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தமிழாசிரியர் மேற்கொண்ட பயிற்றுமுறைகள் கற்போரை மையமாகக் கொண்டு அமைந்தன. எழுத்து அறிமுகம் 'ட, ப, ம' வரிசைமுறையில் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்டது. எழுத்துகளை அறிமுகப்படுத்திக் கற்பித்து வரும்போது படித்த எழுத்துகளைக் கொண்டு அமையும் எளிய சொற்றொடர்களும் சிறிய வாக்கியங்களும் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டன. இவை மாணவர்களின் அனுபவத்துக்கு உட்பட்டவையாக இருந்தன.

### 2008-ஆம் ஆண்டுமுதல்

தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம், ஆர்வமூட்டும் கற்பித்தல்முறை, அர்த்தமுள்ள மதிப்பீடு ஆகியவற்றிற்கு ஏற்பப் பயிற்றுமுறைகள் மாற்றம் கண்டன. பள்ளியிலும் பள்ளிக்கு அப்பாலும் தமிழ்மொழியின் புழக்கம் மாணவர்களிடையே நிலைத்திருக்கும் நோக்கத்தில் தமிழாசிரியர்கள் பயன்முனைப்புமிக்க கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்திக் கற்பித்தனர். தொடக்கநிலை 1, 2 வகுப்புகளில் முறைசாரா மதிப்பீட்டின்வழிப் பேசுதல், கேட்டல், படித்தல் திறன்கள் மேம்படுத்தப்பட்டன. ஆசிரியர்கள் மரபுவழிப் பண்புகளையும் சமூக மனவுணர்வு சார்ந்த கற்றலையும் (Social & Emotional Leaning) தம் கற்பித்தலில் வலியுறுத்தினர். சுய, மன நலன் (personal and mental well-being), பண்புநலன்கள் (character), குடியுரிமை (citizenship), கல்வித் தேர்ச்சி (academic achievement) வாழ்க்கைத் தொழில் (employment) ஆகிய ஐந்து கூறுகளில் மாணவர்கள் சிறந்து விளங்கத் துணைசெய்யும் வகையில் கற்றல்வலியுறுத்தப்பட்டது. மாணவர்களின் திறன் வளர்ச்சி முழுமையான மதிப்பீட்டின்வழி (Holistic Assessment) நிர்ணயிக்கப்பட்டது.

2005-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தமிழ்மொழி மறுஆய்வின் பரிந்துரைக்கு ஏற்ப வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கும் பேச்சுத்தமிழுக்கும் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. வீட்டில் தமிழ்ப் பின்னணி இல்லாத மாணவர்களுக்கு வாய்மொழித் திறன் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. வகுப்பறைக் கற்பித்தலின்போது பேச்சுத்தமிழ் வடிவம் மாணவர்களின் மனத்தில் ஆழப் பதியுமாறு வகுப்பறை நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.

நேரடிக் கற்பித்தல்போல் அல்லாமல் விளையாட்டு, புதிர், வினா-விடை, கதை கூறுதல் முதலான மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் நடவடிக்கைகளின்மூலம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உகந்த பேச்சுப் பயிற்சிகளை அளித்தனர். இவை ‘தமிழோசை’ பாடநூல் வரிசையில் இணைக்கப்பட்டிருந்தன.

வாய்க்குள் வாசித்தல் நடவடிக்கையின்போது ஆசிரியர்கள் அகன்ற படிப்பையும் ஆழ்ந்த படிப்பையும் நடத்தினர். அகன்ற படிப்பு, கதைப் புத்தகங்கள், நாளிதழ்கள், வார மாத இதழ்கள் ஆகியவற்றை மேலோட்டமாக அறிந்துகொள்ளவும் படித்து மகிழவும் உதவின. தொடக்கநிலை ஒன்று, இரண்டாம் வகுப்புகளில் தமிழ் எழுத்துகளைக் கற்பிக்க வேண்டிய கால அளவு ஒன்றேகால் ஆண்டிலிருந்து ஈராண்டுகளாக நீட்டிக்கப்பட்டதால் இவ்வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அகன்ற படிப்பில் ஈடுபடவில்லை. ஆதலால் தொடக்கநிலை மூன்று, நான்காம் வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு அகன்ற படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. கருத்துகளை ஆழ்ந்து புரிந்துகொள்ளவும் அவற்றை நீண்ட காலம் நினைவில் நிறுத்துவதற்கும் ஆழ்ந்த படிப்பும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்காலக்கட்டத்தின்போது கீழ்க்காணும் கற்றல் கோட்பாடுகளையும் அணுகுமுறைகளையும் ஆசிரியர்கள் தம் பயிற்றுமுறைகளில் இணைத்துப் பாடங்களைக் கற்பித்தனர்.

- ஈடுபாடுமிக்க கற்றல் கோட்பாடுகள் (PETALS)
- ‘புளூம்’ கோட்பாடு (Bloom’s Taxonomy)
- பயன்முனைப்புமிக்க ஈடுபாட்டிற்கும் முன்னேற்றத்திற்குமான உத்திகள் (SEED)
- வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் (Differentiated Instruction)
- கூடிக்கற்றல் அமைப்புமுறைகள் (Cooperative Learning Structures)
- பல்வகை நுண்ணறிவுத் திறன்கள் (Multiple Intelligence)
- முனைப்புடனும் சுயமாகவும் கற்கும் உத்திகள் (Strategies for Active and Independent Learning – SAIL)

தமிழைத் தேர்வுப் பாடமாக மட்டுமே கற்பிக்காமல், மகிழ்வூட்டும் வகுப்பறைச் சூழலில் உயிரோட்டம் நிறைந்த பாடமாகக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு உதவும் வகையில், கற்பித்தல் அணுகுமுறைகளும் உத்திகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. அடிப்படை மொழித் திறன்களில் மாணவர்கள் அடைந்துள்ள வளர்ச்சிநிலையினை அளவிட முழுமையான மதிப்பீட்டு நடவடிக்கைகள்உதவின.

## 2015 ஆம் ஆண்டுமுதல்

2010-ஆம் ஆண்டில் தாய்மொழிகளுக்கென மேற்கொள்ளப்பட்ட மறுஆய்வின் பரிந்துரைகளுக்கேற்பத் தற்போது ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் பயிற்றுமுறைகளில் கருத்துப்பரிமாற்றம், பண்பாட்டு விழுமியங்கள், இருவழித்தொடர்புத் திறன்கள் ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன.

கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு மொழித்திறன்களைத் தவிர்த்துப் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தையும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத்தை-யும் வளர்க்கும் வகையில் பாடங்கள் வடிவமைத்துக் கற்பிக்கப்படுகின்றன. திறன் மேம்பாட்டினை வலியுறுத்தும் திறன்சார் கற்பித்தல் அணுமுறைக்கேற்ப ஆசிரியர்கள் ‘நான், குடும்பம், சமூகம், நாடு, உலகம்,’ என்னும் களங்களின் அடிப்படையில் பாடங்களை நடத்துகிறார்கள். ‘தேன்தமிழ்’ பாடநூல் வரிசையில் இடம்பெற்றுள்ள பாடங்கள் குறிப்பிட்ட களத்தில் மாணவர்களின் சொல்வளத்தைப் பெருக்க ஏற்புடைய சூழலை அமைத்துத் தருகின்றன. இப்பாடங்கள் மாணவர்களின் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அமைந்திருக்கின்றன.

மேற்கூறப்பட்ட திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் சிந்தனைத் திறன்களையும் வளர்க்கும் நோக்கத்தில் ஆசிரியர்கள் பாடங்களைத் திட்டமிட்டுக் கற்பிக்கிறார்கள். தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தலுக்குக் கல்வி அமைச்சால் உருவாக்கப்பட்ட தாய்மொழிகளுக்கான இருவழித்தொடர்புத் தளம் துணைபுரிகிறது. நம்பகமான முறையில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்-படுத்தி மொழித்திறன்களை வளர்ப்பதற்கும் இருவழிக் கருத்துப்பரிமாற்றுத் திறன்களை மதிப்பிடவும் இத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தொடக்கப்பள்ளி மாணவர்-களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிப்பதற்கும் இத்தளம் பயன்படுகிறது.

எழுத்தறிமுகத்திற்கு நேர்கோட்டு வரிவடிவமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுதல் என்னும் கல்வி உளவியற் கோட்பாட்டின்படி எழுதுவதற்கு மிகவும் எளிமையாக இருக்கும் ‘ட’ என்னும் எழுத்துடன், எழுத்துகளின் அறிமுகம் தொடங்குகிறது. இலக்கணத்தையும் மொழிமரபையும் ஆசிரியர்கள் தொடர் வாக்கியங்களிலும் சூழல் அடிப்படையிலும் வாசிப்புப் பனுவல்கள் வாயிலாகவும்

கற்பித்து வருகின்றனர். வெளிப்படையாகக் கற்பித்தல் முறையில் ஆசிரியர் கற்றல் நோக்கங்களையும் கற்றல் செயற்பாட்டையும் கற்றல் விளைவுகளையும் மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறித் தம் கற்பித்தலை மேற்கொள்கிறார்கள். இவற்றைத் தவிர்த்து 21ஆம் நூற்றாண்டுத் திறன்களுள் ஒன்றான படைப்பாக்கச் சிந்தனைத் திறனையும் (Creative Thinking Skill) நுண்ணாய்வுச் சிந்தனைத்திறனையும் (Critical Thinking Skill) வளர்க்கும் பொருட்டுத் தமிழ்மொழி கற்பித்தலில் படைப்பாக்கத்தையும் ஒருங்கிணைத்து வருகிறார்கள்.

எண்பொருள் ஆகச்செலச் சொல்லித்தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு

குறள் 424

சொல்வதைப் பிறர் அறிந்துகொள்ளும் வகையில் எளியமுறையில் கூறி, பிறர் கூறும் நுட்பமான கருத்துகளையும் ஆராய்ந்து காணும் அறிவை ஆசிரியர்கள் தத்தம் பயிற்று-முறைகளின் வாயிலாக மாணவர்களுக்கு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஊட்டிவந்-துள்ளனர். ஆசிரியர்கள் காலத்திற்கேற்ப மாணவர் தேவையறிந்து தம் பயிற்றுமுறைகளை மாற்றியமைத்து மாணவர்களை உணர்வுபூர்வமான கற்றலில் ஈடுபடுத்தும்போதே, கற்றல் முழுமை பெறுகிறது.

**மேற்கோள் நூல்கள்:**


1. பெருமையினார், செ. (1971). ஆங்கிலப் பாடசாலைகளுக்கான தமிழ் வாசகங்கள், ஆறாம் புத்தகம். கே.எம். சாமி நூலகத்தார், சிங்கப்பூர்

2. முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு (1992). சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

3. புதிய கல்விமுறைக்கான தமிழ் இரண்டாம் மொழிப்பாடத்திட்டம்: தொடக்கநிலை வகுப்புகள் (1981). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

4. தமிழ்மொழிப் பாடத்திட்டம் : தொடக்கநிலை (1993). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

5. தமிழ்மொழிப் பாடத்திட்டம் : தொடக்கநிலை (2002). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

6. 2005 தாய்மொழிகள் மறுஆய்வுக் குழு அறிக்கை. சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

7. தமிழ்மொழிப் பாடத்திட்ட வழிகாட்டி: தொடக்கநிலை 1 முதல் 4 வரை (2008). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

8. 2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை. சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

9. தமிழ்மொழிப் பாடத்திட்டம் : தொடக்கநிலை (2015). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு

# உயர்நிலைப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டம்

**சிலம்பாயி முத்துசாமி**
**இரத்தினமாலா பரிமளம்**
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

**முன்னுரை**

ஒரு நாட்டின் வளப்பத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக உள்ள கூறுகளுள் மிகவும் முக்கியமானது கல்வித்துறை. கல்வித்துறையினர் மாணவர்களின் தேவைக்கேற்பப் பாடத்திட்டங்களை உருவாக்குகின்றனர். இவை மாணவர்களது அறிவாற்றலும் பல்வேறு திறன்களும் வளர்ச்சியடைய உதவுகின்றன. சிங்கப்பூரில் இவ்வாறான பாடத்திட்டங்கள் தமிழ்மொழிப் பாடத்திற்கென உருவாக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக நிலைத்திருக்கச் செய்ய இப்பாடத்திட்டங்கள் துணைபுரிகின்றன. இப்பாடத்திட்டங்கள் நெகிழ்வுத்தன்மைமிக்கதாகவும் ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகளைக் கொண்டதாகவும் அர்த்தமுள்ள மதிப்பீட்டை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளன. இத்தகைய பாடத்திட்டங்கள்வழிக் கற்கும் மாணவர்கள் தமிழ்மொழித் திறன்களைப் பெற்றவராகவும் நமது பண்பாட்டையும் விழுமியங்களையும் உணர்ந்து கடைப்பிடிப்பவராகவும் உருவாவார்கள்.

1834ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பதினெட்டே மாணவர்களைக் கொண்டு சிங்கப்பூர் இலவசப் பள்ளி, முதல் தமிழ் வகுப்பை நடத்தியது[1]. ஆனால், 1958ஆம் ஆண்டில்தான் தொடக்கநிலை, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் முதலில் ஆங்கிலத்தில் அச்சேறியது. அக்கால நாட்டு நிலைமைக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் ஏற்ப அது வடிவமைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், நமது அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பல புதிய கல்விக்கொள்கைகளுக்கு ஏற்பப் பல பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

**தமிழ்மொழிப் பாடத்திட்டம் – 1958**

*“சிறுபான்மையினரான சிங்கப்பூர்த் தமிழர்கள் தொன்மையான நாகரிகத்தைக் கொண்டவர்கள். தமிழ்மொழியில் புலமை பெற்றிருந்தால், அது அளவிடற்கரிய இலக்கியச் செல்வத்தின் வாயிலைத் திறந்து வைக்கும். மேலும், நம் நாட்டு வளர்ச்சியில் இந்தியப் பண்பாட்டின் பங்களிப்பை அறிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் உதவும். பள்ளிக்குச் செல்வதற்கு முன் ஓரளவிற்குத் தமிழறிந்தவர்களையும் தமிழை அறியாதவர்களையும் கருத்திற்கொண்டு இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது,”* என்று இப்பாடத்திட்டத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் ஜி.பி.டார்க்.

[1] பழனிசாமி, கே. (1987). உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982. பக் 73, 74.

இப்பாடத்திட்டத்தில் தொடக்கநிலை, உயர்நிலைப்பள்ளி, இலக்கியம் ஆகியவற்றிற்கான பாடத்திட்ட விளக்கம் இடம்பெற்றுள்ளது. உயர்நிலைப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டம் படிவம் இரண்டில் தொடங்கி ஐந்தில் முடிவுறுகிறது. படிவம் ஒன்று ஏன் விடுபட்டுள்ளது என்பதற்கான காரணம் தெரியவில்லை. உயர்நிலைப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் படித்தல், கருத்தறிதல், கட்டுரை, இலக்கணம் சுருக்கி வரைதல், மொழிபெயர்ப்பு ஆகியவற்றைப்பற்றிய விளக்கத்தைக் காணலாம். வகுப்பு நூலகம் என்னும் தலைப்பின்கீழ், அந்நூலகத்தில் நாவல், சிறுகதைகள், நாடகம், கவிதை, எளிமைப்படுத்தப்பட்ட சங்க இலக்கியங்கள் முதலியவை வைக்கப்பட வேண்டும், மேல் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கலைக்களஞ்சியம், அகராதிகள் முதலிய மேற்கோள் நூல்களை எளிதில் பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்னும் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இலக்கியப் பாடத்திட்டத்தில் உரைநடை, செய்யுள் முதலிய இலக்கிய வடிவங்கள் இடம்பெற்றிருந்தன என்பதை அறிய முடிகிறது. ஆனால், கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களின் விவரங்கள் இல்லை. படிவம் நான்கு, ஐந்தில்தான் இலக்கியப் பாடம் கற்பிக்கப்பட்டது. இலக்கியத் தேர்வுத்தாள் தமிழில் தயாரிக்கப்பட்டிருந்தாலும் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் விடை எழுதலாம் என்னும் குறிப்பும் உள்ளது. அதோடு, இப்பாடத்திட்டத்தில் இலக்கியத்தில் ஆர்வமும் ஓரளவிற்கு மொழியறிவும் உள்ள ஆண்கள் மட்டும் இலக்கியப் பாடத்தைப் படித்து, பள்ளிச் சான்றிதழ்த் தேர்வு எழுத முயற்சி செய்யலாம்2 என்னும் குறிப்பொன்றும் உள்ளது. இது சிந்தனைக்குரியது.

**தமிழ்மொழிப் பாடத்திட்டம் – 1961**

1958-ஆம் ஆண்டிற்கான தமிழ்மொழிப் பாடத்திட்டமே, மாணவர்களின் கற்றல் நிலைக்-கேற்ப, 1961ஆம் ஆண்டு இரு வேறு பாடத்திட்டங்களாகத் தமிழில் உருவாக்கப்பட்டது.

- ஆங்கில, மலாய், சீனத் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்
- தமிழ்த் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்

**ஆங்கில, மலாய், சீனத் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்**

தமிழ் பயிலும் மாணவர்கள் தம் பள்ளிப் படிப்பை முடிக்கும் முன் தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும், தாம் பார்த்த நிகழ்ச்சிகளை வாய்மொழி மூலமாகப் பிறர்க்குத் தெளிவாகக் கூறவும், இவற்றைத் தெளிவாக எழுதவும், உற்றார் உறவினர்க்குத் தாம் தெரிவிக்க விரும்பும் கருத்துகளைத் தெளிவாகக் கடிதம் வாயிலாக எழுதித் தெரிவிக்கவும், பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளவும், எளிய தமிழ் வெளியீடுகளைப் படித்துப் புரிந்துகொள்ளவும் வேண்டும். இதற்கு வேண்டிய மொழி அறிவும் திறமையும் பெற

[2] Ministry of Education. (1958). Syllabus for the Teaching of Tamil in Singapore. P 28.

வழி வகுப்பதே ஆங்கில, மலாய், சீனத் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் குறிக்கோள்.

இப்பாடத்திட்டத்தின்வழித் தமிழ் படித்த மாணவர்கள் படித்தல், கருத்தறிதல், கட்டுரை, இலக்கணம், சுருக்கி வரைதல், மொழிபெயர்ப்பு ஆகிய பாடங்களைப் படித்திருக்கின்றனர். இலக்கணம், சொல்வளம் முதலியவை படித்தல், கருத்தறிதல் ஆகியவற்றோடு இணைத்தே கற்பிக்கப்பட்டன. தொடக்கத்தில், கட்டுரை வரைதல் படித்த பாடத்தோடு தொடர்புடையதாய் இருந்தது; பிறகு, மாணவர்கள் அறிந்திருந்த கருத்து-களையொட்டி அமைந்திருந்தது. கட்டுரைகளின் எண்ணிக்கை, நோக்கம், தன்மை முதலியவற்றில் வளர்ச்சிநிலை காணப்பட்டது. இம்மாணவர்கள் இலக்கியத்தை ஒரு பாடமாகப் படிக்கவில்லை.

**தமிழ்த் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்**

தமிழ் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் பயிலும் மாணவர்கள் மேற்கண்ட பாடங்களோடு இலக்கியத்தையும் ஒரு பாடமாகப் படித்தனர்; இலக்கணப் பாடத்தில் அடிப்படை இலக்கணத்தோடு அணி, மரூஉ, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு, வழுவமைதி ஆகிய சொற்றொடர் இலக்கணத்தையும் கற்றனர். 1958ஆம் ஆண்டுத் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் இருந்த வகுப்பு நூலகம் பற்றிய செய்திகள் இப்பாடத்திட்டங்களிலும் இடம்பெற்றிருந்தன.

1961ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டங்களுக்குப் பிறகு, 1979ஆம் ஆண்டிலும் 1980ஆம் ஆண்டிலும் தொடக்கநிலைப் பள்ளிகளுக்குத் தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்-கின்றன. ஆனால், உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் உரு-வாக்கப்பட்டனவா என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

**உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்டங்கள் : தமிழ் இரண்டாம் மொழி – 1981**

ஜனவரி 1979இல் புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது[3]. இப்புதிய கல்வி முறைக்கேற்பக் கல்வி அமைச்சு 1981இல் உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தைத் திருத்தியமைத்தது. இப்பாடத்திட்டம் விரைவுக் கல்விப் பிரிவினருக்கும் வழக்கக் கல்விப் பிரிவினருக்கும் உரியது. விரைவுக் கல்விப் பிரிவினர் நான்காண்டுகளிலும் வழக்கக் கல்விப் பிரிவினர் ஐந்தாண்டுகளிலும் தங்கள் உயர்நிலைக் கல்வியை முடிப்பர்.

தொடக்கநிலை இறுதித் தேர்வில் வெற்றிபெற்று உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர்கள் வரும்போது, இவர்கள் அடிப்படை மொழித்திறன்களைப் பெற்றிருப்பர். இவர்களின் மொழித்திறன்களை மேலும் வளர்த்து, தமிழறிவை விரிவடையச் செய்தலே இப்பாடத்-திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். மாணவர்கள் அகராதி, கலைக்களஞ்சியம் முதலியவற்றைப் பயன்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும்,

[3] Goh, C. B., & Gopinathan, S. (2008). Education in Singapore: Development since 1965. P 92.

தமிழ் நாளிதழ்களில் இடம்பெறும் செய்திகளைப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும், எளிய தலைப்புகளில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் திறனைப் பெற்றிருக்க வேண்டும் என்பனவும் இப்பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இம்மாணவர்களின் மொழித்திறன்களை வளர்ப்பதற்குத் தேவையான வாய்மொழிப் பயிற்சி, வாசிப்பு, கருத்தறிதல், சுருக்கி எழுதுதல், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைகள், பழமொழிகள், சொல்வது எழுதுதல், கட்டுரை, இலக்கணம், மொழிப்பயிற்சி ஆகியவற்றுக்கான விளக்கங்கள் இப்பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ளன. *கற்பிக்க வேண்டிய செய்யுள்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன*[4] என்னும் குறிப்பு இப்பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தாலும் இவை யாவை என்பதற்கான விளக்கம் இல்லை. கட்டுரை, இலக்கணம், மொழிப்பயிற்சி ஆகியவை வகுப்புவாரியாக விளக்கப்பட்டுள்ளன. மரபுத்-தொடர்கள், இணைமொழிகள், உவமைகள், பழமொழிகள் ஆகியவை வகுப்புவாரியாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

**தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை) – 1993**

1992இல் வழக்கநிலைத் தொழில்நுட்பக் கல்விப் பிரிவு அறிமுகம் கண்டது. இப்பிரிவில் கற்கும் மாணவர்கள் தாய்மொழியை (தமிழ், மலாய், சீனம்) அடிப்படை நிலையில் பயில்வார்கள். ஆகவே, இப்பிரிவினருக்குரிய அடிப்படைத் தமிழோடு, தமிழ், உயர்தமிழ் ஆகியவற்றுக்கான பாடத்திட்டங்களைக் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவுப் பிரிவினர் 1993இல் உருவாக்கினர். இப்பாடத்திட்டம் ஆறு இயல்களையும் நான்கு பின்னிணைப்புகளையும் கொண்டு மிகவும் விளக்கமாக உள்ளது.

மாணவர்கள் தமிழ்மொழியில் திறன் பெற உதவுவது, இந்தியப் பண்பாட்டையும், நாட்டுருவாக்கத்திற்குத் துணைபுரியும் மரபுவழிப் பண்புகளையும் பொது நன்னெறிப் பண்புகளையும் அறிந்து போற்றச் செய்வது என்பன இப்பாடத்திட்டத்தின் நோக்கங்கள்.

இந்தப் பாடத்திட்டத்தில் மனித உறவுகள், சமூகமும் நாடும், உலகமும் நாமும், கற்பனை உலகம், அறிவியலும் தொழில்நுட்பமும், இயற்கை, கலையும் பண்பாடும், சுகாதாரமும் உடல் நலமும் என்னும் எட்டு வகையான கருப்பொருள்களும் இவற்றுடன் தொடர்புடைய தலைப்புகளும் துணைத் தலைப்புகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. கருப்பொருள்கள், தலைப்புகள், மொழி நடவடிக்கைகள், நுண்திறன்கள், கருத்துப்-பரிமாற்றப் பயன்பாடுகள், இலக்கணக்கூறுகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பாடங்-களைக் கற்பிக்கும் ‘கருப்பொருள் சார்ந்து அமையும் ஒருங்கிணைந்த பாடத்தொடர்’ அணுகுமுறையைப் இப்பாடத்திட்டம் பரிந்துரைக்கிறது. இவற்றுக்கான விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இப்பாடத்திட்டத்தில் மதிப்பீட்டு விளக்கக் குறிப்புகளும் கற்றல் விளைவுகளும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

[4] கல்வி அமைச்சு. (1981). உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்டங்கள் : தமிழ் இரண்டாம் மொழி. ப 3.

கல்வி அமைச்சு 1997இல் 'சிந்திக்கும் பள்ளிகள் கற்கும் நாடு' என்னும் இலக்கை அறிமுகப்படுத்தியது. இதைக் கருத்திற்கொண்டு சிந்தித்தல் திறன், தேசியக் கல்வி, தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகிய மூன்று செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இச்செயல்-திட்டங்களை ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்துவதற்காக 1998இல் பாடத்திட்டம் 10% முதல் 30% வரை குறைக்கப்பட்டது.

1998இல் தமிழ்மொழி மறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மறு ஆய்வுக் குழுவினர் தமிழ்மொழியைக் கற்பதற்குச் சிரமப்படும் மாணவர்களுக்காகத் தமிழ்மொழி 'B' பாடத்திட்டத்தைப் பரிந்துரைத்தனர். இந்தப் பாடத்திட்டம் 2001ஆம் ஆண்டு அறிமுகப்-படுத்தப்பட்டது[5].

**தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை) – 2002**

இன்றைய மாணவர்களை நாளைய தலைவர்களாக்குவது ஆசிரியர்களின் கையில் உள்ளது. ஆகவே, ஆசிரியர்களுக்கு வழிகாட்டி உதவக் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள் 1997ஆம் ஆண்டு வகுக்கப்பட்டன. மேலும், எழுத்தறிவு எண்ணறிவுத் திறன்கள், தகவல் திறன்கள், சிந்தனை புத்தாக்கத் திறன்கள், கருத்துப்பரிமாற்றத் திறன்கள், அறிவுப்பயனாக்கத் திறன்கள், சமூக ஒத்துழைப்புத் திறன்கள், தன் நிர்வாகத் திறன்கள், பண்பு வளர்ச்சி ஆகிய அடிப்படைத் திறன்களும் விழுமியங்களும் அடையாளம் காணப்பட்டன. இவற்றோடு சிந்தித்தல் திறன், தேசியக் கல்வி, தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவற்றையும் கற்றல் கற்பித்தலோடு ஒருங்கிணைப்பதற்குரிய உயர்நிலைப்-பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2002இல் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினரால் வரையப்பட்டது.

உயர்நிலைப்பள்ளிகளில் விரைவுநிலைப் பிரிவிலும் வழக்கநிலை ஏட்டுக்கல்விப் பிரிவிலும் உயர்தமிழ்ப் பிரிவிலும் அடிப்படைத்தமிழ்ப் பிரிவிலும் தமிழ் கற்பிக்கப்பட்டது. தமிழ்மொழித் திறன்களைக் கற்பிப்பதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் அந்தந்தப் பிரிவுக்கேற்ப வேறுபடும் என்பது இப்பாடத்திட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் மனித உறவுகள், சமூகமும் நாடும், உலகமும் நாமும், பண்பாடும் மரபும், கற்பனை உலகம் என்று கருப்பொருள்கள் ஐந்தாகக் குறைக்கப்-பட்டுள்ளன. 'கருப்பொருள் சார்ந்து அமைந்த திறன்கள் ஒருங்கிணைந்த கற்றல் கற்பித்தல்' அணுகுமுறை இப்பாடத்திட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. மற்றக் கூறுகள் 1993ஆம் ஆண்டுத் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் உள்ளவாறு அமைந்துள்ளன.

தொடக்கப்பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் உயர்நிலைப்-பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர்களின் தகவலுக்காகப் பின்னிணைப்பில் கொடுக்கப்-பட்டுள்ளன.

---

[5] Ministry of Education. (18 Feb 2000). MOE Announces Measures to Enhance the Teaching and Learning of Tamil Language in Schools. Retrieved from http://www.moe.gov.sg/media/press/2000/pr20000221.htm.

**தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை) – 2011**

கல்வி அமைச்சு 2005-ஆம் ஆண்டு தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. ஆய்வில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இப்பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்டு 2011ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் அமலாக்கம் கண்டது. இந்தப் பாடத்திட்டத்தின் இலக்கு 'சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்குதல்' என்பதாகும். இதன் அடிப்படையில் தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டப் பணிச்சட்டம் ஒன்று வரையப்பட்டது. இதில் தொடக்கநிலை, உயர்நிலை, தொடக்கக்-கல்லூரி ஆகியவற்றிற்குரிய கற்றல் விளைவுகள் இடம்பெற்றுள்ளன. மாணவர்களை மையப்படுத்தி வரையப்பட்ட முக்கோணத்தில் தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம், ஆர்வமூட்டும் கற்பித்தல்முறை, அர்த்தமுள்ள மதிப்பீடு ஆகியவை இடம்-பெற்றுள்ளன. மேலும், பாடத்திட்டத்தின் இலக்கை அடைவதற்கு வீடு, பள்ளி, சமூகம் ஆகியவற்றின் முத்தரப்புக் கூட்டு முயற்சி தேவை என்பதை இப்பாடக்கலைத்திட்டம் எடுத்துக்காட்டுகிறது.

*அன்றாட வாழ்க்கைச் சூழலுக்குப் பொருத்தமான பேச்சுத்தமிழ் மொழிநடையிலிருந்து மாறுபட்டு எழுத்துத்தமிழில் பேசுவது இயல்பானதன்று*[6]. அதனால், மொழித்திறன்கள், கருத்துப்பரிமாற்றத் திறன்கள், பண்பாடு, விழுமியங்கள் ஆகியவற்றோடு பேச்சுத்தமிழும் இப்பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், சிந்தனைத் திறன்கள், தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள், கற்றல் அடைவுநிலைகள், இலக்கணக் கூறுகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத் தொடர்கள், பழமொழிகள், செய்யுள்கள், வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறை, கூடிக்கற்றல் அமைப்புமுறைகள், பன்முனைப்பாங்கு அணுகுமுறை, பிரச்சினை அடிப்படையிலான கற்றல், நாடகம்வழிக் கற்றல், படைப்பாக்கத்திறன் மேம்பாட்டிற்காகக் கற்பித்தல், மதிப்பீடு ஆகியவை பற்றிய விளக்கங்கள் இப்பாடத்திட்டத்தில் உள்ளன.

இப்பாடத்திட்டத்திலும் உறவுகள், சமூகமும் நாடும், உலகமும் நாமும், மரபும் பண்பாடும், கற்பனை உலகம் என்னும் கருப்பொருள்கள் சொல்லளவில் சிறு மாற்றங்க-ளோடு இடம்பெற்றுள்ளன. மொழி கற்றலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காகத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பச் செயல்திறன் அட்டவணை ஒன்று பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடக்கப்பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள், பழமொழிகள் உயர்நிலைப்பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர்களின் தகவலுக்காகப் பின்னிணைப்பில் தரப்-பட்டுள்ளன.

[6] கல்வி அமைச்சு. (2011). தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை). ப 17.

ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை முறையாகவும் சிறப்பாகவும் நடைமுறைப்படுத்தத் தமிழ்மொழிப் பாடத்திட்ட வழிகாட்டி ஒன்று உருவாக்கம் கண்டது. இவ்வழிகாட்டியில் கூடுதல் விளக்கங்களும் உதாரணங்களும் மாதிரிப்பாடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

தமிழ்மொழியறிவு சிறிதளவே உள்ள மாணவர்களுக்கும், ஓரளவிற்கு உள்ளவர்களுக்கும், வலுவாக உள்ளவர்களுக்கும் இவர்களின் தமிழ்மொழித் திறன் மேலும் வளர உதவவேண்டும். இவர்கள் தமிழ்மொழியைக் கற்று இதைத் தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும். இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் தன்னம்பிக்கையுடனும் அர்த்தத்துடனும் பயனுடைய வகையிலும் கருத்துப்பரிமாற்றம் செய்யும் திறன்மிக்க மாணவர்களாக இவர்கள் உருவாக வேண்டும். ஆகவே, இம்மாணவர்களுக்கு உகந்த தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை தொடர்ந்து மேம்படுத்தப்பட்டுவருகின்றன. தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் அர்த்தமுள்ளவையாகவும் ஆர்வமூட்டுபவையாகவும் இருந்தால், மாணவர்கள் தமிழ்மொழியைத் தேர்வுப் பாடமாகக் கருதாமல், வாழும் மொழியாகப் போற்றுவர்.

**மேற்கோள் சான்றாதாரங்கள் :**


கல்வி அமைச்சு. (1961). *ஆங்கில, மலாய், சீனத் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1961). *தமிழ்த் தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம்.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1981). *உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்டங்கள் : தமிழ் இரண்டாம் மொழி.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1993). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை).* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2002). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை).* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2005). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக்குழு அறிக்கை.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2011). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் (உயர்நிலை).* சிங்கப்பூர்.

பழனிசாமி, கே. (1987). *உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982.* சிங்கப்பூர்.

Goh, C. B., & Gopinathan, S. *(2008). Education in Singapore: Development since 1965. IN B. Fredriksen & J. P. Tan (Eds.). An African Exploration of the East Asian Education (pp. 80-108). Washington, DC: The World Bank.*

Ministry of Education. *(1958). Syllabus for the Teaching of Tamil in Singapore. Singapore.*

Ministry of Education*. (18 Feb 2000). MOE Announces Measures to Enhance the Teaching and Learning of Tamil Language in Schools. Singapore. Retrieved from http://www.moe.gov.sg/media/press/2000/pr20000221.htm.*

# உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கம்

**சிலம்பாயி முத்துசாமி**
**ஜமுனாராணி ஜெயகுமார்**
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

## முன்னுரை

தமிழர்கள் சிங்கப்பூரில் காலூன்றத் தொடங்கிய காலந்தொட்டே இங்கே தமிழ் வேரூன்றி வாழ்ந்து வருகிறது. இருப்பினும், 1833வரை சிங்கப்பூரில் தமிழ்ப் பள்ளிகள் இருந்தனவா என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால், 1834ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பதினெட்டே மாணவர்களைக் கொண்டு சிங்கப்பூர் இலவசப் பள்ளி, முதல் தமிழ் வகுப்பை நடத்தியது[1]. சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் வரலாறு இங்கிருந்தே தொடங்கியிருக்க வேண்டும். அப்போது தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குத் துணைபுரிவதற்குரிய பாடநூல்கள் உருவாக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ்க் கல்வியை மறுசீரமைத்துப் புத்துயிர் ஊட்டுவதற்காக 1949ஆம் ஆண்டில் சமூக உணர்வுமிக்க தமிழர்கள் தமிழ்க் கல்விச் சங்கத்தை அமைத்தனர். இச்சங்கத்தின் 1950ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை, ‘பாடப்புத்தகங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இருப்பினும், இப்புத்தகங்கள் உள்ளடக்கத்திலும் அணுகு-முறையிலும் பொருத்தமில்லாமல் இருந்ததுடன் பாடத்திட்டத்தில் உள்ள எல்லா அம்சங்களையும் உள்ளடக்கவில்லை,’ என்று கூறுகிறது[2]. அதன் பிறகு, 1983ஆம் ஆண்டு வரை இந்தியா மட்டுமல்லாமல் மலேசியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பாட-நூல்கள், பயிற்சிநூல்கள் உயர்நிலைப்பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், இவை மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை[3].

1979இல் வெளியிடப்பட்ட கல்வி அமைச்சின் அறிக்கையைத் தொடர்ந்து புதிய கல்வி முறை அறிமுகமானது. இப்புதிய கல்வி முறையில் பயிலவிருக்கும் மாணவர்களுக்குத் தகுந்த பயிற்றுவளங்கள் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, 1980இல் சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது.

## உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் (தமிழ்)

புதிய கல்வி முறைக்கேற்ப மாணவர்கள் விரைவுக் கல்விப் பிரிவினராகவும் வழக்கக் கல்விப் பிரிவினராகவும் தரம் பிரிக்கப்பட்டனர். விரைவுக் கல்விப் பிரிவில் படிப்பவர்கள் நான்காண்டுகளிலும் வழக்கக் கல்விப் பிரிவில் படிப்பவர்கள் ஐந்தாண்டுகளிலும் தங்கள்

---

[1] பழனிசாமி, கே. (1987). உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982. பக் 73, 74.
[2] பழனிசாமி, கே. (1987). உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982. பக் 78, 80.
[3] முத்தையா, எஸ். ஏ. (2000). உயர்நிலை இரண்டாம் வகுப்புக்கான தமிழ்ப் பாடநூலில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களின் பொருளை ‘ஜட்ஜ்மெண்டல் குளோஸ்’ மூலம் மாணவரே ஊகித்து அறிதல் – ஓர் ஆய்வு. சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்: தொகுதி 1. ப 182.

உயர்நிலைக் கல்வியை முடிப்பர். இவர்களுக்குரிய பயிற்றுவளங்களைத் தயாரிப்பதற்காக ஜனவரி 1983இல் சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தினரால் உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடநூலாக்கக் குழு உருவாக்கப்பட்டது[4]. இவர்களின் அரிய முயற்சியில் உருவானதே 'தமிழ்' என்னும் பயிற்றுவளங்கள் ஆகும். பாடநூல்கள் பயிற்சிநூல்கள், ஆசிரியர் கையேடுகள், ஒளி ஊடுருவித்தாள்கள், வண்ணப் படவில்லைகள், ஒலி நாடாக்கள், கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பன இப்பயிற்றுவளங்களுள் அடங்கும்.

தமிழ்ப் பாடநூல் வரிசை உள்நாட்டுச் சூழலில் எழுதப்பட்ட முதல் பாடநூல் வரிசையாகும். பாடநூல்களின் பொருளடக்கம் உரைநடைப் பகுதி, செய்யுள் பகுதி, இலக்கணப் பகுதி எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நூல்களில் சமூகம், நாடு, பண்பாடு, சமயம், மொழி, இலக்கியம், அறிவியல், பெரியார் வாழ்க்கை வரலாறு, அறநெறி முதலிய பல்வேறு துறைகளைச் சார்ந்த உரைநடைப் பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இவை யாவும் மாணவர்களின் மொழியறிவினை வளர்ப்பதோடு பொது அறிவையும் வளர்க்கத் துணை செய்யும்[5]. மேலும், பாடநூல்களில் இலக்கண விளக்கங்கள், கடவுள் வாழ்த்து, நீதிநெறிப் பாக்கள், கதைப் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள் முதலியவை இடம்பெற்றுள்ளன.

மாணவர்கள் தம் அன்றாட வாழ்க்கையில் காணும் பலவகையான செய்திகளைப் படித்துப் புரிந்துகொண்டு தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகள் தரப்பட வேண்டும். அதனால், பயிற்சிநூல்களில் கருத்துவிளக்கப் படங்கள், விளம்பரங்கள், அறிவிப்புகள், நிகழ்ச்சி நிரல்கள், உரையாடல்கள் முதலானவை இடம்பெற்றுள்ளன. இலக்கணம், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், பழமொழிகள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. *இவை எல்லாம் மாணவரின் மொழித்திறனை வளர்த்து, அவர்கள் தமிழைப் பிழையின்றி எழுத உதவும் என்று நம்புகிறோம்*[6] என்று பயிற்சிநூல்களின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடநூல்களிலும், பயிற்சிநூல்களிலும் உள்ள பனுவல்களும் படங்களும் வெள்ளை, கறுப்பு வண்ணங்களில் அமைந்துள்ளன. ஆசிரியர் கையேட்டில் ஒவ்வொரு பாடத்திற்குமான பொது நோக்கங்கள், சிறப்பு நோக்கங்கள், கற்பித்தல் முறைகள், பாடப்பொருள் அறிவு, பரிந்துரைகள், துணைநூல்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. மேலும், இலக்கணம், செய்யுள் ஆகியவற்றுக்கான விளக்கங்களும் உள்ளன. கேட்டல், பேசுதல், எழுதுதல், உரையாடுதல், நடித்தல் ஆகியவற்றுக்கான பனுவல்களும் பயிற்சிகளும் இடம்பெற்றுள்ளன.

**உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் (பழகு தமிழ், தமிழ் அமுது, தமிழ் மாலை)**

1992இல் அறிமுகம் கண்ட வழக்கநிலை (தொழில்நுட்பம்) பிரிவோடு வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) பிரிவு, விரைவுநிலைப் பிரிவு ஆகியவற்றுக்கான தமிழ்மொழிப் பாடத்-

---

[4] Curriculum Development Institute of Education. (1988). A Report on Tamil Language (L2) for Secondary Schools (TASS) : January 1983 – December 1988. P 1.

[5] கல்வி அமைச்சு. (1983). உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் 1, பாடநூல், வழக்கம்/விரைவு. முன்னுரை.

[6] கல்வி அமைச்சு. (1983). உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் 1, பயிற்சிநூல், விரைவு. முன்னுரை.

திட்டங்களைக் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவுப் பிரிவினர் 1993இல் உருவாக்கினர். அப்பாடத்திட்டங்களையொட்டிச் சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தினர் தமிழ்ப் பயிற்றுவளங்களை உருவாக்கினர். இவர்கள் இப்பயிற்றுவளங்களைப் பாடக்கோவை என்றே குறிப்பிட்டுள்ளனர். 1997ஆம் ஆண்டிலிருந்து பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினர்[7] தமிழ்ப் பயிற்றுவளங்களை உருவாக்கத் தொடங்கினர். பயிற்றுவளங்களாகப் பாடநூல்கள், பயிற்சிநூல்கள், ஆசிரியர் கையேடுகள், துணைப் பாடநூல்கள், ஒலித்தட்டுகள், ஒளி நாடாக்கள், வண்ணப் பட அட்டைகள், ஒளி ஊடுருவித்தாள் படங்கள் முதலியவை வழங்கப்பட்டன.

மாணவர்களின் மொழிநிலைக்கேற்பப் பாடநூல்கள் அமைந்திருந்தன (காண்க: அட்டவணை 1).

| மொழிநிலை | பாடநூலின் தலைப்பு | கல்வியாண்டு |
|---|---|---|
| அடிப்படைத் தமிழ் | பழகு தமிழ் – வழக்கநிலை (தொழில்நுட்பம்) | 4 ஆண்டுகள் |
| தமிழ் | தமிழ் அமுது – வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) | 5 ஆண்டுகள் |
| | தமிழ் அமுது – விரைவுநிலை | 4 ஆண்டுகள் |
| உயர்தமிழ் | தமிழ் மாலை – உயர்தமிழ் | 4 ஆண்டுகள் |

(அட்டவணை 1)

பாடநூல்களில் மனித உறவுகள், சமூகம், நாடு, உலகம், அறிவியல், தொழில்நுட்பம், இயற்கை, பண்பாடு, சுகாதாரம் முதலிய கருப்பொருள்கள் சார்ந்த பாடங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடங்களில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், சிந்தித்தல் ஆகிய திறன்களை வளர்க்கும் வகையில் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. வழக்கநிலை (தொழில்நுட்பம்) மாணவர்களுக்கு வாய்மொழிப் பயிற்சிகளிலும் கேட்டல்-பேசுதல் பயிற்சிகளிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது[8]. 'தமிழ் அமுது' பயிற்சிநூல் 4இல் கேட்டல் அல்லது நோக்கல் கருத்தறிதல் பயிற்சித்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன[9].

பாடநூல்கள், பயிற்சிநூல்களின் பின்னிணைப்பாகத் தமிழ் எழுத்துகளின் பட்டியல் இடம்பெற்றுள்ளது. மாணவர்கள் தமிழ் எழுத்துகளை நினைவுகூர்வதற்கு இப்பட்டியல் உதவியாகவுள்ளது. 'பழகு தமிழ்' பாடநூல் 1, 2-இன் பின்னிணைப்பில் மாணவர்கள் சொல்லிப் பழகுவதற்காகச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. 'தமிழ் அமுது', 'தமிழ் மாலை' பாடநூல்களில் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அறிவுக்கு விருந்தாகப் பொன்மொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

---

[7] From 1 Dec 96, the Curriculum Development Institute of Singapore (CDIS) and the Curriculum Planning Division (CPD) of the Ministry of Education (MOE) will be restructured to form two new Divisions. The two new Divisions will be the Educational Technology Division (ETD) and the Curriculum Planning and Development Division (CPDD).

[8] கல்வி அமைச்சு. (1993). உயர்நிலைப்பள்ளிகளுக்கான பழகு தமிழ் 1, பாடநூல், வழக்கநிலை (தொழில்நுட்பம்). முன்னுரை.

[9] கல்வி அமைச்சு. (1997). உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் அமுது, பயிற்சிநூல், விரைவுநிலை 4, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) 5. முன்னுரை.

பாடநூல்களில் மூவண்ணங்களில் பனுவல்களும் படங்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால், பயிற்சிநூல்களிலுள்ள பனுவல்களும் படங்களும் வெள்ளை, கறுப்பு வண்ணங்களில் உள்ளன. ஆசிரியர் கையேட்டில் கூடிக் கற்றல் அணுகுமுறைகள், பாட நோக்கங்கள், கற்பித்தல் நடவடிக்கைகள் முதலியவை தரப்பட்டுள்ளன; கேட்டல் கருத்தறிதல் பனுவல்களும் பயிற்சிகளுக்குரிய விடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

1998இல் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடநூலாக்கக் குழுவினர் தங்களது இரண்டாம் கட்டப் பணியாகத் தமிழ் அமுது துணைப் பாடநூல்களையும் தமிழ் மாலை துணைப் பாடநூல்களையும் எழுதத் தொடங்கினர். விரைவுநிலை, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி), உயர்தமிழ் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டி, இவர்களின் மொழிவளத்தையும் சிந்தனைத் திறனையும் மேம்படுத்தவே இந்நூல்கள் எழுதப்பட்டன. துணைப் பாடநூல்களில் சமூகம், வரலாறு, வாழ்க்கை நிகழ்வுகள், பண்பாட்டு விளக்கக் கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகளுக்கு வண்ணப் படங்கள் சிறப்புச் சேர்த்தன.

கல்வி அமைச்சு 1997இல் 'சிந்திக்கும் பள்ளிகள் கற்கும் நாடு' என்னும் இலக்கை அறிமுகப்படுத்தியது. இதைத் தொடர்ந்து சிந்தித்தல் திறன், தேசியக் கல்வி, தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகிய மூன்று செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இச்செயல்திட்டங்களை ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்துவதற்காக 1998இல் பாடத்திட்டம் 10% முதல் 30% வரை குறைக்கப்பட்டது. இதற்கேற்பப் பாடநூல்களிலும் பயிற்சிநூல்களிலும் உள்ள மொழிக்கூறுகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், பழமொழிகள் ஆகியவை குறைக்கப்பட்டு 1999இல் அமலாக்கம் கண்டன.

**உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் (முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல்)**

2002இல் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினரால் உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் வரையப்பட்டது. இந்தப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாடநூல்கள் எழுதப்பட்டன (காண்க: அட்டவணை 2).

| மொழிநிலை | பாடநூலின் தலைப்பு | கல்வியாண்டு |
|---|---|---|
| அடிப்படைத் தமிழ் | முல்லை – வழக்கநிலை (தொழில்நுட்பம்) | 4 ஆண்டுகள் |
| தமிழ் | மருதம் – வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) | 5 ஆண்டுகள் |
| | குறிஞ்சி – விரைவுநிலை | 4 ஆண்டுகள் |
| உயர்தமிழ் | நெய்தல் – உயர்தமிழ் | 4 ஆண்டுகள் |

(அட்டவணை 2)

மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைப்பதற்காகப் பாடநூல்கள் இரு பகுதிகளாக (A & B) பிரிக்கப்பட்டன. இப்பாடநூல்களுக்கு வலு சேர்க்கும் வகையில் பயிற்சிநூல்கள், ஆசிரியர் கையேடுகள், ஒலிவட்டுகள், வானவில் என்னும் கணினிவட்டுகள், மின்

ஒளிவட்டு (E-Video) முதலியவை வழங்கப்பட்டன. கணினிவட்டுகளின் உருவாக்கம் தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டை வலியுறுத்தின.

உறவுகள், சமூகமும் நாடும், உலகமும் நாமும், மரபும் பண்பாடும், கற்பனை உலகம் ஆகிய கருப்பொருள்களை மையமாகக் கொண்டு பாடங்கள் எழுதப்பட்டன. இருப்பினும், மரபும் பண்பாடும் என்னும் கருப்பொருளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பேசுவதற்கோ, பாகமேற்று நடிப்பதற்கோ, சிந்தித்து ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கோ ஏற்ற வகையில் நடவடிக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. கூடிக் கற்றல் அணுகுமுறைகள், இணை நடவடிக்கைகள், குழு நடவடிக்கைகள், மொழி விளையாட்டுகள் முதலியவை சேர்க்கப்பட்டுள்ளன. மருதம், குறிஞ்சி, நெய்தல் ஆகிய பாடநூல்களில் மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், மொழிக்கூறுகள் முதலியவற்றின் பயன்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. பாடநூல்களில் இடம்பெற்றுள்ள நடவடிக்கைகள் வாய்மொழிப் பயிற்சியாகவே செய்வதற்குரியவை என்னும் குறிப்புப் பாடநூல்களின் அறிமுகத்தில் இடம்பெற்றுள்ளது.

பாடநூல்களிலும் பயிற்சிநூல்களிலும் உள்ள குறிப்பிட்ட சில சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களும், சில சொற்களுக்கு விளக்கங்களும் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன[10]. பாடநூல்களில் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மாணவர்களுக்குப் பயன் தரும் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

- உயர்நிலை 1 – நம் பண்பாட்டை அறிந்துகொள்வோம்
- உயர்நிலை 2 – சிந்தனைத் துளிகள்
- உயர்நிலை 3 – விடுகதை
- உயர்நிலை 4 – கவிச்சரம்

பாடநூல்கள், பயிற்சிநூல்களின் பின்னிணைப்பாக அருஞ்சொற்பட்டியல், தமிழ் எழுத்துகளின் பட்டியல் ஆகியவை இடம்பெற்றுள்ளன. பாடநூல்களில் அருஞ்சொற்பட்டியல், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், பழமொழிகள், செய்யுள் பகுதி, தமிழ் எழுத்துகளின் பட்டியல் ஆகியவை பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பாடநூல்களிலுள்ள படங்களும் குறிப்புகளும் வண்ணத்தில் உள்ளன. எனினும், பயிற்சிநூல்களில் உள்ளவை வெள்ளை, கறுப்பு வண்ணங்களிலேயே உள்ளன.

ஆசிரியர் கையேடுகளில் கூடிக் கற்றல் அணுகுமுறைகள், ஸ்கேம்பர் (SCAMPER) உத்திகள், புளூம் கோட்பாடு, கட்டுரை எழுதுவதற்கான செய்முறை எழுத்துத் திறன், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், சுருக்கி வரைதல் முதலியவை படிப்படியாக விளக்கப்பட்டுள்ளன. பாடநூல், பயிற்சிநூல்களில் இடம்பெற்றுள்ள கேள்விகளுக்குரிய விடைகளும் ஆசிரியர் கையேடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கையேடுகளில் விருப்ப நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கற்பித்தலுக்குப் பிறகு, நேரம் இருப்பின் ஆசிரியர்கள் இந்நடவடிக்கைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

---

10 கல்வி அமைச்சு. (2002). மருதம், உயர்நிலை 2, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி), பாடநூல் 2A, ப 45.

### உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல்கள் (தமிழ்ச்சுடர்)

2005ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் கல்வி அமைச்சு இரண்டு மறு ஆய்வுகளை மேற்கொண்டு பரிந்துரைகளை முன்வைத்தது. இப்பரிந்துரைகளுக்கேற்பக் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினர் 'தமிழ்ச்சுடர்' பயிற்று-வளங்களை உருவாக்கத் தொடங்கினர். அவை பாடநூல்கள், பயிற்சிநூல்கள், ஆசிரியர் கையேடுகள், மின்னிலக்க வளங்கள் என்பனவாகும். மின்னிலக்க வளங்கள் கல்வி அமைச்சின் இணையப்பக்கங்களில் (OPAL, iMTL) ஏற்றம் செய்யப்பட்டுள்ளன.

வழக்கநிலை (தொழில்நுட்பம்), வழக்கநிலை (ஏட்டுக்கல்வி), விரைவுநிலை, உயர்தமிழ், தமிழ் 'B' ஆகிய அனைத்து நிலைகளுக்கும் 'தமிழ்ச்சுடர்' என்னும் பெயரிலேயே தனித்தனிப் பாடநூல்கள் எழுதப்பட்டன. மாணவர்கள் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு அப்பாலும் பேச்சுத்தமிழில் இயல்பாகவும் தன்னம்பிக்கையாகவும் கலந்துரையாடுவதற்கான சூழலை ஏற்படுத்தித் தரும் வகையில் இப்பாடநூல்கள் அமைந்துள்ளன. மேலும், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன[11]. மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களைப் பெற்றுத் திகழும்வண்ணமும் இப்பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பாடநூல்களில் பழைய சிறந்த கூறுகளோடு புதிய மாற்றங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

#### பழைய சிறந்த கூறுகள்

- இலக்கணம், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள் ஆகியவற்றின் விளக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன.
- பாடங்கள் கருப்பொருள்கள் சார்ந்தவையாக அமைந்திருக்கின்றன.
- தமிழ் எழுத்துகளின் பட்டியலும், அருஞ்சொற்பட்டியலும், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், பழமொழிகள் ஆகியவற்றின் பட்டியலும், செய்யுள் பகுதியும் பின்னிணைப்பாக வழங்கப்பட்டிருக்கின்றன.
- மொழித்திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பித்தலுக்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன.
- பாடநூல்கள் இரு பகுதிகளாக (A & B) இருக்கின்றன.
- குறிப்பிட்ட சில சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களும், சில சொற்களுக்கு விளக்கங்களும் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
- பாடநூல்களிலுள்ள படங்களும் குறிப்புகளும் வண்ணத்தில் இடம்பெற்றிருக்கின்றன.
- பாடநூல், பயிற்சிநூல்களில் இடம்பெற்றுள்ள வினாக்களுக்குரிய விடைகள் ஆசிரியர் கையேடுகளில் இடம்பெற்றிருக்கின்றன.
- ஆசிரியர் கையேடுகளில் விருப்ப நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன.

---

[11] கல்வி அமைச்சு. (2013). உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல் வரிசை, தமிழ்ச்சுடர், தமிழ் விரைவுநிலை, பாடநூல் 3B. ப 27.

- மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டத் துணைப் பாடநூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**புதிய மாற்றங்கள்**

- ஆசிரியர் கையேடுகளில் பழமொழிகளுக்கான விளக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன.
- பயிற்சிநூல்களிலுள்ள படங்களும் குறிப்புகளும் வண்ணத்தில் அமைந்திருக்கின்றன.
- ஆசிரியர் கையேடுகளில் சில கூடுதல் நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்ப இந்த நடவடிக்கைகளை நடத்துகிறார்கள்.
- கல்வி அமைச்சின் இணையப்பக்கத்தில் (OPAL) கதைப் பனுவல்கள் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பான நடவடிக்கைகள் பயிற்சிநூல்களில் இடம்பெற்றுள்ளன. மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ஆசிரியர்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.
- மாணவர்கள் சுய மதிப்பீடு செய்வதற்கும் சக மாணவரை மதிப்பீடு செய்வதற்கும் உரிய குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாணவர் செயல்திறன் குறித்து ஆசிரியர் கருத்துரைக்கவும் பயிற்சிநூலில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

'தமிழ்ச்சுடர்' பயிற்றுவளங்கள் இன்றளவும் நடைமுறையில் உள்ளன. அடுத்த பயிற்றுவளங்களின் உருவாக்கம்வரை இப்பயிற்றுவளங்களை மேலும் பயன்விளைவுமிக்கதாய் அமைத்துக்கொள்ளக் கல்வி அமைச்சு அதிகாரிகளும் ஆசிரியர்களும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள்.

**முடிவுரை**

தமிழை வாழும் மொழியாக்க வேண்டும் என்பதே நம் கனவாகும். இக்கனவை நனவாக்கவே அந்தந்தக் காலக்கட்டத்தில், கல்வி அமைச்சு கற்றல் கற்பித்தலில் ஆய்வுகள் மேற்கொண்டது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் தமிழ் கற்றல் கற்பித்தலில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இப்பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்டு பயிற்றுவளங்கள் உருவாக்கப்பட்டன; உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் இவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தி மாணவர்களின் தமிழ்மொழித் திறனையும் ஈடுபாட்டையும் வளர்க்க வேண்டும்.

**மேற்கோள் சான்றாதாரங்கள்**

கல்வி அமைச்சு. (1983). *உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் 1, பாடநூல், வழக்கம்/விரைவு.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1983). *உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் 1, பயிற்சிநூல், விரைவு.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1993). *உயர்நிலைப்பள்ளிகளுக்கான பழகு தமிழ் 1, பாடநூல், வழக்கநிலை (தொழில்நுட்பம்)*. சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1996). *உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் அமுது 3, ஆசிரியர் கையேடு, விரைவுநிலை*. சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1997). *உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் அமுது, பயிற்சிநூல், விரைவுநிலை 4, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) 5*. சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (1998). *உயர்நிலைப்பள்ளிகளுக்கான தமிழ் மாலை, துணைப் பாடநூல், உயர்தமிழ், 1A*. சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2002). *மருதம், உயர்நிலை 2, வழக்கநிலை (ஏட்டுக்கல்வி), பாடநூல் 2A*, சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2005). *தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக்குழு அறிக்கை.* சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2010). *தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல்*. சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2013). *உயர்நிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூல் வரிசை, தமிழ்ச்சுடர், தமிழ் விரைவுநிலை, பாடநூல் 3B*. சிங்கப்பூர்.

பழனிசாமி, கே. (1987). *உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982.* சிங்கப்பூர்.

முத்தையா, எஸ். ஏ. (2000). உயர்நிலை இரண்டாம் வகுப்புக்கான தமிழ்ப் பாடநூலில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களின் பொருளை 'ஜட்ஜ்மெண்டல் குளோஸ்' மூலம் மாணவரே ஊகித்து அறிதல் – ஓர் ஆய்வு. *சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்: தொகுதி 1.* (தொகுப்பாசிரியர் டாக்டர் கா. இராமையா). சிங்கப்பூர்.

Curriculum Development Institute of Education. (1988). *A Report on Tamil Language (L2) for Secondary Schools (TASS) : January 1983 – December 1988*. Singapore.

Ministry of Education. (25 Nov 1996). *Establishment of Educational Technology and Curriculum Planning and Development Divisions*. Singapore. Retrieved from http://www.moe.gov.sg/media/press/1996/pr03596.htm.

# உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பயிற்றுமுறைகள்

**சுப்பிரமணியம் நடேசன்**
முதன்மை ஆசிரியர் (தமிழ்மொழி)
தரநிலை ஆய்வுப் பிரிவு,
சிங்கப்பூர் ஆசிரியர் கலைக் கழகம்

## முன்னுரை

பாடக்கலைத்திட்ட அமலாக்கத்தின் வெற்றி, அதனைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் கையாளும் பயிற்றுமுறைகளின் தரத்தைப் பொறுத்துள்ளது. அதாவது, பயிற்றுமுறைகள் சரிவர அமைந்தால் மட்டுமே,பாடக்கலைத்திட்டம் வகுத்துள்ள கற்றல் விளைவுகளை மாணவர்கள் செவ்வனே அடைவர். நம் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, தமிழாசிரியர்கள் தரமான பயிற்றுமுறைகளைத் திறம்படக் கையாளுவதற்கான ஆதரவைப் பாடக்கலைத்திட்ட வளங்கள்வழியும் பணித்திறன் மேம்பாட்டின்வழியும் வழங்கிவருகிறது. இக்கட்டுரை, 1965முதல் 2015வரை சிங்கப்பூரில் உயர்நிலைக்கான தமிழ்மொழிப் பாடப் பயிற்றுமுறைகள் அமைந்துள்ள போக்குக் குறித்து விளக்குகிறது.

## பயிற்றுமுறைகள் (1965முதல் 1989வரை)

உயர்நிலைப்பள்ளிகளில் இரண்டாம் மொழியாக 1955முதல் சீனம், மலாய், தமிழ் ஆகிய தாய்மொழிகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. தொடக்கத்தில், தமிழகப் பாடநூல்களும் மலாயாவின் (மலேசியா) பாடநூல்களும் உயர்நிலைப்பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வந்தன. அப்போது ஏனைய பாடங்களைப் போல், தமிழ்மொழிக்கான பயிற்றுமுறைகளும் ஆசிரியரை மையமாகக்கொண்டே அமைந்திருந்தன. தமிழாசிரியர்கள் சுண்ணப்பலகையை வெகுவாகப் பயன்படுத்தி விரிவுரை பாணியில் தமிழ்மொழியைக் கற்பித்தனர். அன்றைய நிலையில், தமிழாசிரியர்கள் தாங்கள் கற்பித்த பாடத்தின் பாடப்பொருளைத் தங்கள் கண்ணோட்டத்தில் விளக்கியதும் மாணவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு மனனம் செய்து கற்றதும் பரவலாகக் காணப்பட்டது.

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, 1981ல் வெளியிட்ட முதல் பாடத்திட்டம் ‘தமிழ் இரண்டாம் மொழி: உயர்நிலை வகுப்புகள் 1முதல் 4வரை (விரைவு/வழக்க உயர்நிலைக் கல்வி) என்பதாகும். அதில் எவை கற்பிக்கப்பட வேண்டும் என்று பட்டியலிடப்பட்டிருந்தாலும் அவை எப்படிக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்கான விரிவான விளக்கங்கள் இல்லை. எடுத்துக்காட்டிற்கு, சிறு நிகழ்ச்சியையோ, கதையையோ, கதைப் பகுதியையோ படித்த பின்னர் மாணவர்களை நாடக வடிவத்தில் நடிக்கவைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நாடக உத்திகளின்வழி மொழிகற்பித்தலுக்கான முறைகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படவில்லை.

அன்று வாசிப்புப் பாடத்தின்போது மாணவர்கள் அகராதியைப் பயன்படுத்தி அருஞ்சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருள்கொள்ளுவதற்கான பயிற்சிகளை ஆசிரியர்-

கள் வழங்கினர். மாணவர்களின் எழுத்துப்பிழைகளைக் களையும் நோக்கத்தில் சொல்வ-தெழுதுதல் பயிற்சிகள் நடத்தப்பட்டன. கட்டுரைப் பாடங்களின்போது மாணவர்கள் சொந்த வாக்கியங்களில் எழுதுவதற்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தொடக்கத்தில் மாணவர்கள் சிறுசிறு வாக்கியங்களை எழுத ஊக்குவிக்கப்பட்டனர். அதோடு, கட்டுரை எழுதுவதற்கு முன்னோடியாக வாய்மொழிக் கட்டுரை அமையவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. அன்றைய பாடத்திட்டம், இலக்கணத்திற்கும் மொழிப்பயிற்சிகளுக்கும் முக்கியத்துவம் அளித்தது. தமிழாசிரியர் விதிவிளக்க முறையின் அடிப்படையில் இலக்கணத்தைக் கற்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பாடத்திட்டம் முன்மொழிந்த பயிற்றுமுறைகளை அடியொற்றி, சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், உயர்நிலைப்பள்ளிகளுக்கான பாடநூல் வரிசையைத் 'தமிழ்' என்னும் பெயரில் தயாரித்து வெளியிட்டது. அப்போது, பாடநூல், பயிற்சி-நூல்களோடு ஆசிரியர் கையேடும் முதன்முறையாக வெளியீடு கண்டது. ஆசிரியர் கையேட்டில் பயிற்றுமுறைகள் பற்றிய வழிகாட்டுக் குறிப்புகள் மேலோட்டமாக அமைந்திருந்தாலும் அவை சார்ந்துள்ள கோட்பாடுகள் பற்றிய தகவல்கள் விளக்கப்-பட்டிருக்கவில்லை. இருப்பினும், தமிழாசிரியர்கள் தாங்கள் அறிந்து வைத்துள்ள பயிற்று-முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. திறன் படைத்த தமிழாசிரியர்களுள் சிலர் தாங்கள் நடத்திய பள்ளிசார் பாட ஆய்வுகளை 1980களின்போது கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் படைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்விக் கழகத்தில் பணியாற்றிய விரிவுரையாளர் அமரர் திரு. நா. கோவிந்தசாமி அவர்கள் மேலைநாட்டுக் கல்வியாளர்கள் ஆய்வுபூர்வமாக முன்வைத்த பயிற்றுமுறை-களைத் 1980களில் தமிழ்மொழிக்கு அறிமுகம் செய்துவந்தார். அன்னாரின் அரிய முயற்சியின் பயனால் சிங்கப்பூர்த் தமிழ்மொழிக்கான பயிற்றுமுறையின் தரம் புதிய மேம்-பாட்டைக் கண்டது. எடுத்துக்காட்டிற்கு, நெடுங்காலமாகத் தமிழ்மொழி கற்பித்தலில் வாய்விட்டுப் படித்தல் மட்டுமே கவனம் செலுத்திக் கற்பிக்கப்பட்டு வந்தது. கென்னத் குட்மன் (Kenneth Goodman) என்னும் அமெரிக்க மொழியியலாளரின் 'வாய்க்குள் படித்தல்' என்னும் வாசிப்பு முறை பற்றிய கோட்பாட்டினைத் திரு. நா. கோவிந்தசாமி தமிழுக்குத் அறிமுகப்படுத்தினார்.

**பயிற்றுமுறைகள் (1990முதல் 2010வரை)**

தமிழ்மொழிப் பாடத்திட்டம் 1990களுக்குப் பின்னர், ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்-திறன் அணுகுமுறையை வலியுறுத்தியமையால் பயிற்றுமுறைகளும் அதற்கேற்றவாறு அமைந்தன. சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவுப் பிரிவு, உயர்நிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை 1993ல் வெளியிட்டது. மாணவர்கள் தமிழைப் பிழையறப் பேசுவதும் எழுதுவதும், வெவ்வேறு கருத்துப்பரிமாற்றச் சூழல்களில் தக்கவாறு செயல்படும் திறனும் முக்கியம் என அப்பாடத்திட்டம் வலியுறுத்தியது.

அக்காலக்கட்டத்தில் தமிழாசிரியர்கள் வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்-வளர்ச்சிக்குப் (கேட்டலும் பேசுதலும்) பல்வேறு பயிற்றுமுறைகளைக் கையாண்டனர். எடுத்துக்காட்டிற்கு, தகவல் பரிமாற்ற விளையாட்டுகள், அமைப்பு விளையாட்டுகள், பாவனை நடிப்பு, ஊகமுன்னறிவு விளையாட்டுகள், சிக்கலுக்குத் தீர்வு காணல், செயல்-திட்டங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வாசித்தலையும் வாசித்தல் கருத்தறிதலையும் கற்பிக்கப் பாத்திரமேற்று நடித்தல், படித்த கதைக்குச் சுயமாக முடிவை எழுதுதல், தனிநிலை–இணைநிலை–குழுநிலை–வகுப்புநிலை வாசிப்பு, முன்மாதிரி வாசிப்பு, கலந்து கிடக்கும் கதைப் பனுவலின் பத்திகளை வரிசைப்படுத்துதல், செய்தித் தலைப்புகளையும் செய்திகளையும் இணைத்தல், முன்னுரைக்கும் நடவடிக்கைகள், சொந்தக் கருத்துத் தெரிவித்தல், பனுவலையொட்டிக் கேள்விகள் தயாரித்தல் போன்ற பயிற்றுமுறைகளைத் தமிழாசிரியர்கள் கையாண்டனர்.

எழுத்துக்கூட்டலையும் சொல்வளப் பெருக்கத்தையும் கற்பிக்கும் நோக்கத்தில் எழுத்துக்கூட்டல் விளையாட்டுகளைத் தமிழாசிரியர்கள் பயன்படுத்தினர். எடுத்துக்-காட்டிற்கு, சொற்கள் உருவாக்குதல், சொல்லேணி, சொற்சங்கிலிகள் அமைத்தல், சொல்லுடன் பொருளை இணைத்தல், சொற்பொருள் விளையாட்டுகளான சொற்பொருள் புதிர், விடுகதை போன்ற பயிற்றுமுறைகளைக் கையாண்டனர். அப்பாடத்திட்டத்தை அடியொற்றிச் சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் தயாரித்து வெளியிட்ட பயிற்றுகருவிகளான: தமிழ் மாலை, தமிழ் அமுது, பழகு தமிழ் போன்றவையாகும். அக்காலக்கட்டத்தில் தமிழாசிரியர்கள் வகுப்பறைகளில் ஒளியூடுருவிக் கருவியை வெகுவாகப் பயன்படுத்திக் கற்பித்தனர்.

தேசியக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. நா. கோவிந்தசாமி அவர்கள் தொடர்ந்து 1990களிலும்புதிய பயிற்று முறைகளைத் தமிழ்மொழிக்கு அறிமுகம் செய்து வந்தார். எடுத்துக்காட்டிற்கு, செய்முறைக் கட்டுரை, சிந்தனைத் திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். முனைவர் சுப. திண்ணப்பன் அவர்கள் 1993ல் கற்பித்தல் கோட்பாடுகள் பற்றிய ஒரு விரிவான கட்டுரையை உலகத் தமிழ்க் கல்வி மையத்தின் தொகுப்பில் வெளியிட்டிருந்தார். இருப்பினும், கற்பித்தல் கோட்பாடுகளைப் பயிற்றுமுறைகளோடு தொடர்புபடுத்தும் சிந்தனையும் போக்கும் 1993ல் வெளிவந்த பாடத்திட்டத்தில் காண முடியவில்லை.

சிங்கப்பூர்க் கல்வி வரலாற்றில் 1997ல் சிந்திக்கும் பள்ளிகள் கற்கும் நாடு என்னும் திட்டம் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அது தேசியக் கல்வி, சிந்தித்தல் திறன், தகவல் தொழில்நுட்பப் (Information Technology) பயன்பாடு ஆகியனவற்றைப் பாடத்தோடு ஒருங்கிணைத்துக் கற்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. அக்காலக்கட்டம் முதல் கற்றல் கற்பித்தல் என்பது மாணவரை மையமாகக்கொண்டு செயல்படத் தொடங்கியது. அம்மாற்றங்களை உள்வாங்கும் நோக்கத்தில், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு 2002ல் உயர்நிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை உருவாக்கியது. அப்பாடத்திட்டம் 1993ல் வெளிவந்த பாடத்திட்டத்தை அடியொற்றிக் கருத்துப்பரிமாற்றத் திறன்வளர்ச்சிக்கு முக்கியத்துவம்

அளித்தது.அப்புதிய பாடத்திட்டத்தைத் தொடர்ந்து, 2002முதல் குறிஞ்சி (விரைவு), முல்லை (வழக்கம்–ஏட்டுக்கல்வி), மருதம் (வழக்கம்-தொழில்நுட்பம்), நெய்தல் (உயர்தமிழ்) ஆகிய பெயர்களில் உயர்நிலைக்கான பயிற்றுகருவிகள் வெளிவந்தன.

தமிழாசிரியர்கள் கருத்துப்பரிமாற்ற நுண்திறன்களை வளர்க்கும் நோக்கத்தில் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புடைய சூழல்களுக்கு முக்கியத்துவம் அளித்துக் கற்பித்தனர். அத்திறன்களை வளர்க்கக் கூடிக்கற்றல் அணுகுமுறை பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. எடுத்துக்காட்டிற்கு, ஆசிரியர் கையேட்டில், வரிசை வட்ட மேசை, அறிவு வட்டம், வட்டத்தின் உள்ளே-வெளியே, மூன்று படிநிலைப் பேட்டி போன்ற பயிற்றுமுறைகள் கற்பித்தலின்போது பயன்படுத்தப்பட்டன. பிற பயிற்றுமுறைகளான சொற்சிதறல், கருத்துதிர்ப்பு, சிந்தனை வரைபடம், ஸ்கேம்பர் உத்தி போன்றவையும் கற்பித்தலின்போது பயன்படுத்தப்பட்டன. அதோடு, பயன்பாட்டு இலக்கணம் விதிவரு-முறையின் அடிப்படையில் ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டது.

தமிழாசிரியர்களுள் பலரும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பிப்பதில் ஆர்வங்காட்டினர். பல்வேறு ஒளிவட்டுகளையும், மென்பொருள்களையும், இணையத்தை-யும் பயன்படுத்திக் கற்பித்ததோடு, சக ஆசிரியர்களுடன் பயிலரங்குகள், மாநாடுகள்வழித் தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர். சிங்கப்பூர்க் கல்வி அமைச்சும், தேசியக் கல்விக் கழகமும், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் தமிழாசிரியர்க்கான பணியிடைப் பயிற்சி மேம்பாடு குறித்துப் பல பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் அவ்வப்போது நடத்தி வந்தன. அதோடு, அவை பயிற்றுமுறைகள் தொடர்பான கட்டுரைகளும் ஆய்வு-களும் அடங்கிய பல தொகுப்பு நூல்களையும் வெளியிட்டன. இவ்வரிய முயற்சி இன்றைக்கும் தொடர்கிறது.

தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை (2005), பேச்சுத்தமிழ்ப் புழக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்துக் கற்பிக்குமாறு பரிந்துரைத்தது. தமிழாசிரியர்கள் எழுத்துத்தமிழை விடுத்துப் பேச்சுத்தமிழைப் பயிற்றுவிப்புக்குப் பயன்-படுத்தும் மொழியாகக் கையாளத் தலைப்பட்டனர். பள்ளியிலும் பள்ளிக்கு வெளியிலும் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் உரையாடும் பொருட்டுத் தமிழாசிரியர்கள் பல்வேறு பேச்சு நடவடிக்கைகளை வகுப்புகளில் நடத்தினர். சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, வேறு-படுத்தப்பட்ட கற்பித்தல் முறைக்கு முக்கியத்துவம் அளித்து, தமிழாசிரியர்களுக்குப் பல்வேறு பயிற்சிகளையும் வழங்கியது.

**பயிற்று முறை (2011முதல் 2015வரை)**

தாய்மொழிகளுக்கான மறு ஆய்வு 2010ன் பரிந்துரைகளை அடியொற்றி, உயர்நிலைக்கான புதிய தமிழ்மொழிப் பாடத்திட்டத்தைச் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு 2011ல் வெளியிட்டது. நடப்பில் உள்ள இப்பாடத்திட்டம், தற்போதைய கல்விச் சிந்தனைகளையும் நவீன பயிற்றுமுறைகளையும் கருத்திற்கொண்டு உருவாக்கப்-பட்டுள்ளது. தமிழ்க் குடும்பங்களில் ஆங்கிலமொழிப் புழக்கம் அதிகரித்து வருவதால், தமிழாசிரியர்கள் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்-

கின்றனர். கூடிக்கற்றல் அமைப்புமுறைகள், பன்முனைப்பாங்கு அணுகுமுறை, பிரச்சினை அடிப்படையிலான கற்றல், நாடகம்வழிக் கற்றல், படைப்பாக்க மேம்பாட்டிற்கான கற்பித்தல் போன்ற பயிற்றுமுறைகளைத் தமிழாசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். இப்பயிற்றுமுறைகள் பற்றிய விளக்கங்களும் எடுத்துக்காட்டுப் பாடங்களும் பாடத்திட்ட வழிகாட்டு (2011) தொகுப்பில் வழங்கப்பட்டிருக்கின்றன.

தமிழாசிரியர்கள் மொழித்திறன்களோடு சிந்தனைத்திறன்கள், 21ம் நூற்றாண்டுத் திறன்கள், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்திறன் போன்றவற்றை ஒருங்கிணைத்துக் கற்பிக்கின்றனர். சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் முயற்சியில் தாய்மொழி கற்றல் கற்பித்தலுக்கு உதவும் பொருட்டு இருவழித் தொடர்புத்தளம் என்னும் பெயரில் இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. நம் தமிழாசிரியர்கள் இதனைப் பயன்படுத்தித் தமிழ்மொழியைச் சுவையூட்டும் வகையில் கற்பிக்கின்றனர். வகுப்புகளுக்கு அப்பால் சமூக ஊடகங்களையும், இணையத்தையும், கைபேசிகளையும் பயன்படுத்தித் தமிழ் கற்பதற்கான பல வாய்ப்புகளைத் தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றனர். அடுத்து, முழுமையான மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து கற்பித்தலியலையும் மதிப்பீட்டையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்கின்றனர். பாடக் கற்பித்தலின்போது கேள்வி கேட்டல், கருத்துத்தெரிவிப்பு வழங்குதல், செயல்திறன் மதிப்பீட்டை நடத்துதல் போன்ற மதிப்பீட்டு முறைகளையும், மதிப்பீட்டுக் கருவிகளான தகுதிநிலை விளக்கக்குறிப்புகள், சரிபார்ப்புப் பட்டியல் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர்.

சிங்கப்பூர்க்கல்வி அமைச்சின் ஏற்பாட்டில்,தமிழாசிரியர்கள்புதிய பயிற்றுமுறைகள் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுவதற்கு மலேசியா, தமிழகம் போன்ற வெளிநாடுகளுக்குக் கல்விப் பயணங்கள் மேற்கொள்கின்றனர். அங்குக் கற்றுக்கொண்ட புதிய பயிற்றுமுறைகளைத் தங்கள் பள்ளிகளில் செயல்படுத்திப் பார்த்து, பின்னர்த் தேசியநிலையில் மற்றத் தமிழாசிரியர்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து சிறந்த தமிழறிஞர்களைச் சிங்கப்பூர்க்கு வரவழைத்துப் பல பயிற்றுமுறைகள் பற்றிக் கற்றுக்கொள்கின்றனர்.

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகம் 2010முதல் புதிய பயிற்றுமுறைகளைப் பல்வேறு பயிலரங்குகளின்வழி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கு அறிமுகம்செய்து வருகிறது. எடுத்துக்காட்டிற்கு, 2012-13ல் பதினேழு மூத்த தமிழாசிரியர்கள் ஒன்றரை ஆண்டுக்காலத்திற்கு நீடித்த பல்லடுக்குப் பயிற்சியில் ஈடுபட்டு, அகன்ற வாசிப்புத் திட்டம் குறித்து நான்கு செயலாய்வுகளை மேற்கொண்டனர். தங்கள் செயலாய்வுக் கட்டுரைகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் படைத்தனர். கடந்த 2013-14 ஆகிய ஆண்டுகளில் ஏழு மூத்த தமிழாசிரியர்கள், பணித்திறன் மேம்பாட்டகம் அடையாளங்கண்ட ஏழு கற்பித்தல் கோட்பாடுகள் பற்றிய விரிவான ஆய்வுக் கட்டுரைகளையும் மாதிரிப் பாடங்களையும் எழுதினர். தொகுப்பில் அடங்கிய கட்டுரைகள் யாவும், தமிழாசிரியர்கள் பயிற்றுமுறைகளைத் திறம்படக் கையாளத் துணைபுரியும்.

**முடிவுரை**

தமிழ்மொழி பயிற்றுமுறைகளின் தரம் காலந்தோறும் மேம்பட்டு வந்துள்ளது. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலைப் பொறுத்தவரை உலக அரங்கில் சிங்கப்பூர்க்கு என்று தனி மதிப்பும் இடமும் உண்டு. கற்றல் சுவைக்க வேண்டுமானால் தமிழாசிரியர்கள் பலதரப்பட்ட பயிற்றுமுறைகளைப் பாடத்தன்மைக்கேற்பத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமுறப் பயன்படுத்த வேண்டும். அதோடு, தாங்கள் பயன்படுத்துகின்ற பயிற்றுமுறைகளுக்கான கல்வியியல் கோட்பாடுகளின் பின்னணியை அறிந்துவைத்திருப்பதன் மூலம் கற்பித்தல் செயல்பாடு-களைத் தன்னம்பிக்கையுடனும் தெளிவுடனும் கையாளலாம். அதோடு, தமிழாசிரியர்கள் தமிழ் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாகச் செய்வது அவசியம் (இராமையா, 2000). தமிழ்மொழி கற்பித்தலின் தரநிலை புதிய உச்சங்களைத் தொட வேண்டுமானால், ஆய்வுலகில் குறிப்பிடப்படும் புதிய பயிற்றுமுறைகளைத் தமிழ்மொழி விரைந்து உள்வாங்க வேண்டியது காலத்தின் அவசியம்.

**பார்வையிட்ட நூல்கள்**


தமிழ் இரண்டாம் மொழி: உயர்நிலை வகுப்புகள் 1முதல் 4வரை (விரைவு/வழக்க உயர்நிலைக் கல்வி) (1981). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு.

சுந்தரராசு, பொன்(1984). 1984-ல் தமிழ் கல்வியமைச்சு தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகள். தொகுப்பாசிரியர்: தேன்மொழி சோமசுந்தரம். 3வது தமிழ் இளையர் ஆய்வரங்கம். தமிழர் பேரவை இளையர் மன்றம்.

திண்ணப்பன்,சுப. (1993). கற்பித்தலியல் கோட்பாடுகளும் மொழிகற்பித்தலும். தமிழ் கற்றல். தொகுதி 1.1, அரையாண்டிதழ் (சூலை). உலகத் தமிழ்க் கல்வி மையம்.

உயர்நிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் (1993).சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு. தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை (2005).சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு.

இராமையா, கா. (2000). சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாக்குவோம். தொகுப்பாசிரியர்கள்: டாக்டர் கா இராமையா & டாக்டர் சீதாலட்சுமி. தமிழ்க் கலை அச்சகம். சிங்கப்பூர்.

உயர்நிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் (2002). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு.

தாய்மொழிகளுக்கான மறு ஆய்வுக் குழு அறிக்கை (2010).சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு.

உயர்நிலைக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் (2011). சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு.

# தொடக்கக்கல்லூரிக்கான பாடத்திட்டமும் பாட வளங்களும்

**ம. ஞானசேகரன்**
**முனைவர் பொன். சசிகுமார்**
தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

**முன்னுரை**

இன்றைக்குச் சிங்கப்பூரில் தமிழ்மொழி அரசாங்கத்தின் அங்கீகாரத்துவ மொழிகளில் ஒன்றாகவும் வாழும் மொழியாகவும் இருந்துவருகிறது. சிங்கப்பூரின் துரித வளர்ச்சி மக்களின் வாழ்க்கை முறைகளில் மட்டுமன்றி அவர்கள் பேசும் மொழிச் சூழலிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும். சிங்கப்பூரில் தமிழ்மொழியின் நிலை என்று பார்த்தால் அதனை இரு நிலைகளில் காணலாம். ஒன்று சிங்கப்பூரில் தமிழ்வழிக் கல்வி. இரண்டாவது, சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி. முன்னையது தமிழ்மொழி பயிற்று மொழியாக இருந்த நிலையையும் பின்னையது ஆங்கிலம் பயிற்றுமொழியாக மாறிய பின்னர் தமிழ்மொழி தாய்மொழி நிலையில் கற்பிக்கப்படுவதையும் குறிக்கும்.

தமிழ்வழிக் கல்விப் பள்ளிகள் தமிழ்ப் பள்ளிகள் என அழைக்கப்பட்டன. 1834ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பதினெட்டே மாணவர்களைக் கொண்டு சிங்கப்பூர் இலவசப் பள்ளி, முதல் தமிழ் வகுப்பை நடத்தியது. சிங்கப்பூரில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் வரலாறு இங்கிருந்தே தொடங்கியிருக்க வேண்டும். சிங்கப்பூரின் தமிழ்ப்பள்ளிகளைப் பற்றி ஆய்வு செய்துள்ள ப. சிவசாமி என்பார் 26 பள்ளிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். 1960ஆம் ஆண்டு உயர்நிலை அளவிலான தமிழ்ப்பள்ளியாக உமறுப்புலவர் தமிழ்ப்பள்ளி உருவானது. சிங்கப்பூரின் பொருளியலில் ஏற்பட்ட துரிதமான வளர்ச்சியும் அதன் காரணமாக ஏற்பட்ட சமூக மாற்றமும் ஆங்கிலப் பள்ளிகளின் தோற்றத்திற்கும் தமிழ்ப் பள்ளிகளின் மறைவுக்கும் ஒருசேர வழி வகுத்தன என்றே கூறலாம். 1951இல் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு பாடமாக இடம்பெறத் தொடங்கியது.

**புகுமுக வகுப்புகளில் தமிழ்மொழி**

சிங்கப்பூரில் 1967ஆம் ஆண்டு வரை, அரசாங்கப் பள்ளிகள் எவற்றிலும் புகுமுக வகுப்பு என்ற பெயரில் தமிழ்மொழி கற்றுக்கொடுக்கப்படவில்லை. புகுமுக வகுப்புகளில் தமிழ்மொழி தொடங்கப்பட்டது மிகவும் பிற்பட்ட காலப் பகுதியில்தான் என்றே கூறவேண்டும். ஆயினும் 1960களில் தொடக்கத்திலிருந்து திரு ஸ்டீபன் மாணிக்கம் எனும் மூத்த தமிழாசிரியர், முதியோர் கல்விக் கழகத்தின் வகுப்புகளில் ஒன்றாக, புகுமுகக் கல்லூரிப் படிப்பு மேற்கொள்ளும் தனியார் மாணவர்களுக்கான வகுப்பினையும் நடத்தினார். அது மூன்று மணி நேர வகுப்பாக ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நேரங்களில் நடைபெற்றது.

1966ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புத் தமிழ்மொழிப் பயிற்சி என்பது ஓராண்டுப் பயிற்சியாகவே இருந்தது. ஆனால் பள்ளிக்கூடங்களிலிருந்து சென்ற மாணவர்கள், அதே பாடத்தை ஈராண்டுகளுக்குப் பயின்றனர். பாடத்திட்டத்திலும் தமிழ் என்பது முதல்மொழி நிலையில் பயிற்றுவிக்கப்பட்டது. அன்றைய காலக்கட்டத்தில் இன்றிருப்பது போல அது இரண்டாவது மொழியென அழைக்கப்படவில்லை.

பள்ளிக்கூடங்களில் முழுநேர மாணவர்களாய் இருந்தவர்கள் முதல்வர்களின் அனுமதி பெற்று திரு ஸ்டீபன் மாணிக்கம் நடத்தி வந்த முதியோர் கல்விக் கழக வகுப்புகளில் ஒன்றான தமிழ்ப் பாட வகுப்புகளில் சேர்ந்து பயின்றனர். 1967ஆம் ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை அறுபதைத் தாண்டியதால், ஆசிரியர் திரு. முத்துமாணிக்கம் முதல் ஆண்டு மாணவர்களுக்கும் திரு. ஸ்டீபன் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் பாடம் நடத்தினார்கள்.

1968ஆம் ஆண்டு சிங்கப்பூரின் முதல் தொடக்கக் கல்லூரியான தேசிய தொடக்கக் கல்லூரி நிறுவப்பட்டது. திரு. தம்பிநாதன் அங்குத் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார். தமிழ்மொழியைப் ஒரு பாடமாகப் பயில விரும்பிய மற்ற பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்கள், விக்டோரியா உயர்நிலைப் பள்ளியில் இயங்கிய தமிழ்மொழி நிலையத்தில் பிற்பகலில் நடத்தப்பட்ட வகுப்புகளுக்குச் சென்று பயின்றனர். தேசிய தொடக்கக் கல்லூரியின் துவக்கமும் கல்வி அமைச்சின் கொள்கையும் பள்ளிகளில் நடக்கும் புகுமுக வகுப்புகளில் தமிழ்மொழி ஒரு பாடமாகப் புகுவதற்கு வழிகோலியது. தமிழ்மொழி கற்பிப்பதற்கென்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இன்று பதினேழு தொடக்கக் கல்லூரிகளிலும் தமிழ் ஒரு பாடமாக உள்ளது. இன்று எந்த மாணவரும் வெளியில் சென்று புகுமுக வகுப்பு நிலையிலான தமிழ்மொழியைப் பயிலவேண்டிய தேவை இல்லை. பல்கலைக் கழகங்களில் சேர்வதற்கு இரண்டாம் மொழித் தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்ட பின்னர், தமிழை இரண்டாவது மொழியாகப் பயில்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக் கல்வி தமிழ் இரண்டாம் மொழிப் பாடத்திட்டம் அடையக் கருதும் இலக்கு பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது. "புகுமுக வகுப்பு இரண்டு அல்லது மூன்றாம் நிலையினை முடிக்கும் தருணத்தில் மாணவர்கள் கதை, கட்டுரை, நாடகம், கவிதை ஆகியவற்றைப் படித்தறிவதற்கும், அவற்றிலுள்ள சொல் நயம், பொருள் நயம் ஆகியவற்றைச் சுவைத்து உணர்வதற்கும் அகராதி, கலைக்களஞ்சியம் ஆகிய-வற்றைப் பயன்படுத்துவதற்கும், கடிதம், கதை, கட்டுரை, செய்திக் குறிப்பு ஆகியவற்றை எழுதுவதற்கும் தேவையான திறன்களைப் பெற்றிருக்க வேண்டும்." இதனை மாணவர்கள் எந்த அளவு அடைந்துள்ளார்கள் என்பதைச் சோதித்து அறிவதற்காக நடத்தப்படுவதே பொதுக்கல்விச் சான்றிதழ் மேனிலைத் தமிழ் இரண்டாம் மொழித் தேர்வு ஆகும். மேல்நிலை தமிழ் இரண்டாம் மொழித் தேர்வு என்பது இரண்டு தாள்களை உள்ளடக்கியதாகும். மேல்நிலை தமிழ் இரண்டாம் மொழித் தேர்வினைச் சாதாரண நிலையில் எழுதுவோர் தாள் 1ஐ மட்டும் எடுத்தால் போதும். ஆனால், மேல்நிலைத் தமிழ்

இரண்டாம் மொழித் தேர்வினை மேல்நிலையில் எடுத்துப் படிப்போர் இவ்விரண்டு தாள்களையும் எடுக்கவேண்டும்.

இன்று 17 தொடக்கக் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பு மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகப் பயிலுகின்றனர். முன்பு போல, எந்த மாணவரும் வெளியில் சென்று புகுமுக வகுப்புத் தமிழைப் பயில வேண்டிய தேவை இன்று இல்லை. ஆனால் பாடத்திட்டத்தில் தமிழை இரண்டாவது மொழியென அழைக்கிறோம்.

*“புகுமுகக் கல்விக் கலைத் திட்டத்தில் தமிழ் முதல்மொழித் தேர்வுப் பாடமாக இடம்பெற்றிருந்தது. இத்தேர்வுப் பாடம் இரண்டு தாள்களைக் கொண்டது. இதில் இரண்டாம் தாள் இலக்கியப் பாடங்களைச் சோதிக்கும் ஒன்றாகும். இத்தேர்வுப் பாடத்தைப் பொதுவாகப் புகுமுக வகுப்பு மாணவர்கள் எடுப்பதற்குக் கல்லூரி முதல்வர்கள் அனுமதி வழங்குவதில்லை. தனியாராகத் தேர்வு எழுதுபவர்களே இதனை எழுதுகின்றனர்.*

*தொடக்கத்தில் புகுமுகக் கல்விக் கலைத்திட்டத்தில் தனியொரு பாடமாகத் தமிழ் இலக்கியம் இடம்பெறவில்லை. மேல்நிலையில் தமிழை இரண்டாம் மொழியாக ஒருவர் எடுக்க விரும்பினால் மேல் சாதாரண நிலைக்குரிய தாள் ஒன்றுடன் இலக்கியத் தாளான இரண்டையும் சேர்த்து எடுக்க வேண்டும். இத்தாளில் சிறுகதை, கவிதை, புதினம், நாடகம் ஆகிய நான்கு நூல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விகள் இடம்பெறும்.*

*தமிழ்மொழியைப் புகுமுக வகுப்புகளில் இரண்டாம் மொழியாக மேல்நிலையில் எடுத்துப் பயிலும் வாய்ப்பு இருந்த போதிலும் கல்லூரிகளிலும் உயர்நிலை புகுமுக வகுப்பு நிலையங்களிலும் பெரும்பாலோர் மேல் சாதாரண நிலையிலேயே தமிழைப் பயின்று வருகின்றனர்.*

*இதற்கான காரணங்கள்,*

*1) தொடர்ந்து மேற்கல்வி கற்பதற்கேற்பப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவு இல்லாதது. தமிழ் இலக்கியத்திற்குப் பதில் வேறொரு பாடத்தைத் தெரிவு செய்து படித்தால் உயர்கல்வி கற்பதற்கு அது துணையாக இருப்பதோடு வேலை வாய்ப்புகளும் அதிகமாக இருக்கும் என்ற எண்ணம்.*

*2) உயர்நிலைப் பள்ளிகளில் இலக்கியத்தை ஒரு பாடமாக எடுத்துப் படிக்காத மாணவர்களுக்குத் தங்களால் படிக்க இயலுமா என்ற அச்சம்.*

*இருப்பினும் இன்று (1988) தொடக்கக் கல்லூரிகளில் தமிழை இரண்டாம் மொழியாக மேல்நிலையில் சுமார் 100க்கு மேற்பட்ட மாணவர்கள் எடுத்துப் படித்து வருகின்றனர்.”*

(தமிழ்மொழிச் சிறப்பு ஆய்வாளர் திரு. டி.டி. சாம்ராஜ் அவர்களின் சிறப்புரை. பல்கலைக்கழகப் புகுமு வகுப்புகளுக்கான தமிழ்மொழி இலக்கியக் கருத்தரங்கு, 15-3-1988)

**பாடத்திட்டம் (பல்கலைக்கழகப் புகுமுநிலை)**

தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2011 & 2014
பல்கலைக்கழகப் புகுமுநிலை
உயர்தரம் 1 தமிழ்மொழி 2012
தமிழ்மொழி 'B' 2012
உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் 2014
உயர்தரம் 3 தமிழ்மொழி, இலக்கியம் 2014

"சரியானவற்றிற்குத் துணைநிற்கும் துணிவைப் பெற்றிருத்தல்; இன்னல்கள் ஏற்படும்போது அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ளுதல்; பிற கலாச்சாரங்களை அரவணைத்துக்கொண்டு செயற்படுவதோடு சமூகப் பொறுப்புணர்வையும் பெற்றிருத்தல்; புத்தாக்கச் சிந்தனையும் தொழில்முனைப்பும் பெற்றிருத்தல்; நுட்பமாக ஆய்ந்தறிந்து சிந்திக்கும் திறன் பெற்றிருப்பதோடு பிறர் மனங்கொள்ளும்படிப் பேசும் திறனையும் பெற்றிருத்தல்; உன்னதத்தை அடையும் குறிக்கோளோடு செயற்படுதல்; ஆரோக்கிய வாழ்க்கைமுறையைப் பின்பற்றுவதோடு முருகியல் உணர்வையும் பெற்றிருத்தல்; சிங்கப்பூரர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்வதோடு உலக அரங்கில் சிங்கப்பூரின் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ளுதல்." - இவையெல்லாம் பல்கலைக்கழகப் புகுமுகநிலைக் கல்வியை முடிக்கும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்-படுவனவாகத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2014 குறிப்பிடுகிறது.

தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்தின் பணிச்சட்டம் (Tamil Language Curriculum Framework) 2005 தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக்குழுவும், 2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழுவும் அறிவித்த பரிந்துரைகளை அடியொற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பணிச்சட்டத்தில் பல்கலைக்கழகப் புகுமுகநிலையில் மாணவர்களின் இலக்காகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது.

"மாணவர்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் பொருத்தமான பனுவல்களைக் கேட்டும் படித்தும் புரிந்துகொள்வர்; சரளமாக உரையாடுவர்; கருத்துகளைப் பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் வெளிப்படுத்துவர்; உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள் பற்றிக் கருத்துரைப்பர்; கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், முதலியவற்றைப் படிப்பர்; பல்வகையான கட்டுரைகள் எழுதுவர்."

இயல் 2இல் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கான நோக்கங்கள் வரையறுக்கப்-பட்டுள்ளன.
"உலகளவில் மொழி கற்றலின் சூழல்கள் மாறிவருகின்றன. அதற்கேற்பத் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் நோக்கங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. நம் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் மூன்று நோக்கங்களைக்கொண்டு அமைந்துள்ளது. அவற்றின்வழி நாம் தமிழ்மொழியைத் திறம்படப் பயன்படுத்தும் மாணவர்களை உருவாக்க முடியும்" என்பனவாகும்.

பல்கலைக்கழகப் புகுமுகநிலைத் தமிழ்மொழிப் பாடத்திட்டமும் கற்றல் விளைவுகளும் பற்றி இயல் 3 குறிப்பிடுகிறது. மேலும், மாணவர்கள் தங்கள் மொழித்திறனுக்கும் தேவைக்கும் ஏற்பப் பொருத்தமான பாடநிலையைத் தேர்ந்தெடுத்துப் படிக்கப் பல்கலைக்-கழகப் புகுமுக வகுப்புப் பாடத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. அவையாவன:

- உயர்தரம் 1 தமிழ்மொழி (Higher 1 TL)
- உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் (Higher 2 TLL)
- உயர்தரம் 3 தமிழ்மொழி, இலக்கியம் (Higher 3 TLL)
- தமிழ்மொழி ‘B’ (TL ‘B’)

### உயர்தரம் 1 தமிழ்மொழி (H1TL)

இது பொதுக் கல்விச் சான்றிதழ் மேல்நிலைத் தேர்வுக்குரிய உயர்தரம்-1 நிலைக்கான பாடமாகும். மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் கற்றுத்தேர்ந்த மொழித்திறன்களில் கூடுதல் பயிற்சியளித்து அவர்களின் மொழியறிவை மேலும் வளர்க்கும் வகையில் இந்தப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கற்றலில் ஆர்வநிலையை அதிகரிக்கவும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனை மேம்படுத்தவும் உதவும் வகையில் இரண்டு விருப்பப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் மாணவர்கள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயிலலாம்.

### உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் (H2TLL)

இப்பாடம் பொதுக் கல்விச் சான்றிதழ் மேல்நிலைத் தேர்வுக்குரிய உயர்தரம்-2 நிலைக்கான பாடமாகும். இது மொழிப் பகுதியையும் இலக்கியப் பகுதியையும் உள்ளடக்கியிருக்கிறது. மொழிப் பகுதியில் மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சிக்கு உரிய மொழி நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இலக்கியப் பகுதி மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தை அறிமுகப்படுத்தித் தமிழ் இலக்கிய நூல்களின்பால் ஆர்வத்தைத் தூண்டத் துணைபுரியும்.

### இலக்கியச் சாரல் (இலக்கியத் தொகுப்பு நூல்)

தொடக்கக் கல்லூரியில் உயர்தரம் 2 இலக்கியம் கற்க்கும் மாணவர்களுக்கு ‘இலக்கியச் சாரல்’ என்னும் இலக்கியத் தொகுப்பு நூல் உருவாக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியம் முதலாக இக்கால இலக்கியம் வரை உள்ள படைப்புகளில் தேர்ந்தெடுத்த சில படைப்புகள் இலக்கியச் சாரல் என்னும் நூலில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இந்நூலில் ஐம்பது விழுக்காட்டு அளவு உள்ளூர்ப் படைப்புகளும் இடம்பெற்றுள்ளன. கவிதைகளில் மரபுக்-கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூக் கவிதை ஆகியன தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மாணவர்-களின் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்பச் சிந்தனையைத் தூண்டும் வகையிலான சிறுகதைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைய இளையர்களின் இலக்கிய ரசனைக்கு உகந்த வகையில் படிப்பதற்கும் நடிப்பதற்குமான இரண்டு உள்ளூர் நாடகங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த இலக்கியத் தொகுப்பு நூல் சிங்கப்பூர்த் தேசியக் கலை மன்றமும், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சும் இணைந்து வெளியிட்டுள்ளது. 'இலக்கியச் சாரல்' – விளக்கக் கையேடு தொடக்கக் கல்லூரியில் உயர்தரம் 2 இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் வழிகாட்டியாக 'இலக்கியச் சாரல் – விளக்கக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

## உயர்தரம் 3 தமிழ்மொழி, இலக்கியம் (H3TLL)

உயர்தரம்-3 நிலைக்கான இப்பாடம் பல்கலைக்கழகப் புகுமுகக் கல்வி மாணவர்களுள் உச்சத் தேர்ச்சி பெறும் தகுதியுடைய மாணவர்களுக்குரியது. இந்தப் பாடத்தைப் படிக்க விரும்பும் மாணவர் உயர்தரம்-2 தமிழ்மொழி, இலக்கியப் பாடத்தைப் பயில்பவராக இருக்கவேண்டும். ஏனெனில், இது உயர்தரம்-2 தமிழ்மொழி, இலக்கியப் பாடத்தின் விரிவாகும்.

## தமிழ்மொழி 'B' (TL 'B')

தமிழ்மொழியில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கும் மாணவர்களுக்காகத் தமிழ்மொழி 'B'' பாடத்திட்டம் அமைந்துள்ளது. பொதுக் கல்விச் சாதாரண நிலைத் தேர்வில் தமிழ்மொழி 'B' எழுதிய மாணவர்களே இத்தேர்வு எழுதத் தகுதி பெறுவர். இத்தேர்வுக்கு எவ்வித ஊக்கப் புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது. உயர்தரம்-1 பிரிவினருக்குப் போலவே இப்பிரிவில் பயிலும் மாணவர்களின் தமிழ்மொழி ஆர்வநிலையை அதிகரிக்கவும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனை மேம்படுத்தவும் இரண்டு விருப்பப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயில வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

## தொடர்பு நூல்கள்


கல்வி அமைச்சு. (2005). தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக்குழு அறிக்கை. சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2010). தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல். சிங்கப்பூர்.

பழனிசாமி, கே. (1987). உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946 – 1982. சிங்கப்பூர்.

முத்தையா, சி. (2004), சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தலும் கற்பித்தலோடு தொடர்புடைய பிரச்சினைகளும், 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

கேசவன், ப. (2004), சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கல்வி, 'உலக அரங்கில் தமிழ்' மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை, தேசியப் பல்கலைக்கழகம்,

Curriculum Development Institute of Education. (1988). A Report on Tamil Language (L2) for Secondary Schools (TASS) : January 1983 – December 1988. Singapore.

Ministry of Education. (25 Nov 1996). Establishment of Educational Technology and Curriculum Planning and Development Divisions. Singapore. Retrieved from http://www.moe.gov.sg/media/press/1996/pr03596.htm.

# தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத்திட்டம் (NETP)

**முனைவர் ரா. விமலன்**
தமிழாசிரியர்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

---

**முன்னுரை**

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு தாய்மொழிகளுக்கான பாடக்கலைத்திட்டத்தில் தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத்தையும் (NETP) ஒரு கூறாக இணைத்துள்ளது. சீனம் (CLEP), மலாய் (MLEP) மொழிகளைப் போன்றே தமிழ்மொழிக்கும் இப்பாடத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தை 2012ஆம் ஆண்டு முதல் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பொறுப்பேற்று வெற்றிகரமாக நடத்தி வருகின்றது. இப்பாடத்திட்டம் பற்றியும் இது மாணவர்களுக்கு எவ்வகையில் பயனளித்து வருகின்றது என்பதைப் பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் - தோற்றம்**

கல்வி அமைச்சின் தாய்மொழிகளுக்கான மறுஆய்வுக்குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2011-ஆம் ஆண்டு இந்தச் சிறப்புப் பாடத்திற்கான பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது. உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் 2012ஆம் ஆண்டு இப்பாடத்திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது. தொடக்கமாக, உயர்தமிழ் 1, உயர்தமிழ் 3, தொடக்கக் கல்லூரி 1 ஆகிய மூன்று நிலைகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், 2013ஆம் ஆண்டு முதல் உயர்நிலைப்பள்ளிகளில் உயர்தமிழ் பயிலும் உயர்நிலை ஒன்று முதல் உயர்நிலை நான்கு வரையிலான மாணவர்களுக்கும் தொடக்கக் கல்லூரிகளில் தமிழ், தமிழ் இலக்கியம் (H2) பயிலும் தொடக்கல்லூரி ஒன்று, இரண்டு ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்குமென மொத்தம் ஆறு நிலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இப்பாடம் அறிமுகமாகி, நடத்தப்பெற்று வருகின்றது.

**தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தின் நோக்கம்**

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாட்டுக் கூறுகளில் திறம் படைத்த மாணவர்கள் அவற்றில் மேலும் புலமை பெறவும் ஆழ்ந்து கற்றுப் பாராட்டவும் வேண்டும் என்பதையே இத்தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது. அதனலேயே இப்பாடத்திட்டம் உயர்தமிழ் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே விருப்பப்பாடமாக நடத்தப்பெற்று வருகின்றது.

இருமொழிக் கல்விக்கொள்கையைச் செயல்படுத்தி வரும் நமது நாட்டில், தமிழ்மொழியைப் பொருத்தவரை பள்ளிகளில் உயர்தமிழ்தான் உச்சநிலைக் கல்வியாகத் தமிழ் மாணவர்களுக்கு 2011ஆம் ஆண்டு வரை இருந்து வந்தது. 2012இல் தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் அமலாக்கம் கண்ட பிறகு, இதுவே நமது தமிழ்

மாணவர்களுக்குப் பள்ளிகளில் வழங்கப்பெறும் உச்சநிலைத் தமிழ்மொழிப் பாடமாக அமைந்துள்ளது. இத்தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் ஒரு தேர்வுப்பாடமன்று; இது ஒரு விருப்பப்பாடம் மட்டுமே. மாணவர்கள் பள்ளிகளில் பயிலும் தமிழ்க் கல்வியோடு நின்றுவிடாமல் இன்னும் அதிக அளவில் பலதுறை சார்ந்த அறிவைத் தமிழில் பெறச் செய்வதே இப்பாடத்திட்டத்தின் நோக்கம்.

**பாடத்திட்டம் – ஒரு பார்வை**

இப்பாடத்திட்டத்தில் நடத்தப்பெறும் பாடங்கள் வகுப்பறைக் கல்வியாகவும், அனுபவக் கல்வியாகவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை பின்வரும் கூறுகளை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளன.

| வகுப்பு | பாடம் | கூடுதல் பயிற்சி வகுப்புகள் | கால அளவு |
|---|---|---|---|
| உயர்நிலை 1 முதல் உயர்நிலை 4 வரை | ☞ பேச்சுக்கலை<br>☞ எழுத்துக்கலை<br>☞ ஊடகம்<br>☞ மொழிபெயர்ப்பு<br>☞ இலக்கியம்<br>☞ மரபும் பண்பாடும் | தமிழ்ச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பிற நிகழ்வுகள் | 25 – 30 மணி நேரம் |
| தொடக்கக் கல்லூரி 1 & தொடக்கக் கல்லூரி 2 | ☞ தமிழர் பண்பாடும் நாகரிகமும்<br>☞ ஊடகக் கலை<br>☞ இலக்கியம்<br>☞ அயல்நாட்டு அனுபவக் கல்விப் பயணம் (14 நாட்கள்) | தமிழ்ச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பிற நிகழ்வுகள் | 25 – 30 மணி நேரம் |

தமிழ்மொழியைச் சிறப்பாகப் படித்துவரும் உயர்தமிழ் மாணவர்களுக்கு அதில் தொடர்ந்த ஆர்வத்தையும் ஆழமான அறிவையும் வழங்கும் வகையில் இந்தப் பாடத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அவ்வகையில் இப்பாடமானது தமிழ் மாணவர்களிடம் பயன்மிகு கற்றலையும் திறன்மிகு கற்பித்தலையும் வழங்கும் பொருண்மை மிக்கதாக விளங்கி வருகின்றது.

**பாடப்பொருளுக்கு அப்பாலும் பரந்த அறிவு**

மாணவர்கள் மேற்கண்ட பாடக்கூறுகளைக் கற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் எழுத்தாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுதல், தமிழ்மொழி முகாம்களில் மாணவர் தலைவராகப் பொறுப்பேற்று ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், தமிழ்மொழி மாத நிகழ்வுகளில் பங்கேற்றல், ஆய்வரங்கம் கருத்தரங்கம் போன்றவற்றில் கலந்து-

கொள்ளுதல் எனப் பற்பல நடவடிக்கைகளில் கலந்துகொண்டு பரந்ததொரு தமிழறிவைப் பெறப் பலவாய்ப்புகள் இவ்விருப்பப்பாடத் திட்டத்தில் வழங்கப்படுகின்றன.

தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தின் ஒரு கூறாக, அயல்நாட்டு அனுபவக் கல்விப்பயணம் இருக்கிறது. இது இவ்விருப்பப்பாடத் திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களுக்கு நடத்தப்பெறும் சிறப்புப் பாடங்களோடு தொடர்புடைய ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது. இப்பயணம் வகுப்பறைக்கு அப்பால் சென்று அனுபவக் கல்வி பெறும் வாப்பை வழங்குகின்றது. தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்குச் சென்று தமிழகத்தின் மொழி, பண்பாட்டுச் சூழலை அறிந்து வருவதோடு, வகுப்பறையில் கற்ற இதழியல், ஊடகம் போன்ற துறைகள் பற்றிய பரந்த அறிவினை அந்தந்த நிறுவனங்களுக்கே சென்று நேரடி அனுபவமாய்ப் பெற்று வருகின்றனர்.

**ஆழமான விழுமியங்களும் வலுவான அடித்தளமும்**

தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு ஆழமான விழுமியங்கள் வலுவான அடித்தளத்துடன் கற்பிக்கப்படுகின்றன. எழுத்தறிவோடு எண்ணறிவும் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டமாக இப்பாடத்திட்டம் அமைகின்றது. மரபும் பண்பாடும், நாட்டுப்புறப் பாடல்கள், சங்க இலக்கியங்கள் ஆகிய சிறப்புப் பாடங்களின் மூலம் ஆழமான விழுமியங்கள் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. முக்கியமாகப் புறநானூற்றுப் பாடல்களின் மூலம் பழந்தமிழர்கள் கொண்டிருந்த வீரம், நாட்டுப்பற்று, ஈகைப்பண்பு ஆகிய விழுமியங்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டும் வலுவான அடித்தளங்களாக எடுத்துரைக்கப்பட்டன.

21ஆம் நூற்றாண்டுத் திறன்களில் ஒன்றான படைப்பாக்கத் திறனை வெளிப்படுத்தும் ஊடகச் செய்தி உருவாக்கம் (வானொலி & தொலைக்காட்சி), குறும்படத் தயாரிப்பு போன்றவற்றில் துறைசார்ந்த வல்லுநர்களை அழைத்து மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பங்கேற்ற மாணவர்கள் இத்துறை சார்ந்த புதுப்புது அனுபவங்களைப் பெற்று, வலுவான எதிர்காலத்திற்கு உதவும் அடித்தளத்தை அமைத்துக்கொண்டுள்ளனர்.

**வாழ்விற்கும் வளர்ச்சிக்குமான கற்றல்**

நமது எதிர்காலச் சமுதாயத்ததிற்குப் பேச்சு, எழுத்து, மொழிபெயர்ப்பு, இலக்கியம், ஊடகம் எனப் பல துறைகளிலும் வல்லுனர்கள் தேவை. இந்த எதிர்காலத் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கத்தில் இத்துறைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு மாணவர்களிடம் ஆர்வத்தைத் தூண்டி மேலும் அத்துறைசார்ந்த கல்வியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு எதிர்கால வாழ்வுக்கு வழியமைக்கும் கல்வியாகவும் இதனை நீட்டிப்பதே இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகும். அந்தவகையில் இவ்விருப்பப்பாடம் வாழ்க்கைக்கான கற்றலாகவும் வாழ்க்கையின் நோக்கமறிந்து நல்வாழ்வு பெற, மனம் விரும்பிய கற்றலாகவும் அமைந்து மாணவரின் வாழ்வு சிறக்க வழிகோலுகின்றது.

## அனுபவம் வழிக் கற்கும் அயல்நாட்டுக் கல்விப் பயணம்

தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் அயல்நாட்டு அனுபவக் கல்விப் பயணம் ஒரு கூறாக உள்ளது. இது அனுபவம் வழி. மனம் விரும்பிக் கற்கும் கற்றல் முறையாகும். அதேவேளையில் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான புரிதல், பண்பாட்டுத் தெளிவு போன்ற நிலைகளில் அனுபவங்களை வழங்குகின்றது. மேலும் வாழ்க்கைக்கான கற்றல்; வாழ்க்கையின் நோக்கமறிந்து நல்வாழ்வு பெற, மனம் விரும்பிக் கற்றல் என்னும் அடிப்படையில் இந்தப் பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களில் சிலர் எதிர்காலத்தில் இவற்றில் ஏதேனுமொரு துறையினை வாழ்க்கைத் தொழிலாகவும் ஏற்றுச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் நிறைய உண்டு. அகற்கான அறிமுகத்தையும் அடித்தளத்தையும் ஆர்வத்தையும் இந்த அனுபவக் கல்விப் பயணம் ஏற்படுத்தித் தருகின்றது. முக்கியமாக இளம் எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், நிருபர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள், தமிழாசிரியர்கள் என்று தமிழ்மொழி புழங்கும் எத்தனையோ துறைகளில் இவர்கள் விரும்பிப் பணியாற்றும் நிலை ஏற்படலாம். மேலும், இத்துறைகளிலுள்ள இடப்பற்றாக்குறைகள் நாளை இவர்களால் நீங்கலாம். மேலும், இத்துறைகளில் பெருமளவு வாய்ப்புகள் காத்துக்கிடக்கின்றன. ஆயினும், இத்துறைகளைத் தவிர்த்து மருத்துவம், பொறியியல், சட்டத்துறை என்று இவர்கள் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டு மிளிர்ந்தாலும் தமிழார்வத்தின் காரணத்தால் தமிழ்ச் சமூகத்தினரோடு ஒன்றுவதற்கும் தமிழின் மேன்மைக்குப் பாடுபடுவதற்கும் சற்றும் தயங்கமாட்டார்கள் எனச் சொல்லலாம். தமிழும் தமிழார்வமும் அவர்களைத் தமிழ்ச் சமூகத்தோடு நிச்சயம் ஒன்றிணைக்கும் என்பது தெளிவு.

## முடிவுரை

தாய்மொழிகளுக்கான பாடக்கலைத்திட்டத்தில் விருப்பப்பாடமும் ஒரு கூறாகப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் கல்வி அமைச்சு 2010ஆம் ஆண்டு அறிவித்த தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கையின் பரிந்துரையின்படி, தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் அமலாக்கம் கண்டு வருகின்றது. இப்பாடத் திட்டம் 'வகுப்பறைக்கு அப்பால்' என்னும் இலக்கில் தமிழ்மொழிக் கல்வியை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, அறிவியல் போன்ற பலதுறை அறிவைப் பரந்துபட்ட நோக்கில் வழங்கி அவர்களை எதிர்கால வாழ்வுக்குத் தயார்ப்படுத்துகின்றது. அவ்வகையில் தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு எதிர்கால வாய்ப்புகளுக்கான பல கதவுகள் திறந்துவிடப்படுகின்றன. அவற்றுள் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வாழ்க்கையில் மேம்பாடு காண்பது மாணவர்களின் கைகளில்தான் உள்ளது.

cs ഇ

# பல்கலைக்கழகங்களில் தமிழ்க் கல்வி

**முனைவர் க. ஷண்முகம்**
**பாடத்துறைத் தலைவர் - தமிழ்மொழி, இலக்கியம்**
**சிம் பலைகலைக்கழகம்**

## முன்னுரை

குடியரசில் தமிழ்க் கல்வி நூற்று எண்ணூறு ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்டது என்றால் கேட்பவர் மலைக்கலாம். தமிழகத்திலிருந்து இங்கு 18ஆம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்தவர்கள் தம் மொழியைத் தக்கவைக்கவேண்டும் என்ற ஆர்வத்தினால் தமிழ்க்கல்விக்கு முக்கியத்துவம் தந்தனர். பெரும்பாலோர் கூலி வேலை செய்பவர்களேயானாலும் தம் குறைந்த ஈட்டலிலிருந்தே தமிழ் பள்ளிகளைக் கட்டுவதற்கும் அவற்றைப் பராமரித்து நிர்வகிப்பதற்கும் மனமுவந்து நிதி கொடுத்துதவினர். தமிழர் சாதி, மதம், புலம்பெயர்ந்து வந்த பூர்வீகம், பேச்சு வழக்கு போன்ற பலவற்றால் அன்று வேறுபட்டிருப்பினும் மொழியொன்றால் மட்டுமே ஒன்றுபட்டு இருந்தனர். அதன் விளைவு இங்குச் சுமார் 24 தமிழ்ப் பள்ளிகள் கட்டப்பட்டு, மொழி பேணிவளர்க்கப்பட்டது.

## தமிழுக்குச் சம அந்தஸ்து

1956ஆம் ஆண்டானது இரு நாடுகளுக்கு ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது. ஸ்ரீலங்கா நாட்டில் அவ்வாண்டுதான் தமிழர்களின் மனவுணர்வுக்கும் தமிழுணர்வுக்கும் மதிப்புத் தராமல் ‘சிங்களமொழி மட்டுமே ஆட்சிமொழி’ என அறிவிக்கப்பட்டது. ஆனால், சிங்கப்பூரோ பல இனங்கள், பல மொழிகள், பல நாட்டினர், பல சமயங்கள் கொண்ட நாடாயினும், அதிகாரத்துவ மொழி அந்தஸ்தை நான்கு மொழிகளுக்கு வழங்கி உலக மேடையில் தன்னை உயர்த்திக்கொண்டது. அந்த ஆண்டு வெளியிடப்பட்ட அனைத்துக் கட்சிகளின் (All Party Committee Report) பரிந்துரைகளில் சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகியவை சம அந்தஸ்தை அடைந்தன. 1959இல் லீ குவான் யூவின் தலைமையில் வெற்றிபெற்ற மக்கள் செயல் கட்சி அப்பரிந்துரைகள் அனைத்தையும் செயல்படுத்தின. அந்நிலையில் இன்றும் நீடிக்கிறது.

## தமிழ்ப் பள்ளிகளின் நிலை

அன்று தீவில் அங்கொன்றும் இங்கொன்றுமாயிருந்த தமிழ்ப்பள்ளிகள் அனைத்துமே தொடக்கப்பள்ளிகளே.1கல்வித்தகுதியை மேம்படுத்திக்கொள்ள விரும்பிய மாணவர்களுக்குத் தொடர்ந்து பயில வாய்ப்பில்லாத நிலை அப்போது இருந்தது. இக்குறையைக் களைய கடையநல்லூர் முஸ்லீம் சமூகத்தினர் 1960இல் உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவித்தனர். இப்பள்ளியை உருவாக்கப் பாடுபட்டவர்களுள் இருவர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவர் அ.ந. மைதீன்; மற்றவர் தமிழவேள் கோ. சாரங்கபாணி (கோ.சா). ஆனாலும், 1960இல் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி 1983இல் மூடுவிழா கண்டது. தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனத்தில்கொண்டு ஆங்கிலப்

பள்ளிகளுக்குப் படையெடுத்துச் சென்றதே தமிழ்ப்-பள்ளிகளின் சரிவுக்கும் அவற்றின் அழிவுக்கும் காரணமாகும். இதே நிலை அடுத்தடுத்து மலாய்மொழிப் பள்ளிகளுக்கும், சீனமொழிப் பள்ளிகளுக்கும் ஏற்பட்டது. எனினும், நாட்டுச் சுதந்திரத்திற்குப் பின்னர் அமல்படுத்தப்பட்ட இருமொழிக் கல்விக் கொள்கையால் தாய்மொழிகள் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கணிசமான தமிழ் மாணவர்கள் கற்கும் தொடக்கநிலை, உயர்நிலை, தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் இரண்டாம் மொழியாக இன்றுவரை கற்பிக்கப்பட்டு வருகின்றது. இன்று பாலர்பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. இன்று இரண்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு தமிழில் வழங்கப்படுகிறது.

## ராஃபிள்ஸ் கல்வி நிலையம் (Raffles Institution)

ராஃபிள்சும் டாக்டர் ரோபர்ட் மொரிசன் (Dr Robert Morison) என்பவரும் முறையே மலாய்மொழி, சீனமொழி ஆற்றல் பெற்றவர்கள். அதன் காரணமாக உயர்கல்வி நிலையில் ஒரு நிலையத்தை உருவாக்கி, அதில் இவ்விரு மொழிகளையும் கற்பிக்கப் பேரார்வம் காட்டினர். 1823ஆம் ஆண்டு இதற்கான நிலம் அடையாளம் காணப்பட்டு ராஃபிள்ஸ் அடிக்கல் நாட்டினார். ஆனால், பணி தொடங்குவதற்கு முன்னர் ராபிள்ஸ் இங்கிலாந்துக்கும், டாக்டர் மொரிசன் சீனாவுக்கும் செல்லவேண்டிய நிலை ஏற்படவே கல்வி நிலையம் உருவாவதில் தடங்கல் ஏற்பட்டது. ஆனாலும், பின்னர் அது ஆங்கிலம் கற்பிக்கும் ராஃபிள்ஸ் கல்வி நிலையமாக (Raffles Institution) உருவாகியது. 1834இல் இந்நிலையத்தில்தான் 18 மாணவர்களைக் கொண்ட தமிழ் வகுப்பொன்று முதன்முதலில் தொடங்கப்பட்டது.

## ராஃபிள்ஸ் கல்லூரி (Raffles College)

பிரிட்டிஷார் இம்முயற்சியைத் தொடர்ந்து 1919இல் சிங்கப்பூர் தோற்றுவிக்கப்-பட்டதன் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் உயர்கல்விக்காக ஒரு கல்லூரியைக் கட்டத் தீர்மானித்தனர். 1929ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் தேதி ராஃபிள்ஸ் கல்லூரி (Raffles College) கலைகள், சமூக அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் கல்விக்கூடமாக இயங்கத் தொடங்கியது. கல்லூரியில் கலைப் பிரிவு, அறிவியல் பிரிவு என இரு பிரிவுகள் இருந்தன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர், இராஃபிள்ஸ் கல்லூரி 1905ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஏழாம் எட்வர்ட் மன்னர் மருத்துவக் கல்லூரியுடன் (King Edward VII Medical College) இணைந்து மலாயா மக்களுக்காக ஒரு பல்கலைக்கழகமாக (மலாயாப் பல்கலைக்கழகம்) 1949இல் உருமாறியது. அது அப்போது சிங்கப்பூரில் இயங்கி வந்தது. மலாயா தீபகற்பத்திற்குத் தனியே ஒரு பல்கலைக்கழகம் தேவையில்லை என்று கருத்து அப்போது நிலவியது. அதன் பின்னர் மருத்துவக் கல்லூரி மாணவர் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஷண்முகரத்னம் அவர்களின் கருத்துகளைக் கேட்ட காலனித்துவ நாடுகளின் அமைச்சர் (Secretary of State for the Colonies) மலாயாவுக்குத் தனிப் பல்கலைக்கழகம் வேண்டும் என்பதில் கருத்திணக்கம் கொண்டார். அதனால், 1959ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் தேதி மலாயாப் பல்கலைக்கழகம் இரு வளாகமாகப் பிரிந்து ஒன்று சிங்கப்பூரிலும் மற்றது கோலாலம்பூரிலுமாகச் செயல்படத் தொடங்கியது. பின்னர் 1960ஆம் ஆண்டு இரு நாடுகளின் அரசுகளும் இவ்விரு பல்கலைக்கழகங்களின் நிலையைத் தேசிய அளவில் உயர்த்த விரும்பின. அதனால், 1962ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி மலாயாப் பல்கலைக்கழகச் சிங்கப்பூர்ப் பிரிவு, சிங்கப்பூர்ப் பல்கலைக்-

கழகமாகவும், கோலாலம்பூர்ப் பிரிவு மலாயாப் பல்கலைக்கழகமாகவும் பெயர் மாற்றங்கள் அடைந்தன. சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக (Vice Chancellor) Dr. B.R. ஸ்ரீநிவாசன் பதவி ஏற்றார்.

**பல்கலைக்கழகத்தில் தமிழ்**

தமிழ் ஆர்வலர்களுக்குப் பல்லாண்டுகளாக இங்குள்ள பல்கலைக்கழகங்கள் ஏதாவது ஒன்றில் தமிழ்ப்பட்டக் கல்வியை அறிமுகப்படுத்தவேண்டும் என்ற ஆசை மேலோங்கி இருந்தது. இதற்கு 1956 முதலே வித்திட்டவர் தமிழவேள். அவர் தமிழ் முரசில் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை அமையவேண்டியதன் அவசியத்தை மிகவும் வலியுறுத்தி எழுதிவந்தார். மலாயா - சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி அரசு ஆய்வு மேற்கொண்டபோது பல்கலைக்கழகப் பரிந்துரைக் குழுவில் தமிழவேளும் இடம்பெற்றிருந்தார். அதில் அமர்ந்துகொண்டு அவர் அங்குத் தமிழ்த் துறை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

தமிழர்தம் கனவு நனவாக,1957இல் சிங்கப்பூரில் அப்போது இயங்கி வந்த மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறை தொடங்கப்பட்டது. அங்குப் பாடத்திட்டம் அமைக்கும் பணி தொடங்கியபோது அதற்குத் தமிழகத்திலிருந்து நீலகண்ட சாஸ்திரியார் வரவழைக்கப்பட்டார். பாடத்திட்டக் குழுவில் இடம்பெற்ற அவர் இந்திய ஆய்வியல் துறையில் முதன்மொழியாக சமஸ்கிருதமே இருக்கத்தக்கது என்று பரிந்துரை செய்தார். அதைக் கேட்டு இங்குள்ள தமிழ் ஆர்வலர் போர்க்கொடி ஏந்தினர்.

எதிர்ப்புக் குரலுக்குப் பக்கபலமாக இருந்தவர் கோ சாரங்கபாணியே. தமிழ் முரசில் மொழியுணர்வைத் தூண்டும்வகையில் தலையங்கங்கள் வெளிவந்தன. "இந்நாட்டில் வாழும் இந்தியர்களில் எண்பது விழுக்காட்டினரான தமிழர்களின் தாய்மொழியான தமிழே அரசு அங்கீகாரகம் பெறவேண்டும். அதற்கே இந்திய ஆய்வியல்துறையில் முதலிடம் தரவேண்டும்," என்ற குரல் எங்கும் எதிரொலிக்கத் தொடங்கியது. அதன் நிமித்தம் சிங்கப்பூர்க்கிளை-மலாயாப் பல்கலைக்கழகம் தமிழுக்கு முதன்மை இடம் வழங்கியது. அதே வேகத்தில் கோ சா அவர்கள் சிங்கப்பூர்த் தமிழர் பிரதிநிதித்துவ சபையை மையமாக வைத்துத் 'தமிழ் எங்கள் உயிர்' நிதியைத் தொடங்கினார். இந்த இயக்கம் மலாயப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு நிதியும், ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களையும் அளித்தது. என்றாலும், 1959இல் அரும்பாடுபட்டுச் சிங்கப்பூர்க்கிளை-மலாயாப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய இந்திய ஆய்வியல் துறை மலாயாத் தலைநகர் கோலாலம்பூர் வளாகத்துக்கு மாற்றலாகியது.

அதே வேளையில் சிங்கப்பூர்க்கிளை-மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை இடம்பெறவில்லை. அதன் பின்னர்ச் சுமார் 50 ஆண்டுக்காலமாகத் தமிழ் ஆர்வலர்களும் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் பல முயற்சிகளை எடுத்து, உள்ளூர்ப் பல்கலைக்-கழகங்கள் ஏதாவதொன்றில் தமிழ்ப் பட்டக் கல்வியை அறிமுகப்படுத்த விழைந்தும் பயனளிக்காமல் போய்விட்டது. இக்காலக்கட்டம் தமிழில் உயர்கல்வியைப் பொறுத்தவரை ஓர் இருண்ட காலம் என்று கூறலாம். இதன் விளைவாக உள்ளூரிலேயே

தமிழில் பட்டக்கல்வி கற்றவர்கள் இல்லாத நிலை உருவாகியது. தமிழ் சார்ந்த அலுவல்களை ஆங்கிலப் பட்டதாரிகளோ மேல்நிலையில் தமிழை இரண்டாம் மொழியளவில் கற்றவர்களே செய்தனர். தமிழில் உயர்கல்வி இல்லாத நிலையில் தமிழ்மொழியின் தரம் படிப்படியாகக் குறையவும் தமிழ்மீது பற்று தமிழரிடையே சரியவும் காரணிகளாயின.

## தமிழ்த்துறை அமைய எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள்

தஞ்சோங் பகார் தொகுதியில் 1966ஆம் ஆண்டு நடந்த தமிழர் திருநாள் விழாவின்போது முன்னாள் பிரதம மந்திரி லீ குவான் யூ அவர்கள் கொள்கை அளவில் மலாயாப் பல்கலைக்கழகச் சிங்கப்பூர் வளாகத்தில் தமிழ்த்துறை அமைப்பதற்கு உடன்பட்டார்.

காலஞ்சென்ற முன்னாள் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் தலைவரும், ஆன்சன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், அதன் பின்னர் அதிபருமான சி.வி. தேவன் நாயர், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம் நடத்திய பேரவையில் தமிழ்த்துறை அமைப்பது பற்றிக் கல்வி அமைச்சுடன் தாம் பேசியபோது, 'அது போதுமான தமிழ் மாணவர்களை ஈர்க்குமா?' என்று தம்மிடம் வினவப்பட்டதாகத் தெரிவித்தார். அவர் அங்கு அரங்கில் குழுமியிருந்த பேராளர்களிடமும் அதே வினாவை முன்வைத்து, "உங்களால் தமிழ்த்துறை அமைக்கப் போதுமான தமிழ் மாணவர்கள் கிடைப்பார்கள் என்று நிரூபிக்க முடிந்தால் நான் உங்களுக்கு உதவத் தயார்" என்றார். விரைவில் அதற்கான ஆய்வை மேற்கொண்டு, புள்ளி விவரங்களைத் தன்னிடம் கொடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார். (சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகப் பேரவை (1981, தொகுதி 1, பக்கம் 116).

அதனைத் தொடர்ந்து தேவன் நாயரால் 1979ஆம் ஆண்டு தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டபோது அதன் வரைவுச் சட்டதிட்டத்தில் இதர கோரிக்கைகளுடன் சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை அமைப்பதுபற்றியும் கோரிக்கை ஒன்று இடம்பெற்றிருந்தது.

1979ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 8ஆம் நாள் சிங்கப்பூர்த் தமிழர்ப் பிரதிநிதித்துவ சபை எட்டு அம்சங்கள் அடங்கிய ஒரு விண்ணப்பத்தை அப்போதைய கல்வி அமைச்சரும், தற்போதைய அதிபருமான டாக்டர் டோனி டான் அவர்களிடம் சமர்ப்பித்தது. அதிலொரு கோரிக்கை சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகம் அல்லது நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் இவ்விரண்டில் ஏதாவது ஒன்றில் தமிழ்த்துறை அமைக்கவேண்டும் என்பது. அதற்குப் பதிலளித்த அவர், 'அத்தகைய துறை, தேவையின் அவசியத்தைப் பொருத்தும், இறுதி முடிவு பல்கலைக்கழகத்தின் முடிவைப் பொருத்தும் இருக்கும்' என்று கூறிவிட்டார். அதனால், தமிழாசிரியர்கள் பொதுக் கல்விச் சான்றிதழ் மேல்நிலை (GCE A) அளவில் மட்டுமே தமிழை இரண்டாம் மொழியாகக் கற்க இயன்றது. தமிழில் பட்டப்படிப்பு கானல்நீராகவே இருந்தது. இருப்பினும், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் தமிழார்வர்களும் சளைக்காமல் முயற்சி செய்து வந்தனர்.

இடையறா பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் அரசு சிறிதும் வளைந்து கொடுக்காததன் காரணமென்ன? பல காரணங்களைப் பட்டியலிடலாம் என்றாலும், தமிழ்ப்

பட்டக்கல்விக்குத் தமிழ் மாணவர்கள் ஈர்க்கப்படமாட்டார்கள் என்பதே தலையாய காரணம் எனலாம். தமிழ்க் கல்வி மட்டுமே போதுமான வேலை வாய்ப்புகளைத் தராது என்ற எண்ணம் தமிழ்ச் சமூகத்தினரிடைய வேரூன்றத் தொடங்கிய காலமும் அதுவே. மற்றொன்று, ஆங்கிலம் கற்றவர்களுக்கும் தாய்மொழியைக் கற்றவர்களுக்குமிடையே இருந்த ஊதிய வேறுபாடு. இதனால், தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதால-பாதாளத்திற்குச் சென்றுகொண்டிருந்தது.

**நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்**

இதன்கீழ் இயங்கிவரும் தேசியக் கல்விக் கழகத்தில் ஆசிய மொழிகள், பண்பாட்டுப் பிரிவின் ஒரு பகுதியாகத் தமிழ்ப் பிரிவு இருக்கின்றது. இதன் முதன்மைப் பணி தமிழாசிரியர்களை உருவாக்குவதும், பணியிடைப் பயிற்சிகள் நடத்தித் தமிழாசிரியர்களின் மொழித்தரத்தையும் கற்பித்தல் முறைகளையும் மேம்படுத்துவதுமாகும். ஈராண்டுப் பட்டயக் கல்விக்கும் (Diploma in Education), ஓராண்டுப் பட்டப் படிப்புக்குப் பிந்தைய பட்டயக் கல்விக்கும் (Post Graduate Diploma in Education) இப்போது முழுநேரப் பயிற்சி தரப்படுகின்றது. இன்று பகுதி நேரக் கல்வியியலில் முதுகலைப் பட்டமும் (Master in Education) தொடங்கப்பட்டுள்ளது. இப்பிரிவு மொழி, இலக்கியம் கற்பித்தல் முறை ஆகியவற்றில் ஆய்வு நடத்துகின்றது. சிங்கப்பூர்த் தமிழ்மொழி, இலக்கியம் பற்றியும் முனைவர் (டாக்டர்) பட்ட ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன-செய்யப்பட்டும் வருகின்றன. இன்று ஆசிரியர்கள், பள்ளி சார்ந்த பலவகை ஆய்வுகள் மேற்கொள்ளவும் இப்பிரிவு வழி-வகுத்துள்ளது. மாணவர்களின் உச்சரிப்புத் திறன் மேம்படுத்த உதவும் ‘செந்தமிழும் நாப்பழக்கம்’ என்னும் நூல் ஒன்றும், பயிற்று கருவித் தொகுப்பு ஒன்றும், தமிழ் வரிவடிவத்தைக் கற்பிக்கக் கையேடு ஒன்றும் வாசிப்புத் திறனைக் கற்பிக்கப் பல ஒலி நாடாக்களும் இப்பிரிவு உருவாக்கி வெளியிட்டுள்ளது. கற்பித்தல் தொடர்பாகப் பல கருத்தரங்குகளும் நடத்துகிறது.

தமிழ்க் கணினியில் பயன்படுத்த புதிய விசைப்பலகை (Keyboard) ஒன்று உருவாக்கியதுடன் அதனை எளிதில் கற்க உதவும் தற்பயிற்சிச் சாதனம் ஒன்றையும் தயாரித்துள்ளது. மலேசியா, சிங்கப்பூரில் இவ்விசைப்பலகை இன்று பயன்பாட்டில் உள்ளது. பாடத்திட்டம், பயிற்றுகருவிகள், தேர்வு தொடர்பான பணியில் கல்வி அமைச்சிற்கு உறு-துணையாக இப்பிரிவு இருந்துவருகிறது. தமிழ்க்கல்வி கற்றல், கற்பித்தல், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் தொடர்பான நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளது. இப்பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் அனைத்துலகக் கருத்தரங்குகள் பலவற்றில் கலந்து கட்டுரைகள் படைப்பதோடு தமிழ்க்கல்வி பற்றிய ஆய்வுத்திட்டங்கள் பலவற்றையும் மேற்கொண்-டுள்ளனர்.

2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் தேசியக் கல்விக் கழகத்தில் கல்வியலில் இளங்கலைப் பட்டம் (Bachelor of Arts in Education) தமிழில் அறிமுகமாகியுள்ளது என்பதை நினைத்துச் சமூகம் மகிழலாம். இது இளங்கலைப் பட்டப்படிப்புடன், ஆசிரியர்ப் பணிக்கானப் பயிற்சியையும் சேர்த்து அளிக்கிறது. மேலும், 2017ஆம் ஆண்டு முதல் நீ

ஆன் பலதுறைக் கல்லூரியில் பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கென பட்டயக் கல்வி தமிழில் (Diploma) தொடங்கப்பட்டுள்ளது.

**சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம்**

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தில் 1999 முதல் தெற்கு ஆசிய இயல் பிரிவு, மொழிகள் படிப்பு நிலையம் ஆகியவற்றின் சார்பில் தமிழ் இயல், தமிழ்மொழிப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தெற்கு ஆசிய இயல் பிரிவு தமிழியல்-1, தமிழியல் -2, என இரண்டு பாடங்களைப் பல்கலைக்கழகத்தில் அந்தந்தத் துறையில் படிக்கும் மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் நடத்துகிறது. A நிலையில் அதாவது பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் தமிழ்த் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இப்பாடங்களை விருப்பப் பாடங்களாக (Elective) படிக்கலாம். தமிழியல் 1 பாடத்தில் மொழியியல், இலக்கிய, பண்பாட்டுக் கூறுகள் நோக்கில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத் திறனாய்வும் கவிதை நலம் பாராட்டலும் இப்பாடத்தில் உள்ளன. தமிழியல் 2 பாடத்தில் தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு ஆகிய கூறுகள் உள்ளன. மொழிகள் படிப்பு நிலையத்தில் தமிழரல்லாத சீன, மலாய், இந்திய வெளிநாட்டு மாணவர்களுக்கு அடிப்படைத் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகளில் பல்வேறு சூழல்களில் பேசவும், ஓரளவு எழுதவும் பழகவும் மாணவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. இந்த இரு பாடங்களையும் பல்கலைக்கழகத்தில் பல்துறையில் படிக்கும் மாணவர்கள் விருப்பப்பாடமாக எடுத்துப் பயிலலாம். இதுவரை ஏறத்தாழ 300 தமிழரல்லாத மாணவர்கள் தமிழ்மொழி பயின்றுள்ளனர். தமிழர் பண்-பாட்டுக் கூறுகளும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன; தமிழகத்திற்குச் சுற்றுப் பயணமும் மேற்கொள்ளுகின்றனர்.

மேலும், தமிழ் சார்ந்த துறைகளில் தெற்கு ஆசியப் பாடப்பிரிவின் கீழ் முனைவர் பட்ட ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிங்கப்பூர் இலக்கியம்பற்றி ஒரு கருத்தரங்கும், அனைத்துலக அரங்கில் தமிழ் என்னும் தலைப்பில் இரு மாநாடுகளும் சிங்கப்பூர்- மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றிய கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றுள்ளன.

**சிம் பல்கலைக்கழகம்**

கடந்த காலத்தில் உயர்கல்வியைப் பெறமுடியாத நிலையில் தமிழாசிரியர்கள் தம் கல்வித்தரத்தை உயர்த்த தமிழகத்துக் கல்லூரிகளுக்குச் சென்றனர். அதற்கு 1980இல் முதன்முதலில் வழிகோலியவர் கல்வி அமைச்சின் பாடத்திட்ட மேம்பாட்டுப் பிரிவில் பணி-யாற்றிக்கொண்டிருந்த மூத்த கல்வியாளர் சி.1முத்தையா அவர்கள். இவர் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் மூன்றாண்டுகள் இளங்கலைக் கல்வியை முழுநேரம் கற்று வந்தார். அவரைத் தொடர்ந்து ஒருவர் பின் ஒருவராகக் கணிசமான அளவில் தமிழாசிரியர்கள் தமிழகம் சென்று படித்து வந்தனர். சிலர் அங்கு முதுகலைப் பட்டப் படிப்பையும் முடித்தனர். தமிழாசிரியர்களுள் பெரும்பான்மையினர் பெண்களாக இருக்கின்றமையால் மிகச் சிலரே இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு பட்டம் பெற்றனர். மாறாகக் கணிசமான தமிழாசிரியர்கள் எஸ் ஐ எம் ( SIM) எனப்படும் சிங்கப்பூர் நிர்வாகக் கழகம் (Singapore Institute of Management) நடத்தி வந்த லண்டன் தொலைக்கல்விப் பல்கலைக்கழகப்

பட்டப் படிப்பைப் பகுதிநேரமாகக் கற்று ஆங்கிலமொழி மற்றும் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றனர். என்றாலும், தொடர்ந்து பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்பித்து வந்தனர்.

2005ஆம் ஆண்டு சிங்கப்பூர் நிர்வாகக் கழகத்திற்குக் கல்வி அமைச்சு, பட்டப் படிப்புகளை வழங்க அங்கீகாரம் தந்தது. 2006இல் இக்கழகத்தின் ஒரு பிரிவாகச் சிம் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. அது முதல் சிம் பல்கலைக்கழகம் வேலை செய்து-கொண்டே மேற்கல்வியைத் தொடர விரும்புபவர்களுக்குப் பகுதிநேரப் பட்டக் கல்வியை அறிமுகம் செய்தும் பட்டங்களை வழங்கியும் வருகின்றது. தற்போதைய துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினம் அவர்களின் உதவியுடன் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் இடைவிடா முயற்சியால் தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 50 மாணவர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. தமிழாசிரியர்களே முதல் நுழைவை முழுமை செய்தனர்.

தமிழ் இளங்கலைப் பட்டம் தமிழ்நாட்டுக் கல்லூரிகளின் பட்டக்கல்விக்கு நிகராக இருக்கும் நோக்கில் தமிழ் நாட்டில் மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அவ் ஒப்பந்தப்படி ஏழு பாடங்கள் அங்கிருந்து பெறப்பட்டன. பதினான்கு பாடங்களில் அதுபோக மீதப்பாடங்கள் உள்ளூர், தமிழ் நாட்டுப் பேராசிரியர்-களின் துணைகொண்டு வடிவமைக்கப்பட்டன. தமிழகக் கல்லூரிகளில் வழங்கப்படாத மொழிபெயர்ப்பு, மொழியியல் பாடங்கள் சிம் பல்கலைக்கழகத்தில் அளிக்கப்படுகின்றன. மற்றொரு சேர்க்கையானது சிங்கப்பூர், மலேசிய இலக்கியங்களும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மொழிப்பாடத்திட்டமானது மாணவர்களின் மொழித் திறன்களையும் மொழியறிவையும் வளர்த்துக்கொள்ள ஆவன செய்கின்றது. இலக்கியப் பாடத்திட்டமானது பல்வேறு காலக்கட்டத்தில் எழுந்த இலக்கிய வகைகளைப் படித்து இன்புற வகை செய்கிறது.

சிம் பல்கலைக்கழகத்தில் 2009ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த முதல் பட்டமளிப்பு விழாவில் 25 பேர் தமிழில் இளங்கலைப் பட்டம் பெற்றனர். அதனைத் தமிழ்க் கல்வியில் ஓர் எல்லைக்கல்லாகக் கருதலாம். 2016ஆம் ஆண்டு வரை 300 பேர் தமிழில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளனர். தற்சமயம் நூறு மாணவர்கள் படித்தும் வருகின்றனர். இங்குப் பட்டம் பெற்றவர்களுள் பலர் தமிழாசிரியராகத் தற்சமயம் பணியாற்றி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் இன்னும் சிலர் குறிப்பாக ஆசிரியர்ப் பணியில் இருப்போர் முதுகலைக் கல்வியியலைப் (Master of Education) பகுதிநேர அடிப்படையில் தேசியக் கல்விக் கழகத்தில் தொடர்ந்து கற்றுப் பட்டம் பெற்றுள்ளனர். இதர சிலர் தொடர்ந்து படித்தும் வருகின்றனர். சிம் பல்கலைக்கழகத்தில் தமிழில் இளங்கலைப் பட்டம்பெற்ற ஒரு தமிழாசிரியர் தற்போது தேசியக் கல்விக் கழகத்தில் ஆங்கிலத்தில் முதுகலை நிலையில் பயன்பாட்டு மொழியியல் (Applied Linguistics) கல்வியை வெற்றிகரமாக முடித்துள்ளார். மற்றொரு மாணவி அனைத்துலக உறவுகள் (International Relations) என்ற துறையில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் தம் படிப்பை மேற்கொண்டுள்ளார். வாழ்-நாள் கல்விக்கு ஊக்கமூட்டும் அரசு, சிம்பல்கலைக் கழகத்தில் பயிலும் சிங்கப்பூர்க் குடிமக்களுக்குக் கட்டணத்தில் 55 விழுக்காடும் நிரந்தரக் குடிவாசிகளுக்கு 20 விழுக்காடும் கழிவு வழங்குகிறது.

2013ஆம் ஆண்டு தமிழ்ப் பட்டக் கல்வியில் மற்றொரு மைல்கல் நடப்பட்டது. தமிழ் மாணவர்களுக்குப் பரவலான வேலை வாய்ப்புகளைத் தரவேண்டும் என்ற நோக்கிலும் ஆங்கிலமொழியின் முக்கியத்துவம் கருதியும் தற்போது நடைமுறையில் இருக்கும் தமிழ்மொழி, இலக்கிய இளங்கலைப் பட்டத்துடன் இன்னும் இரண்டு பட்டக்கல்வி சிம் பல்கலைக்கழகத்தில் அறிமுகமாயின. அவை தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் மற்றும் தொடர்பியலும் (Communication); தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் மற்றும் ஆங்கிலமொழி (English Language) பட்டக்கல்வியும் ஆகும். 2016ஆம் ஆண்டு முதல் பாலர்வகுப்புக்கு முந்தையக் கல்வி (Early Childhood Education) பட்டப்படிப்பில், எட்டு பாடங்களைத் தமிழில் ஆங்கிலத்தோடு படிக்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

பட்டக்கல்விப் பாடங்களை உள்ளூர் விரிவுரையாளர்கள் பகுதிநேர அடிப்படையில் மாலை ஏழு மணி முதல் இரவு 10 மணி வரை கற்பித்து வருகின்றனர். இதுதவிர தமிழகத்திலிருந்து ஒவ்வொரு பருவத்தின்போது பல்கலைக்கழக மற்றும் கல்லூரிப் பேராசிரியர்களும் பல்கலைக்கழகத்திற்கு வரவழைக்கப்பட்டு மாணவர்களுக்குச் சிறப்பு விரிவுரையாற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

சுதந்திரத்திற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இருமொழியக் கல்விக் கொள்கையிலிருந்து சிறிதும் பிறழாமல் அரசு, அனைவருக்கும் ஆங்கிலத்தோடு தாய்மொழிக் கல்வியை, பாலர்வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை வழங்கிவருகிறது. தமிழகத்துக்கு வெளியே ஸ்ரீலங்கா தவிர்த்து, சிங்கப்பூரில் மட்டுமே தமிழுக்கு அதிகாரத்துவமொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி, கல்வித் திட்டத்தில் ஒரு பாடமாக வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. என்றாலும், மொழியைக் கற்பதோடு நின்றுவிடாமல் அதை வாழும் மொழியாக்க, தமிழ்ச் சமூகம் அதனை அன்றாடப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தாலொழிய அதன் எதிர்காலம் இந்நாட்டில் உறுதியில்லை.

**பார்வை நூல்கள் :**

All Party Report, *(1956), Report of the All-Party Singapore: Committee of the Singapore Legislative Assembly on Chinese Education, Government Publication Bureau.*

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகப் பேரவை *(1981, தொகுதி 1, பக்கம் 116.)*

Chelliah, D. D. (1947), *A History of the educational Policy of the Straits Settlements, Kuala Lumpur, Malaysia: The Government Press.*

Doraisamy, T. R. *(1969), 150 years of education in Singapore. Singapore: TTC Publication Board.*

Gopinathan, S. *(1974), Towards a national system of education in Singapore. Singapore, 1945-1973. Singapore: Oxford University Press.*

Jeganathan, M. *(1993), The development of Tamil language education in Singapore, Master's thesis, Department of English Language and Literature, National university of Singapore.*

Puru Shotam, N. S. *(1998), Negotiating language, constructing race: Disciplining differences in Singapore, Berlin, Germany, Mouton de Gruyter.*

# தேசியக் கல்விக் கழகத்தில் தமிழாசிரியர்க்கான பணிமேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள்

**டாக்டர் சீதா லட்சுமி**
தேசியக் கல்விக் கழகம், சிங்கப்பூர்

## முன்னுரை

ஆசிரியர் பயிற்சி என்பது ஒரு நாட்டின் அறிவுப்பூர்வ வளர்ச்சிக்கும் அறிவுநோக்கிய பொருளியல் வளர்ச்சிக்கும் உலகளாவிய நாடாக அந்நாடு திகழ்வதற்கும் வழிசெய்வது. இங்கு அத்தகு நிலையில் தமிழாசிரியர் பயிற்சியில் பணி மேம்பாட்டுப் பயிற்சி குறித்துத் தகவல் தெரிவிப்பு நிலையில் இக்கட்டுரை அமைகிறது.

## பணிக்கு முந்தியபயிற்சி

ஆசிரியர் பயிற்சி எனும்போது பணிக்கு முந்தியபயிற்சி, பணியிடைப் பயிற்சி, பணிக்குப் பிந்திய பயிற்சி என்று மூவகையாக அமையும். இங்கு பணிக்கு முந்திய பயிற்சி எனும்போது கல்வி அமைச்சு தமிழாசிரியர் பணிக்காகத் தேர்வு செய்த விண்ணப்பதாரர்-களைப் பள்ளியில் எவ்வித அனுபவமும் இல்லாமல் நேரடியாகத் தேசியக் கல்விக் கழகத்திற்குப் பயிற்சி பெற அனுப்பிவைக்கும். அங்கு அவர்கள் பெறும் பயிற்சிதாம் பணிக்கு முந்திய பயிற்சி எனப்படும். இப்பயிற்சி ஓர் ஆரம்ப ஆசிரியர், தமது கற்பித்தல் பாடம் தொடர்பான உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், தமது சொந்த உள்ளடக்க அறிவு மேம்பாடு, சிங்கப்பூர் சார்ந்த கல்வி வரலாறு, கல்வித் தொழில்நுட்பம், குழந்தை அல்லது பதின்மவயதுசார் உளவியல், கல்வி உளவியல், துணைப்பாடங்கள், பல்லினப் பண்பாட்டியம் ஆகியன குறித்துத் தமிழில் அதிகப் பாடங்களையும் ஆங்கிலத்தில் சில பாடங்களையும் கற்பர். தொடர்ந்து பள்ளி சார்ந்த பயிற்சிகளில் ஈடுபடுவர். அண்மைய சில ஆண்டுகளில் அவர்களில் பலர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டதும் தொடக்க/உயர்நிலைப் பள்ளிகளில் ஒப்பந்த ஆசிரியராகச் சில அல்லது பல மாதங்கள் பணி புரிந்துவிட்டுப் பின் தேசியக் கல்விக்கழகத்துக்குப் பயிற்சி பெற வருகிறார்கள். இவ்வாறு வரும் பணிக்கு முந்திய பயிற்சி ஆசிரியர்கள் பட்டயவகுப்பில் அல்லது பட்டத்துக்குப் பிந்திய கல்வியியல் பட்டய வகுப்பில் பயில்வர்.

இப்பயிற்சியில் பங்கேற்போரில் ஒரு சாரார் பள்ளி, இளையர் கல்லூரி, பலதுறைத் தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் மாணவர்-களாகப் படிப்பை முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிக்கு வருவதும், மற்றொரு சாரார் ஒன்று அல்லது பலவகைப் பணிகளில் பணியாற்றிவிட்டுப் பின் ஆசிரியர் பணிக்கு வருவதும் என இரு சாராராக இடம்பெறுகின்றனர். அவர்களில் சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தவர்களும் வெளியூரில் பிறந்து வளர்ந்தவர்களும் இடம்பெறுவர். இவ்விரு சாராரும் வேறுபட்ட வயது, வாழ்வியல் அனுபவம், பணி அனுபவம் பெற்றிருந்தாலும் அவர்களுக்குப் பணிக்கு முந்திய பயிற்சி ஒரே வகையில் வழங்கப்படுகின்றது.

**பணியிடைப் பயிற்சி**

பணியிடைப் பயிற்சி என்று கூறும்போது பணிக்குச் சேர்ந்த பிறகு அவர்கள் தமது பட்டத்தொழில் அறிவை மேம்படுத்திக்கொள்ள வழி செய்யும் பயிற்சிகள் ஆகும். இவற்றைக் கல்வி அமைச்சும், தேசியக் கல்விக் கழகமும், பிற கல்வி அமைப்புகளும் வழங்கி வருகின்றன. அண்மைய ஆண்டுகளில் முதன்மை ஆசிரியர்களும் இப்பயிற்சியை வழங்குகின்றனர். இப்பயிற்சியில் ஆசிரியர்கள் விரும்பி விண்ணப்பிப்பதும் பள்ளியின் தேவை நோக்கி அனுப்பிவைக்கப்படுவதும் இடம்பெறுகின்றன. இத்தகு பணியிடைப் பயிற்சிக்கு வருபவர்கள் வழங்கப்படும் பயிற்சி வகுப்புக்கு ஏற்ப 10 பேருக்கு மேல் கலந்துகொள்வர். இவர்கள் முப்பதுக்கு மேல் செல்ல மாட்டார்கள். அவ்வகையில் ஆசிரியர்களுக்கு இடையில் நல்ல இடைவினையாடலும் உள்கட்டமைப்புத் தொடர்புகளும் உருவாக வழி கிடைக்கும். பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது வெளிவரும் கல்வியியல் குறிப்பாக இரண்டாம் மொழி சார்ந்த ஆய்வு முடிவுகள், ஆய்வுக்கட்டுரைகள், தேசியக் கல்விக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளின் முடிவுகள், வெளியிடும் ஆய்வுக்கட்டுரைகள், அவர்களுக்குக் கிடைக்கும் புதிய பயிற்சிகள், அவர்கள் பங்கேற்கும் ஆய்வரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றிலிருந்து பெறும் கற்றல் கற்பித்தல் நோக்கிய செய்திகளைத் தமிழாசிரியர்களுக்குக் கொண்டு செல்வர். இத்தகு பயிற்சிகள் பணியிடைப் பயிற்சிகளாக அமையும். இவை உரிய நிர்வாக வழிகாட்டுதல்களுடன் நடைபெறும். இத்தகு பயிற்சிகள் தமிழாசிரியர்கள் தங்களது அடிப்படை ஆசிரியர் பயிற்சியை முடிந்துப் பள்ளியில் சேர்ந்தபிறகும் தொடர்ந்து தங்களது துறை நோக்கிய பட்டத்தொழில் மேம்பாட்டுக்காகவும் தம் தனிப்பட்ட மேம்பாட்டுக்காகவும் பயிற்சி பெறுவதைக் குறிக்கும். அறிவு சார்ந்த பொருளியலையும் வாழ்நாள் கல்வியையும் தொடர்ந்து செயல்படுத்திவரும் சிங்கப்பூரில் இத்தகு பயிற்சிகள் தமிழாசிரியர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும் தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்தவும் உறுதுணை புரியும். இத்தகு பயிற்சிகள் அவரகளுக்கு அவர்களது பள்ளியில், குழுமத்தில், கல்வி அமைச்சு நிலையில் வழங்கப்பெறும். அவை ஒவ்வொன்றும் தனித்துவக் கூறுகளைக் கொண்டிருப்பதுபோல 12 மணி நேரம், 24 மணி நேரம் என நடைபெறும் இவ்வகுப்புகளும் தமக்கெனச் சில தனித்துவக் கூறுகளைக் கொண்டிருக்கும். அவ்வாறு நோக்கும்போது ஆசிரியர்கள் பன்முனைகளிலிருந்து தங்களை மேம்படுத்திக்கொள்ள முறை சார்ந்த வாய்ப்புகள் அமைவது பயன்மிக்கது. சிங்கப்பூரில் பணியிடைப் பயிற்சிவகுப்புகள் பணிக்கு முந்திய பயிற்சி வகுப்புகளைப் போலத் தனியிடம் பெற்றவை. எனினும் உரிய பதிவுகள், ஆவணங்கள் இல்லாத நிலையில் கிடைத்த மிகச்சில தரவுகளைக் கொண்டு இந்தக் கட்டுரை ஒரு தகவல் தெரிவிப்புக்கட்டுரையாகத்தான் இங்கு இடம்பெற்றுள்ளது. அவ்வகையில் ஈராயிரமாம் ஆண்டுக்குப் பிறகு இடம்பெற்ற பயிற்சி வகுப்புகளில் சிலவற்றின் தலைப்புகளைப் பார்ப்போம்:

**தாய்மொழித்துறைத் தலைவர், பாடத்துறைத் தலைவர்க்கான பணிமேம்பாட்டு வகுப்பு:**

பட்டக்கல்விக்கு ஈடான உயர்கல்விச் சான்றிதழ் வகுப்பு/ உயர்கல்விப் பட்டய வகுப்பு:

கல்வியியல் உயர்சான்றிதழ் வகுப்பு என்பது மூன்று பிரிவுகளாக நடத்தப்பெற்றது. 600 மணி நேரம் பயிற்சியைக் கொண்ட இவ்வகுப்பு மொழி, இலக்கியம், ஆசிரியவியல், ஆசிரியவியல் நோக்கிய ஆய்வு எனப்பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. இந்த ஆய்வு வகுப்பில் 56பேர் பங்குபெற்று பயின்றனர். இந்த ஆய்வு தமிழ்க்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு பணிமேம்பாட்டுப் பயிற்சிவகுப்பு எனலாம். இத்தகைய வகுப்பு வேறு எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இந்த வகுப்பில் பயின்ற பலரது படைப்புகள் சுருக்கித் தொகுக்கப்பட்டு நான்கு தொகுதிகளாக வந்துள்ளன. அவை சிங்கப்பூரில் தமிழ் கற்றல், கற்பித்தல் குறித்த சிறந்ததோர் ஆவணத்தொகுப்பாக உள்ளன எனலாம். அதுகுறித்துப் பின்வரும் பகுதியில் விரிவாக நோக்கலாம்.

தமிழ் மொழி சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாக இருந்தாலும் அது பட்டக்கல்வி வகுப்பாகச் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தில் அமையப்பெறவில்லை. தேசியக் கல்விக்கழகத்திலும் ஆசிரியர் சார்ந்த பயிற்சிகள் நடத்தப்பட்டபோதிலும் பட்டக்கல்வி வழங்கப்படவில்லை. இது காரணமாகத் தமிழாசிரியர்கள் பலர் மேல்படிப்பு படிக்க இயலாது, பட்டத்தொழிலில் மேம்பட இயலாது தவித்தனர். தற்போதைய தமிழாசிரியர்களில் பெரும்பாலானோர் மகளிராக இருந்தாலும் 1980-2000க்கு உட்பட்ட காலகட்டத்தில் கணிசமானோர் பெண்களாக இருந்தனர். சிங்கப்பூரின் வாழ்க்கை முறையில் வாழ்ந்துவிட்டு புதிய சூழலில் தமிழகத்தில் பட்டக்கல்வி பயில்வதும் வயதான பெற்றோர், குடும்பம் குழந்தைகள், வாழ்க்கைத்துணை எனப் பல சிக்கல்களும் அவர்களில் பலரைப் பட்டக்கல்வி பெற வழி செய்யவில்லை. சிலர் இதனால் ஆங்கிலத்தில் பட்டக்கல்வி பெறலாமா என்றும் சிந்தித்தனர். தவிரவும் சிலர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழகம் சென்று படித்துவந்தனர். சிலர் வேறு பல காரணங்களால் அவ்வாறு செய்ல இயலாது பட்டக்கல்வியை ஒத்திவைத்தனர். தமிழ்ச்சமூகம் சார்ந்த தமிழ் மற்றும் ஆங்கிலக் கல்வியாளர்கள் தமிழில் பட்டக்கல்வி தேவை என்று குரல் தந்தனர். சமூகமும் இது குறித்து அதிகம் பேசியது. இந்நிலையில் அதாவது அந்தக் காலக்கட்டத்தில் ஆசிரியரின் திறன் தேர்ச்சியை மேம்படுத்துவது குறித்து கல்வி அமைச்சு சிந்தித்தது. உயர்நிலைக்கல்வி முடித்த ஆசிரியர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவருக்கு எவ்வாறு பாடம் நடத்துவது? என்று சிந்தித்தது. ஆசிரியரின் மேம்பாடும் தன்னம்பிக்கை உயர்வும் அவருக்கும் மாணவர்களுக்கும் தமிழ்ச்சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் பெரிதும் பயன்படும் என்ற கல்விக்கழகத் தமிழ்த்துறை உணர்ந்தது. இதற்கிடையில 1993இல் தமிழகத்திலிருந்து 80 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இங்கு அழைத்துவரப்பட்டனர். எனினும் இத்தகைய தற்காலிகத் தீர்வு சிங்கப்பூரில் பட்டக்கல்வி அமையாத நிலையிய முழுமையான தீர்வாகாது. உரிய தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது (இராமையா, 2000, ப. iv) என்று கருதப்பட்டது. மற்ற சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளாக இருந்த நான்கில் தாய்மொழிப் பாடங்களாகக் கற்றுத்தரப்பட்ட சீனம், மலாய் மொழிகளில் பட்டக்கல்வி இருக்கும்போது மற்றொரு தாய்மொழிப் பாடமான தமிழுக்கு அத்தகைய

இல்லாதது ஒரு குறையாகவும் இருந்தது. இந்நிலையில் கல்வி அமைச்சு, ஆசிரியர்களுக்கு ஒரு பட்டயக்கல்வி வகுப்பைத் தொடங்கி நடத்துமாறு தேசியக் கல்விக்கழகத்தைக் கேட்டுக்கொண்டது. அதன்படி 1991இல் தேசியக் கல்விக்கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்ற கல்விக்கழகத்தின் தமிழ்த்துறை, கல்வியியல் உயர் சான்றிதழ் (Advanced Certificate in Education) (Tamil Studies) என்ற வகுப்பைத் தொடங்கி நடத்த எண்ணியது. இந்த வகுப்பு, உயர்நிலைப் பள்ளிகளிலும் தொடக்கக் கல்லூரிகளிலும் பணிபுரியும் பட்டதாரி இல்லாத ஆசிரியர்களுக்கு வடிவமைக்கப்பட்டது.

600 மணி நேர வகுப்பாக வடிவமைக்கப்பட்ட இந்தப் பயிற்சிவகுப்பு ஆண்டுக்கு 4 தவணைகள் எனத் தலா ஈராண்டுகளுக்கு நடைபெறும் என்றும் மொத்தம் 4 பிரிவுகளாகப் பாடங்கள் பகுத்கப்பட்டு நடத்தப்பெறும் என்றும் இராமையா (2000) குறிப்பிடுகிறார். அவை,

- ஆசிரியத்தொழிலியல்(150மணி நேரம்)
- இலக்கணவியல் (150மணி நேரம்)
- இலக்கியவியல் (150மணி நேரம்)
- கற்பித்தல் நடைமுறை குறித்த பள்ளி சார்ந்த பயிற்சி – 150 மணி நேரம்) (அட்டவணை-1ஐப் பார்க்கவும்)

**அட்டவணை 1:** முதல் பயிற்சி வகுப்பின் உள்ளடக்கத் தலைப்புகள், காலம் குறித்த விவரங்கள் (பிற இரண்டு வகுப்புகளும் இத்தகைய உள்ளடக்கத் தலைப்புகளையே கொண்டிருந்தன.)

| எண் | பாடப்பொருள் | தவணை | பாடநேரம் | கணிப்புமுறை |
|---|---|---|---|---|
| 1 | **ஆசிரியத் தொழிலியல்** | | | |
| 1.1 | திறன்களை இணைத்துத் தமிழ் மொழி/ இலக்கியம் கற்பித்தல் | ஜனவரி 1998 | **150 மணி நேரம்** | ஒப்படைப்பு |
| 1.2. | மொழிச்சோதனை | செப்டம்பர் 1989 | | ஒப்படைப்பு |
| 1.3 | தமிழ் மொழிப் பாடத்திட்ட மேம்பாடு | ஜனவரி 1989 | | ஒப்படைப்பு |
| 1.4 | மொழியியலும் மொழி கற்பித்தலும் | ஜூலை 1987 | | ஒப்படைப்பு |
| 1.5 | மொழி கற்றலும் மொழி கைவரப்பெறுதலும் | மார்ச் 1989 | | ஒப்படைப்பு |

| எண் | பாடப்பொருள் | தவணை | பாடநேரம் | கணிப்புமுறை |
|---|---|---|---|---|
| 2 | **இலக்கண இயல்** | | **150 மணி நேரம்** | |
| 2.1 | எழுத்தியல் | ஜூலை 1987 | | சோதனை |
| 2.2 | புணரியல் | ஜனவரி 1988 | | சோதனை |
| 2.3 | சொல்லியல் | செப்டம்பர் 1987 | | சோதனை |
| 2.4 | தொடரியல் | மார்ச் 1988 | | சோதனை |
| 2.5 | பயன்பாட்டில் இலக்கணம் | ஜூலை 1988 | | ஒப்படைப்பு |
| 3 | **இலக்கிய இயல்** | | **150 மணி நேரம்** | |
| 3.1 | தமிழ் இலக்கியம் - ஒரு கண்ணோட்டம் | செப்டம்பர் 1987 | | சோதனை |
| 3.2 | சங்க கால, இடைக்கால இலக்கியம் | மார்ச் 1988 | | சோதனை |
| 3.3 | காப்பியங்கள் | செப்டெம்பர் 1988 | | சோதனை |
| 3.4 | இக்கால இலக்கியம் – கவிதை | | | சோதனை |
| 3.5 | இக்கால இலக்கியம் - உரைநடை | | | ஒப்படைப்பு |
| 4 | **கற்பித்தல் நடைமுறை- பள்ளி சார்ந்த ஆய்வு** | | **150 மணி நேரம்** | ஒப்படைப்பு |
| | **மொத்தம்** | | **600 மணி நேரம்** | |

‘‘கல்வியியல் உயர்சான்றிதழ் எனப்படும் இப்பணியிடைப் பயிற்சி வகுப்புத் தொடங்கப்பட்டதன் தலையாய நோக்கம் உயர்நிலைப்பளள்ளகளில் தமிழ் பயிற்றுவிக்கும் பட்டதாரிகள் அல்லாத தமிழாசிரியர்களின் தமிழ்மொழி, தமிழ் இலக்கிய அறிவை வளர்ப்பதோடு, தமிழாசிரியர்களுக்குத் தொழில் சார்ந்த கற்பித்தல் முறைகளையும் கற்பிப்பதேயாகும்’’ (இராமையா, 2000:iv).

பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டபோது, முதல் வகுப்பில் 22 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் உயர்நிலைப் பள்ளிகளில் கற்பித்தவர்கள். அடுத்து வந்த பயிற்சி வகுப்பில் பங்கேற்ற 19 ஆசிரியர்களுள் ஏழு பேர் தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள். மூன்றாம் வகுப்பில் பங்கேற்ற 14 பேரில் பத்துப்பேர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள். ஒருவேளை எதிர்பார்த்த அளவுக்கு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பில் பங்கேற்க இயலவில்லையோ என்று இங்குச் சிந்திக்கத் தோன்றுகிறது. ஆனால், இராமையா (2000, ப. vi) இது குறித்துக் கூறும்போது, தொடக்கப்பள்ளியில் பயிற்றுவித்த ஆசிரியர்கள் பயிற்சி முடித்த நிலையில் பின்னாளில் தேவை ஏற்படும்போது அவர்களை உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்பிக் கற்பிக்கவைப்பதற்கு

ஏதுவாகக் கல்வி அமைச்சு இவ்வாறு ஏற்பாடு செய்திருக்கலாம் என்கிறார். இந்தப் பயிற்சி வகுப்பில் கற்றுத்தரப்பட்ட பாடங்களை நோக்கும்போது அவை மலாயாப் பல்கலைக்-கழகத்தில் கற்றுத்தரப்பட்ட இளங்கலை BA., தமிழ் வகுப்பின் பாடத்தில் முக்கால் பகுதி என்கிறார் அவர். இது குறிப்பிடத்தக்க ஒரு செய்தி.

பட்டயக்கல்வி பயிற்சி வகுப்பில் பங்கேற்ற ஆசிரியர்கள் தங்களது உள்ளடக்க அறிவான தமிழ் மொழி, தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், புதிய கற்பித்தல் முறைகள் ஆகியவற்றை ஆழமாக அறிவதுடன் சுயமாகத் தாமே புதிய தலைப்புகளில் சிந்தித்து வகுப்பறை சார்ந்த ஆய்வை நடத்தும் வகையில் பயிற்சி பெற்றனர். 90 மணி நேர அளவைக் கொண்ட இப்பாடத்தின் உள்ளடக்கத்தில் இறுதியாக இடம்பெற்ற பள்ளி சார்ந்த ஆய்வு பாடத்தில் ஆசிரியர்கள் தாங்கள் கற்றல் கற்பித்தலில் சந்தித்தச் சிக்கல்களில் இன்றியமையாத ஒன்றைத் தெரிவு செய்து அது குறித்து பள்ளியில் தரவைத் திரட்டி ஆராய்வது நோக்கமாக அமைந்திருந்தது. இப்பாடத்தில் கல்வியியல் ஆய்வு, தொடர்புநூல் திறனாய்வு, தரவுகளைத் திரட்டி ஆய்வு மேற்கொள்ளுதல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவில் முடிவையும் பரிந்துரைகளையும் தருதல் என்ற நிலையில் ஆய்வு நெறிமுறை கற்றுத்தரப்பட்டது. தொடர்ந்து கல்விக்கழக விரிவுரையாளர் ஒருவர் பயிற்சியில் பங்குபெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் ஆய்வு மேற்பார்வையாளராக இருந்து உரிய வழிகாட்டுதலை வழங்கி ஆய்வேடு எழுத உறுதுணை புரிந்தார். அந்த ஆய்வேடுகள் சிங்கப்பூரில் தமிழ் மொழிப் புழக்கம், இளையர்களிடையே குறிப்பாக மாணவர்களிடையே தமிழ் மொழி படிப்பது குறித்த கருத்துக் கணிப்புகள், தமிழ் மொழிப் பாடங்களைப் பள்ளியில் எவ்வாறு சுவைபடக் கற்பிப்பது (கேட்டல், பேசுதல் திறன்கள் குறித்த பலவகைத் தலைப்புகள், மவுன வாசிப்பு, உரக்க வாசிப்பு, வாசிப்புப் பனுவலின் ஏற்புடைமை, வாசித்தலில் தொழில்நுட்பக் கருவிகளின் பங்கு, எழுதுதல், எழுதுதல் சார்ந்த திறன் மேம்பாடுகளை அதிகரித்தல், பிழை ஆய்வு, பிழைகளைக் குறைப்பதில் மற்றும் களைவதில் சொல்வதெழுதுதலின் பங்கு என்பன உட்பட இவை போன்ற பல தலைப்புகள்) குறித்த பல தலைப்புகளில் ஆய்வேடுகள் இடம்பெற்றன. அவ்வகையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு-களைச் சுருக்கி இராமையா நான்கு தொகுப்பு நூல்களை வெளியிட்டார். அந்த நூல்களின் பெயர் அனைத்துத் தொகுதிகளுக்கும் ஒரே பெயராக அமைந்திருந்தது. ஒவ்வொரு தொகுதிக்கும் ‘தொகுதி 1’, ‘தொகுதி 2’, ‘தொகுதி 3’, ‘தொகுதி 4’ என்று தகவல் பெயரில் தரப்பட்டிருந்து. நூல் தொகுதியின் பெயர் வருமாறு.

- இராமையா கா., (தொ.ஆர்.) (2000). “சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்”(தொகுதி I). சிங்கப்பூர்:தேசியக்கல்விக் கழகம்.
- இராமையா கா., (தொ.ஆர்.) (2000). “சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்”(தொகுதி II). சிங்கப்பூர்:தேசியக்கல்விக் கழகம்.
- இராமையா கா., (தொ.ஆர்.) (2000). “சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்”(தொகுதி III). சிங்கப்பூர்:தேசியக்கல்விக் கழகம்.
- இராமையா கா., (தொ.ஆர்.) (2000). “சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்”(தொகுதி IV). சிங்கப்பூர்:தேசியக்கல்விக் கழகம்.

ஒவ்வொரு தொகுதியிலும் இடம்பெற்றிருந்த நுழைவாயில் பகுதி (இராமையா, 2000:iv-xiii) மேற்கூறிய பயிற்சி வகுப்பினைப் பற்றிய செய்திகளை விரிவாகத் தந்துள்ளது. இத்தகு ஆவணப்படுத்தல் ஆய்வுலகில் இன்றியமையாதது.

**அட்டவணை 2:** தேசியக் கல்விக் கழகத் தமிழ்த்துறை நடத்திய கல்வியியல் உயர்-சான்றிதழ் வகுப்பு/கல்வியியல் உயர்பட்டய வகுப்பு குறித்த விவரங்கள், அவை சார்ந்த கட்டுரைகளின் தொகுப்புகள் குறித்த விவரங்கள்.

| எண் | வகுப்பின் பெயர் | தொடங்கப்பட்ட நாள் | முடிவுபெற்ற நாள் | பங்கேற்றோர் | நூலில் இடம்பெற்ற ஆசிரியர்களின் கட்டுரைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | கல்வியியல் உயர் சான்றிதழ் வகுப்பு (Advanced Certificate in Education) | 25.03.1986 | 12.03.1988 | 22 | 22 பேரின் படைப்புகளும் தலா 11 என்ற முறையில் முதல் இரு தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன. |
| 2 | கல்வியியல் உயர் சான்றிதழ் வகுப்பு (Advanced Certificate in Education) | 06.07.1987 | 27.05.1989 | 19 | 16 பேரின் கட்டுரைகள் மூன்றாம் தொகுதியில் இடம்பெற்றுள்ளன |
| 3 | கல்வியியல் உயர்பட்டய வகுப்பு (Advanced Diploma in Education) எனப் பெயர் மாற்றம் பெற்றது | 09.07.1990 | 28.05.1992 | 14 | 13 கட்டுரைகள் நானகாம் தொகுதியில் இடம்பெற்றுள்ளன |

இங்கு மேலே தரப்பட்டுள்ள அட்டவைண 2ஐ ஆழமாக நோக்கும்போது, இந்த வகுப்புகள் மூன்றாக அமைந்திருந்தாலும் அவை அனைத்தும் அதிக இடைவெளியின்றி நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, முதல் வகுப்புத் தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருக்கும்-போதே இரண்டாம் வகுப்பு நடைபெற்றுள்ளது. இரண்டாம் வகுப்புக்குப்பின் சிறிது இடைவெளி தரப்பட்டு மூன்றாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மூன்றாம் வகுப்பு நடைபெறும்போது கல்விக்கழகத்தின் பெயர் மாற்றம், அது தொடர்பான நிர்வாகக் கலந்துரையாடல்கள் நடைபெறுவதும் இடையில் நடைபெற்றிருக்கும். வகுப்பின பெயரும் சான்றிதழ் வகுப்பு என்ற நிலையிலியிருந்து பட்டய வகுப்பாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

இவை அனைத்தும் தேசியக் கல்விக்கழக விரிவுரையாளர்களின் வழக்கமான பணிக்கு முந்திய ஆசிரியர்ப் பயிற்சி, ஆய்வுப்பணி, பதிப்பு, நிர்வாகப்பணி ஆகிய அனைத்துக்கும் இடையில் நடைபெற்றமை இங்குக் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய-தாகும். இம்முயற்சி அரிய முயற்சி என்று பாராட்டவேண்டிய முயற்சி. இதுவும் இது சார்ந்த நூல் வெளியீடும் உலகத்தமிழ்க் கல்வி வரலாற்றில் மைல் கல் எனலாம். ஏனெனில் இத்தகு முயற்சியை முறையாகச் செய்வதும் அதைப் பின்னாளில் வருவோர் அறியும்வகையில் ஆவணப்படுத்திவைப்பதும் சிங்கப்பூரின் தமிழ்க்கல்விச் சேவையை உலகறிய வைக்கும் முயற்சியாகும். ஆய்வு நூல் தொகுப்புகளில் சிலரது ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடப்-படாமைக்கு அவர்களது ஆய்வு ஏடுகள் மீண்டும் தமிழ்ப்பகுதியில் திருப்பித்தரப்படவில்லை என்பதாகும். இந்தத் தொகுப்பு நூல்கள் முழு ஆய்வேட்டையும் சுருக்கி ஒரு கட்டுரையாக அமைத்துத் தரப்பட்டுள்ளது. இன்று அது ஓர் அரிய ஆய்வு பற்றி அறிய உதவும் ஆவணமாகத் தமிழில் அமைந்துள்ளது.

பணியிடைப் பயிற்சி என்பது ஒரு வாரத்தில் மூன்று நாள்களுக்கு நடைபெறுவது ஒரு புறம் என்றிருக்க, பல வாரங்களுக்கு நடைபெறுவதும் உண்டு. இத்தகு ஆழமான வகுப்புகள் ஆசிரியர்களுக்கு ஒரு முழுமையான புரிந்துணர்வையும் குறிப்பிட்ட ஒரு தலைப்பில் கூடுதல் மேம்பாட்டையும் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவை குறித்து திண்ணப்பன்(1993) அரிய தகவல்களைப் பதிவு செய்துள்ளார். அத்தகு வகுப்புகள் குறித்த பட்டியல் வருமாறு:

- பணியிடைப் பயிற்சி எனும்போது ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளில் இரண்டாம் மொழியாகத் தமிழைக்கற்பித்தல் - தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கானது (1977)
- தமிழாசிரியர் தரமேம்பாட்டுப் பணியிடைப் பயிற்சிவகுப்புகள் (தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கானது - இலக்கணம், மொழியியல், தமிழ் ஒலியியல், இலக்கிய வரலாறு- பாடப்பொருளறிவு மேம்பாடு நோக்கியது (1980கள்).
- தமிழாசிரியர் தரமேம்பாட்டுப் பணியிடைப் பயிற்சிவகுப்புகள் (உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கானது - இலக்கணம், மொழியியல், தமிழ் ஒலியியல், இலக்கிய வரலாறு- பாடப்பொருளறிவு மேம்பாடு நோக்கியது (1980கள்)

இனி அவை மற்றும் அவை போன்ற சில வகுப்புகள், முயற்சிகள் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. தேசியக் கல்விக் கழம் புதிய ஆய்வுக் கண்டுபிடிப்புகளைத் தாமே கண்டறியும் வகையில் அல்லது புதிய ஆய்வு மேம்பாடுகளை அறியும் நிலையில் அவை குறித்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி அல்லது பயிலரங்கை ஏற்பாடு செய்து அவர்களது மேம்பாட்டுக்கு வழி செய்துள்ளது. அவ்வகையில் தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம் ஏற்பட்டபோது, சிங்கப்பூரில் அவ்வாறு மாற்றம் பெற்ற எழுத்துகளைக் கற்பிக்கும் வகையில் கையேடு ஒன்றைத் தமிழ்த்துறையின் விரிவுரையாளர்கள் 1984இல் தயாரித்து வெளியிட்டனர். அவை தொடர்பாக உரிய பயிற்சியை வழங்கும் வகையில் பயிலரங்கு ஒன்றைக் கல்வி அமைச்சுடன் இணைந்து தமிழ்த்துறை நடத்தியது.

உயர்நிலையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு 90மணி வகுப்பாகவும் தொடக்க-நிலையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு 180மணி நேர வகுப்பாகவும் இவ்வகுப்பு அமைந்தது. இவ்விரு வகுப்புகளும் வாரத்துக்கு 3 மணிநேர வகுப்பு என்ற முறையில் பல வாரங்களுக்குத் தொடர்ந்து நடைபெற்றது. இங்கு உயர்நிலையைவிடத் தொடக்கநிலை ஆசிரியர்களுக்கு அதிக நேர அளவில் பணி மேம்பாட்டு வகுப்பு இடம்பெற்றது அவர்களுக்கு நல்ல அடித்தளமிடும் வகையில் அமைந்திருக்கலாம்.

வாசிப்புத்திறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த ஆய்வை மேற்கொண்ட நா.கோவிந்தசாமி அது குறித்த முன்னேற்றங்களை, விளக்கங்களை பயிலரங்குகள், பணியிடைப் பயிற்சி வகுப்புகள் வழியே எடுத்துரைத்தார். அவர் கணினி தொடர்பான பணியிடைப்யிற்சி வகுப்புகளையும் நடத்தினார். அவ்வகையில் அவரது வீனஸ் மென்-பொருள் பயிற்சிவகுப்பு, கணியன் குறித்த பயிற்சி வகுப்பு ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை 1990களின் ஆரம்ப ஆண்டுகளில் இடம்பெற்றன. இராமையா தமது பிழை ஆய்வு, ஆசிரியர்களின் வினாக்கள் குறித்த பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்து நடத்தினார்.

நேரடியாகப் பயிற்சி, பயிலரங்குகளை ஏற்பாடு செய்துவதுடன் பகிர்வரங்குகளையும் கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்து நடத்தியுள்ளது. 1988முதல் கல்விக்கழகம் என்று முன்பு அழைக்கப்பட்ட தேசியக் கல்விக்கழகம் தமிழாசிரியர்களுக்குப் பகிர்வரங்குகளையும் கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்துவந்துள்ளது. அவ்வகையில் தேசியக் கல்விக்-கழகத்தில் 1988 முதல் 2000ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற கருத்தரங்குகளை இராமையா தமது நூலில் பதிவ செய்துள்ளார். இதுவரை பதினைந்துக்கும் மேற்பட்ட பகிர்வரங்குகளை / கருத்தரங்குகளை கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இவை யாவும் முறைசார்ந்த நிலையில் பணி மேம்பாட்டு வகுப்புகளாக இல்லாது முறைசாரா நிலையில் பணிமேம்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையில் முறைப்படி ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட பகிர்வரங்குகள், கருத்தரங்குகள் ஆகும்.

பணியிடைப்பயிற்சி வகுப்புகள், பணி மேம்பாட்டு வகுப்புகள் ஆகியன முறை சார்ந்த நிலையில் இருந்துவந்தன எனினும் அவற்றின் தொடர்ச்சி அதிகம் தேவைப்படுகிறது. அவ்வையில் தேசியக் கல்விக்கழகம் தொடர்ந்து பல பணியிடைப்பயிற்சி வகுப்புகளை நடத்துவது சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களின் கொள்ளளவை ஆழமாகவும் அகலமாகவும் ஆக்கும் தன்மையது என்பதுடன் ஒவ்வோர் ஆசிரியரும் தொடர்ந்து இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு பயிற்சி வகுப்பில் பங்கேற்பதன்வழியே தம்மைத் தொடர்ந்து காலத்துக்-கேற்ற வகையில் பட்டத்தொழில் நோக்கில் தக்கவைத்துக் கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து கல்வியாளர் வீரமணி (2015 - தனிப்பட்ட இடைவினை-யாடல்) குறிப்பிடும்போது குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குப்பின் ஆசிரியர் குறிப்பிட்ட பயிற்சி வகுப்புக்குச் செல்வது அவசியம் என்று அமைவது நன்று என்றார். இது உண்மையில் ஏற்புடைய ஒன்று என்பதுடன் குறிப்பிட்ட பயிற்சி வகுப்புகளை முடித்ததும் அது ஒரு

சான்றிதழுக்கோ பட்டயத் தகுதிக்கோ இட்டுச்செல்லும் வகையில் சில புதிய முயற்சிகளை மேற்கொள்ளப்படுவதும் இங்கு அவசியமானதாக அமைகிறது. இன்னும் கூறப்போனால், குறிப்பிட்ட அளவு பணியிடைப் பயிற்சி வகுப்புகளை முடித்தவர்கள் படிப்படியே தங்களது பயிற்சி வகுப்புகளை முடித்துச் செல்லும்போது (Accreditation path) வழியில் ஒவ்வொரு நிலையிலும் ஒரு புதிய தகுதியைப் பெறவும், முதுகலைப் பட்டத்தைப் பெறவும் வழிவகுப்பது தமிழாசிரியர்களின் பணி மேம்பாட்டுக்கும் பட்டத்தொழில் உயர்வுக்கும் வழிவகுக்கும் (அட்டவணை 3ஐ பார்க்கவும்).

**அட்டவணை 3: தமிழாசிரியர் பணிமேம்பாட்டு முன்னேற்றம் - பரிந்துரைகள்**

| வகுப்பின் பெயர் | கால அளவு | பெறும் சான்றிதழின் மதிப்பு | கட்டாயம் இடம்பெற வேண்டிய கூறு/ பயிற்சி வகுப்பு |
|---|---|---|---|
| ஒரு பணியிடைப் பயிற்சி வகுப்பு | 24 மணி நேரம் (3 நாள்கள்) | ஒரு பயிற்சி வகுப்பு நிறைவு | பள்ளி சார்ந்த ஆய்வு |
| 10 பணியிடைப் பயிற்சி வகுப்புகள் (வெவ்வேறு தலைப்பிலானவை) | 10 X 24 = 240 மணி நேரம் | உயர்நிலைச் சான்றிதழ்நிலைத் தகுதி (Certificate) | பள்ளி சார்ந்த ஆய்வு |
| 15 பணியிடைப் பயிற்சி வகுப்புகள் | 15 X 24 = 360 மணி நேரம் | பட்டயத்தகுதி (Diploma) | பள்ளி சார்ந்த ஆய்வு |
| 25 பணியிடைப் பயிற்சி வகுப்புகள் | 25 X 24 = 600 மணி நேரம் | உயர்பட்டயத் தகுதி (Advanced Diploma) | பள்ளி சார்ந்த ஆய்வு |
| 35 பணியிடைப் பயிற்சி வகுப்புள் | 35 X 24 = 840 மணி நேரம் | பட்டத்தகுதி (Degree) | பள்ளி சார்ந்த ஆய்வு |
| 50 பணியிடைப் பயிற்சி வகுப்புகள் | 50 X 24 = 1200 மணி நேரம் | முதுகலைப் பட்டத்தகுதி (Masters Degree) | பள்ளி சார்ந்த ஆய்வு |

மேற்கூறப்பட்ட பரிந்துரைகள், அண்மையில் அதிக அளவில் தமிழாசிரியர் பணியில் புதிதாக இணைந்துள்ள இளம் தமிழாசிரியர்களுக்கும் அயல்நாட்டிலிருந்து வரவழைக்கப்-பட்ட தமிழாசிரியர்களுக்கும் பெரிதும் உதவியாக அமையும். தவிரவும் உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தமிழாசிரியராகப் பணிபுரிந்துவரும் மூத்த ஆசிரியர்-

களுக்கும் மேலே கூறப்பட்ட இரு சாராருக்கும் இடையே உள்கட்டமைப்புத் தொடர்புகள் உருவாகவும் தமிழ்மொழிக் கல்வியில் ஆய்வு நோக்கிய புதிய மாற்றங்கள், முன்னேற்றங்கள் இடம்பெறவும் வழி கிடைக்கும். இது கனவல்ல நனவு என்று கூறும் நாள் விரைவில் வரும் என்று நம்புவோம்! சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக்குவோம்!

இதுவரை இங்கு இடம்பெற்ற தகவல்கள் மிகவும் குறைவாக இருந்தாலும் இக்கட்டுரையை வாசிப்போர் தொடர்ந்து தங்களது பணி மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகளைப் பற்றிக் கட்டுரையாளருக்குத் தகவல் தந்தால் இக்கட்டுரையின் வளர்ச்சி குறித்துத் தொடர்ந்து சிந்திக்கப்படும்.

தேசியக் கல்விக்கழகமானது நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாகும். நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் தொடர்ந்து தனது ஆய்வு மற்றும் மேம்பாட்டுத்துறையில் வேகமாக முன்னேறிக்கொண்டுவருகிறது. அதன் உலகத்தரவரிசை முன்னேற்றம் தேசியக் கல்விக் கழகத்தில் பணிபுரியும் தமிழ்த் துறையினருக்கும் பொருந்தக்கூடிய எதிர்பார்ப்பே. அவ்வகையில் அரிய பல முயற்சிகளும் பணி மேம்பாடுகளும் அவை சார்ந்த செயல்பாடுகளும் தமிழாசிரியர்களை நோக்கிவரும் நாள் மிக அருகில் உள்ளது.

‘சிம்’ (SIM) பல்கலைக்கழகத்தில் ஜனவரி 2006இல் பகுதிநேர வகுப்பாகத் தமிழ் மொழி, இலக்கியப் பட்டக்கல்வி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது (http://www.unisim.edu.sg/Happenings/newsrelease/Pages/MR2005-5.aspx). ஆகஸ்டு 2016இல் தேசியக் கல்விக் கழகத்தில் ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் துறையில் கல்வியியலுடன் கூடிய முழுநேரத் தமிழ்ப் பட்டக்கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**மிக்க நன்றி உரித்தாகுக!**

இந்தக் கட்டுரையின் ஆசிரியர் கட்டுரையை எழுதும்போது அயல்நாட்டில் பணி நிமித்தம் தங்கியிருந்தபோது தேவையான கட்டுரையின் பதிவுகளைத் தங்களது அலுவலக, குடும்பப் பணிகளுக்கு இடையில் தேடி மின்னஞ்சல் வழியே அனுப்பிப் பேருதவி புரிந்த முனைவர் பொன் சசிகுமாருக்கும், திருமதி ரெஹனா பானுவுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன் .

**மூல ஆதாரங்கள்:**

*இக்கட்டுரைக்கு மூல ஆதாரங்களாக முனைவர் சுப. திண்ணப்பன், முனைவர் கா. இராமையா ஆகியோரின் இரு நூல்கள் உதவியாக அமைந்தன. அவை வருமாறு:*


இராமையா கா., *(தொ.ஆர்.) (2000). "சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்"(தொகுதிகள் I-IV). நுழைவாயில் iv-xiii. சிங்கப்பூர்: தேசியக்கல்விக் கழகம்.*

திண்ணப்பன் சுப., *(1993). சிங்கப்பூரில் தமிழாசிரியர் பயிற்சி. சிங்கப்பூரில் தமிழ் மொழியும் இலக்கியமும். ஆசிரியர்: சுப. திண்ணப்பன். பப. 79 - 96. புதுக்கோட்டை, இந்தியா: தேன் வள்ளியம்மை பதிப்பகம்.*

# தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாடு - அன்றும், இன்றும்

**தமிழரசி சுப்பிரமணியம்**
முதன்மை ஆசிரியர் (தமிழ்மொழி)
தரநிலை ஆய்வுப் பிரிவு
சிங்கப்பூர் ஆசிரியர் கலைக்கழகம்

## முன்னுரை

பாடப்புலமையும் (subject mastery) கற்பித்தலியல் சார்ந்த பாடப்பொருளறிவும் (Pedagogical content knowledge) ஆசிரியருக்கு இரு கண்கள் போன்றவை. தமிழாசிரியர் என்பவர் தமிழ்மொழி, இலக்கணம், இலக்கியம் முதலியவற்றில் பாடப்-புலமையும் கற்பித்தலியல் சார்ந்த பாடப்பொருளறிவையும் பெற்றுத் தம் திறன்களை மேம்படுத்திக்கொள்ளவேண்டும். பணிக்கு முந்திய பயிற்சி (Pre-service) பெற்ற பிறகு, பயிற்சிபெற்ற ஆசிரியராக நியமிக்கப்படுபவர், பணியிடைப் பயிற்சிகளில் கலந்துகொண்டு தம்மைத் தொடர்ந்து தகுதிப்படுத்திக்கொள்வது இன்றியமையாதது. அவ்வகையில் தமிழாசிரியரின் பணிசார் மற்றும் கற்றல் கற்பித்தல் திறன் மேம்பாட்டிற்கான வழிகளும் வாய்ப்புகளும் கடந்த 50 ஆண்டுகளில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கண்ணோட்டமிடுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

1961-இல் தொடங்கி 1972 வரையிலான காலக்கட்டத்தில் பணிக்கு முந்திய பயிற்சியைத் தமிழாசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (Teachers Training College) வழங்கியது. 1968ல் இயங்கிவந்த 14 தமிழ்த் தொடக்கப்பள்ளிகளிலும் ஒரு தமிழ் உயர்நிலைப் பள்ளியிலும் சுமார் 101 தமிழாசிரியர்கள் பணியாற்றியதாக அறியப்-பட்டுள்ளது. இவர்களுக்கும் ஆங்கிலப் பள்ளிகளில் பணியாற்றிவந்த தமிழாசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இவையாவும் கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. 1971ம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும், கல்வி அமைச்சுப் பள்ளிகள் ஆய்வாளர் பகுதியும் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பாக ஓர் ஆய்வரங்கினை மேற்கொண்டன. கல்வி அமைச்சு அதிகாரிகளும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்த் துறை விரிவுரையாளர்களும் பள்ளித் தமிழாசிரியர்களும் படைத்த கட்டுரைகள் ஆய்வரங்கில் இடம்பெற்றுள்ளன. அதுவே சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பாக நடைபெற்ற முதல் ஆய்வரங்கு என்று ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

ஆசிரியர்க்கான பணிக்கு முந்திய பயிற்சி, பணியிடைப் பயிற்சி, ஆய்வுப்பணி ஆகிய மூன்று பரப்புகளிலும் தமிழாசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துணை புரிந்துள்ளது.

**கல்விக் கழகம்**

1973 - 1991 வரையிலான காலக்கட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கல்விக் கழகம் (Institute of Education) எனப் பெயர் மாற்றம் கண்டு அரசாங்கத்தின் ஆணை பெற்ற நிறுவனமாக இயங்கத் தலைப்பட்டது. ஆசிரியர் பணிக்குமுந்திய பயிற்சி, பணியிடைப் பயிற்சி, ஆய்வுப் பணி ஆகியவற்றைக் கல்விக்கழகம் கவனித்துவந்தது.

'ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளில் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பித்தல்' என்னும் பயிற்சி வகுப்பு ஒன்று 1977ல் பணியிடைப் பயிற்சி வகுப்பாக நடத்தப்பெற்றது.பிறகு, உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கும் தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கும் 1980களில் தமிழாசிரியர் தரமேம்பாட்டுப் பணியிடைப் பயிற்சி (Upgrading Course for TL Teachers) வகுப்புகள் நடத்தப்பட்டன. இவற்றின்வழித் தமிழாசிரியர்கள் ஏறத்தாழ 120 பேர் பயன்பெற்றனர் எனலாம். இவர்களின் பாடப்புலமை மேம்பாட்டிற்கு வழிசெய்யும் நோக்கத்துடன் இலக்கணம், மொழியியல், தமிழ் ஒலியியல், இலக்கிய வரலாறு ஆகிய பாடங்கள் நடத்தப்பெற்றுள்ளன. உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கு 90 மணிநேரம், தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கு180 மணி நேரம் என்னும் கால அளவில் வாரத்திற்கு 3மணி நேரம் கல்விக் கழகத்தில் பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**தேசியக் கல்விக் கழகம்**

1991ம் ஆண்டு ஜுலைத் திங்கள்முதல் கல்விக் கழகமும் உடலுரக் கல்லூரியும் (College of Physical Education) ஒருங்கிணைந்து 'தேசியக் கல்விக் கழகம்' (National Institute of Education)என்னும் பெயரில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி பெற்ற உயர்கல்வி நிறுவனமாயிற்று.

அந்தக் காலக்கட்டத்தில் சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழிப் பட்டக்கல்வி வழங்கப்படாததால் தமிழாசிரியர்கள் ஏறத்தாழ 90 விழுக்காட்டினர் பட்டதாரி அல்லாதவர்களாக இருந்துள்ளனர். பட்டம் பெறாத தமிழாசிரியர்கள் பலர் உயர்நிலைப்-பள்ளிகளில் தமிழ் கற்பிப்பது தொடர்பாகத் தங்கள் அக்கறைகளை முன்வைத்தனர். இதற்குத் தற்காலிகமாகத் தீர்வு காணக் கல்வி அமைச்சு பட்டதாரி தமிழாசிரியர்களைத் தமிழகத்திலிருந்து வரவழைத்துப் பள்ளிகளில் பணியமர்த்தியது. அத்துடன் உயர்நிலைப்-பள்ளிகளில் கற்பிக்கும் தமிழாசிரியர்களின் கல்வித்தகுதியை வலுப்படுத்த, 'கல்வியியல் உயர் சான்றிதழ்' (Advanced Certificate in Education–Tamil Studies) என்னும் 600 மணி நேரப் பணியிடைப் பயிற்சித் திட்டத்தைத் தேசியக் கல்விக் கழகத்தில் நடத்தக்கல்வி அமைச்சின் பணியர் பயிற்சிப் பகுதி (Staff Training Branch) ஏற்பாடு செய்தது. இத்திட்டம் பின்னர், 'கல்வியியல் உயர் பட்டயம்' (Advanced Diploma in Education–Tamil Studies) எனப் பெயர் மாற்றம் கண்டது. இப்பயிற்சிக்கான பாடத்திட்டம் தமிழ்மொழி, இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றுடன் கற்பித்தலியல் மற்றும் கற்பித்தல் நடைமுறைகுறித்த பள்ளிசார்ந்த ஆய்வு மேற்கொள்வதையும் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தது. 1986முதல் 1988வரைமுதல் வகுப்பு, 1987முதல் 1989வரை இரண்டாம் வகுப்பு, 1990முதல்

1992வரை மூன்றாம் வகுப்பு என்றவாறு வெவ்வேறு காலக்கட்டங்களில் தேசியக் கல்விக் கழக விரிவுரையாளர்களால் இவ்வகுப்புகள் நடத்தப்பட்டன. மொத்தம் 55 தமிழாசிரியர்கள் இப்பணியிடைப் பயிற்சி வகுப்புகளில் பயின்று தம் பணித்திறனை மேம்படுத்திக்கொண்டுள்ளனர். இத்திட்டம் தொடக்கத்தில் உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளிலும் பணிபுரியும் பட்டதாரி அல்லாத தமிழாசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டது. பின்னர், தொடக்கப்பள்ளிகளில் கற்பித்துவந்த தமிழாசிரியர்களுக்கும் இப்பயிற்சி வகுப்புகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை வெற்றிகரமாக முடித்த தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் கற்பிக்க அனுப்பப்பட்டனர். இப்பயிற்சி வகுப்பில் பயின்றபோது இவர்கள் ஒவ்வொருவரும் மேற்கொண்ட பள்ளிசார்ந்த ஆய்வுகள் அனைத்தும் கட்டுரைகளாகத் தொகுக்கப்பெற்று, தேசியக் கல்விக் கழகத்தின் மேனாள் தலைவர் முனைவர் கா. இராமையா அவர்களின் அரும் முயற்சியால் 2000ம் ஆண்டு 4 தொகுதிகள் கொண்ட நூல்களாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழாசிரியர்களுக்குப் பட்டக்கல்வி**

1980ம் ஆண்டுத் தொடக்கத்தில் கல்வி அமைச்சு நிதி ஆதரவு வழங்கித் தமிழாசிரியர்கள் சிலரைத் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இளங்கலைப் பட்டக்கல்வி பயில அனுப்பிவைத்தது. பட்டப்படிப்பிற்குப் பின் நாடு திரும்பிய அவர்கள் முக்கியப் பொறுப்புகளில் பணியமர்த்தப்பட்டனர். இச்சமயத்தில் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் முயற்சியினால் தமிழகத்தின் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழில் அஞ்சல்வழி இளங்கலைப் பட்டக்கல்வியை (correspondence course) மேற்கொள்ளும் வாய்ப்புத் தமிழாசிரியர்களுக்குக் கிட்டியது. கல்வி அமைச்சு அஞ்சல்வழி இளங்கலைப் பட்டத்தை அங்கீகரிக்கவில்லை. ஆயினும், அவ்வாறு பயின்று பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள் தாம் பட்டதாரி என்னும் தகுதி பெற்றமைக்காக மனநிறைவுகொண்டனர் எனலாம். அதன் பிறகு, தமிழகம் சென்று பட்டக்கல்வி மேற்கொள்ள விழைந்த தமிழாசிரியர்களுக்கு மூவாண்டு பணிவிடுப்பளித்து இளங்கலைப் பட்டக்கல்வி பயிலும் வாய்ப்பினை கல்வி அமைச்சு ஏற்படுத்தித் தந்தது. அவ்வாய்ப்பினைத் தமிழாசிரியர்கள் கணிசமானோர் பயன்படுத்திக்கொண்டு, தமிழகத்தின் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுள் ஒன்றில் சேர்ந்து பயின்று பட்டதாரி ஆசிரியர்களாயினர்.

2000ம் ஆண்டு நேர்காணல் மற்றும் எழுத்துத் தேர்வுக்குட்படுத்தப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட தாய்மொழி ஆசிரியர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொள்ளத் ‘தாய்மொழிகள் விருது’ (Mother Tongue Award) வழங்கப்பட்டது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தித் தமிழகம் சென்று படித்துப் பட்டக்கல்வியை முடித்த தமிழாசிரியர்களும் தற்போது நம்மிடையே உள்ளனர். தமிழகத்திற்குச் சென்று பட்டக்கல்வி மேற்கொள்ள இயலாத தமிழாசிரியர்களுக்காகச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், தொடர்ந்து பல ஆண்டுகள் முயன்று போராடிக் கல்வி அமைச்சின் ஆதரவைப் பெற்று 2006ம் ஆண்டு ‘சிம்’ பல்கலைக் கழகத்தில் (SIM University) தமிழில் பட்டக்கல்வி

தொடங்க வழிவகை செய்தது. தமிழாசிரியர்கள் பலர் ‘சிம்’ பல்கலைக்கழகத்தில் பகுதி-நேரமாகப் பயின்று இளங்கலைப் பட்டம்பெற்றுப் பட்டதாரிகளாகியுள்ளனர். முன்பு அஞ்சல்வழி இளங்கலைப் பட்டக்கல்வியை முடித்திருந்த தமிழாசிரியர்கள் சிலரும் ‘சிம்’ பல்கலைக்கழகத்தில் படித்துக் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற இளங்கலைப் பட்டதாரிகளாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

இளங்கலைப் பட்டம் பெற்றுள்ள தமிழாசிரியர்கள் சிலர் கல்வி அமைச்சின் கல்விமான் நிதி ஆதரவுடன் (MOE Scholarship) முழுநேரமாகத் தேசியக் கல்விக் கழகத்தில் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர். தமிழாசிரியர்கள் வேறு சிலர் தம் சொந்த செலவில் பகுதிநேரமாகத் தேசியக் கல்விக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர். ஒருசிலர் முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர். கல்வி அமைச்சு 2006ம் ஆண்டு பணித்திறன் மேம்பாட்டுத் தொடர்ப் பாடத்தொகுப்பு (Professional Development Continuum Modules - PDCM) என்னும் திட்டத்தில் முதுகலைக் கல்வியியல் பட்டப் படிப்பினைத் தமிழ்மொழிப் புலத்திற்கும் (Tamil Language Faculty) அறிமுகம் செய்தது. ஆசிரியர்கள் தம் கல்வித் தகுதியை மேலும் உயர்த்திக்கொள்ள நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைகழகத்தின் தேசியக் கல்விக் கழகத்தில் தமிழில் முதுகலைக் கல்வியியல் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பட்டம்பெற்ற பட்டதாரி தமிழாசிரியர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் சிலர் தேசியக் கல்விக் கழகத்திலும் தமிழகத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலும் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்; சிலர் முனைவர் பட்டப்-படிப்பினை மேற்கொண்டும் வருகின்றனர்.

**தமிழாசிரியர் தொழில் மற்றும்திறன் மேம்பாடு**

தமிழாசிரியர் தொழில் மற்றும் திறன் மேம்பாட்டிற்குச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கதாகும். தமிழாசிரியர்களுக்குப் பிறமொழி ஆசிரியர்-களுக்கு வழங்கப்படுவது போன்று ஒரே மாதிரியான சம்பளம் கிடைக்க 1955லிருந்து 1970கள்வரை சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் இடைவிடாது முயன்றுள்ளது; அத்துடன், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஒரு துறையான தேசியக் கல்விக் கழகத்தில் தமிழாசிரியர்கள் ‘கல்வியியல் பட்டயப் படிப்போடுகூடிய பட்டக்கல்வி’ மேற்கொள்ள வேண்டு-மென்று போராடிவந்துள்ளது. மேலும், 1970 தொடங்கித் தமிழாசிரியர்கள் தம் தொழில்சார் திறன்களை உயர்த்திக்கொள்ளவும் கல்வியில் மேம்பாடடையவும் பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. அவற்றுள் சில: இசை, ஓவியம், கைவினை வகுப்புகள், கல்வி மதிப்பீட்டு வகுப்புகள், கணினி வகுப்புகள் போன்றவை; மேலும், அஞ்சல்வழி இளங்கலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்களுக்கு உதவும் பொருட்டுத் துணைப்பாட வகுப்புகளையும் ஏற்பாடுசெய்து நடத்தியுள்ளது. அனைத்துலக அளவில் தமிழாசிரியர் பணிசார்திறன் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, சிங்கப்பூரில் முதல் உலகத் தமிழாசிரியர் மாநாட்டுப் பொறுப்பினை ஏற்று 1992ல் ஜூன் திங்கள் 15-18 தேதிகளில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம். அத்துடன், தமிழாசிரியர்களின் வெளி-நாட்டுக் கற்றல் பயணங்களுக்கும் அவ்வப்போது ஏற்பாடு செய்து வந்துள்ளது.

1980ல் நிறுவப்பெற்ற சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் (Curriculum Development Institute of Singapore - CDIS), 1983ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளி-களுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்குமான தமிழ்மொழிப் பாடநூல், பயிற்சிநூல் வரிசை-களையும் கற்பித்தல் வளமைகளையும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டது. 1984முதல் அவை பள்ளிகளில் படிப்படியாக அமலாக்கம் கண்டன. அவற்றையெல்லாம் பயன்விளை-வுமிக்க வகையில் பயன்படுத்தும் வழிமுறைகளைத் தமிழாசிரியர்களுக்கு விளக்கி அவர்தம் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிலரங்குகளும் கருத்தரங்குகளும் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. 1996ஆம் ஆண்டு, டிசம்பர் 10ஆம் தேதிமுதல் சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகமும் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவுப் பிரிவும் (Curriculum Planning Division–CPD) ஒருங்கிணைக்கப்பட்டுப் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு (Curriculum Planning and Development Division - CPDD) எனப் பெயர் வழங்கப்பெற்றுக் கல்வி அமைச்சின் நேரடிப் பார்வையில் இயங்கிவருகின்றது. இப்பிரிவின் தமிழ்ப்பகுதி அதிகாரிகள் தொடக்கப்பள்ளிகளுக்கும் உயர்நிலைப்பள்ளி-களுக்கும் தமிழ்மொழிப் பயிற்றுவளங்களை உருவாக்கும் பொறுப்பினை ஏற்று அவற்றைச் செவ்வனே தொடர்ந்து செய்துவருகின்றனர்.

தேவை கருதி தமிழ்மொழி கற்றலுக்கான மறு ஆய்வுகள் சில 1990களில் மேற்-கொள்ளப்பட்டன. 2000ம் ஆண்டுமுதல் ஒவ்வோர் ஐந்தாண்டுக்கும் ஒருமுறை தாய்மொழி-களுக்கான பாடக்கலைத்திட்ட மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2005, 2010 நடத்தப்பெற்ற மறு ஆய்வுகள் சிங்கப்பூரில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தன எனக் குறிப்பிடலாம். குறிப்பிட்டுக் கூறவேண்டின், 2000ம் ஆண்டில் மேற்-கொள்ளப்பட்ட ஆய்வில் முதன்முறையாக மாணவர்களும், அவர்தம் பெற்றோர்களும், சமூக உறுப்பினர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். பின்னர், அக்குழுக்களின் பரிந்துரைகளுக்கு ஏற்பப் புதிய பாடக் கலைத்திட்டமும் பயிற்றுவளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை நடை-முறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் பாடக்கலைத்திட்டம், கற்பித்தலியல், மதிப்பீடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் ஆகியவை குறித்து தமிழாசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன.

**கல்வி அமைச்சின் தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகம்**

2002ம் ஆண்டு, ஆசிரியர் பணிநிலையின் உச்சத்தை (Pinnacle of Teaching Track) அடைந்தவர்களாக அங்கீகரிக்கப்படும் 'முதன்மை ஆசிரியர்' பணிநியமனம் கல்வி அமைச்சால் நடப்பிற்குக் கொண்டுவரப்பட்டது. 2003ம் ஆண்டு தமிழாசிரியர் ஒருவர் தமிழ்-மொழிக்குப் பொறுப்பேற்று முதன்மை ஆசிரியர் பணியில் அமர்த்தப்பட்டார். 2009வரை முதன்மை ஆசிரியர்கள் குழும நிலையில் அக்குழுமப் பள்ளிகளிலுள்ள ஆரம்பநிலை ஆசிரியர்கள், மூத்த ஆசிரியர்கள் ஆகியோரின் பணித்திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளித்து-வந்தனர். 2010ஆம் ஆண்டுமுதல் சிங்கப்பூர் ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உன்னதநிலைக்கு இட்டுச்செல்லும் நோக்குடன் கல்வி அமைச்சின் 'ஆசிரியர்

தொடர்பகம்' (Teachers' Network) என்னும் அமைப்பு 'சிங்கப்பூர் ஆசிரியர் மன்றம்' (Academy of Singapore Teachers) என்னும் பெயரில் அதிகாரபூர்வமாகக் கல்வித் தலைமை இயக்குநர் (Director General for Education) அவர்களின் தலைமையில் இயங்கத் தொடங்கியது. அப்போதிலிருந்து முதன்மை ஆசிரியர்கள் அந்த அமைப்பகத்திலும் மொழி நிலையங்களிலும் தேசியநிலையில் பணியாற்றி வருகின்றனர்.

சிங்கப்பூர்ச் சீனமொழி, மலாய்மொழி ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்காக அவ்வம்மொழி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுபோல 2010ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11ம் நாள் தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டிற்காகத் 'தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகம்' உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தைத் தளமாகக்கொண்டு செயல்படத் தொடங்கியது. அதன் முக்கியப் பணி கற்பித்தலியல், மதியுரைத் திட்டம், வளமைத் தயாரிப்பு, பாடம்சார் ஆய்வு ஆகிய நான்கு களங்களில் தமிழாசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவதாகும். அவற்றுள் ஆரம்பநிலை ஆசிரியர், வழிகாட்டு ஆசிரியர், மூத்த ஆசிரியர் ஆகியோரைக் குவிநோக்கிய பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

தற்போது, தலைமை முதன்மை ஆசிரியர் ஒருவரும் முதன்மை ஆசிரியர்கள் மூவரும் தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயலாற்றி வருகின்றனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: பயிலரங்குகள், கருத்தரங்குகள், கலந்தாய்வரங்குகள், தமிழாசிரியர் வழிநடத்தும் பகிர்வரங்குகள், கற்றல் தொடர்பிணைப்புக் கற்றல் சமூகக் கூட்டங்கள் (Network Learning Communities), ஆசிரியர் பணிநிலை பற்றிய கலந்துரையாடல்கள், ஆரம்பநிலைத் தமிழாசிரியர்களுக்கான பணிமேம்மபாட்டுத் திட்டம் போன்றவையாகும். கற்றல் கற்பித்தலிலும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்திலும் கைதேர்ந்த தமிழாசிரியர்களின் திறமைகளைப் பாராட்டிப் பயன்படுத்தி, கற்பித்தல் வளமைகளைத் அவர்களுடன் இணைந்து தயாரித்து வழங்கும் முயற்சியிலும் முதன்மை ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் செயலாய்வு, பாட ஆய்வு போன்ற பாடம்சார் ஆய்வுப் பணிகளில் தமிழாசிரியர்கள் ஈடுபடவும், ஆய்வில் கண்டறிந்தவற்றைத் தேசிய நிலையிலும் அனைத்துலக மாநாடுகளிலும் படைத்திடவும் முதன்மை ஆசிரியர்கள் வழிகாட்டுகின்றனர். வெளிநாட்டுக் கற்றல் பயணங்கள்வழித் தமிழாசிரியர்களின் கற்றலை விரிவுபடுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**முடிவுரை**

ஆசிரியர்கள், கல்வியாளர்கள் என்னும் வகையில் தங்கள் முழுத்திறன்களையும் வளர்த்துக்கொள்ள ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கிடக் கல்வி அமைச்சு பல முனைப்புகளைச் செயல்படுத்திவந்துள்ளது; தொடர்ந்து செயல்படுத்தும் என்பது திண்ணம். 'நேற்றுக் கற்பித்த முறையிலேயே இன்றும் கற்பித்தல் என்பது சிறார்களின் எதிர்காலத்தைக் கொள்ளையடிப்பதற்குச் சமமானது' என்றார் ஜான் டூவி (John Dewey).

ஆகையால், காலத்தின் கட்டாயத்திற்கேற்ப ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியையும் பணித் திறனையும் தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டே வரவேண்டும்.

**பார்வையிட்ட நூல்களும் கட்டுரைகளும் :**


கல்வி அமைச்சு, *(1969). சிங்கப்பூர் 150ஆம் ஆண்டு விழாச் சிறப்பு மலர், பக்கம் 42.*

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், *(1975). சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்க வெள்ளி விழா மலர், பக்கம் 32.*

திண்ணப்பன், சுப. *(1993). சிங்கப்பூரில் தமிழ்: மொழியும் இலக்கியமும், தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை, தமிழ்நாடு-இந்தியா, பக்கம் 79-86.*

வீராசாமி, சாமி. *(1992). முதல் உலகத் தமிழாசிரியர் மாநாட்டு மலர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், பக்கம் 16-19.*

வீரமணி, அ. (*1994). சிங்கப்பூரில் தமிழ்மொழி, தமிழ் இலக்கிய வளர்ச்சி 1965-1990, The Journal Printers, Singapore, பக்கம் 92-102.*

வீரமணி, அ. (*1996). சிங்கப்பூர் வளர்ச்சியில் தமிழ்மொழி, தமிழ்க் கலை அச்சகம், சிங்கப்பூர்.*

இராமையா, கா. *(2000). சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்: தொகுதி 4, தமிழ்க் கலை அச்சகம், சிங்கப்பூர், பக்கம் iv-viii.*

கல்வி அமைச்சு, *(2005). தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப்பிரிவு, சிங்கப்பூர், பக்கம் 71-81.*

கல்வி அமைச்சு, *(2010). தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர், பக்கம் 98-100.*

ஜெயராஜதாஸ் பாண்டியன், எஸ்.பி., *(2011). சிங்கப்பூர்த் தமிழாசிரியர்க்கான பணித்திறன் மேம்பாட்டுத் திட்டம், 9-வது உலகத் தமிழாசிரியர் மாநாடு, இணைய மலர், சிங்கப்பூர்.*

# தமிழ்மொழிக் கல்வியில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் பங்கு

**எஸ். பி. ஜெயராஜதாஸ் பாண்டியன்**
தலைமை முதன்மை ஆசிரியர் (தமிழ்மொழி)
தரநிலை ஆய்வுப் பிரிவு,
சிங்கப்பூர் ஆசிரியர் கலைக் கழகம்

## முன்னுரை

நமது சிங்கப்பூர்க் குடியரசு ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அங்கீகரிப்பதுடன் அவை பள்ளிகளில் கட்டாயத் தாய்மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன என்பது சிறப்பிற்குரியது. உலகிலேயே தமிழை அதிகாரத்துவ மொழிகளுள் ஒன்றாகக் கொண்ட ஒரே நாடு சிங்கப்பூர். (வீரமணி.அ., 1966). பன்மொழி வழங்கும் இத்தகைய சூழலில் மற்றைய தாய்மொழிகளுக்கு உள்ளதுபோல் தமிழின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதும் அவற்றை மேம்படுத்துவதற்கும் வளப்படுத்துவதற்குமான வழிமுறைகளைச் சிங்கப்பூர் அரசாங்கம் மிகுந்த கடப்பாட்டோடு செய்து வருகிறது. அவ்வகையில், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வரலாற்றில் அதற்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுச் சிறப்புடன் திகழ்ந்து-கொண்டிருக்கிறது.

## சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி வரலாறு – சிறு கண்ணோட்டம்

சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு நீண்டதொரு பாரம்பரிய வரலாறு உண்டு. சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வியானது இரண்டாம் போருக்குப் பின்னரே ஒருமுகப்படுத்தப்-பட்டுச் சீராக இயங்கத் தொடங்கியது என்ற செய்தியினைத் தமிழ்க் கல்வி ஆய்வுகள் பல பதிவு செய்திருக்கின்றன. சுமார் 30 பள்ளிகள் திரு. கோ. சாரங்கபாணி அவர்களைத் தலைவராகக்கொண்ட தமிழ்மொழி மேம்பாட்டு மத்திய குழுவின் கீழ் வந்தன. (சாமிக்கண்ணு, சி. 2004). 1943 ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரையுள்ள காலக்கட்டத்தில் தமிழ்ப் பள்ளிகள் தொடங்கப்பட்டு மேம்பாட்டு நிலையை அடைந்தன. அப்போது ஆங்கிலப் பள்ளிகளுக்குப் பதிலாகத் தமிழ்ப் பள்ளிகளுக்குச் செல்லுமாறு இந்திய மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். 1959ஆம் ஆண்டில், சிங்கப்பூரில் மக்கள் செயல் கட்சி (ம.செ.க) தன்னாட்சி பெற்ற சிங்கப்பூரின் முதல் அரசாங்கத்தை அமைத்தது; நான்கு மொழிப் பிரிவையும் சரிசமமான வகையில் நடத்துமென உறுதியளித்தது. ஆனாலும், 1969ஆம் ஆண்டிற்குப் பின்னர், சிங்கப்பூரில் சமூகம், அரசியல், பொருளியல் ஆகியவற்றில் ஏற்பட்ட துரித மாற்றங்களால் தமிழ்ப் பள்ளிகள் சரிவைக் கண்டன. 1966 ஆண்டில் அரசாங்கம் இருமொழிக் கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. மாணவர்கள் ஆங்கிலத்தை முதன்மொழியாகவும், தத்தம் தாய்மொழியை இரண்டாம் மொழியாகவும் கற்பதால், ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்றல்-கற்பித்தல் நடைபெற்றது. இவ்வாறு இருந்தபோதிலும், தொடக்கநிலைத் தமிழ்ப் பள்ளிகள் தொடர்ந்து 1980ஆம் ஆண்டு வரை

செயல்பட்டுக்கொண்டிருந்தன. இதற்குக் காரணம் என்னவெனில், தொடக்கநிலையில் தமிழ்ப் பள்ளிகளில் தமிழ்க் கல்வி கற்றுவரும் மாணவர்கள் தொடர்ந்து உயர்நிலையில் தமிழ்க் கல்வி பெறுவதற்காக அன்றிருந்த ஒரே உயர்நிலைப் பள்ளியான உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கற்பிக்கப்பட்டதுதான்.

**ஆங்கில உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்**

ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கத் தொடங்கி, இவ்வாண்டோடு (1955 - 2015) 60 ஆண்டுகள் ஆகின்றன. 1966ஆம் ஆண்டில் இருமொழிக் கல்விக் கொள்கை அமலாக்கப்பட்டுக் கட்டாயமாக்கப்பட்டதால் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. பீட்டி உயர்நிலைப் பள்ளியில்தான் (Beatty Secondary School) முதன்முதலாகத் பகுதி நேர தமிழ்மொழி வகுப்புகள் தொடங்கப்பட்டன. இந்நிலையில் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்பிப்பதற்குத் தமிழாசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகக் கொண்டிருந்த பள்ளிகள் ஒரு முழு நேர தமிழாசிரியரைப் பெறும் தகுதியைப் பூர்த்திசெய்ய இயலாத காரணத்தினால் தமிழ் வகுப்புகள் நடைபெறும் ஆங்கிலப் பள்ளிகளுள் ஒரு பள்ளியானது தமிழ்மொழி நிலையமாக அமைந்தது. அந்தப் பள்ளி சனிக்கிழமைகளில் செயல்பட்டது. இந்நிலையில், 1960ஆம் ஆண்டு முதல் ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகள் சில, தமிழ் பயிலும் மாணவர்களுக்கான தமிழ்மொழி நிலையமாகவும் விளங்கியதால் சனிக்கிழமைத் தமிழ் வகுப்புகளுக்கான தேவை ஒரு முடிவைக் கண்டது.

1945ஆம் ஆண்டில் செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்ப் பள்ளி என்ற பெயரில் ஒரு தனியார் தமிழ்த் தொடக்கப் பள்ளி நிறுவப்பட்டது. பின்னர், 1948இல் அப்பள்ளி அரசினர் உதவிபெற்று, செயிண்ட் ஜார்ஜஸ் அரசினர் தமிழ்ப் பள்ளியாக இயங்கியது. 1958இல் அப்பள்ளி முழுமையாக அரசின் உதவிபெற்ற தொடக்கப்பள்ளியாக இயங்க ஆரம்பித்தது.

1955 - 1957ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் சிங்கப்பூரில் தமிழ் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியதால் மூன்று உயர்நிலைப் பள்ளிகள், வழக்கமான பாடத்திட்ட நேரத்திற்குப் பின்னர், (outside curriculum hours) பள்ளியின் ஒரு பகுதிப்பணியாக, தமிழ்மொழி கற்பிக்கும் நிலையங்களாக விளங்கின. பின்னர், அடுத்தடுத்து ஆண்டுகளில் தேவை கருதி கல்வி அமைச்சால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்மொழி நிலையங்கள் நடைபெறத் தொடங்கின.

**செயிண்ட் ஜார்ஜஸ் சாலைத் தமிழ் நிலையமும் அதன் பெயர்மாற்றமும்**

இதற்கிடையில், 1975ஆம் ஆண்டு, கல்வி அமைச்சின் மேற்பார்வையில் இயங்கி வந்த செயிண்ட் ஜார்ஜஸ் அரசினர் தமிழ்ப் பள்ளியில் மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கை குறைந்து வந்ததால் அப்பள்ளி மூடப்பட்டது. இருந்தபோதிலும், தமிழ்மொழிப் பாடத்தை வழங்க இயலாத ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் தமிழ் மாணவர்களுக்காக, செயிண்ட் ஜார்ஜஸ் அரசினர் தமிழ்ப் பள்ளி, தமிழ்மொழி நிலையமாகச் செயல்படத்

தொடங்கியது. அதன் விளைவாகவே, செயிண்ட் ஜார்ஜஸ் அரசினர் தமிழ்ப் பள்ளி, பின்னர், செயிண்ட் ஜார்ஜஸ் சாலைத் தமிழ் நிலையம் (St Georges Road Tamil Centre) என அழைக்கப்பட்டது. மற்ற உயர்நிலைப்பள்ளிகளில் பகுதி நேரமாகச் செயல்பட்டுவந்த தமிழ்மொழி நிலையங்களுக்கும் இப்பள்ளிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. செயிண்ட் ஜார்ஜஸ் சாலைத் தமிழ் நிலையம் தனி ஒரு தமிழ்மொழி நிலையமாக இயங்கி வந்தது. இந்நிலையத்திற்கென்று ஒரு மேற்பார்வையாளரும் , ஒன்றுக்கும் மேற்பட்ட முழுநேரத் தமிழாசிரியர்களும் பள்ளியின் இதர பணியை மேற்கொள்ளப் பணியாளர்களும் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டார்கள் . தமிழ்மொழி நிலையத்தின் தலைமைத்துவப் பணியை ஏற்று நடத்துவதற்குத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் மற்றும் பள்ளி நிர்வாகம் ஆகியவற்றில் நல்ல தேர்ச்சியும் அனுபவமும்வாய்ந்த தமிழாசிரியர்களே நியமிக்கப்பட்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. (கல்வி அமைச்சு: பாதையும் பயணமும், 2011).

கற்றல் கற்பித்தலுக்குப் போதிய வசதியின்மையினால் செயிண்ட் ஜார்ஜஸ் சாலை தமிழ் நிலையம் 1982ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27ஆம் தேதி அன்று 588C சிராங்கூன் சாலையில் அமைந்திருந்த பழைய பீட்டி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு இடம் மாறி, செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்மொழி நிலையம் (St Georges Tamil Language Centre) என்று பெயர் மாற்றம் கண்டது. அது கல்வி அமைச்சின் பள்ளிகள் பிரிவின் (Schools Division) மேற்பார்வையில் 1995 வரை செயல்பட்டுவந்தது.

அதே காலக்கட்டத்தில், மெக்ஸ்வெல் சாலையில், அன்று சிங்கப்பூரில் அமைந்திருந்த ஒரே தமிழ் உயர்நிலைப்பள்ளியான உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் (Umar Pulavar Tamil High School) மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்ததாலும் அவ்வேளையில் நகர சீரமைப்புத் திட்டத்திற்கு அவ்விடம் தேவைப்பட்ட காரணத்தை முன்னிட்டும் உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வரலாற்றில் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்திவிட்டு, டிசம்பர் 1982-இல் மூடப்பட்டது. அப்பள்ளியில் தமிழை முதலாம் மொழியாகக் கற்றவர்கள் பின்னாளில் தமிழாசிரியர்களாக உருவாகி இந்நாள் வரை ஒருசிலர், ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்து வருகிறார்கள் என்பது சுவைத் தகவலாகும்.

**உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் – பெயர் வரக் காரணம்**

1982ஆம் ஆண்டு உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியின் பெயரைத் தக்கவைக்கும் பொருட்டு, ஒரு தொடக்கப்பள்ளிக்கோ உயர்நிலைப்பள்ளிக்கோ அப்பெயரைச் சூட்டலாம் என அப்பள்ளியின் நிர்வாகக் குழு அரசிடம் தமது கோரிக்கையை முன்வைத்தது. அரசு அப்பரிந்துரையை ஆதரிக்கவில்லையென்றாலும், பதிலாக, செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்மொழி நிலையத்திற்கு உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் எனப் பெயர் சூட்டக் கல்வி அமைச்சுக்குப் பரிந்துரை செய்தது. கல்வி அமைச்சு அப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு, 1983ஆம் ஆண்டுமுதல் செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்மொழி நிலையம், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் எனப் பெயர் மாற்றம் கண்டு தேவையான

வசதிகளுடன் செயல்பட்டு வந்துள்ளது. உயர்நிலைப்பள்ளிகள் மட்டுமல்லாது புகுமுக வகுப்புகளுக்கான தமிழ் வகுப்புகளும் 1995 வரை நிலையத்தில் நடைபெற்று வந்தன.

## 21ஆம் நூற்றாண்டில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

2001ஆம் ஆண்டில், கல்வி அமைச்சின் தமிழ்மொழி ஆய்வுக்குப்பின் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் மறுசீரமைக்கப்பட்டுக் கற்றல் கற்பித்தல் வசதிகளை மேம்படுத்தியது. அவ்வாண்டு ஆகஸ்டு 3ஆம் தேதி, அன்றைய துணைப் பிரதமர் திரு எஸ் ஜயக்குமார் அவர்கள் மறுசீரமைக்கப்பட்ட நிலையத்தை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். நிலையம் கூடுதலாக, ஒரு தேசியத் தமிழ்மொழி வளமை நிலையமாகவும் (National Tamil Language Resource Centre) செயல்படும் என அறிவித்தார். 2001ஆம் ஆண்டுமுதற்கொண்டு, பள்ளிகள் சிங்கப்பூரின் தமிழ்மொழி கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தை ஒரு முன்மாதிரி என அங்கீகரித்துள்ளன. இந்நிலையத்திலுள்ள தமிழ் சார்ந்த வளங்களை மற்றப் பள்ளி மாணவர்களும் தமிழாசிரியர்களும் அதிக அளவில் பகிர்ந்துகொண்டு பயன்படுத்தி வரலாயினர். இதற்கு முன் நடைபெற்றுக்கொண்டிருந்த தனி இசை, நடன வகுப்புகள், 2001ஆம் ஆண்டுக்குக்குப் பின்னர், கல்வி அமைச்சின் ஆதரவில் ‘இந்திய பல்லிசைக்குழு’ என்னும் பெயரில் உருவெடுத்தது. கற்றல் பயணத்துக்காக மாணவர்களும் ஆசிரியர்களும் இந்நிலையத்துக்கு அடிக்கடி வந்து பயன்பெற்றுவருகின்றனர். இதன்வழி, அவர்கள் தமிழ்மொழி பற்றியும் தமிழ்ப் பண்பாடு, கலாசாரம் பற்றியும் தம் புரிந்துணர்வை வளர்த்துக்கொண்டுள்ளனர். ஒவ்வோர் ஆண்டும், மாணவர்கள் தமிழ்மொழி பண்பாட்டு முகாம் என்ற நிகழ்ச்சியிலும், ‘தமிழில் பேசுவோம்; தமிழில் வாசிப்போம்’ முகாம் நிகழ்ச்சியிலும் ஆர்வத்தோடு கலந்துகொண்டு பயனடைந்தனர். தமிழில் கணினிப் பயன்பாடு அதிகரித்தது. பேச்சுத்தமிழில் பேச ஊக்கமளிக்கும் நோக்கில் ‘இளைய நிலா’ என்னும் மாணவர் ஒலிபரப்புக் கூடம் ஒன்று எளிய முறையில் அமைக்கப்பட்டது. அதில் மாணவர்கள் கலந்துகொண்டு பேச்சுத்தமிழில் தடையின்றிப் பேசப் பழகிக்கொண்டனர். நிலையத்தின் பயன்மிகு நடவடிக்கைகளைக் கண்டு பெற்றோர்களும் சமூகத்தினரும் பாராட்டி மகிழ்ந்தனர். நிலையம், முதன்முறையாக, 2007ஆம் ஆண்டில், தம் மாணவர்களை அயல்நாட்டு கற்றல் அனுபவப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து தமிழ்நாட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளது. இன்றும் ஆண்டுக்கு ஒருமுறை இக்கற்றல் பயணம் இடம்பெறுகிறது.

நிலையத்தில் நடைபெறும் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதவை எனக் கருதிய கல்வி அமைச்சு, தமிழ்க் கல்வியின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் நிலையத்திற்கெனத் தனிச் சிறப்புவாய்ந்த ஒரு புது கட்டடத்தைக் கட்டித் தர முடிவுசெய்தது. எனவே, 2009ஆம் ஆண்டு, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் புதிய கட்டட நிர்மாணத்திற்காக விக்டோரியா சாலையில் (Victoria Street) அமைந்திருந்த முன்னாள் ஹோங் வென் பள்ளிக் (Hong Wen School) கட்டடத்திற்குத் தற்காலிகமாக இடம் மாறியது. அதே காலக்கட்டத்தில், 2010ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 11ஆம் தேதி அன்று, அன்றைய வர்த்தகத் தொழில்துறை மற்றும் கல்வி அமைச்சுக்கான மூத்த துணை அமைச்சர் திரு எஸ் ஈஸ்வரன்

அவர்கள் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தமது கூடுதல் பணியான சிங்கப்பூர் தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டகமாகச் செயல்படும் என அறிவித்தார். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் 2011ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 27ஆம் தேதி முதல் 2 பீட்டி சாலையில் உள்ள புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வி ஏட்டில் இது ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவாகும். 2012ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 4ஆம் நாளன்று, துணைப் பிரதமர் திரு தர்மன் சண்முகரத்தினம் அவர்களுடன், பிரதமர் அலுவலக அமைச்சரும், உள்துறை மற்றும் வர்த்தக தொழில் அமைச்சுகளுக்கான இரண்டாம் அமைச்சருமான திரு. எஸ். ஈஸ்வரன் அவர்களும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் புதிய வளாகத்தை அதிகாரபூர்வமாகத் திறந்துவைத்தனர். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தாரின் முயற்சியால் சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வி வரலாற்றில் முதலாவதாக உருவான ‘சிங்கப்பூரின் தமிழ்க்கல்வி மரபுடைமையகம்’ சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி பற்றிய வரலாற்றைப் பதிவுசெய்வதையும், தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக்கு எவ்விதத்தில் நம் சமூகம் பங்காற்றியுள்ளது என்பதைப் பறைசாற்றுவதையும் நோக்கங்களாகக் கொண்டமைக்கப்பட்டது. பன்னெடுங்காலமாகச் சிங்கப்பூரில் தமிழ் கற்றல் எவ்வாறு மாறித் தழைத்துள்ளது என்பதற்கு இந்த மரபுடைமையகம் சான்று பகர்கின்றது.

கல்வி அமைச்சின் 2010ஆம் ஆண்டில் தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, முன்வைத்துள்ள பரிந்துரைகளுள் ஒன்று தேசியத் தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் (National Tamil Language Elective Programme). உயர்தமிழ் பயிலும் உயர்நிலை மாணவர்களுக்காகவும், H2 தமிழிலக்கியம் கற்கும் தொடக்கக்கல்லூரி மாணவர்களுக்காகவும் இத்திட்டம் அறிமுகமானது. தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியை ஆழமாகப் படித்தறிவதும் அதனைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்திற்குரிய பாடக்கலைத்திட்டத்தை வரையும் பணி நிலையத்தைச் சார்ந்தது. அதனை நடைமுறைப்படுத்தும் முழுப் பொறுப்பையும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்திடம் கல்வி அமைச்சு ஒப்படைத்திருப்பது நிலையத்தின் நம்பகத்தையும் முக்கியத்துவத்தையும் பறைசாற்றுகின்றன.

2010ஆம் ஆண்டில் தேசிய அளவில் தமிழாசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டகம் என்னும் மற்றொரு பொறுப்பையும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தலைமேற்கொண்டிருந்தது. தமிழாசிரியர்களின் நிபுணத்துவ ஆற்றலை மேம்படுத்தவும் அவர்களை ஒரு கற்றல் சமூகமாக உருவாக்கவும் இந்நிலையம் மார்ச்சு 2015 வரை தலைமை முதன்மை ஆசிரியர், முதன்மை ஆசிரியர்கள் ஆகியோரின் பெருமுயற்சியுடன் செயல்பட்டுவந்துள்ளது. ஏப்ரல் 2015 முதல் தமிழாசிரியர்க்கான பணித்திறன் மேம்பாடு குறித்த செயற்பாடுகள், கல்வி அமைச்சின் சிங்கப்பூர் ஆசிரியர் கலைக் கழகத்தின் (Academy of Singapore Teachers) பொறுப்பில் அமைந்திருந்தாலும், நிலையத்தின் வசதிகளைக் கருத்திற்கொண்டு தமிழாசிரியர் பணித்திறன் மேம்பாட்டிற்கான அனைத்துப் பயிற்சித் திட்டங்களும் நடைபெறும் வளமிக்க தளமாக விளங்குகிறது, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்.

இன்று உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் கற்றல் கற்பித்தலோடு, தமிழ்மொழி தங்கள் வாழ்நாள் மொழியாக நிலைத்திருக்கும் வண்ணம் பொருத்தமான பல்வகை வளமூட்டும் நடவடிக்கைகள் வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நடந்தேறி வருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று 'மாணவர் தமிழ்த் திருவிழா' (MTL Fortnight) நடவடிக்கைகள். நடைபெற்றது. 2007ஆம் ஆண்டுமுதல் பல்லாற்றானும் முயன்று பெரும்வெற்றி கண்ட ஒரு முயற்சியே இன்று நிலையத்தின் மற்றொரு சாதனையாக மாறியுள்ளது. 2014ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 3ஆம் தேதி (3-8-2014) அன்று, நிலைய முகப்பில் திருவள்ளுவப் பெருந்தகையின் உருவச் சிலை திறந்துவைக்கப்பட்டது. இதுவே சிங்கப்பூரில் முதன்முறையாக அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றுத் தோற்றுவிக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலை என்பது வரலாற்று உண்மை. இம்முயற்சி தமிழ்மொழி நிலையத்திற்கு மட்டுமல்ல தமிழ்க் கல்விக்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து சூட்டிய மணிமகுடம்.

காலவோட்டத்தில் பல குறிப்பிடத்தக்க சவால்களைச் சமாளித்து, படிப்படியாக மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்டுள்ளது உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம். தொடக்கக்காலத்தில் மரபுவழியாக, அதாவது ஒரு தமிழ்மொழி நிலையமாக இயங்கிவந்துள்ள இந்நிலையம், இன்று, தேசிய நிலையில் தமிழாசிரியப் பெருமக்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் நிலையத்தின் வளங்களைப் பயன்படுத்திப் பயனடைகின்றனர். அதுமட்டுமல்லாது, தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் வளர்ச்சிக்குப் பாடுபடும் கல்வியாளர்கள், சமூக அமைப்புகளைச் சேர்ந்த தமிழார்வலர்கள் அனைவரும் நிலையத்தைச் சிங்கப்பூர் அரசு தமிழ்மொழிக்கு அளித்த ஒரு வரமெனக் கருதி, பல்வேறு தமிழ்மொழி, தமிழ் இலக்கிய நிகழ்வுகளை நடத்தி வருகிறார்கள். இன்று உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஓர் உயிரோட்டமிக்க தமிழ்மொழி நிலையமாக உயர்ந்து நின்று பரிணமிக்கிறது, சரியாத சரித்திரமாக!

**பார்வையிட்ட நூல்களும் கட்டுரைகளும்:**


இராமையா, *கா., (2000). சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்: தொகுதி 4,*

தமிழ்க் கலை அச்சகம்: *சிங்கப்பூர். iv-viii.*

கல்வி அமைச்சு, *(1969). சிங்கப்பூர் 150ஆம் ஆண்டு விழாச் சிறப்பு மலர்: சிங்கப்பூர். 42.*

கல்வி அமைச்சு, (*2005). தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப்பிரிவு: சிங்கப்பூர், 71-81.*

கல்வி அமைச்சு, *(2010). தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர், பக்கம் 98-100.*

கல்வி அமைச்சு, *(2011). பாதையும் பயணமும். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், சிங்கப்பூர்.*

கல்வி அமைச்சு, *(2010). தாய்மொழிகள் மறு ஆய்வு, 2010, பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு: சிங்கப்பூர்.*

சாமிக்கண்ணு, சி., *(2004). சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி. 'அனைத்துலக அரங்கில் தமிழ்' கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை, பல்கலைக் கழக கலை மன்றம்: சிங்கப்பூர்.*

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், *(1969). சிங்கப்பூர் 150 ஆம் ஆண்டு விழாச் சிறப்பு மலர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்: சிங்கப்பூர்.*

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், *(1975). சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்க வெள்ளி விழா மலர்: சிங்கப்பூர். 32.*

திண்ணப்பன், சுப., *(1993). சிங்கப்பூரில் தமிழ்: மொழியும் இலக்கியமும்: தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை: தமிழ்நாடு. 79-86.*

பழனிசாமி, கு., (*1984). உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளி வரலாறு (1946 – 1982). வரலாற்றுப் பிரிவு, தேசியப் பல்கலைக் கழகம்: சிங்கப்பூர்.*

முத்துமாணிக்கம், கா., (*1981). உயர்நிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும் – சில இடர்ப்பாடுகள் (தமிழ்ப் பேரவை ஆய்வரங்கு மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை); தமிழ்ப் பேரவை, தேசியப் பல்கலைக் கழகம்: சிங்கப்பூர்.*

முத்தையா, சி., (*1988). சிங்கப்பூர்ப் பள்ளிகளில் இரண்டாம் மொழியாக விளங்கும் தமிழின் நிலை. தமிழர் பேரவையின் 6ஆவது தமிழ் இளையர் ஆய்வரங்கத்தில் படிக்கப்பட்ட கட்டுரை: சிங்கப்பூர்.*

வீரமணி, அ., *(1994). சிங்கப்பூரில் தமிழ்மொழி, தமிழ் இலக்கிய வளர்ச்சி 1965-1990, The Journal Printers: Singapore. 92-102.*

வீரமணி, அ., *(1996). சிங்கப்பூர் வளர்ச்சியில் தமிழ்மொழி, தமிழ்க் கலை அச்சகம்: சிங்கப்பூர். 93-95.*

ஜெயராஜதாஸ் பாண்டியன், எஸ். பி., (*2011). சிங்கப்பூர்த் தமிழாசிரியர்க்கான பணித்திறன் மேம்பாட்டுத் திட்டம், 9-வது உலகத் தமிழாசிரியர் மாநாடு, இணைய மலர்: சிங்கப்பூர்.*

ஜெயராஜதாஸ் பாண்டியன், எஸ். பி., *(2013). சிங்கப்பூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தமிழ்மொழித் திறன் மேம்பாட்டுக்கு உதவும் வளமூட்டும் நடவடிக்கைகளின் பங்கு, கல்விக் கழகம்: சிங்கப்பூர்.*

Gopinathan, S., (*1992). Changes in Education in Singapore and the Indian Community, The Next Decade 58-61, paper presented at the Singapore Tamil Youth Conference. Singapore Tamil Youth: Singapore.*

# தமிழ்மொழிக் கல்வியும் தேர்வுகளும்

**முனைவர் மா இராஜிக்கண்ணு**
துணை விரிவுரையாளர்
சிம் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

1947ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் இயங்கி வந்த தமிழ்ப் பள்ளிகள் ஆண்டுத் தேர்வை நடத்தத் தொடங்கின. இத்தகைய தேர்வு 1959ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. 1960ஆம் ஆண்டில் முதன்முதலில் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு கல்வி அமைச்சால் நடத்தப்பட்டது. குறிப்பாக ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ்மொழிப் பிரிவுப் பள்ளிகளுக்கு இத்தேர்வுகள் நடைபெற்றன. தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தமிழ் முதல் மொழியில் கணக்கு, அறிவியல், நிலநூல், வரலாறு, தமிழ் ஆகிய தேர்வுகள் எழுதினர். 1966ஆம் ஆண்டுமுதல் இரண்டாம் மொழி கட்டாயமாக்கப்பட்டதால் ஆங்கிலப் பள்ளிகளில் பயின்றோர் தமிழில் தேர்வு எழுதினர். இத்தேர்வு வினாத்தாள்கள் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் தேர்வுப் பிரிவால் தயாரிக்கப்பட்டன. தமிழுக்கென தனித் தேர்வுப் பிரிவு கல்வி அமைச்சில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

1963ஆம் ஆண்டில் முதன்முதலில் தமிழ் உயர்நிலைப் பள்ளிக்கெனப் பள்ளி இறுதிச் சான்றிதழ்த் தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வு வினாக்களும் சிங்கப்பூரிலேயே தயாரிக்கப்பட்டன. இந்தக் காலக்கட்டத்தில் ஆங்கிலப் பள்ளிகளுக்கென (உயர்நிலை) நடத்தப்பட்ட கேம்பிரிட்ஜ் பொதுக்கல்விச் சான்றிதழ் - சாதாரண நிலைத் தேர்வு, உயர்கல்விச் சான்றிதழ் (HSC) தேர்வு ஆகியவற்றுக்கான தமிழ்மொழி, தமிழிலக்கியப் பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டன. விடைத்தாள்கள் அங்கேயே கொண்டு செல்லப்பட்டுத் திருத்தப்பட்டன.

திருத்தியமைக்கப்பட்ட கல்விக் கொள்கையின்படி தமிழ்மொழி, தமிழிலக்கியப் பாடங்களுக்கான தேர்வுத் தாள்கள் 1971ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டு, விடைத்தாள்கள் இங்கேயே திருத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு வினாத்தாள்கள் சிங்கப்பூரில் தயாரிக்கப்படுகின்றன. பொதுக்கல்விச் சான்றிதழ் வழக்க நிலைத் தேர்வு, பொதுக்கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு, பொதுக்கல்விச் சான்றிதழ் மேல்நிலைத் தேர்வு ஆகியவற்றுக்கான தமிழ்மொழி, இலக்கியத் தேர்வுத் தாள்களும், அவற்றிற்குரிய வாய்மொழி, கேட்டல், கருத்தறிதல் தேர்வுத் தாள்களும் சிங்கப்பூரிலேயே தயாரிக்கப்படுகின்றன.

மாணவர்கள் அடைந்துள்ள கல்வி முன்னேற்றத்தைக் கண்டறிய துணை புரிய வல்லது தேர்வு முறையே எனலாம். மாணவர்களது கல்வியாற்றலை அளந்தறிய இன்றியமையாத அளவுகோல் தேர்வு எனில் மிகையாகாது. சிங்கப்பூரில் அன்றைய தேர்வு முறைக்கும் இன்றைய தேர்வு முறைக்கும் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. தேர்வு முறைகள் மாணவர்தம் ஆற்றலை அளந்தறிவதோடு ஆசிரியர்களது கற்பித்தல் முறைகளையும் அளந்தறிகின்றன. தேர்வு முறைகளையட்டி மாணவர்களும் ஆசிரியர்களும் சிறப்புப் பெறுகின்றனர்.

சீனாவில் கி.மு. 2357ஆம் ஆண்டில் எழுத்துத் தேர்வு தோன்றியது என நாம் அறிகிறோம். அக்காலக்கட்டத்தில் அரசு ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பதவி உயர்வு அளிப்பதற்கும் தேர்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. இங்ஙனம் தேர்வு முறை தொன்மை வாய்ந்தது என்பது புலப்படுகிறது. பின்னாளில் ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய பல்கலைக் கழகங்களில் வாய்மொழித் தேர்வுகள் நடைபெறுகின்றன என அறிகிறோம். ஆனால் பண்டைய இந்தியாவில் தோற்றம் கண்ட குருகுலக் கல்வி முறையில் தேர்வுகள் நடத்தப்பட்டனவா என்பது புலப்படவில்லை.

தேர்வுகள் பல்துறை சார்ந்தோர் பயனடையும் வகையில் துணை புரிகின்றன. சான்றாக உயர்வகுப்பிற்குச் செல்வோர்க்கும், கல்விநிதி உதவி பெறுவோர்க்கும் தேர்வுகள் மிக இன்றியமையாதனவாகப் பயன்படுகின்றன. மேலும் கற்பித்தல் மேம்பாடு அடைவதற்கும் தேர்வுகள் பயன்படுகின்றன. தேர்வின் முடிவுகளைக் கொண்டு ஆசிரியர்கள் தம் கற்பித்தல் முறைகளை மாற்றிக்கொள்வதற்கும் தேர்வுகள் வழிவகுக்கின்றன எனலாம்.

தேர்வுகள் அடைவுச் சோதனை, முன்னேற்றக் கணிப்புச் சோதனை, திறனறிச் சோதனை, மனப்பான்மைச் சோதனை, குறையறிச் சோதனை எனப் பல்வகைப்படும். எனினும், சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வியில் பாடப்பொருள் சார்ந்தது (content based), பாடப்பொருள் சாராதது (content free) எனத் தேர்வுகளை இருவகைப்படுத்தலாம். மேல்நிலைத் தேர்வினைப் பொறுத்தவரையில் இலக்கியப் பாடம் பயில்வோர்க்கெனக் குறிப்பிட்ட பாடநூல்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றையட்டியே வினாக்கள் அமைக்கப்படும். பாட நூல்களை மாணவர்கள் பார்த்துக்கொண்டே விடை எழுதும் முறை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர்ப் பாட நூல்களைப் பாராமலே விடைகள் எழுத வேண்டும். சிங்கப்பூரில் ஆங்கிலம், மாண்டரீன், மலாய், தமிழ் ஆகிய மொழித் தேர்வுகள் பாடப்பொருள் சாராதவை. இத்தேர்வுகளில் மொழியறிவுடைய எவரும் அமர வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இத்தேர்வுகளில் (மொழித் தேர்வு) முதல் பகுதிக்கு மட்டும் (கட்டுரை) கல்வி அமைச்சால் பரிந்துரைக்கப்பட்ட அகராதிகளை மாணவர்கள் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் இயங்கிவந்த தமிழ்ப்பள்ளிகள் ஆண்டுத் தேர்வினை 1947ஆம் ஆண்டில் நடத்த ஆரம்பித்தன. பொதுவாக மூன்றாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இப்போதுத் தேர்வு நடத்தப்பட்டது. மலாய்க் கூட்டரசால்

தேர்வுகள் நடத்தப்பட்டன. 1950ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டுவரை ஏழாம் வகுப்புத் தேர்வு நடைபெற்றது. இதில் தேர்ச்சியுறும் மாணவர்களுக்கு இந்தியப் பள்ளிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. பின்னர் இத்தேர்வு 'ஆசிரியர் ஆயத்தப் பரிட்சை' எனப் பெயர்மாற்றம் கண்டது. இத்தகைய தேர்வுகள் சிங்கப்பூரில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக இத்தேர்வுகளில் கணிதம், தமிழ், நிலநூல், வரலாறு, அறிவியல் போன்ற பாடங்கள் இடம்பெற்றிருக்கும்.

1959இல் சிங்கப்பூர் தன்னாட்சி பெற்ற பின்னர், கல்விக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இதுகாறும் மலாயாக் கூட்டரசு கல்வி அமைச்சால் நடத்தப்பட்டு வந்த தமிழ்த்தேர்வுகள் (தமிழ்ப்பள்ளிகளுக்கென) சிங்கப்பூர்க் கல்வி அமைச்சால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ்மொழிப் பிரிவுப் பள்ளிகளுக்குத் தனித்தனியே தேர்வுகள் நடத்தப்பட்டன. தமிழை முதல் மொழியாகக் கொண்ட தமிழ்ப்பள்ளி மாணவர்கள் கணிதம், அறிவியல், நிலநூல், வரலாறு ஆகிய பாடங்களில் தமிழில் தேர்வு எழுதினர். 1966ஆம் ஆண்டில் இரண்டாம் மொழி கட்டாயமாக்கப்பட்டதால், தமிழ்ப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தினை இரண்டாம் மொழியாகப் பயின்று தேர்வு எழுத முற்பட்டனர். 1972இல் நிலநூல், வரலாறு ஆகிய பாடங்கள் தொடக்கப் பள்ளி இறுதித் தேர்விலிருந்து நீக்கப்பட்டதால், தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தமிழ் மொழி (முதல்மொழி), ஆங்கிலம் (இரண்டாம் மொழி), கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் தேர்வினை எழுதினர். இந்நிலை 1982 ஆண்டு வரை நீடித்தது எனலாம்.

1960ஆம் ஆண்டில் தோற்றம் கண்ட உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்ற மாணவர்கள் 1963ஆம் ஆண்டில் முதன்முதலில் உயர்நிலைப் பள்ளி இறுதிச் சான்றிதழ்த் தேர்வு (School Certificate) எழுதினர். தமிழ் (முதல்மொழி), கணிதம், நிலநூல், வரலாறு, தமிழ் இலக்கியம், ஓவியம், ஆங்கிலம் (இரண்டாம் மொழி), அறிவியல் ஆகிய பாடங்களில் தேர்வு எழுதினர். பின்னர் உயிரியல் (Biology), மனையியல் (Home Economics) போன்றவையும் தேர்வுப் பாடங்களாக அமைந்தன. இத்தகைய தேர்வுகள் 1986ஆம் ஆண்டு வரை நடைபெற்றன. ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களுக்கெனத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

புதிய கல்விக் கொள்கைப்படி தொண்ணூறுகளில் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயின்ற தமிழ் மாணவர்கள், ஏனைய பாடங்களை ஆங்கிலமொழி வாயிலாகப் பயின்றனர். முதலாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்புவரை ஆங்கிலம், கணிதம், அறிவியல், தாய்மொழி (மாண்டரீன், மலாய், தமிழ்) ஆகியன தேர்வுப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. மேலும் இசை, அறநெறிக்கல்வி, உடற்பயிற்சி, ஓவியம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. தொடக்கநிலை நான்காம் வகுப்பு இறுதியில் தரம் பிரிக்கும் தேர்வு (Streaming Examination) நடைபெற்று வருகிறது. இத்தேர்வில் தேர்ச்சியுறுவோர் மூன்று வகையான கல்விப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றனர். முதல் பிரிவு EM1 (ஆங்கிலம், தாய்மொழி 1) எனக் கொள்ளப்படும். இப்பிரிவுக்குச் செல்வோர் ஏனைய பாடங்களுடன் ஆங்கிலம், தாய்மொழி ஆகிய பாடங்களை முதல்மொழி நிலையில்

கற்பர். இரண்டாம் கல்விப் பிரிவு EM2 எனப்படும். இப்பிரிவில் ஏனைய பாடங்களுடன், ஆங்கிலத்தை முதன்மொழி நிலையிலும், தமிழை இரண்டாம் மொழி நிலையிலும் பயில்வர். மூன்றாம் பிரிவு EM3 எனப்படும். இப்பிரிவில் ஏனைய பாடங்களுடன் ஆங்கிலத்தை முதன்மொழி நிலையிலும் தமிழை வாய்மொழி நிலையிலும் கற்பர்.

**தொடக்கப்பள்ளி இறுதித்தேர்வு (Primary School Leaving Examination)**

முன்னர் குறிப்பிட்ட நிலை மாணவர்கள் (EM1, EM2, EM3) 1993ஆம் ஆண்டு முதல் புதிய கல்விக் கொள்கைப்படி தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் ஆங்கிலம், இரண்டாம் மொழி, கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் தேர்வு எழுதிவருகின்றனர். மீத்திற மாணவர்கள் (EM1) இரண்டாம் மொழிக்குப் பதிலாக உயர்தர தாய்மொழிப் பாடத்தில் (Higher Mother Tongue) தேர்வு எழுதி வருகின்றனர். மேலும் கேட்டல் கருத்தறிதல் (Listening Comprehension), வாய்மொழித் தேர்வு ஆகிய பாடங்களிலும் மாணவர்கள் (EM1, EM2) சோதிக்கப்படுகின்றனர்.

மூன்றாம் பிரிவில் (EM3) பயிலும் மாணவர்கள தமிழ்மொழியை வாய்மொழி நிலையில் பயில்வதனால், அவர்கள் தமிழ் இரண்டாம்மொழி வினாத்தாளில் இடம்-பெற்றுள்ள கேட்டல் கருத்தறிதல், வாய்மொழி ஆகிய கூறுகளில் மட்டுமே தேர்வு எழுதுவார்கள். தொடக்கப்பள்ளிகளுக்கான இறுதித் தேர்வுத் தாள்கள் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டு, விடைத்தாள்கள் இங்கேயே திருத்தப்படுகின்றன.

**பொதுக்கல்விச் சான்றிதழ் - சாதாரணநிலைத் தேர்வு (*Singapore - Cambridge General Certificate of Education - Ordinary Level Examination)***

பொதுவாக, சிங்கப்பூர் உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புக் கல்விப் பிரிவு (Special Course), விரைவுக் கல்விப் பிரிவு (Express Course), வழக்கக் கல்விப் பிரிவு (Normal Course) எனப் பிரிக்கப்பட்டுள்ளன. வழக்கக் கல்விப் பிரிவானது வழக்கம் ஏட்டுக்கல்வி, வழக்கம் தொழில்நுட்பக் கல்வி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிறப்புக் கல்விப் பிரிவினரும், விரைவுக் கல்விப் பிரிவினரும் நான்காண்டுக் கல்விக்குப் பின்னர் பொதுக்-கல்விச் சான்றிதழ் சாதாரண நிலை எனும் தேர்வினை எழுதுவர். இவர்கள் ஏனைய தேர்வுப் பாடங்களுடன் தமிழ் முதன்மொழி, தமிழ் இரண்டாம் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றைத் தேர்வுப் பாடங்களாக எழுதுவர். தமிழ் முதன்மொழி (உயர்தமிழ்), தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களில் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை குறைவாகும்.

1970ஆம் ஆண்டு வரை தமிழ் இரண்டாம் மொழிக்குரிய தேர்வுத்தாள் இங்கிலாந்தி-லுள்ள கேம்பிரிட்ஜ் தேர்வு ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டது. விடைத்தாள்களும் இங்கிலாந்திலேயே திருத்தப்பட்டன. 1971ஆம் ஆண்டுமுதல் தமிழ் இரண்டாம் மொழிக்-குரிய விடைத்தாள்கள் சிங்கப்பூரிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**பொதுக்கல்விச் சான்றிதழ் - வழக்கநிலைத் தேர்வு (Singapore - Cambridge General Certificate of Education - Normal Level Examination)**

1984ஆம் ஆண்டில் இத்தேர்வு தொடங்கப்பட்டு இன்றும் நடப்பில் இருந்து வருகிறது. நான்காண்டுக் கல்விக்குப் பின்னர் இத்தேர்வினை மாணவர்கள் எழுதுவர். இதில் தமிழ் இரண்டாம் மொழி தேர்வுப் பாடமாக அமைந்துள்ளது. இப்பிரிவு மாணவர்கள் ஐந்தாம் ஆண்டில் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வினை எழுதுவர்.

**பொதுக்கல்விச் சான்றிதழ் - மேல்நிலைத் தேர்வு (Singapore - Cambridge General Certificate of Education - Advanced Level Examination)**

சாதாரண நிலைத் தேர்வில் தேர்ச்சியுறுவோர் இரண்டு அல்லது மூன்றாண்டுக்குப் பின்னர் இத்தேர்வினை எழுத அனுமதிக்கப்படுவர். மேல் உயர்நிலைக் கல்விப் பிரிவானது ஈராண்டுக் கல்விப் பிரிவு, மூன்றாண்டுக் கல்விப் பிரிவு என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, 1975ஆம் ஆண்டில் அறிமுகம் கண்டது. இதற்கு முன்னர் இது உயர்க்கல்விச் சான்றிதழ்த் தேர்வு (Higher School Certificate) என அழைக்கப்பட்டது. இத்தேர்வில் அடங்கியுள்ள தமிழ் வினாத்தாள்கள் (தாள் 1, தாள் 2) இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டன. விடைத்தாள்களும் அங்கேயே திருத்தப்பட்டன. ஆனால், 1975ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தமிழ்மொழித் தாளும், தமிழிலக்கியத் தாளும் சிங்கப்பூரிலேயே தயாரிக்கப்படுகின்றன. தற்போது தமிழ்மொழித் தாள் 1 எனவும் (Singapore - Cambridge General Certificate of Education - Advanced Level Higher 1), தமிழ்மொழி, இலக்கியம் - தாள் 2 (Singapore - Cambridge General Certificate of Education - Advanced Level Higher 2), எனவும் வழங்கப்படுகின்றன. ‘தமிழ்மொழி-தாள் 1’ என்பதில் கட்டுரை, கருத்தறிதல், சுருக்கி வரைதல், முன்னுணர்வுக் கருத்தறிதல், மரபுத் தொடர், இணைமொழிகள், சொற்புணர்ச்சி ஆகியவை சோதிக்கப்படும் மொழிக்கூறுகளாகும். ‘தமிழ்மொழி, இலக்கியம்’ தேர்வு என்பது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ‘தாள் 1’ என்பதில் சுருக்கி வரைதல், சுயவிடைக் கருத்தறிதல், இலக்கணம், மரபுத்தொடர், இணைமொழிகள் ஆகிய கூறுகள் அடங்கியிருக்கும். தாள் 2 என்பதில் நாவல், நாடகம், கதைச் செய்யுள், சிறுகதைத் தொகுப்பு ஆகியவற்றிலிருந்து கேட்கப்படும் வினாக்கள் அடங்கியிருக்கும்.

**முடிவுரை**

2004ஆம் ஆண்டில் நிறவப்பபட்ட சிங்கப்பூர்த் தேர்வுகள் மற்றும் மதிப்பீட்டுக் கழகம் (Singapore Examinations and Assessments Board - SEAB) தேர்வுத் தாள்கள் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. ஆணை பெற்ற கழகமான (Statutory Board) இந்நிறுவனம் கல்வி அமைச்சின் கூட்டுறவுடன் செயல்பட்டு வருகிறது.

இக்கழகத்தில் ஒவ்வொரு மொழிக்கும் தனி தேர்வுப் பிரிவு உள்ளது. தேசிய அளவில் தமிழ்மொழிக்கு நடைபெறும் தேர்வுகளைத் தயாரிப்பதற்கும் ஒருமுகப்படுத்துவதற்கும் தமிழ்மொழிப் பிரிவு முழுப்பொறுப்பு வகிக்கிறது. தமிழ்மொழிக் கல்வியில் நம் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகச் இப்பிரிவின் செயல்பாடுகள் விளங்குகின்றன.

# தமிழ்மொழிக் கல்வி வளரச்சியில் கணினி மென்பொருள்கள்

**கலைமணி இரத்தினசாமி**
ஓய்வுபெற்ற தமிழாசிரியர்

**முன்னுரை**

இந்த ஆண்டு சிங்கப்பூர் தனது 50ஆம் ஆண்டுப் பொன்விழாவைக் கொண்டாடு-கிறது. இத்தருணத்தில் சிங்கப்பூர் கடந்துவந்த கணினித் தொழில்நுட்பப் பாதையைச் சிறிது பின்னோக்கிப் பார்ப்பது சிறப்பாக இருக்கும். இப்பார்வை பன்னோக்கங்களில் காணக்-கூடியதாக இருந்தாலும், இக்கட்டுரை சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் கணினி மென்பொருள்களின் பரிணாமத்தை விவரிக்கும். முதலில் கணினி மென்பொருள் என்றால் என்ன என்பதைக் கீழ்க்காணும் வகையில் வரையறை செய்துள்ளேன். கணினி என்ற வன்பொருளில் மென்தகடு (floppy disk) அல்லது குறுவட்டு (CD ROM) வழி நிறுவப்பட்டுச் சில செயல்பாடுகளை அளிப்பதே மென்பொருள். மென்பொருள்கள் தமிழ் எழுத்துருக்கள், சொற்செயலி, ஒளிப்படங்கள், இசைகள், அல்லது அவற்றை தொகுக்கும் எடிட்டர்களாகவும் இருக்கலாம். மேலும் அவை கல்வி சார்ந்த மென்பொருள்களாகவும் இருக்கலாம். இதுபோன்ற ஆயிரக்கணக்கான (தமிழில் நூற்றுக்கணக்கான) மென்பொருள்கள் 1980 இறுதிவாக்கில் தோன்றி, தொண்ணூறுகளில் பல்கிப்பெருகி, 2005க்குப் பின் மறையத் தொடங்கின. இந்த 20 ஆண்டு காலகட்டத்தைக் கணினி மென்பொருளின் பொற்காலம் எனலாம். கணினியில் தமிழ்ப் பயன்பாட்டிலும் தமிழ்க்கல்வி சார்ந்த மென்பொருள் தயாரிப்பிலும் சிங்கப்பூர் தொண்ணூறுகளில் உலகத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தது என்பது பெருமைக்குரிய விஷயமாகும். ஈராயிரமாம் ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியில் தகவல்தொடர்புச் சேவை மேம்பட்டு, இணையம் துரிதவேக வளர்ச்சி கண்டது. கிட்டத்தட்ட 2007க்குப் பின் மென்பொருள்களின்வழிப் பெற்ற அனைத்துப் பயன்பாட்டையும் இணையம்வழி (பெரும்பாலும் இலவசமாக) பெற்றுக்கொள்ள முடிந்தது. ஒரு சராசரித் தேவைக்கு உதவும் அனைத்து மென்பொருள் இயக்கங்களையும் GOOGLE© இலவசமாக இன்று அளிக்கிறது. இவற்றை மென்பொருள் என்று அழைக்காது, இணையச்சேவை என்றே அழைக்கவேண்டும்.

அந்தப் பொற்காலத்தில் தமிழுலகத்தில் நூற்றுக்கணக்கான மென்பொருள்கள் தோன்றியிருந்தலும் இக்கட்டுரை சிங்கப்பூரில் பிரபலமாய் விளங்கிய கல்விசார்ந்த மென்பொருள்களை மட்டும் தொகுத்தளிக்கிறது. இக்கட்டுரையாளர் கடந்த 25 ஆண்டுகளாகத் தமிழ் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றியுள்ளார். கல்விசார்ந்த பல மென்பொருள்களின் உருவாக்கத்தில் நேரடிகாகப் பணியாற்றியவர். இக்கட்டுரை அவரது பார்வையையும் அனுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு படைக்கப்பட்டதாகும்.

**சிங்கப்பூரில் கணினிகள் அறிமுகம்**

சிங்கப்பூரில் கணினிகள் எண்பதுகளின் தொடக்கத்தில் அறிமுகமாயின. அப்பொழுது கணினிகள் வெறும் வன்பொருளாகமட்டும் இருந்தன. 'டோஸ்' (DOS) என்ற அடிப்படை இயக்குதளத்துடன் மட்டுமே விற்கப்பட்டன. உருவகமாக விளக்கவேண்டுமானால், கணினி என்பது அடுப்பு போன்றது; வெறும் அடுப்பை வைத்துக்கொண்டு உணவு சமைக்கமுடியாது. அதற்கு உணவுக்கான அடிப்படைப் பொருட்கள் அவசியம். அரிசி இருந்தால் சோறு ஆக்கலாம்; பருப்பும் காய்கறியும் இருந்தால் சாம்பார் செய்யலாம். இந்த 'உணவுப் பொருள்கள்தாம்' கணினி மொழியில் மென்பொருள் என்று கருதவேண்டும். அக்காலத்தில் ஆங்கிலமொழி மென்பொருள்கள் மட்டும்தான் கிடைத்தன. கணினிகளில் தமிழ்மொழியைப் பயன்படுத்த முடியாததால் பெரும்பாலான தமிழர்கள் அவற்றை வாங்க அதிக எண்ணம் கொள்ளவில்லை.

**தமிழ்ச் சொற்செயலிகள்**

'தமிழ்க் கணினிக்'கென உள்ளூர்ச் சந்தை என்று கூறுவோமானால் அது அச்சுப் பதிப்பகங்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும், முக்கியமாக, நமது கல்விச் சமுதாயமுமே! 1987இல் பெங்களூரிலிருந்த SRG நிறுவனம் 'பாரதி' என்னும் DOS சார்ந்த தமிழ்ச் சொற்செயலி ஒன்றைச் சிங்கப்பூரர்களுக்கு அறிமுகப்படுத்தியது. அப்போதுதான் உண்மையான புரட்சித் தொடங்கியது. திடீரென சிங்கைத் தமிழாசிரியர்களுக்கு ஒரு சொந்தக் கணினியை வாங்குவதற்குக் காரணம் கிடைத்தது. 'பாரதி' மென்பொருளின் குறியீடும் அச்சும் தற்போதைய தரத்தோடு ஒப்பிடுகையில் குறைந்தே இருப்பினும், முன்னோடித் தமிழாசிரியர்கள் சிலர் அதனைக் கொண்டு வகுப்பறைப் பயிற்சித்-தாள்களையும் தேர்வுத்தாள்களையும் தட்டச்சுச் செய்யத் துவங்கினர். அதே ஆண்டு, இன்னும் புதுமையான மற்றும் மேம்பட்ட 'துணைவன்' என்னும் தமிழ்ச் சொற்செயலி உருவானது. அதைத் தொடர்ந்து 'முரசு' என்னும் மற்றொரு தமிழ்ச் சொற்செயலி சந்தைக்குள் வந்ததும் தமிழ் ஆசிரியர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் மென்பொருள் தெரிவுகளுக்குப் பஞ்சமில்லை.

1991இல், 'வீனஸ் டி.தி.பி (DTP)' – பாரதியின் சீர்த்திருத்தப்பட்ட வடிவம் வெளியானதும் கல்வி அமைச்சு தமிழ் ஆசிரியர்கள் அனைவருக்கும் அதை வழங்குவதற்குப் பள்ளிகளின் மூலம் ஏற்பாடு செய்து தந்தது. 'வீனஸ் டி.தி.பி'-யின் விலை $800 வெள்ளியாக இருந்தபோதிலும் தமிழாசிரியர்கள் பலரும் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கு ஒரு பிரதியை வாங்கிக்கொண்டனர். வெளிநாடுகளிலிருந்து 'அழகி', 'கம்பன்' போன்ற பல மென்பொருள்கள் இங்கு வந்தாலும் அவற்றால் சிங்கையில் காலூன்ற முடியவில்லை.

1993இல் 'வின்டோஸ்© 3.1' வெளியானபோது, அனைத்துமே மாறத் தொடங்கியது. வரைகலை பயனீட்டாளர் இடைமுகம் (GUI), கணினிச்சுட்டி, மற்றும் பல்வேறு வகையான வர்த்தக மென்பொருள்களின் வருகை தமிழ் ஆசிரியர்களை இன்னும் துரிதப்படுத்தின. தாரகை© மென்பொருள் வின்டோஸ்க்கான தமிழ் எழுத்துருக்களை முதன்முதலில் ஜனவரி 1994இல் வெளியிட்டது. 1994இல் உமறுப்புலவர் தமிழ்மொழி

நிலையம் அதன் தேர்வுத்தாள்கள் தயாரிப்பில் கணினியை முழுமையாகப் பயன்படுத்திய முதல் பள்ளியாகத் திகழ்ந்தது. ஆசிரியர்கள் ஆங்கில மென்பொருள்களில் தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்த முடிந்தது. வாழ்த்து அட்டைகள், சுவரொட்டிகள், நாள்காட்டிகள் போன்ற டி.தி.பி-கள் தமிழில் வடிவமைக்க முடிந்தது. ஆசிரியர்களுக்குத் தங்கள் சொந்த கற்பித்தல் வளங்களைத் தயாரிக்கப் பல மென்பொருள்கள் கிடைத்தன. பவர்பாய்ன்ட் (Powerpoint) 1990களிலிருந்து புழக்கத்தில் இருந்தபோதிலும், இப்போதுதான் அதனைத் தமிழாசிரியர்-கள் வகுப்பறைகளில் பயன்படுத்த ஆரம்பித்தனர். 1996-இல் கல்வி அமைச்சு குத்தகை மூலம் 'கணியன்' தமிழ் மென்பொருளைத் தேர்ந்தெடுத்தது. கணியன் இரு ஆண்டு-களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் மென்பொருளாக இருந்தது.

## தகவல் தொழில்நுட்ப முதன்மைத் திட்டம்

ஏப்ரல் 1997-இல், நம் மாணவர்களை 21-ஆம் நூற்றாண்டு சவால்களைச் சந்திப்பதற்குத் தயார் செய்ய கல்வி அமைச்சு கல்விக்கான முதல் தகவல் தொழில்நுட்ப முதன்மைத் திட்டத்தை (ICT Masterplan) வெளியாக்கியது. இந்த முதன்மைத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் கல்விச் சமுதாயத்தின் வருங்கால தேவைகளைத் தொடர்ந்து முன்னரே எதிர்பார்த்து அத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் அமைத்தலே ஆகும். இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பல கற்றல் நோக்கங்கள் கொண்ட மென்பொருள்கள் தயாரிக்கவும் பெறவும் கல்வி அமைச்சு தகவல் தொழில்நுட்பப் பிரிவு (ETD) ஒன்றை நிறுவியது.

மென்பொருள் தொழில்துறையும் கல்வி அமைச்சும் பாட உள்ளடக்கம் மற்றும் தொடர்புடைய சேவைகளை உருவாக்குவதிலும் வழங்குவதிலும் முனைப்புடன் ஈடுபட்டன. மென்பொருள் விநியோகிம் செய்வோர் கற்றல் மென்பொருள்களை அடையாளம் காணுதல், விற்பனைக்குப் பின் தொழிநுட்ப ஆதரவளித்தல் போன்ற கூடுதல் சேவை-களைப் பள்ளிகளுக்கு வழங்குவதற்கும் ஊக்குவிக்கப்பட்டனர். இரு உள்ளூர் பதிப்பக நிறுவனங்கள் கற்றல் குறுவட்டாகச் சிங்கப்பூர்ப் பள்ளிகளுக்காக வெளியிட்டன. உலகத்தின் முதல் தமிழ்க் கல்விசார் குறுவட்டான 'குள்ளாய் வியாபாரியும் குரங்கும்' என்னும் குறுவட்டை முதலிலும் 'அபிநயாவின் குருவி' என்னும் குறுவட்டை அடுத்தும் கிளேரிடெக்ஸ் நிறுவனம் வெளியிட்டது. பிரபல உள்ளூர் பதிப்பகமான டைம்ஸ் பதிப்பகம் 'ஆசிய நாட்டுப்புறக் கதைகள்' என்னும் தலைப்பில் சில பன்மொழி (தமிழ் உட்பட) கல்வி குறுவட்டுத் தொடர்களை வெளியிட்டது. கல்வி அமைச்சும் கல்விசார்ந்த குறுவட்டுகளை உருவாக்கிப் பள்ளிகளுக்கு வெளியிட்டது.

## கல்வி அமைச்சின் தயாரிப்புகள்

1. தொடக்கநிலை 4 மாணவர்களுக்காக 'மின்மினி உலகம்' – இது ஒரு பல்லூடக ஊடாடு குறுவட்டு. குடிமை மற்றும் அறநெறிக் கல்வியின் கற்றல் கற்பித்தலை வளப்படுத்துவது

இதன் நோக்கமாகும். உலகத்திலேயே குடிமை மற்றும் அறநெறிக் கல்விப் பாடக்கலைத் திட்டத்திற்காக உருவான முதல் தமிழ் மின்வட்டு இதுவே.

2. 'சுடரொளிச் சோலை தொடர்' – தொடக்கநிலை 1 முதல் 6 வரை பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்மொழிக் கற்பிக்க 5 தமிழ்மொழிக் கல்விசார் குறுவட்டுகளைக் கொண்ட தொடர். வளர்தமிழ் பாடத்திட்டத்தின் (1998) அடிப்படையில் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த உருவாக்கப்பட்ட குறுவட்டுகள்:

| **சுடரொளி சோலை தொடர்** | **வெளியிடப்பட்ட ஆண்டு** |
|---|---|
| முகாமில் மூன்று நாள் (தொ.நி.1) | 1998 |
| யாரோ! இவர் யாரோ! ( தொ.நி. 1, 2 & 3) | 1998 |
| உலகம் சுற்றும் ஜூ ஜூ (தொ.நி. 2 & 3) | 2000 |
| மாயனின் மாளிகை (தொ.நி.3 & 4) | 2000 |
| சக்ரா (தொ.நி.5 & 6) | 2001 |

1997-இல், பொருளாதார வளர்ச்சிக் கழகம் (EDB) மற்றும் தேசியக் கணினிக் கழகம் (NCB) உள்ளூர்த் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின் (LIUP) கீழ் அனைத்துலக மென்பொருள் நிறுவனங்களை ஈர்த்து உள்ளூரில் இயங்கவும் உள்ளூர் பல்லூடகத் தயாரிப்பாளர்களுடன் முத்தரப்புக் கூட்டிணை உடன்பாடுகளை உருவாக்க வழி வகுத்தது. உயர்நிலைப் பள்ளிகளுக்கான இரு தமிழ்மொழிக் கற்றல் குறுவட்டுகள் இத்திட்டத்தின் கீழ் இணைந்து உருவாக்கப்பட்டன.

1. தமிழ் – 'கலையும் பண்பாடும்' (கல்வி அமைச்சு, என்ஐஐடி (இந்தியா), ஐடீ21.பிரைவட். லிமிட்டட்)

2. 'மாயத் தீவு' (கல்வி அமைச்சு, பென்ட்தாஃபோர் (இந்தியா), கொனெக்ட்! பிரைவட். லிமிட்டட்)

2002-இல், கல்வி அமைச்சு "வளர்தமிழ்" தொடக்கப்பள்ளி பாடத்திட்டத்தை (1998) புதிதாக உருவாக்கப்பட்ட "அரும்பு" தொடக்கநிலைப் பாடத்திட்டமாக (2002) மாற்றி-யமைத்தது. அதனால் சுடரொளிச் சோலை குறுவட்டுத் தொடரை மாற்றவேண்டிய அவசியம் உருவானது.

தமிழாசிரியர்கள் பலரும் பாடவேளை நேரம் போதாமையால் சுடரொளிச் சோலை தொடர் குறுவட்டுகளை வளர்தமிழ் பாடப்புத்தகத்துடன் (1998) இணைத்துப் பயன்-படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்கினர் என்பதைக் கல்வி அமைச்சு உணர்ந்தது. ஏனெனில் அவற்றைப் பயன்படுத்துவதற்கு உரிய நேரம் பாடத்திட்டத்தில் வகுக்கப்-

படவில்லை. ஒரு சில ஆசிரியர்கள் மட்டுமே அக்குறுவட்டுகளைப் பரவலாகப் பயன்படுத்தினர்; அதுவும் வளமூட்டும் நடவடிக்கைகளாய் மட்டுமே பயன்படுத்தினர். ஆகவே, அரும்பு பாடத்திட்டத்திற்காக உருவான குறுவட்டுகள் தொடர் புதிய பாடத்திட்டத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அமையப் பாடவேளை நேரத்தில் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டது. இந்தப் புதிய தொடர், தொடக்கநிலை ஒன்று முதல் நான்கு வரை பயிலும் மாணவர்களுக்காக 'அரும்புக்கு விருந்து' என்னும் பெயரில் நான்கு பகுதிகள் கொண்ட தொடராக வெளிவந்தது. (2002லிருந்து - 2004க்கு இடைப்பட்ட காலத்தில்) அதற்கு ஒத்த தொடர் குறுவட்டுகள் 'வானவில்' என்ற பெயரில் மூன்று தலைப்புகளில் உயர்நிலை 1 முதல் 3 வரையில் பயிலும் மாணவர்களுக்காகத் தயாரானது. 'அரும்பு, தொடர் 6' மற்றும் 'வானவில், தொடர் 4' ஊடாடு முறையில் இணையத்தில் அமையவிருந்தது. 2007ஆம் ஆண்டு அறிமுகம் கண்ட அவை, தொடக்கநிலை ஆறு இறுதித் தேர்வு (2006) மற்றும் சாதாரண நிலைத் தேர்வுத் தாள்களின் அமைப்பைத் தழுவி அமைந்தன.

கல்வி அமைச்சு உருவாக்கிய பல்லூடக குறுவட்டுகளுடன், 'தமிழ் புக் 2000', (அமெரிக்காவில் தயாரானது) 'செந்தமிழ்' (உள்ளூர் நிறுவனமான தமிழ் நெட்வர்க் பப்லிஷிங் ஹவுஸுக்காக இந்தியாவில் உருவானது) ஆகிய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்ற கல்விசார் பல்லூடக குறுவட்டுகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. Pebbles என்ற இந்திய நிறுவனம் பாட்டி சொன்ன கதைகள், ஈசாப் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் என்று முப்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளை வியாபார ரீதியில் வெளியிட்டது.

தொடக்கநிலை 1 முதல் 6 வரையிலான மாணவர்களுக்கான அரும்பு ஒலிவட்டுத் தொடர்கள் 1 முதல் 6 வரையிலான மாணவர்களுக்கான அரும்புக்கு விருந்து தொடரைப் பூரணமாக்கின. அதுபோல் வானவில் ஒலிவட்டுத் தொடர் உயர்நிலை 1 முதல் 4 வரையிலான மாணவர்களுக்குப் பயன்பட்டது. இந்தத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் படிமத்தின் சிறப்புக் கூறு வழக்கநிலைத் தொழில்நுட்ப மாணவர்களுக்கும் அவை பயனளித்ததே ஆகும்.

**இணையம்**

அகண்டலை வரிசை இணைப்பின்(Broadband) புழக்க அதிகரிப்பாலும் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கற்றல் கற்பித்தலின் அதிகரிக்கும் தேவைகளைப் பூர்த்திசெய்ய உகந்த ஊடகமாக இணையம் தேர்ந்தெடுக்கப்பட்டது. தெரிவுவிடைக் கேள்விகள் உருவாக்கி, தெரிவுவிடை அமைப்புச் சொல் உருவாக்கி மற்றும் ஃபிலாஷ் (Flash) செயலியைப் பயன்படுத்தி ஊடாடு வளங்களை உருவாக்கும் விருப்பமைப்பு (customized) மென்பொருள் கருவிகளைக் கல்வி அமைச்சு உருவாக்கியது.

மே 12ஆம் தேதி 2001இல் துவக்கம் கண்ட 'நம் நாடி' என்னும் இணையத்தளம் 10 முதல் 12 வயது மாணவர்களுக்கு உரிய தமிழ்மொழிப் பக்கமாக மாற்றம் கண்டு

அறிமுகப்படுத்தப்பட்டது. 2005-ஆம் ஆண்டில் அகண்டலை வரிசையின் வருகையாலும் ஆசிரியர் மாணவர்களின் பாடப்பொருள் பங்களிப்பாலும் அப்பக்கம் பிரபலமடைந்தது.

2009-இல் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சின் தமிழ்மொழி சொல் உள்ளீடு மென்பொருளை – 'முரசு அஞ்சல்'- எல்லாப் பள்ளிகளுக்கும் அறிமுகப்படுத்தி அதன் மூலம் தமிழ் எழுத்துரு உள்ளீட்டைச் சீரமைத்துத் தரப்படுத்தியது. அடிப்படைத் தட்டச்சுத் திறனை மாணவர்கள் பெற்றதால் இணையத்தில் தகவல்களைத் தேடுவது சுலபமானது. மாணவர்கள் சுயமுனைப்புடன் கற்பதற்கு வாய்ப்பளிக்க ஆசிரியர்களால் முடிந்தது. பாடக்கலைத்திட்டத்தில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் புகுத்தப் பள்ளிகள் முனைப்புக் காட்டின. பாடத்திட்டம், தேசியத் தேர்வுகள் மற்றும் பாடக்கலை அமைப்புக் களம் ஆகியவற்றிற்கு இடையே அதிக ஒருங்கிணைப்புக் காணப்பட்டது. இவற்றுக்குத் ''தாய்-மொழிக் கல்வி இருவழித் தொடர்பு தளம்', '10Tசிகரம்', 'எடுமால் 2.0 தளம்' , ''ஓபிள்'' (One Portal All Learners – OPAL) போன்ற இணையத் தளங்கள் பெரிதும் எளிதாக்கி உதவியதால் முன்பு பிரபலமாய் இருந்த மென்பொருள்கள் மெல்ல மறையத் தொடங்கின .

**முடிவுரை**

ஆசிரியர்கள், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, தம் தேவைகளை உணர்ந்து, தங்கள் மனப்போக்கை மாற்றிக்கொண்டு தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்களுடன் இணைந்து செல்லத் தயாராயினர். தமிழாசிரியர்கள் அடிப்படை சொற்-செயலியைப் பயன்படுத்திய காலம் மலையேறி இன்று அனைத்திலும் மேலோங்கி இருக்கும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் களத்தில் திறன்பேசிகளையும் தொடுதிரை வரைபட்டிகை-களையும் (Tablets) பயன்படுத்தும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளனர். இன்று புழக்கத்தில் இருப்பவற்றை ஒரு சில மாதங்களிலேயே வழக்கற்றுபோகும் ஒன்றாய் மாற்றிவிடும் தன்மை வாய்ந்தது அதீத வேகத்தில் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம்.

கல்வி அமைச்சும் தமிழ்மொழி ஆசிரியர்களும் சிங்கப்பூரிலும் உலக அரங்கிலும் தமிழ்மொழிக் கல்வியில் அன்றிலிருந்து இன்றுவரை, தொடர்ந்து தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பங்கினை ஆற்றி வருகின்றனர்.

# பள்ளிக் குழும நடவடிக்கைகள்

**முஹைதீன் நிசார் அன்வர்**
தமிழாசிரியர்
கிளிமென்டி டவுன் உயர்நிலைப் பள்ளி

## முன்னுரை

ஒரு கை தட்டினால் ஓசை எழாது என்பது பழமொழி மட்டுமல்ல. அது நம் அன்றாட வாழ்க்கையில் நினைத்துப் பார்த்துச் செயல்பட வேண்டிய ஒரு வாழ்வியல் உண்மையும் கூட. தனித்து நின்று செயல்பட்டு வெற்றியடைவது சாத்தியமற்ற ஒன்றல்ல. இருப்பினும் தனி முயற்சி கூட்டுமுயற்சி ஆகும்போது சாதனைகளின் அளவும் வெற்றிகளின் சுவையும் பெற்றுத் தருகின்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்றால் அது மிகையாகாது.

மாணவர்களைப் பேணி வளர்ப்பதும் புதுமை புகுத்தலை மையமாகக் கொண்ட கற்கும் சூழலை வழங்குவதும் தாய்மொழிக் கற்றலின் தலையாயக் குறிக்கோளாக விளங்குகின்றது. மாணவர்கள் தங்கள் எதிர்காலச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு வாழ்க்கையில் வெற்றி பெற இக்குறிக்கோள்கள் உதவுகின்றன. இந்தக் குறிக்கோள்கள் நிறைவேறுவதோடு மட்டுமல்லாமல், மாணவர்கள் தமிழ்மொழி மீது ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருக்கவேண்டும். அவர்களது வாழ்நாள் கற்றலின் ஓர் அங்கமாகத் தமிழ்மொழியும் இடம்பெற வேண்டும். தமிழ் கற்கின்ற மாணவர்கள் தமிழ்மொழியையும் தமிழ் பண்பாட்டையும் நேசிக்க வேண்டும். மொழி மற்றும் பண்பாட்டின் அருமை பெருமைகளை உணர்ந்து, நல்லதொரு முன்மாதிரியாக வாழவேண்டும். உரிய முயற்சிகளை மேற்கொண்டால் இது நிச்சம் சாத்தியமே. தமிழாசிரியர்களின் வெற்றியை இதை வைத்தே நாம் அளவிடலாம். பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்களால் இயன்ற சிறந்த சேவையைச் செய்து வருகிறார்கள். பல பள்ளிகள் சேர்ந்து ஒரு குழுமமாகச் செயல்படும்போது பலன்கள் பன்மடங்காகின்றன. மாணவர்களும் அதிக அளவில் பயனடைகின்றனர்.

## குழுமங்களின் அவசியம்

சிங்கப்பூரில் அரசாங்கப் பள்ளிகள் யாவும் குழுமங்களாக செயல்படுகின்றன. குழுமத்திலுள்ள பள்ளிகளில் உள்ள தமிழ்த்துறைகள் பிற பள்ளிகளோடு இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பயனடையும் வண்ணம் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஒற்றுமையே பலம் என்பதற்குப் பள்ளிக் குழுமங்களின் முயற்சிகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்கள் ஒரு செயலைத் திட்டமிட்டுச் செய்யும்போது பல நடைமுறைச்

சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. அதே திட்டத்தைப் பல பள்ளிகளைச் சார்ந்த முப்பது ஆசிரியர்கள் சேர்ந்து, திட்டமிட்டுச் செய்யும்போது பணிச்சுமை குறைகின்றது. ஆசிரியர்களும் மனமுவந்து எல்லா நடவடிக்கைகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு தங்கள் வேலைகளைச் செம்மையாகச் செய்கின்றனர்.

ஒவ்வொரு குழுமத்திற்கும் ஓர் ஆசிரியர் தலைமைப் பொறுப்பை ஏற்று அந்தக் குழுமத்தை வழிநடத்துகிறார். அவர் கூட்டங்களைக் கூட்டி, குழும ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத் திட்டங்களைச் செயல்படுத்துகிறார். பெரும்பாலான குழுமங்களில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஆசிரியரின் பள்ளியில் உள்ள பள்ளி முதல்வரோ, துணை முதல்வரோ, தாய்மொழித்துறைத் தலைவரோ குழும ஆலோசகராக விளங்கி, குழும நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடைபெற பல வழிகளில் ஆதரவை வழங்குகிறார். குழும நடவடிக்கைகளுக்காக குழும நிதியும் அநேகக் குழுமங்களில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். மாணவர்களுக்குப் பயனளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த நிதி பெரிதும் துணை புரிகின்றது.

### குழும நடவடிக்கைகளில் சில

#### *மாணவர்களுக்கான பயிலரங்குகள்*

குழுமத்தில் உள்ள தமிழ் மாணவர்களுக்காகப் பயிலரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தேர்வு வினாக்களை அணுகும் முறைகள், கட்டுரை எழுதும் உத்திகள், பேச்சுத் திறனை வளர்க்கும் உத்திகள், நடிக்கும் திறன்களை மேம்படுத்துதல், புத்தாக்கச் சிந்தனைகளைத் தூண்டுதல், சிறுகதை, கவிதை எழுதுதல், கேட்டல் திறன்கள் வளர்த்தல் போன்ற திறன்களை மையமாகக் கொண்ட பயிலரங்குகள் குழுமங்களால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மாணவர்கள் இம்மாதிரியான பயிலரங்குகளின் மூலம் தங்கள் திறன்களை மேம்படுத்திப் பெரிதும் பயன் அடைந்திருக்கின்றனர். தன்முனைப்புப் பேச்சுகளும் நேர நிர்வாகப் பேச்சுகளும் குழுமங்களால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பெற்றோர்கள் இம்மாதிரியான பயிலரங்குகளைப் பெரிதும் வரவேற்கின்றனர். இம்மாதிரியான பயிலரங்குகளின் மூலம் மாணவர்கள் தங்களுடைய குறைபாடுகளை உணர்ந்து, அவற்றை நிவர்த்தி செய்கின்றனர். தங்களுக்குள் ஒளிந்திருக்கும் திறன்களையும் கண்டறிந்து, அத்திறன்களை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்கின்றனர். பயிலரங்குகளை நடத்துவதற்குக் அனுபவம் வாய்ந்த மூத்த ஆசிரியர்களும் கல்வி அமைச்சு அதிகாரிகளும் அழைக்கப்படுகின்றனர். நாடகம், கவிதை, கதை, கலை சார்ந்த பயிலரங்குகளை நடத்த உள்ளூர் பிரபலங்களும் அழைக்கப்படுகின்றனர்.

***போட்டிகள்***

பல குழுமங்களில் ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. பேச்சுப்போட்டி, சொற்போர், பாடல் போட்டி, நடனப் போட்டி, கதை சொல்லும் போட்டி, பொது அறிவுப் போட்டி, தட்டச்சு போட்டி, கட்டுரை, சிறுகதை எழுதும் போட்டி, நாடகப்போட்டி, செய்யுள், குறள் மனனப் போட்டி ஆகியவற்றோடு புத்தாக்கச் சிந்தனைகளைத் தூண்டும் பல வகையான போட்டிகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு குழுமத்திலும் உள்ள மாணவர்கள் தங்கள் பள்ளிகளைப் பிரதிநிதித்து இந்தப் போட்டிகளில் கலந்துகொள்கின்றனர். சிறப்பு நடுவர்கள் இந்தப் போட்டிகளுக்கு வருகைதந்து நிகழ்ச்சியைச் சிறப்பிக்கின்றனர். போட்டியில் வெற்றி பெறுவது ஒவ்வொரு போட்டியாளரின் குறிக்கோளாக இருந்தாலும், போட்டி என்று வரும்போது எல்லாரும் வெற்றி பெற்றுவிட முடியாது. ஆகையால் பங்கெடுப்பின் முக்கியத்துவத்தையும் மாணவர்களுக்கு உணர்த்த இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

***முகாம்கள்***

குழுமங்கள் ஆண்டுதோறும் மொழி மற்றும் கலாச்சார முகாம்களுக்கு ஏற்பாடு செய்கின்றன. இந்த முகாம்கள் பெரும்பாலும் ஒரு நாள் முகாம்களாகவே அமைகின்றன. தமிழ் பாரம்பரிய விளையாட்டுகளான கபடி, எட்டுக்கோடு, கயிறு இழுத்தல், உறியடித்தல், பல்லாங்குழி, பரமபதம், பம்பரம் விடுதல் போன்றவை இம்முகாம்களின் அங்கங்களாக விளங்குகின்றன. மறந்துபோன தமிழ் விளையாட்டுகள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்படுகின்றன. தமிழர் கலைகள் மாணவர்களுக்கு மறந்துபோகாமல் இருக்கவும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இருவாரத் தாய்மொழி நடவடிக்கைகளின்போது இம்மாதிரியன கலைகள் குழும ஏற்பாட்டில் மாணவர்களின் பார்வைக்குக் கொண்டுவரப்படுகின்றன. சிலம்பம், கோலாட்டம், கும்மி, மயிலாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், ஒயிலாட்டம் போன்ற கலைகளைக் குழுமப் பள்ளிகள் உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையம் ஏற்பாடு செய்யும் இருவாரத் தாய்மொழி நிகழ்ச்சிகள் மூலமாகவும் தங்கள் மாணவர்களைக் கண்டுகளிக்கச் செய்கின்றன.

***ஆசிரியர்களுக்கான கற்றல் பயணங்கள்***

கற்றல், கற்பித்தல் என்பவை வகுப்பறையில்தான் நடைபெறவேண்டும் என்றிருந்தது அந்தக் காலம். கற்றல் பயணங்கள் மேற்கொள்ளாத பள்ளிகளே இன்று இல்லை எனலாம். கற்றல் பயணங்கள் மாணவர்கள் மட்டும் கலந்துகொண்டு பயன்-

பெறக்கூடிய ஒரு நடவடிக்கை அல்ல. ஆசிரியர்களும் இதன் மூலம் அதிகம் பயனடைகிறார்கள். குழுமங்கள் பெரும்பாலும் ஆசிரியர்களுக்கான கற்றல் பயணங்களை ஏற்பாடு செய்கின்றன. இந்தக் கற்றல் பயணங்கள் ஆசிரியர்களுக்குத் தங்கள் அன்றாடப் பணிச்சுமைகளைத் தற்காலிகமாக மறந்து இன்புறும் ஒரு நடவடிக்கையாக இருக்கும் அதே சமயம் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பாகவும் அமைகின்றன. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் அலுவலகங்கள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மற்ற பள்ளிகள், வெளியூரில் உள்ள பள்ளிகள் போன்ற இடங்களுக்குக் கற்றல் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. குழும ஆசிரியர்களோடு கற்றல் பயணம் செல்வது சிறந்த கருத்து பரிமாற்றங்களுக்கும் வழி வகுக்கும் ஒரு சந்தர்ப்பமாக விளங்குகின்றது. கற்றதையும் பெற்றதையும் சக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கும் சீரிய பணியையும் நமது ஆசிரியர்கள் செம்மையாகச் செய்து வருகின்றனர்.

### *பெற்றோர்களுக்கான பயிலரங்குகள்*

குழுமங்களின் ஏற்பாட்டில் பெற்றோர்களும் பயனடையும் வகையில் அவர்களுக்காக பலதரப்பட்ட பயிலரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்கு எவ்வாறு நல்ல வழிகாட்டிகளாக விளங்குவது? அவர்களுடைய கல்விப் பணயத்தில் எவ்வாறு உறுதுணையாக இருப்பது? பின்தங்கிய பிள்ளைகளுக்கு எவ்வாறு ஊன்றுகோலாக இருந்து அவர்களுக்கு உகந்த ஒரு கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது? பிள்ளைகளோடு எவ்வாறு ஓர் அணுக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்வது? இது போன்ற கேள்விகளுக்கு விடை காணும் பொருட்டு பலதரப்பட்ட கருப்பொருள்களை மையமாகக் கொண்ட பயிலரங்குகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் பெற்றோர்களுக்காக ஏற்பாடு செய்யப்படுகின்றன. கல்வி என்பது ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் ஆகிய மூன்று தரப்பினரும் ஒன்றுகூடி நிலைநாட்டக்கூடிய ஒன்று என்பதை யாராலும் மறுக்க முடியாது. இந்த உண்மையைப் பெற்றோர்களும் நன்குணர்ந்து இம்மாதிரியான பயிலரங்குகளிலும் சொற்பொழிவுகளிலும் கலந்துகொண்டு குழும ஆசிரியர்களின் முயற்சிகளுக்கு பேராதரவு அளித்து வருகின்றனர். குழும ரீதியாக இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறும்போது பெற்றோர்கள் தங்கள் பள்ளியைச் சார்ந்த பெற்றோர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்வதோடு நின்றுவிடாமல் இதர குழுமப் பள்ளியைச் சார்ந்த பெற்றோர்களுடனும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றார்கள். இது மிகவும் ஆக்ககரமான ஒரு விஷயம் என்பது மறுக்க முடியாத உண்மை. இம்மாதிரியான முயற்சிகளால் பயன் அடைவது பெற்றோர் மட்டுமல்ல, மாணவர்களும்தான். தங்களுடைய நலனில் தங்கள் பெற்றோருக்கு அக்கறையும் ஈடுபாடும் இருக்கின்றது என்பதை அறியும் மாணவர்களுக்கு இதுவே ஒரு பெரிய உந்துசக்தியாக விளங்குகின்றது.

### *தேர்வுத்தாள்கள் தயாரித்தல்*

கற்றல் சேவையின் மிகவும் முக்கியமான ஒரு பணி தேர்வுத்தாள்கள் தயாரித்தல். தரமான தேர்வுத்தாள்களைத் தயாரித்தில் எளிதான ஒரு காரியம் அல்ல. அதிக கவனத்துடனும் அதிக நேரம் செலவழித்தும் செய்ய வேண்டிய ஒரு மிக முக்கியமான பணி இது. கற்றல் பணி, இணைப்பாட நடவடிக்கைகள், இதர பள்ளிச் செயற்குழுக்களில் ஆற்ற வேண்டிய பணிகள் போக ஆசிரியர்கள் தேர்வுத்தாள்கள் தயாரிக்கும் வேலைக்கும் கணிசமான நேரத்தை ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. சராசரியாக இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளியில், தொடக்க நிலைப் பள்ளியைப் பார்க்கும்போது, ஆசிரியர்கள் இருவரும் அனைத்து நிலைகளுக்கும் சேர்ந்து ஓராண்டிற்குக் குறைந்த பட்சம் 14 தேர்வுத்தாள்களைத் தயாரிக்க வேண்டும். உயர் தமிழ் கற்பிக்கப்படும் உயர்நிலைப் பள்ளியை எடுத்துக்கொண்டோம் என்றால் இரண்டு ஆசிரியர்கள் அனைத்து நிலைகளுக்கும் சேர்ந்து ஓராண்டிற்குக் குறைந்த பட்சம் 16 தேர்வுத் தாள்களைத் தயாரிக்க வேண்டும். தாள் 1 மற்றும் தாள் 2 என்று பிரித்துக்கொண்டால் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 28 தேர்வுத்தாள்களும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 32 தேர்வுத்தாள்களும் தயாரிக்க வேண்டும். இது கண்டிப்பாக எளிதான காரியம் அல்ல. இங்குதான் குழுமம் என்னும் அமைப்பு ஆசிரியர்களின் துணைக்கு வருகின்றது. குழும அடிப்படையில் பல பள்ளிகள் சேர்ந்து தேர்வுத்தாள்களைத் தயார் செய்கின்றன. இது ஆசிரியர்களின் வேலைப் பளுவையும் மன உளைச்சலையும் வெகுவாகக் குறைக்கின்றது. இதனால் ஆசிரியர்கள் தங்களது கற்பித்தல் பணியையும் செம்மையாகச் செய்யக்கூடிய வகையில் பயன் அடைகின்றனர். குழுமத் தேர்வுத்தாள்கள் என்று வரும்பொழுது அதனோடு சேர்ந்து பல கூடுதல் பொறுப்புகளையும் ஆசிரியர்கள் மனதிற்கொண்டு தங்களது பணியைச் செம்மையாகச் செய்துவருகின்றனர். இருப்பினும் பல பள்ளிகள் குழும அடிப்படையில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துவந்தாலும் தேர்வுத்தாள்கள் தயாரிப்பு என்று வரும்பொழுது தனித்தே இயங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### **ஒற்றுமையே பலம்**

சிங்கப்பூரில் பள்ளிகள் குழுமங்களாகச் செயல்படத் தொடங்கிப் பல ஆண்டுகளாகிவிட்டன. தமிழாசிரியர்கள் குழுமங்கள் வழி பல அரிய முயற்சிகளை மேற்கொண்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் பலரை நன்மையடையச் செய்திருக்கின்றனர். ஆசிரியர்களின் உழைப்பும், பள்ளி முதல்வர்களின் ஆதரவும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் இல்லாது குழுமம் என்ற அமைப்புமுறை இந்த அளவுக்கு வெற்றி கண்டிருக்க முடியாது. வேற்றுமைகளைக் கடந்து மாணவர் நலன் நாடுகின்ற ஆசிரியர்களின்

ஒற்றுமையும் பரந்த மனப்போக்கும் குழுமங்களை வெற்றியடையச் செய்திருக்கின்றது என்பது வெள்ளிடைமலை. இந்த ஒற்றுமை ஓங்க வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்-களும் பெற்றோர்களும் குழுமங்களால் மேலும் பயன் பெறவேண்டும்.

# ஊடகங்களில் தமிழ்மொழிக் கல்வி - வானொலி

**கலாரத்னா செ. ப. பன்னீர்செல்வம்**,
எம் ஏ, எம் ∴பில், சிங்கப்பூர்

---

**முன்னுரை**

சிங்கப்பூர்க் குடியரசில் வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், இணையத் தளங்கள், இணையவாசல்கள், செயலிகள் நவீன ஊடகங்கள் முதலியவை தமிழ்மொழிக் கல்விக்கு இன்று நல்ல அடித்தளங்களாகப் பங்காற்றி வருகின்றன. இந்த ஊடகங்களைப் பயன்படுத்துவோர், மொழி வளமும் இன நலனும் மேம்பாடு காணவேண்டும் எனும் குறிக்கோளில் உறுதியாக உள்ளனர். அதற்கெனவே திட்டமிட்டுப் பல்வேறு செயல்பாடுகளில் தீவிரமாக இறங்கி, தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சிக்கு சீரான தொண்டாற்றியும் வருகின்றனர். இவ்வகையில், சிங்கப்பூரில் வானொலி, தமிழ்மொழிக் கல்விக்கு ஆற்றியுள்ள, ஆற்றிவரும் பொறுப்பான செயல்பாடுகள் பற்றி, இந்தக் கட்டுரை பார்வையிடுகிறது.

**ஒலிபரப்புச் சேவை துவக்கம்**

சிங்கப்பூரில் 1936ஆம் ஆண்டு, ஒலிபரப்புச் சேவை தொடங்கியதாக வரலாறு கூறுகின்றது. 1963ஆம் ஆண்டு தொலைக்காட்சி சேவைகள் தொடங்கப்பட்டன. 1974ஆம் ஆண்டு கறுப்பு வெள்ளை ஒளிபரப்புக்கு விடைகொடுத்து, வண்ண ஒளிபரப்பு, அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

உலகெங்கும், ஊடகக் கல்வி, தொடர்புத்துறை ஊடகங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அறிவித்தல், அறிவூட்டல், அகமகிழ்வித்தல் ஆகிய மூன்று முக்கிய செயல்பாடுகளை, அவற்றின் கடமைகளாக வலியுறுத்தி வருகின்றன. இந்த மூன்றையுமே குறிக்கோளாகக் கொண்டு சிங்கப்பூர் வானொலி கடந்த பல ஆண்டுகளாகச் செயலாற்றி வருகின்றது. 1940களில் தனியார்த் தமிழ்ப்பள்ளிகள் பல இருந்தன. அவற்றுள் ஒரு சில, பொருளாதார நெருக்கடியில் சிக்கி சில காலம் செயல்படாமலும் இருந்தன. ஆனாலும் நல்லுள்ளம் கொண்ட பலர் நிதி திரட்டி அவற்றைத் திறம்பட இயங்கவும் செய்தனர்.

தமிழறிஞர் ச.சா. சின்னப்பனார் காலத்தில், அவ்வாறு சிரமத்திலிருந்த தமிழ்ப்பள்ளிகளுக்கு நிதித் திரட்ட, கிடைத்தற்கரிய பூக்களை விற்றும் நிதி திரட்டப்பட்டதாகச் சான்றுகள் கூறுகின்றன.

சிங்கப்பூர்த் தமிழ் வளர்ச்சி மத்தியக்குழு ஒன்று 1946ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதால், நிதிப் பற்றாக்குறை ஓரளவுக்கு நீக்கப்பட்டதாகவும் அது தெரிவிக்கின்றது. மறு ஆண்டில் 1947ஆம் ஆண்டு சிங்கப்பூரின் கல்வியாளர்கள், சிங்கைத் தமிழ் மாணவர் கழகத்தை நிறுவியுள்ளனர். அங்கு அறநெறிகள், பேச்சுப் பயிற்சி, பாட்டுப் பயிற்சி, அறிவுரைக் கொத்து ஆகியவை கற்பிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது. இதற்கு உறுதுணையாகச் சிங்கப்பூர் வானொலி, அந்தக் கழகத்தில் தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு ஒலிபரப்பின் வழியாகத் தமிழ்மொழிக் கல்வி சார்ந்த பயிற்சிகளை நடத்தியதாகப் பதிவுகள்

கூறுகின்றன. இன்னும் சொல்வதாயின் சிங்கப்பூரின் வானொலி, தமிழ்மொழிக் கல்விக்கு மிகப் பழங்காலத்திலேயே தொண்டாற்றத் தொடங்கியிருப்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

கேத்தேயில் இருந்து தாம்சன் சாலைக்கு வானொலி நிலையம் 1952ஆம் ஆண்டில் வந்த பிறகு, இன்னும் கூடுதலாகத் தமிழ்மொழிக் கல்விக்கு அது பங்காற்றியது. அதற்கு எடுத்துக்காட்டாகப் பள்ளிக்கூட ஒலிபரப்பைக் கூறலாம். பாடல் பயிற்சி, இலக்கிய, இலக்கண விளக்கங்கள், படைப்பிலக்கியங்கள் ஆகியவை அந்த ஒலிபரப்பில் சிறப்பாக இடம்பெற்றன. திருமதி எட்வர்ட்ஸ் அதற்குப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். அந்தப் பிரிவில்தான் திரு. டிவிட்டி ராஜு, திரு. மெ.திரு. அரசு, திரு. எம்.கே. நாராயணன், திரு. இ.எஸ்.ஜே. சந்திரன் முதலியோர் தொடக்ககாலத்தில் பணியாற்றினர். 1960இல் பள்ளிக்கூட ஒலிபரப்பு நிறுத்தப்பட்டு, மலேசியா சென்றதும், வானொலியின் பொதுத் தமிழ் ஒலிபரப்புத்துறை அவற்றின் பல நிகழ்ச்சிகளைப் புதுக் கோணத்தில் ஒலியேற்றி வந்தது.

சிங்கப்பூர் வானொலியின் வரலாற்றை உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தால், மக்கள் தொடர்புத் துறையில், அது ஆற்றியுள்ள சேவை மகத்தானது, உன்னதமானது என்று தெரிந்துகொள்ளலாம். தமிழ்மொழிக் கல்வி என்பது, கல்வியை தமிழ்மொழி மூலம் கற்பிப்பதுதான் என்பதால், மொழி, இலக்கணம், இலக்கியம், வரலாறு, நிலநூல், அறிவியல், அரசியல், சமூகவியல், நீதிநெறி முதலிய பல்வேறு துறை நிகழ்ச்சிகளை வானொலி ஒலிபரப்பிவந்துள்ளது. (ஆதாரம்: செ.ப. பன்னீர்செல்வம், எம்.ஃபில். ஆய்வு, வானொலியும் சிங்கப்பூரில் தமிழும் தமிழரும்: அழகப்பா பல்கலைக் கழகம்)

**மாற்றங்கள்**

1965ஆம் ஆண்டு சிங்கை வானொலித் தமிழ்ப் பிரிவின் தலைவராகப் புலவர் அ. முருகையன் பதவி ஏற்றபோது, இவற்றை மனத்திற்கொண்டு நிகழ்ச்சி நிரலில் பல மாற்றங்களைச் செய்தார். தமிழை முதல் மொழியாகப் படித்தோருக்கும் இலக்கிய நாட்டம் கொண்டோருக்கும் உதவக்கூடிய பல நிகழ்ச்சிகள், அப்போதுமுதல் வானொலியில் இடம்பெற்று வந்தன. இலக்கிய மலர், மகளிர் மலர், திருக்குறள் கற்போம், முதலிய ரீதியில் அவ்வகை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதைச் சுட்டிக்காட்டலாம். இடைக்காலத்தில் தேசிய தொழிற்சங்க காங்கிரசும் இதய ஒலி என்னும் வானொலி ஒலிபரப்பை நடத்தியது. அதிலும் நல்ல இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆயினும் சிங்கப்பூர் வானொலி என்னும்போது, முதலில், ரேடியோ மலாயா சிங்கப்பூர், ரேடியோ சிங்கப்பூர், ஒலி வழி நான்கு, ஒலிக்-களஞ்சியம், ஒலி 96.8, சுவாரா சிங்கப்பூரா (பண்பலை ஒலிபரப்பு) ஆகியவற்றில் வளர்க்கப்பட்ட தமிழ்க்கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளை இங்கே கண்ணோட்டமிடுவது சாலச் சிறந்தது. எப்படிப் பார்த்தாலும் இங்குள்ள ஊடகங்கள், நல்ல தமிழை வளர்த்தே வந்துள்ளன என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தொடக்கப் பள்ளி வகுப்புகளில் தமிழ் மாணவர்களுக்கு உகந்த பாடங்களையும் ஒலிபரப்பிய பெருமை சிங்கப்பூர் வானொலிக்கு உண்டு. பாட நேரம் தொடக்கப்பள்ளித் தேர்வுக்கு மாணாக்கர்களை ஆயத்தப்படுத்தியது. ஓர் ஆசிரியரும் இரு மாணாக்கர்களும் பாடம் தொடர்பாக உரையாடும் பாணியில் அந்த நிகழ்ச்சி அமைந்திருக்கும். அந்தப் பாடம்

தொடர்பான வினாக்களை மாணாக்கர்கள் எங்களுக்கு முன்கூட்டியே அனுப்பி வைத்ததும் அதை அந்த நிகழ்ச்சிக்குப் பாடம் எழுதும் ஆசிரியருக்கு எழுதி அனுப்புவோம். அந்த ஆசிரியர் தாம் எங்களுக்கு அனுப்பி வைக்கவுள்ள பாடத்தில் அவற்றுக்கான விடைகளை உள்ளடக்கி மீண்டும் நிலையத்துக்கு அனுப்பிவைப்பார். அதன் பின்னர், அந்த நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்பட்டு வானொலியில் இடம்பெறும். அதைப் போலவே உயர்நிலையில் பொதுக்கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத்தேர்வு எழுதும் மாணவர்களுக்காக உங்கள் தமிழ் என்னும் பாட நிகழ்ச்சியை ஒலிபரப்பியது ஒலி வழி நான்கு வானொலி. அதனைத் தயாரித்து ஒலிபரப்பியவர் கட்டுரையாளர்.

மாணவர் மேடை என்னும் நிகழ்ச்சியைத் திரு. பி. கிருஷ்ணன் தொடங்கிவைத்தார். அதில் மாணவர்கள் பங்கேற்கும் நாடகங்கள், பாடல் அங்கங்கள், இசை அங்கங்கள், புதிர் அங்கங்கள் முதலியவை இடம்பெற்றன. தமிழ்மொழிக் கல்வி தொடர்பான அங்கங்களும் இடம்பெற்றன. தமிழில் நல்ல பயிற்சி பெற மாணவர்களுக்கு அது உதவியாக இருந்ததாக, ஆசிரியர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். மாணவர் மேடையைத் திரு. கிருஷ்ணனுக்குப் பிறகு செ. ப. பன்னீர்செல்வம், அதன் பின், திரு. வீ. கலைச்செல்வன் ஆகியோர் தயாரித்தனர். மாணவர் மேடை, வானொலியில் வாரம் ஒரு முறை ஒலியேறியது. அதில், தமிழ்மொழிக் கல்வி, இலக்கியம் தொடர்பான கேள்வி பதில் அங்கமும் தவறாமல் இடம்பெற்றது. அது மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இவை தவிர, மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் பணியாற்றிய பேராசிரியர் இரா.தண்டாயுதம், பின்னர் முனைவர் சுப.திண்ணப்பன், முனைவர் ஆ.இரா. சிவக்குமாரன் ஆகியோருடைய எழுத்துப் படிவங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு எளிய தமிழ், எளிய இலக்கணம் முதலிய நிகழ்ச்சிகளாக ஒலியேற்றம் கண்டன. முதலில் திரு. பி. கிருஷ்ணன் அவற்றைத் தயாரித்தார். இவற்றைப் போலவே, இலக்கண ஆசான் பா.கேசவன், எளிய இலக்கணம் என்னும் நிகழ்ச்சிக்குப் பல ஆண்டுகள் எழுதினார். அதுவே பிறகு நூலாக வெளியிடப்பட்டு, பல பரிசுகளையும் வென்றது. அதில் தமிழ் இலக்கணத்தின் முக்கிய கூறுகள் விளக்கப்பட்டன. ஒலி வழி நான்கில் திரு. பி. கிருஷ்ணன், செ. ப. பன்னீர்செல்வம் ஆகியோர் அந்த நிகழ்ச்சிக்குக் குரல் கொடுத்துத் தயாரித்தார்கள். மாணவர்களுக்காகவே, சொல்வளம், சொற்சுவை ஆகிய பதினைந்து நிமிட நிகழ்ச்சி-களும் ஒலி வழி நான்கில் இடம்பெற்றன. 70களில் சரசாள் ராஜாவும் 80களில் பாமா பாலகிருஷ்ணனும் அவற்றைத் தயாரித்தனர். இவை யாவுமே மாணவர்களுக்குத் தமிழ் வழியாக பல ஆற்றல்மிகுத் தகவல்களைச் சொல்லித் தந்தன. ஆறாம் வகுப்பு மாணாக்கர் தொடங்கி புகுமுக வகுப்பு மாணவர்கள் வரையில் தமிழைக் கற்க இந்த வானொலி நிகழ்ச்சிகள் உதவி வந்தன.

திரு. தி.சு. மோகனத்தின் ஒரு ‘சொல் கேளீர்’, தமிழ்ச் சொற்களின் பயன்பாடு பற்றி சுவை-யான முறையில் விளக்கம் தந்தது. செ.ப. பன்னீர்செல்வத்தின் ‘சொல்லுக்குப் பொருள்’, ‘சொல்லும் பொருளும்’ ஆகியவை ஒரு சொல் நம் மொழியில் எப்படியெல்லாம் பயன்பாட்டில் உலா வருகின்றது என்பதை விளக்கியது. இரு நிகழ்ச்சிகளுமே பல ஆண்டுகள் வானொலியில் இடம்பெற்றன.

மீனாட்சி சபாபதியின் அறிவோமா நாம், அறிவியல் ரீதியாக பல்வேறு வாழ்வியல், அறிவியல், நுட்பங்களை மாணவர்களுக்கும் பொதுவான நேயர்களுக்கும் விளக்கியது. தன்முனைப்பு நிகழ்ச்சியாக, இளையர் இன்னுரை அமுதம், இன்றைய சிந்தனை ஆகிய-வற்றை வழங்கியபோது, இலக்கியச் சுவைமிக்க தகவல்களையும் இடையிடையே சேர்த்துத் தந்தார், செ. ப. பன்னீர்செல்வம். கமலாதுரை, சிறுவர் நிகழ்ச்சிகளைத் தயாரித்துத் தந்தபோது, கண்டுபிடிப்பாளர்கள், முன்னோடிகள் ஆகிய தொடர்களை அந்நிகழ்ச்சிக்கு எழுதித் தந்ததோடு, நூல் அறிமுகம், காமன்வெல்த் நாடுகள், சாலைகளின் வரலாறு முதலிய கல்வி சார்ந்த அங்கங்களையும் மாணவர்களுக்காக எழுதித் தந்தார் கட்டுரையாளர்.

வானொலியின் சிறுவர் மலர், பிள்ளைக்கனிகள், இவ்வாரக் குழந்தை நட்சத்திரம் முதலிய நிகழ்ச்சிகள், நம் சிறார்கள், மொழியில் சிறந்து விளங்கவும் தமிழை அச்சமின்றிப் பேசவும் ஊக்குவித்தன. இவ்வகையில், சிங்கப்பூரில் வானொலி என்னும் ஊடகம், இளையருக்கும் மாணவருக்கும் முதியோருக்கும் தமிழ்மொழிக் கல்வி தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை முறையாக இடம்பெறச் செய்திருப்பதை யாரும் மறுக்க இயலாது. ஆயினும் அவை நூல் வடிவம் பெறாததால், அவற்றைக் கேளாதவர்கள் அவற்றைப் பற்றி விரிவாக அறிந்து-கொள்ளமுடியாமல் போயிற்று என்னும் ஆதங்கம் இன்றும் பலரிடம் உள்ளது. ஆய்வாளர்களும் அவற்றைப் பற்றி எழுதாமலேயே இருந்துவிட்டனர். சிறுவர்களுக்காக சிறுவர் மேடை, பாலர் அரங்கம், பாலர் மேடை, சிறுவர் அரங்கம் ஆகியவற்றில் பல நாடகங்கள் இடம்பெற்றன. அவற்றில் நம் தொடக்கப்பள்ளி சிறார்கள் மிகச் சிறப்பான நடிப்புப் பயிற்சியைப் பெற்றனர்.

திருவாளர்கள் தி.சு. மோகனம், ஜி.ஆர். மணி, கவிஞர் கா. பெருமாள், கண்ணப்பன், கார்மேகம், இந்திரஜித் ஆகியோர் நாட்டு நடப்பாகிய அன்றாடக் கோவையைத் தயாரித்-தனர். காலையிலும் மாலையிலும் ஒலியேறிய அந்த நிகழ்ச்சி, பல்வேறு நடப்பு விவகாரத் தகவல்களை நேயர்களுக்கு வழங்கி உதவியது. அவ்வகையில் முனைவர் சீதாலட்சுமி கூறுவது போல, வானொலியும் தொலைக்காட்சியும் அரசியல் மற்றும் கலாசாரக் கல்வி தருவதை முக்கியக் கடமையாகக் கொண்டு சேவையாற்றி வந்துள்ளன, வருகின்றன. 1964ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ் மலர் நாளேடுகூட வானொலி என்னும் ஊடகம் பற்றி ஆய்வுகளை வழங்கியபோது, ஒலிபரப்புத்துறை ஆற்றிவந்துள்ள தமிழ்மொழிக் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளைப் பெரிதும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வானொலியில் திரு. கு இராமையாவின் தலைமையில், பண்பலை ஒலிபரப்பாக சுவாரா சிங்கப்பூரா என்னும் ஒலிபரப்பு இடம்பெற்றபோது, அதில் உலக இலக்கிய நாடகங்கள், தமிழ் இலக்கியத்தில் உள்ள முக்கிய தகவல்கள் யாவும் இடம்பெற்றன. மொழியும் இலக்கியமும் ஒன்றோடொன்று அணுக்கமான தொடர்புகொண்டிருப்பதால் அவை இரண்டிலுமே வானொலி தனிக்கவனம் செலுத்தி வந்துள்ளது. திரு. பா.கேசவன் கூறுவதுபோல, மொழியைக் கற்பது வேறு, மொழியால் கற்பது வேறு. அதை மறவாமல்

சிங்கை வானொலி நிலையம் அதன் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி, ஊடகத்தின் மூலமாக தமிழ்மொழிக் கல்விக்குத் தனிச் சிறப்பு சேர்த்து வந்துள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி. சிங்கை வானொலி ஒலிபரப்பியிருக்கும் நாடகங்கள் தமிழ்மொழிக் கல்வியில் முக்கிய இடம்பெற்றுள்ள செவ்விலக்கியங்களின் சொத்துக்கள் எனலாம்.

பி. கிருஷ்ணனின் விலங்குப் பண்ணை, மாடி வீட்டு மங்கலம், இளையர் மேடைக்காக செ.ப. பன்னீர்செல்வம் எழுதிய 'முதிரமலை வள்ளல்', 'பேகன்', 'கண்ணகி', 'சாகுந்தலம்', 'மனோன்மணீயம்', 'யார் குற்றம்?', 'பொற்கைப் பாண்டியன்' ஆகியவை இளையர் சமுதாயத்தைப் பெரிதும் ஈர்த்ததோடு நேயர்களின் நல்ல வரவேற்பையும் பெற்றன. கவிதை மூலமாகவும் ஊடகங்கள், தமிழ்மொழிக் கல்வியை வளர்த்து வந்துள்ளன. அதில் சிங்கை வானொலி மகத்தான பங்காற்றியுள்ளது. பி.கிருஷ்ணனின் கதை நேரம்கூட பல புகழ்வாய்ந்த கதைகளை நேயர்களுக்கு அறிமுகம் செய்தது. நாவல் நாடகத் தொடர்கள், இலைமறைகாய், இக்கட்டு, மெ. திரு அரசு எழுதிய இலக்கிய விருந்து, இலக்கிய நயம், கவிஞர் சுரதாவின் சொல்லின் கதை, செ.ப. பன்னீர்செல்வத்தின் நாளும் ஒரு குறள், நினைவில் வரலாறு, இன்றைய சிந்தனை, முத்தமிழ் மன்றம் ஆகியவை வானொலி என்னும் ஊடகத்தின் வழி தமிழ்மொழிக் கல்வியை வளர்த்த நிகழ்ச்சிகள் என்று மனநிறைவோடு கூறலாம். பாடிப் பழகுவோம் நிகழ்ச்சியில் ஆசியான் கவிஞர் பரணன், க.து.மு. இக்பால், கவிஞர் கா. பெருமாள் ஆகியோரின் பாடல்கள் இசையோடு பாடப்பட்டன. நிலையத்தின் நாகரெத்தினம் சுப்பையா, பத்மாவதி கிருஷ்ணன், ராஜமணி பிரான்சிஸ், சாரதா சங்கர் ஆகியோருடன் சிறுவர் சிறுமியரும் சேர்ந்து பாடினர். எண்பதுகளில், கவிதை விழாவைப் பி.கிருஷ்ணன், செ.ப. பன்னீர்செல்வம், ரெ.சண்முகம் முதலியோர் தயாரித்தனர். அது, மேடையிலே மக்கள் முன்னிலையில் கவிஞர்கள் கவி பாட, இசைப் பின்னணியில் பாடகர்கள் பாடுவதாக அமைந்தது மட்டுமின்றி ஊடகத்தின்வழி தமிழ்மொழிக் கல்வியும் தமிழிசையும் வளரவும் வழிகாட்டியது. அதில் இடம்பெற்ற பாடல்கள் யாவற்றையும் சிங்கப்பூர் கவிஞர்களே இயற்றியிருந்தனர், இங்குள்ள இசையமைப்பாளர்களே இசை கூட்டியிருந்தனர்.

இப்படியாகத் தொடக்க காலம் முதல், தற்காலம் வரை, தமிழ்மொழிக் கல்வி வளர, வானொலி பெரும் பங்காற்றி வந்துள்ளதை நம்மால் மறக்கவியலாது. வானொலி வளர்த்த தமிழைத் தொடர்ந்து கட்டிக்காப்பது இன்றியமையாதது!

**ஆய்வுக்கு உதவிய குறிப்புகள்:**


1. செ. ப. பன்னீர்செல்வம், *பத்தாவது சிங்கப்பூர் இளையர் மாநாட்டுக்காக எழுதி வழங்கிய உரை.*

2. பெரியார் பார்வை: *சிறப்பு மலர் மே 2011*

3. நேர்காணல்: *தமிழவேள் தொண்டன் தியாகராஜன்*.

4. செ.ப. பன்னீர்செல்வம், *எம். ஃபில் ஆய்வு: அழகப்பா பல்கலைக்கழகம். 2005*

5. டாக்டர் சீதாலட்சுமி : *கட்டுரையாளருடன் நேர்காணல்கள், முனைவர் பட்ட ஆய்வேடு*

6. பா கேசவன்: *உலக அரங்கில் தமிழ், மாநாட்டுரை, 2012*

# ஊடகங்களில் தமிழ்மொழிக் கல்வி - தொலைக்காட்சி

**மீனாட்சி சபாபதி**
தமிழாசிரியர், தஞ்சோங் காத்தோங் பெண்கள் பள்ளி
(முன்னாள் மூத்த ஒலிபரப்பாளர்)

## முன்னுரை

சிங்கப்பூர்த் தொலைக்காட்சி 1960களில் Radio Television Singapore (RTS) என்று வழங்கப்பட்டது. பின்னர் SBC, TCS ஆகிய பெயர் மாற்றங்கள் பெற்று இப்போது Mediacorp TV என்ற பெயரில் வழங்குகிறது. அந்தக் காலம் முதல் இந்த 2016-ஆம் ஆண்டிலும், நேரடி நிகழ்ச்சிகள் வழியாகவும் பல்வகை நிகழ்ச்சிகளின் அமைப்புமுறைகள் வழியும் தமிழ்க் கல்விப் பங்களிப்பைச் செய்து வருகிறது.

RTS காலத்தில் சிங்கைத் தொலைக்காட்சியில் 2 ஒளியலைகள் மட்டுமே இருந்தன. ஒளியலை 8இல் அந்தக் காலத்தில் தமிழுடன் சீனமொழி நிகழ்ச்சிகளும் சேர்ந்து இடம்பெற்றன. ஒளியலை 5 மலாய், ஆங்கில மொழி நிகழ்ச்சிகள் வழங்கியது. இன்று 4 அதிகாரத்துவ மொழிகளுக்கும் தனித்தனி ஒளியலைகள் உள்ளன. அன்று தமிழில் செய்திகள், விளையாட்டு வர்ணனை, தேசிய தின வர்ணனை, சிறுவர் நிகழ்ச்சிகள், நாடகம் போன்றவையும் வாரம் ஒரு திரைப்படமும் ஒளிபரப்பாயின. காலவோட்டத்தில் நிகழ்ச்சி-களின் எண்ணிக்கையும் ஒளிபரப்பு நேரமும் படிப்படியாக அதிகரித்து இன்று தமிழ் ஒளியலை வசந்தம் என்ற பெயர் மாற்றத்துடன் வானொலியுடன் சேர்ந்து 24 மணி நேர சேவை வழங்கி வருகிறது. இதற்கிடையில் நிகழ்ச்சி அமைப்பிலும் தரத்திலும் நோக்கத்திலும் நிறைய மாற்றங்கள் காலத்துக்கேற்ப அமைந்து வந்துள்ளன.

## இளையர் பங்கேற்பு

தமிழ்க் கல்வி எனும்போது அது மாணவர்களை நோக்கி அமையவேண்டும். அவ்வகையில் இளையர் தங்கள் திறமையை வெளிக்காட்ட அமைந்த நிகழ்ச்சிகள் சிறுவர் உலகம் (1971) முதல் சுட்டீஸ் கிலப் (2011) வரையில் பலவிதமானவை. சிறுவர் உலகத்தில் தொடக்கப்பள்ளி மாணவர்கள் கதைகள் சொல்லவும், சொற்பொழிவு நிகழ்த்த-வும் பாட்டுப் பாடி, நடனமாடி அல்லது இசைக் கருவிகள் வாசித்துத் திறமையைக் காட்டவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அனைத்தும் தமிழிலேயே இடம்பெற்றதால் அது தமிழ்க் கல்வி ஆனது. அதே போன்ற மற்ற நிகழ்ச்சிகள் பின்னர் அதிகம் ஒளிபரப்பாகவில்லை என்றாலும் மாணவர்களின் நடிப்புத் திறனை வெளிப்படுத்தும் பல நாடகத் தொடர்கள் அண்மையில்

வெளிவந்து மிகவும் புகழ் பெற்றன. சுப்பிரமணி, மை டியர் குடும்பம் போன்றவை குறிப்பிடத்-தக்கவை.

குறிப்பாக அண்மைக் காலத்தில் மிகவும் புகழ்பெற்ற மாணவர் நிகழ்ச்சியாக விளங்குபவை விவாதப்போட்டித் தொடர்கள். தொலைக்காட்சியில் தமிழ் கற்பிக்கும் முக்கிய நிகழ்ச்சியாக இதனைக் குறிப்பிடலாம். தொடக்கநிலை மாணவர்க்குச் சொற்போர், உயர்நிலை மாணவர்க்குச் சொற்களம், புகுமுக வகுப்பு மாணவர்க்குச் சொற்சிலம்பம் என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்துவது மக்கள் கழகத்தின் இந்திய நற்பணிப் பேரவையாகும். காலிறுதி, அரையிறுதி, இறுதிச்சுற்று எனப் படிநிலைகளில் இவை ஒளிபரப்பாகும். தொடக்கப்பள்ளி, உயர்நிலை, தொடக்கக்கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் பலர், மிக ஆர்வமாகப் பங்கேற்று அல்லது பார்த்து, தமிழ் மொழியுடன் தங்களை ஒன்றிணைத்துக் கொள்ள உதவிய நிகழ்ச்சிகள் இவை.

**கலாசாரம்**

தொலைக்காட்சியில் கலாசாரத்தை வளர்க்கும் கலை நிகழ்ச்சிகள் நிறைய இடம்-பெற்று வந்துள்ளன. பரத நாட்டிய அரங்கேற்றம், அதன் தன்மை போன்றவற்றைத் தெளிவாக விளக்கும் நிகழ்ச்சி, கர்நாடக சங்கீத நிகழ்ச்சி போன்றவை அவற்றுள் அடங்கும். குறிப்பாக பாரம்பரியம் என்ற நிகழ்ச்சித் தொடரில், கலாசாரம் தொடர்பான பேட்டிகளும் வில்லுப்பாட்டு போன்ற பாரம்பரியக் கலைகளும் இடம்பெற்றன. தற்போது ஒளி-பரப்பாகும் 'என்ன நடக்குது' என்னும் நிகழ்ச்சியில் சிங்கப்பூர் முழுவதும் நடைபெறும் பல்வேறு தமிழ்க் கலை நிகழ்ச்சிகள் குறித்த தகவல்களும் காட்சிகளும் இடம்பெற்று வருகின்றன. தற்போது தொலைக்காட்சிப் பல்சுவை நிகழ்ச்சிகளில் பாரம்பரிய நடனங்-களைக் காண முடிவதில்லை. அதிகமாக நவீன வகை நடனங்களே இடம்பெறுகின்றன. எனினும் அவற்றின் பின்னணியில் தமிழ்ப் பாடல்கள் ஒலிப்பதால், அது நன்மையாகிறது. தவிர, ஊர்க்குருவி நிகழ்ச்சி தமிழ் நாட்டின் பாரம்பரியத்தை உள்ளூர் சமூகத்துக்குத் தெரிவிக்கும் ஒரு பாலம் போல விளங்குகிறது. மேலும் சுவடுகள் நிகழ்ச்சி, சிங்கப்பூரின் முன்னோடி எழுத்தாளர்கள், நடிகர்கள் போன்றோரை அறிமுகப்படுத்தி வரலாற்று முத்திரை பதித்தது.

**உரையாடல்**

காலஞ்சென்ற இயக்குநர் கே பாலசந்தர் உட்பட்ட பல பிரபல கலைஞர்களுடன் உள்ளூர்ப் பிரபலங்கள் நடத்தும் உரையாடல், அமைச்சர்கள், சமூகத் தலைவர்கள் போன்றோருடன் கலந்துரையாடல், நாட்டுத் தலைவர்களின் பேச்சு போன்ற பல

நிகழ்ச்சிகள், ஆங்கிலம் பேசும் நம் உள்ளூர்த் தமிழ் மாணவர்களுக்குத் தமிழில் பேச ஓர் ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளிக்கவல்லவை. கருத்துக்கள நிகழ்ச்சிகளான சொல்லத்தான் வேண்டும், பேசுவோம், போன்ற பல நிகழ்ச்சிகளில் பல்வேறு தலைப்பு-களில் பொதுமக்கள் கலந்துகொண்டு பேசி வருகின்றனர். இவற்றில் பங்கேற்போர் தமிழில் உரையாடுவது சமுதாயத்தில் தமிழ்ப் புழக்கத்தை வெளிப்படுத்தியதோடு வளர்க்கவும் செய்தது என்பதில் ஐயமில்லை.

**செய்திகள்**

அன்றும் இன்றும் தமிழ்ச் சொற்களை, அதிலும் குறிப்பாக உள்ளூர்ச் சூழல், துறைசார் சொற்கள் போன்றவற்றைப் பரவலாகக் கற்பிக்கும் தனிச் சிறப்புமிக்க முக்கிய நிகழ்ச்சியாக அமைந்திருப்பது தமிழ்ச் செய்தி.

அன்றாடச் செய்தி அறிக்கையிலும் செய்தித்துறையினர் தயாரிக்கும் நடப்பு விவகார நிகழ்ச்சிகளிலும் பல்வேறு பயனுள்ள சொற்கள் பயன்படுகின்றன. உண்மையில், பல சொற்களுக்குரிய நம்பகமான அகராதியாக விளங்குவது செய்தி நிகழ்ச்சி. சிறந்த மொழிபெயர்ப்பு அறிவை வெளிப்படுத்துவது இதுவே. பல்வேறு துறைகளில் பணிபுரிவோர், அந்தந்தத் துறை சார்ந்த ஆங்கிலச் சொல்லுக்கேற்ற சிறந்த மொழிபெயர்ப்பு எதுவென்று உறுதிப்படுத்த நாடுவது செய்திப் பிரிவின் திறனைத்தான். எடுத்துக்காட்டுக்கு, உள்ளூர்த் தமிழ்ச் செய்தி ஊடகங்களில் பரவலாகப் பயன்படும் சொற்களான வேலை அனுமதிச் சீட்டு, சுகாதார மேம்பாட்டு வாரியம், முத்தரப்பு ஒத்துழைப்பு, ஐரோப்பிய ஒன்றியம், முன்னுரிமை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற பல சொற்களைக் கூறலாம். மாணவர்கள் மட்டுமின்றி, பொதுமக்களும் அறிந்துகொண்டு நினைவில் நிறுத்தவேண்டிய சொற்களை தினம் ஒரு சொல்லாக அறிமுகப்படுத்தி சொல்வளம் பெருக்குவது செய்தி. மேலும் ஆண்டுதோறும் ஒளிபரப்பாகும் தேசிய தின வர்ணனையில் உள்நாட்டு அமைப்புகளின் பெயர்கள் உட்பட்ட பல நல்ல சொற்கள் தெளிவாக அறிவிக்கப்படும். எடுத்துக்காட்டுக்கு குடிமைத் தற்காப்பு, வான்குடை வீரர்கள், ராணுவப்படைத் தளபதி போன்ற பல இனிய சொற்கள் இடம்பெறும். மேலும் தேசிய தினப் பேரணியும் குறிப்பிடத்தக்கது. பிரதமரின் ஆங்கில உரை மிகவும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புடன் ஒளிபரப்பாவது பாராட்டுக்குரியது.

**நாடகங்கள்**

அந்தக் கால நாடகங்கள் பெரும்பாலும் குடும்பம் தொடர்பாக அமைந்திருந்தன. தனி நாடகமும் தொடர் நாடகங்கள் பலவும் இருந்தன. பல மேடை நாடகங்களின் ஒளிப்-பதிவுகளும் ஒளிபரப்பப்பட்டன. ஆங்கில வசனங்கள் இடம்பெறாமல் இருந்தன. ஆனால்

உள்ளூர்ப் பேச்சு வழக்கில் இடம்பெற்ற மலாய் மொழிச் சொற்கள் இயல்பாக இடம்பெற்றன. மாறாக, இந்தக் காலத்தில் நாடகங்களின் கருப்பொருள்கள் மிக விரிவாகிவிட்டன. பெரும்பாலும் இளையர்களுக்கு உரிய தலைப்புகள் பயன்படுகின்றன. இந்த நாடகங்கள் உள்ளூரில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் புகழ் பெற்றுவிட்டன. குறிப்பாக, 'வேட்டை' நாடகத் தொடர் அனைவரையும் கவர்ந்து சாதனை படைத்தது. சிங்கை முழுவதும் உள்ள தமிழ் இளையர்களின் பேச்சாவும் மூச்சாகவும் இருந்தது 'வேட்டை'. 'வேட்டை' நாடகம் பற்றி மாணவர்கள் பலர் தங்கள் பாடவேலைக் கட்டுரைகளிலும் எழுதினர். வேட்டை நாடகக் கலைஞர்களுடன் 2015இல் நடந்த சிங்கைப் பொன்விழாக் கொண்டாட்டம் மாபெரும் வரவேற்பைப் பெற்று அரங்கம் நிறைந்த நிகழ்ச்சியாக நடந்தேறியது.

**மொழித் தரம்**

அன்று ஆங்கிலம் கொஞ்சமும் கலக்காமல் நல்ல தமிழ் பேசவேண்டியது நிகழ்ச்சிப் படைப்பாளர்களின் கடமையாக இருந்தது. தொலைக்காட்சி அறிவிப்புகள் அக்காலத்தில் முழுக்க முழுக்க நல்ல தமிழில், ஆங்கிலக் கலப்பின்றி அமைந்திருந்தன. பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி, நேர்காணல்கள், மேடை நிகழ்ச்சி போன்ற அனைத்திலும் மிக உயர்மொழித் தரம் இருப்பது உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது. சிங்கையின் ஊடகத் தமிழ் உலகப் புகழ் பெற்றிருந்த காலம் அது. எடுத்துக்காட்டுக்கு, 1980களின் இறுதியில் தமிழ்நாட்டுத் தொலைக்காட்சிப் படைப்பாளர்கள் சிலர் ஒப்பந்த அடிப்படையில் சிங்கை நிகழ்ச்சிகளில் அறிவிப்பு செய்ய வந்திருந்தனர். அப்போது மிகப் பிரபலமான ஒரு பெண் அறிவிப்பாளர் தமிழ் நாட்டுக்குத் திரும்பிச் சென்ற பின் அங்கிருந்த முன்னணி வார இதழுக்கு அளித்த பேட்டியில் சொல்லியிருந்தார். சிங்கப்பூரில் தாம் பேசிய வசனத்தை ஒவ்வொரு வரியையும் திருத்திச் சொல்லிக்கொடுத்தனர் என்று. ஒரு தமிழ் வாக்கியத்தில் நாலு ஆங்கிலச் சொற்களைச் சேர்த்துப் பேசும் பாணியை மாற்றி முழுத் தமிழ் வாக்கியங்களாகப் பேசக் கற்பித்தனர் என்று மிகவும் பாராட்டிப் பேசியிருந்தார். இவ்வாறு, நம் சிங்கையின் தரமான நற்றமிழ்ப் பேச்சுத் திறன் கடல் தாண்டிப் புகழ் பெற்றிருந்தது.

இன்றுள்ள நிலைமையில் காலக் கட்டாயத்தினால் மொழித் தரம் குறைந்திருப்பது உண்மை. அதிக ஆங்கிலக் கலப்பு, இலக்கணப் பிழைகள் முதலிய பிரச்சினைகள் உரையாடலிலும் நாடகத்திலும் உண்டு. எடுத்துக்காட்டுக்கு, ஒரு சில நாடகங்களின் வசனத்தில் நாம், நாங்கள் என்னும் சொற்களைத் தவறாகப் பயன்படுத்தியதுண்டு. கலந்துரையாடல் நிகழ்ச்சியில் முழு வாக்கியங்களாக ஆங்கிலமே பேசுவதும் ஆங்கிலச் சொற்கள் கலந்த வாக்கியங்களைப் பேசுவதும் உண்டு.

இவற்றுக்கு ஈடுகட்டும் வகையில் இன்னொரு புறம் தமிழ் மொழித் திறனை வளர்க்க உதவும் வேறு அங்கங்கள் உள்ளன. முக்கியமாக, தமிழ்ச் செய்தி. இதில், தினம் ஒரு சொல், இன்றைய ஆங்கிலமொழிப் பின்னணியுடைய மாணவர்களுக்கு மிகவும் உதவுகிறது. நாடாளுமன்றம், சமூக ஊடகங்கள், ஒருங்கிணைப்பு போன்ற சொற்கள் முறையே Parliament, social media, co-ordination போன்ற சொற்களின் மொழிபெயர்ப்பு என்பதை மாணவர்கள் அறிய வழிவகுக்கிறது தமிழ்ச் செய்தி. மேலும், செய்தி வாசகங்கள் அனைத்தும் வாசிப்பாளர் வாசிக்கும்போதே வரிவடிவிலும் திரையின் அடிப்பகுதியில் தோன்றுவதால், மாணவர்கள் கூறப்படும் சொற்களின் உச்சரிப்பையும் கருத்தையும் மொழி இலக்கணத்தையும் ஒருங்கே புரிந்துகொள்ள வழி பிறக்கிறது. இதன் காரணமாகவே, சிங்கை ஆசிரியர்கள் பலர், தங்கள் மாணவர்களைக் கட்டாயம் தமிழ்ச் செய்தியைக் காணச் சொல்லி வலியுறுத்துகின்றனர். செய்தி மட்டுமின்றி, சுவை, என்ன நடக்குது, எங்கேயோ கேட்ட குறள், சேட்டை முதலிய பல நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் வழி உள்ளூர்த் தமிழ்ச் சமூகத்துடனான தொடர்பும் அவர்களுக்கு வளர்கிறது. இதனால் மாணவர்கள் தாங்கள் எழுதும் கட்டுரைகளில் சமூகம் தொடர்பான தலைப்புகளில் கருத்துகளை எழுதவும் அதற்குரிய சொல் வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும் முடிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மொழி சிங்கப்பூர் எனும் நாட்டில் எத்தகைய சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உணர முடிகிறது.

ஆக முக்கியமாக, தமிழ் மொழியின் சிறப்பையும், பெருகிவரும் ஆங்கில மொழிச் சூழலில் தமிழை வாழும் மொழியாக வைத்திருக்க வளர் தமிழ் இயக்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் மக்களிடம் கொண்டு செல்லும் தூதுவனாக விளங்கி வருவது தொலைக்காட்சி. இன்று சின்னக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, “தமிழில் பேசுவோம், தமிழை நேசிப்போம்” என்று இசையோடு பாடக் காரணம் தொலைக்காட்சியில் ஆண்டுதோறும் ஆரவாரத்தோடு ஒலிக்கும் தமிழ் மொழி விழா அறிவிப்புதானே! தொடக்க விழா நிகழ்ச்சி முதல் சிறுவர், இளையர், பள்ளி, பல்கலைக்கழக, நூலக, சமூக மன்ற நிகழ்ச்சிகள், தமிழ்ச் சங்க நடவடிக்கைகள், போட்டிகள், கவிதை, சிறுகதை அரங்கங்கள், நாடகங்கள் முதலிய பலவற்றையும் காட்டி, சிங்கையில் தமிழ் வாழ்வதைப் பறைசாற்றுவது தொலைக்காட்சி.

இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது கொஞ்சம்தான். 50 ஆண்டுக்கு மேற்பட்ட தனது செயல்பாட்டில் சிங்கைத் தமிழ்த் தொலைக்காட்சி, மொழி வளர்ச்சிக்கு எவ்வளவோ செய்துள்ளது. சமூகத்தில் மிகுந்த செல்வாக்கைப் பதித்து தலைமுறை-களைத் தாண்டி அது மொழி வளர்த்துள்ளது என்பது உண்மை.

# தமிழ்க் கல்வி வளர்ச்சியில் அமைப்புகளின் சீரிய பங்கு

**மு. அ. மசூது**
முன்னாள் துணைத் தலைவர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்
துணைத் தலைவர், சிங்கப்பூர் கடையநல்லூர் மூஸ்லீம் லீக்
துணைத் தலைவர், தமிழர் பேரவை

## முன்னுரை

நமது நாட்டில், சிங்கப்பூரின் தமிழ்க் கலாசாரத்திற்கு முக்கியமானதோர் இடம் இருப்பது போல, தமிழ்மொழிக்கும் தனி ஓரிடம் நிச்சயம் உண்டு. நமது நாட்டின் பல்லினக் கலாசாரத்திற்குத் தமிழ்ப் பண்பாடு அழகு சேர்ப்பதுபோல, நமது தமிழ்மொழியும் நாட்டின் அழகுத் தோற்றத்திற்கு வலு சேர்த்து வருகிறது.

சிங்கப்பூரின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக இருக்கும் தமிழை, அரசாங்கம் நன்கு ஆதரித்து வளர்த்து வருகிறது. அரசாங்கத்தின் இருமொழிக் கொள்கையின் பயனாகப் பாலர் வகுப்பு முதல், பல்கலைக் கழகம் புகுமுகவகுப்பு வரை, தமிழ் போதிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் ஆதரவினால் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் போன்ற முக்கிய ஊடகங்களில் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. சிங்கப்பூரின் சமூக அமைப்புகள் பலவும் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றன.

தமிழ்மொழியின் இன்றைய நன்னிலைக்கும், மதிப்பிற்கும், உரிய காரணத்தைக் கண்டறிய நாம் பின்னோக்கிச் சென்று வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பது மிக அவசியம். இராஃபிள்ஸின் சிங்கப்பூர் வருகைக்குப் பிறகு, தமிழ் நாட்டிலிருந்து தமிழர்கள் பெருவாரியாகச் சிங்கப்பூருக்கு வருகை தரத் தொடங்கினர். 1824ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூரில் தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் தமிழ்ப்புழக்கம் அதிகமாக இருந்திருக்கிறது. தமிழ்மொழியை வளர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிங்கப்பூரின் தமிழ்க் கல்வி வரலாறு போருக்கு முன்பே தொடங்கிவிட்டது என்றாலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்தான் தமிழ்க் கல்வியின் சீரான வரலாறு தொடங்குகிறது.

போருக்கு முன்பு, சிங்கப்பூரில் நான்கு மிஷன் தமிழ்ப் பள்ளிகளும், பதினாறு தனியார் தமிழ்ப் பள்ளிகளும், இயங்கி வந்தன. தமிழைப் பிரதானமாக வைத்து இயங்கிய இப்பள்ளிகள் யாவும் தொழிற்சங்க வாதிகளின் கட்டுப்பாட்டில் இயங்கிவந்தன. பொதுமக்களின் நன்கொடை மூலமாகவே இப்பள்ளிகள் இயங்கி வந்தன. நிரந்தர வருமானம் இல்லாமையால், பல ஆசிரியர்களுக்கு மாதக் கணக்கில் சம்பளம் அளிக்கப்படாமல் இருந்தது. அச்சமயம், செயல்பாடுடைய தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவராக இருந்தவர் கோ. சாரங்கபாணி. அவர், தமிழ்ப் பள்ளிகளில் நிலவிய அவலத்தைக் கல்வி

இலாகாவின் கவனத்திற்குக் கொண்டு சென்றார். தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைமையீட்டால், தமிழ்மொழி மேம்பாட்டுக்குழுவைக் கல்வி இலாகா தோற்றுவித்தது. இதன் பிறகு, பள்ளிகள் யாவும் முறையாகப் பதிவு செய்யப்பட்டு, நிர்வாகம் சீரமைக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு உடனுக்குடன் சம்பளம் கிடைக்க ஆவன செய்யப்-பட்டது. தமிழ்க் கல்வியின் தரமும், தமிழ்ப் பள்ளிகளின் நிலையும் மேம்பட, தமிழர் சீர்திருத்தச் சங்கம் ஆற்றிய பணி மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், தமிழ்க் கல்வி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தமிழ்க் கல்வி வேரூன்றி நிற்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்-பட்டன. தமிழ்க் கல்வியின் வளர்ச்சியை உறுதி செய்ய, அரசு 1949ஆம் ஆண்டு, தமிழ்க் கல்விக் கழகம் ஒன்றை நிறுவியது. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரசு மட்டும் பொறுப்பேற்க முடியாது, தமிழ்ச்சமூகமும் தனது பங்கை ஆற்ற முன்வர வேண்டும் என்று தமிழ்க் கல்விக் கழகம் அறைகூவல் விடுத்தது. தமிழர் சீர்திருத்தச் சங்கம், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், செம்பவாங், சாங்கி தமிழ்ச்சங்கங்கள், நாமக்கல் சங்கம் போன்ற அமைப்புகள் அச்சமயம் தமிழ்க் கல்விக் கழகத்துடன் இணைந்து பணியாற்றிய அமைப்புகளாகும்.

1951ஆம் ஆண்டு, சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் உதயமானது. தொடக்கக் காலமுதலே தமிழ்க் கல்விக் கழகத்தோடு தமிழாசிரியர் சங்கம் இணைந்து பணியாற்ற ஆரம்பித்தது. பள்ளியில் இடப்பற்றாக்குறை, நூல்கள் போதாமை, சம்பளம் சரிவர வழங்கப்படாமை ஆகிய பிரச்சினைகளைத் தமிழாசிரியர் சங்கம், கல்விக் கழகத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிலவரம் சீர்பெற உதவியது.

### கடையநல்லூர் முஸ்லிம் லீக் / உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி

உமறுப்புலவர் தமிழ்ப் பள்ளி ஆரம்பத்தில், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கின் கட்டிடத்தில் இயங்கி வந்நது. பின்னர், இப்பாடசாலை மெக்ஸ்வெல் சாலைக்கு இடம் மாறியது. உமறுப்புலவர் தமிழ் பாடசாலையைப் போன்று சுமார் 20 தமிழ்த் தொடக்கப் பள்ளிகள் அச்சமயம் சிங்கப்பூரில் இயங்கி வந்தன. அப்போது, தமிழ் உயர்நிலைப் பள்ளி இல்லாததால், தொடக்கநிலை ஆறாம் வகுப்பை முடித்த மாணவர்கள் உயர்நிலைக் கல்வியைத் தொடர முடியாத பரிதாப நிலை நிலவியது. அ. நா. மெய்தீன் அவர்களின் தலைமையில், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், அரசு, பொதுமக்கள் ஆகியோரின் ஆதரவுடன் மெக்ஸ்வெல் சாலையில் உயர்நிலைப் பள்ளியைக் கட்டி முடிந்தது. உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளியின் தோற்றத்தினால், பல நூறு தமிழ் மாணவர்கள் உயர்நிலைக் கல்வியைத் தொடரவும், தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி, தென்கிழக்காசியாவின் ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளி என்னும் வரலாற்றைப் படைத்தது. வணிக மொழியான ஆங்கிலத்தின்

தேவை அதிகரிக்கவே, உமறுப்புலவர் பள்ளி உட்பட, பல தமிழ்ப் பள்ளிகளுக்கு வரும் மாணவர் எண்ணிக்கை குறைந்து, தமிழ்ப் பள்ளிகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியையும் மூட வேண்டிய கட்டாய நிலை உருவானது. 150க்கும் மேற்பட்ட தமிழாசிரியர்களை உருவாக்கி, சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வரலாற்றில் இடம்பெற்ற உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி தற்சமயம் இல்லை. ஆயினும், உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியின் நினைவாக, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் சிறப்பாக இயங்கி வருகிறது. உமறுப்புலவர் கல்வி உதவி அறங்காவல் நிதியமும் செயல்படுகிறது. சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், தமிழ்மொழி விழாவின்போது, உமறுப்புலவர் நினைவாகவும், நிறுவனர் அ. நா. மெய்தீன் நினைவாகவும், தமிழ்ப்பெரு-மக்களுக்கு விருதுகளை வழங்கி, உமறுப்புலவர் பள்ளியை நினைவுகூர்ந்து வருகிறது.

1959ஆம் ஆண்டு, ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளுக்கு சமதகுதியை அரசு வழங்கியது. வணிக மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் விளங்கிய ஆங்கிலத்தின் தேவை அதிகரிக்கவே, அரசாங்கம் ஆங்கிலப் பள்ளிகளுக்கும், ஆங்கிலப் பள்ளிகளில் போதிக்கப்படும் தாய்மொழிக்கும் முக்கியத்துவம் வழங்க ஆரம்பித்தது. 1965ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மக்கள் செயல் கட்சி அரசு, இருமொழிக் கொள்கையைப் பள்ளிகளில் அமல்படுத்தியது. ஆங்கிலத்தை முதல் மொழியாகவும், தமிழை இரண்டாம் மொழியாகவும் எடுத்துப் பயிலும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக உயரலாயிற்று. ஆயினும், தொடக்க, உயர்நிலை, பல்கலைக் கழகம் புகுமுகவகுப்புத் தமிழ் மாணவர்கள், தேசிய நிலைத் தேர்வுகளில் சிறப்பாகச் செய்யவில்லை என்ற உண்மை புலனானது. பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை நடத்திய ஆய்வின் மூலம் இவ்வுண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. தமிழ் மாணவர்களின் தேர்ச்சி உயர்வுக்குத் தங்களால் ஆன பணிகளைச் செய்ய முனைந்தது பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை. 1971ஆம் ஆண்டு பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை தமிழர் இயக்கத்தின் ஆதரவோடு, இராமகிருஷ்ண பள்ளிகளில் துணைப்பாட வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தது. துணைப்பாட வகுப்புகள் முதலில் பல்கலைக் கழகம் புகுமுகவகுப்பு மாணவர்களுக்கும், பின்னர், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தொடங்கப்பட்டு, பின்னர், தொடக்கநிலை வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டன. வகுப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிட்டவே, வகுப்புகளை விரிவுபடுத்த வேண்டிய நிலை உருவானது. டாக்டர் அ. வீரமணியைத் தலைவராகக் கொண்ட தமிழ் இளையர் மன்றம் துணைப்பாட வகுப்புகளை நடத்தும் பொறுப்பை எடுத்துக்கொண்டது. பின்னர், 1994ஆம் ஆண்டு முதல், துணைப்பாட வகுப்புகளை நடத்தும் பொறுப்பைத் தமிழர் பேரவை மேற்கொண்டு வகுப்புகளை மேலும் விரிவுபடுத்தி, அதிக அளவிலான தமிழ் மாணவர்கள் படிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தது.

சிங்கப்பூரில் துணைப்பாட வகுப்புகளை விரிவான அளவில் ஏற்பாடு செய்து, தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்த அமைப்புகளில், தமிழ்

இளையர் மன்றமும், தமிழர் பேரவையும் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் பேரவைக்கு திரு. ஜி. கந்தசாமி தலைவராக வந்த பிறகு, கல்விக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. கல்விக் குழு, துணைப்பாட வகுப்புகளைச் சீரமைத்து நன்கு நிர்வகித்து வந்தது. தமிழர் பேரவைத் தலைவர் ஜி. கந்தசாமி, தமிழ் மாணவர்களின் கல்வித் தேர்ச்சியில் கவனம் செலுத்தியதோடு, பள்ளிகளில் தமிழ் கற்றல், கற்பித்தலிலும் தமது கவனத்தைத் திருப்பினார். இவரது பெருமுயற்சியால், தமிழ் கற்பிக்கப்படும் மேலும் சில தொடக்கப் பள்ளிகள் உருவாயின. தமிழ் நிலையங்களில் தமிழ் பயிலும் மாணவர்களின் சிரமங்களையும் தமிழர் பேரவை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றது. தமிழ் இளையர் மன்றம், பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை, தமிழர் பேரவை ஆகிய அமைப்புகள், தமிழ் மாணவர்களின் கல்வித் தேர்ச்சியை மேம்படுத்தும் வகுப்புகளை நடத்திக்-கொண்டிருந்தன.

### சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

இக்காலக் கட்டத்தில், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு மூன்று ஆக்கப்பூர்வ நிலைகளில் திட்டம் வகுத்துச் செயல்பட்டது. தமிழாசிரியர்களின் தகுதியை உயர்த்துவது, பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவது, மாணவர்களின் மொழி ஆற்றலையும், பேச்சுப் புழக்கத்தையும் வலுப்படுத்துவது ஆகியவையே அந்த மூன்று செயல் திட்டங்களாகும்.

**பட்டக் கல்வி** - தமிழ் ஆசிரியர்கள் தங்கள் கல்வித்தகுதியை உயர்த்திக்கொள்ள தமிழ்ப் பட்டக் கல்வி அவசியம் என்ற கோரிக்கையை அரசிடம் தொடர்ந்து வலியுறுத்துக்கொண்டே இருந்தது. தமிழாசிரியர் சங்கத்தின் தமிழ்ப் பட்டக் கல்வி பிரச்சினை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்பதைத் தமிழர் பேரவை போன்ற அமைப்புகளும் அரசிடம் வலியுறுத்தி வந்துள்ளன. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் பெருமுயற்சியால், அப்போது சங்கத்தின் தலைவராக இருந்த சா. வீரையாவின் கடுமையான உழைப்பால், சங்கம் மலேசியா வாண்டோ கல்வி நிறுவனத்துடன் இணைந்து, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி இளங்கலைப் பட்டக் கல்வியைத் தொடங்கியது. பட்டக்கல்வியைப் பெறவேண்டும் என்ற துடிப்போடு இருந்த 30 தமிழாசிரியர்கள், சங்கத்தின் பெருமுயற்சியால் தமிழ் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றனர். பல்லாண்டு முயற்சிக்குப் பிறகு, சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் வலுவான கோரிக்கையை அரசு ஏற்று சிம் பல்கலைக் கழகத்தில் பகுதி நேரத் தமிழ்ப் பட்டக் கல்வியைத் தொடங்கியது. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவரான திரு. சி. சாமிக்கண்ணுவின் தொடர் முயற்சியும், பல சமூக ஆர்வலர்களின் உழைப்பும், பட்டக் கல்வி உருவாகக் காரணமாய் அமைந்தது. தேசியப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பட்டக் கல்வி ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்ற சங்கத்தின் வேண்டுகோள் தற்சமயம் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது, மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

### கற்றல் கற்பித்தல் கருத்தரங்கு

சிங்கப்பூரில் தமிழ் வாழும் மொழியாக இருக்க வேண்டுமெனில், பள்ளிகளில் தமிழ் கற்றல், கற்பித்தல், சிறப்பாக உன்னத நிலையில் இருக்க வேண்டும் எனச் சங்கம் கருதியது. 1971ஆம் ஆண்டு, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடும், கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவோடும் இணைந்து, தமிழ் கற்றல், கற்பித்தல், தொடர்பான சிறப்பு கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. கற்றல், கற்பித்தல், தொடர்பாகச் சிங்கப்பூரில் நடைபெற்ற முதல் கருத்தரங்கு இதுவே ஆகும். சிங்கப்பூர் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் உன்னத நிலையில் இருப்பதற்கான உத்தேசத் திட்டம் ஒன்றைக் கருத்தரங்கு முன்வைத்தது. தமிழாசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு கற்றலிலும், கற்பித்தலிலும், பல மாற்றங்களுக்கு வித்திடக் காரணமாக இருந்தது எனலாம்.

### தமிழ்மொழிப் போட்டிகள்

தமிழ்மொழியின் வளர்ச்சி வகுப்பிற்கு வெளியிலும் நடைபெற வேண்டும் என்ற நோக்கில், தமிழ் மாணவர்களின் எழுத்து, பேச்சு, சிந்தனைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் பலவிதமான போட்டிகளுக்குச் சங்கம் ஏற்பாடு செய்தது. 1973ஆம் ஆண்டு தொடங்கி, 10 ஆண்டுகளுக்கும் மேலாக இப்போட்டிகளைச் சங்கம் சிறப்பாக நடத்தியது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் கதை கூறுதல், பாடுதல், செய்யுள் ஒப்புவித்தல், பேசுதல், கட்டுரை எழுதுதல், சொற்போர் நிகழ்த்துதல் ஆகிய போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குகொண்டு பயன்பெற்றனர். இன்று, வானொலி, தொலைக்காட்சி, பொது அரங்கம் ஆகிய அங்கங்களில் நிகழ்ச்சி நடத்துனர்களாகவும், அறிவிப்பாளர்களாகவும் சிறந்து விளங்குவோர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் நடத்திய தமிழ்மொழிப் போட்டிகளில் பங்கெடுத்துப் பயிற்சி பெற்றவர்களாவர். சங்கத்தின் இலக்கியப் பகுதிச் செயலாளராக இருந்த திரு. வி. ஆர். பி. மாணிக்கத்தின் தொய்வில்லாப் பணியும், திரு. மு. அ. மசூது, திரு. சி. சாமிக்கண்ணு ஆகியோரின் கடுமையான உழைப்பும் தமிழ்மொழிப் போட்டிகளுக்குச் சமூகத்தின் பெருத்த ஆதரவை ஈட்டித் தந்தன.

### துணைப்பாட வகுப்புகள்

தமிழ் மாணவர்களின் தமிழ்த் தேர்ச்சியை உயர்த்தும் கடப்பாடு தன்னைச் சார்ந்திருப்பதைச் சங்கம் உணர்ந்திருந்தது. இந்திய மாணவர்களின் கல்வித்தேர்ச்சி நிலையை உயர்த்துவதற்காகச் சிண்டா 1992ஆம் ஆண்டு, கணிதம், ஆங்கிலம், அறிவியல் ஆகிய பாடங்களில் துணைப்பாட வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தது. இத்துணைப்பாட கல்வி உதவித் திட்டம், சிங்கப்பூர் முழுவதும் தொடங்கப்பட்டது. தமிழ்மொழியும் துணைப்பாட வகுப்புகளில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ்ப் பெற்றோர்கள் முன்வைத்தனர். சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், மறு ஆண்டே (1993), உமறுப்புலவர்

தமிழ்மொழி நிலையத்தில் தமிழ்த் துணைப் பாட வகுப்புகளைத் தொடங்கியது. ஆங்கிலப்பாடங்களின் தேர்ச்சி விகிதாச்சாரத்திற்குச் சிண்டா ஒரு காரணமாக விளங்கி வருவதுபோல, தமிழ்மொழியில் தேர்ச்சி விகிதாச்சாரம் உயர, சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் சிறந்த பங்காற்றி உள்ளது.

## உலகத் தமிழாசிரியர் மாநாடு

தமிழ் கற்றல், கற்பித்தலில், சிங்கப்பூரின் அனுபவத்தை உலகத் தமிழ் ஆசிரியர்களிடம் பகிர்ந்துகொள்ளவும், உலகத் தமிழ் ஆசிரியர்களை ஒருங்கிணைக்கவும், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், உலகத் தமிழாசிரியர் மாநாடு ஒன்றை சிங்கப்பூரில் கூட்டியது. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் சிறந்த பணியாகக் கருதப்படும் இம்மாநாடு, உலகத் தமிழாசிரியர்கள் ஒன்றிணைந்து செயல்படவும், தமிழ் கற்றல், கற்பித்தலில், உன்னதம் அடையவும், அடுத்த தலைமுறைக்குத் தமிழ்மொழியைக் கொண்டு செல்லவும் உதவியுள்ளது எனில் மிகையல்ல. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் இதுவரை மூன்று உலக மாநாடுகளை பொறுப்பேற்று நடத்தியிருப்பதோடு, தமிழ் புழங்கும் ஏனைய நாடுகளில் 8 மாநாடுகள் நடைபெற உதவிக்கரமும், ஒத்துழைப்பும் நல்கியுள்ளது. உலகத் தமிழாசிரியர் மாநாடுகளுக்குச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் தலைமை மையமாகவும், தளமாகவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. முதல் மாநாடு உருவாக்கத்திற்கு உழைத்த திரு. வி.ஆர்.பி. மாணிக்கமும், இப்பொழுது மாநாட்டுத் தொடர் பணிகளைக் கவனித்து வருகின்ற, திரு. சாமிக்கண்ணுவும், உலக மாநாட்டுச் சரித்திர ஏட்டில் நினைவு கூறத்தக்கவர்கள்.

## தமிழ்மொழி வாரமும் வளர்தமிழ் இயக்கமும்

இந்திய சமூகத்தின் குடும்பப் பிரச்சினைகள், மாணவர்களின் கல்வி நிலையை வெகுவாகப் பாதிப்பதை உணர்ந்த சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், சமூகத்தின் அக்கறைக்குரிய இவ்விஷயத்தைச் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்ல, சமூக அமைப்புகளின் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. தமிழ் மக்களிடையே கல்வி தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு சமூகத்தின் ஒத்துழைப்போடு தீர்வு காண முயல்வதும் கூட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. கல்வி, தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றைக் கருவாகக்கொண்டு நிகழ்ச்சிகளுக்குப் பெருமளவில் ஏற்பாடு செய்து, மக்களிடையே விழிப்புணர்வை உண்டுபண்ண கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. நிகழ்ச்சியை ஒருவாரம் முழுமையும் நடத்துவது எனவும், விழாவிற்குத் தமிழ்மொழி வாரம் எனப் பெயரிடுவது எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. தமிழ்மொழி வாரம் என்ற பெயரில் பெரிய அளவில் விழாக்கள், தீவு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டன. விழாக்கள் அனைத்தும் சமூக அமைப்புகளின் ஒட்டுமொத்த ஆதரவுடன்

நடைபெற்றன. தமிழ்மொழி வாரம் சமூகத்தில் பெரிய அளவிலான தாக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தின. தமிழ்மொழி வாரத்திற்கு மக்களிடையே அமோக ஆதரவு இருந்ததால், அரசாங்கமே முன்வந்து விழாக்களை நடத்த முனைந்தது. ‘வளர்தமிழ் இயக்கம்’ என்ற பெயரில் அரசாங்க ஆதரவுடன் இயக்கம் உருவானது. சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் முயற்சியில் உருவான தமிழ்மொழி வாரம், இப்பொழுது வளர்தமிழ் இயக்கமாகப் பெயர் பெற்று, சமூக ஆதரவுடன், பல்வேறு விழாக்களை மாதம் முழுதும் நடத்தி வருகிறது. தமிழ்மொழி வாரத்தினை வெற்றிகரமாக நடத்தி சமூகத்தில் விழிப்புணர்வு உண்டாக அதிக உழைப்பை நல்கிய வழக்கறிஞர் நிர்மலன் பிள்ளையின் பணி பாராட்டத்தக்கது.

## தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம்

சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வரலாற்றில் சிறந்த பங்களிப்பு செய்த அமைப்புகளின் வரிசையில் தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகத்திற்கு முக்கிய இடம் உண்டு. பள்ளிக்-கூடங்களில் தமிழ் மாணாக்கர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவ்வப்போது கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தீர்வு ஏற்பட தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம் செவ்வனே பணியாற்றி உள்ளது. தொடக்கப் பள்ளிகளில் தமிழ் பயிலும் மாணாக்கர்கள் தத்தம் பள்ளிக்கூடங்களிலேயே தமிழைப் பயிலும்போது, உயர்நிலைப் பள்ளி மாணாக்கர்கள் வேறு பள்ளிக்குச் சென்று தமிழ் பயில வேண்டிய இக்கட்டான நிலையை மாற்றி அமைத்ததில் தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகத்திற்கு பங்குண்டு.

## உங்கள் பிள்ளைகளால் இயலும்!

தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகளில் தலையானதாகக் கருதப்படுவது அவ்வியக்கம் நடத்திய தன்முனைப்புப் பேச்சுகளாகும். ‘முயன்றால் சாதித்துக் காட்டலாம்’ என்ற முழக்க வரியுடன், சமூக நிலைய நற்பணி மன்றங்களுடனும், சமூக அமைப்புகளுடன் அச்சங்கம் நடத்திய தன்முனைப்புச் சொற்பொழிவும், கலந்துரையாடல்-களும் சமூகத்தில் நல்ல பலனை உண்டாக்கின. மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் எனப் பல தரப்பாரும், ‘உங்கள் பிள்ளைகளால் இயலும்’ என்னும் நிகழ்வில் பெருமளவில் கலந்துகொண்டனர். தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்த திரு. வை. திருநாவுக்கரசு மக்களிடையே இருந்த நல்லாதரவைக் கருத்திற்-கொண்டு, தன்முனைப்பு கலந்துரையாடல்களைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த உதவினார்.

**வானொலியின் தன்முனைப்பு முழக்கம்!**

தமிழ்மொழியையும், தமிழ் மாணவர்களையும் மையமாக வைத்து, அவர்களுக்குப் பயன்படும் வகையில், கழகம் வானொலியில் ஏற்பாடு செய்த ‘வெற்றி நிச்சயம்’, ‘ஒளிமயமான எதிர்காலம்’ ஆகிய இரண்டு நிகழ்ச்சிகள் முக்கியமாகக் கருதப்பட்டன. வானொலியில் 2 ஆண்டுகளாக நடைபெற்ற இவ்விரு நிகழ்ச்சிகளும், தமிழ் மாணவர்களுக்குக் கல்வியில் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தின.

**பெரிய புத்தகங்கள் உருவாக்கம்**

தொடக்கப் பள்ளிக்குச் செல்லும்முன்னே, தமிழ் மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் மீது பற்றை உண்டாக்க வேண்டும் எனும் நோக்கில், பாலர் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை விடுத்த அமைப்புகளில் ஒன்று தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம். பாலர் பள்ளிகளில் கற்பித்தல் சிறப்பாக அமையப் பாடக்கருவிகள் தேவை என்பதை உணர்த்த ஆங்கிலப் புத்தகங்களுக்கு நிகராகப் பெரிய புத்தகங்கள் நான்கைத் தமிழில் வெளியிட்டுப் பாலர் பள்ளிகளுக்கும், தொடக்கப் பள்ளிகளுக்கும் அவை விநியோகம் செய்யப்பட்டன.

**திருக்குறள் விழா**

தமிழ் மாணவர்களிடமும், தமிழ்ப் பெற்றோர்களிடமும், தமிழ் உணர்வை வளர்த்திட தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், திருக்குறள் விழாவை நன்கு பயன்படுத்தி வந்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுவரும் திருக்குறள் விழா, தமிழ்ச் சமூகத்தினரால் பெரிதும் பாராட்டப்படுகின்ற ஒரு விழாவாகும். தமிழ்மொழி, பண்பாடு, கல்வி ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு, கழகம் பல சிறந்த சொற்பொழிவுகளை இதுகாறும் வழங்கியுள்ளது. இதற்காகச் சிறந்த தமிழ்ப் பேச்சாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். பெற்றோர்களையும், மாணவர்களையும் மையமாக வைத்து ஏற்பாடு செய்யப்பட்ட விழா, இப்பொழுது மாணவர்களின் தமிழ் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் பலவிதமான போட்டிகளை நடத்தி வருகிறது. மாணவர்களின் மொழித்திறன்களை வெளிக்கொணரும் தமிழ்மொழிப் போட்டிகள், ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும், நல்வரவேற்பைப் பெற்று மாணவர்களிடம் நல்ல பலனை விளைத்துள்ளன.

திரு. மு. ஹரிகிருஷ்ணனைத் தலைவராகக் கொண்டு இயங்கும் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், தமிழ் மாணவர்களின் மொழி நலனிலும், தமிழ்க் கல்வி வளர்ச்சியிலும், ஆர்வம் காட்டி வருகிறது. இவர் தொடங்கியுள்ள பேச்சாளர் மன்றம், தமிழ் மாணவர்களிடையேயும், இளையோர்களிடமும், தமிழ்ப் பேச்சாற்றலை வளர்க்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது.

**தமிழ் எழுத்தாளர் கழகம்**

சமீப காலமாக, தமிழ் மாணவர்களின் மொழி நலனில் அக்கறையும், சிரத்தையும் காட்டி வரும் அமைப்பு தமிழ் எழுத்தாளர் கழகம். தமிழ்மொழியின் தொடர் வளர்ச்சிக்கு எழுத்தாளர்கள் மிக முக்கியம் எனவும், எழுத்தாளர்கள் பள்ளியிலிருந்துதான் உருவாக்கப்பட வேண்டும் எனக் கழகம் திண்ணமாக நம்புகிறது. 1995ஆம் ஆண்டுக்குப் பிறகு, சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், தனது பார்வையைத் தமிழ் மாணவர்கள் மீது செலுத்த ஆரம்பித்துள்ளது. மாணவர்களின் தமிழ்ப்பற்றை வளர்க்கவும், அவர்கள் தமிழைச் சரளமாகப் பேசவும், பிழையின்றி எழுதவும், பலவிதமான தமிழ்மொழிப் போட்டிகளை நடத்தி வருகின்றது. மாணவர்களிடையே இலக்கியக் கதாபாத்திரங்களை அறிமுகப் படுத்துவதற்காக, பாலர் வகுப்பு தொடங்கி, தொடக்க நிலை 4 வரை பயிலும் மாணவர்-களுக்கு மாறுவேடப் போட்டியைக் கழகம் சிறப்பாக நடத்திவருகிறது. மாணவர்களின் சிந்தனைத்திறன், கற்பனைத்திறன் ஆகியவற்றை வளர்க்கக் கதை கூறும் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றை வருடந்தோறும் நடத்தி வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவரான கண்ணதாசனின் பாடல்களில் உள்ள மதிப்புக்களை-யும், சிறப்புக்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கழகம், ஆண்டுதோறும் கண்ணதாசன் விழாவை ஏற்பாடு செய்வதோயு, விழாவில் கண்ணதாசன் பாட்டுப் போட்டியையும் நடத்தி வருகிறது.

சிங்கப்பூரின் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு எழுத்தாளர் கழகம், தேசிய நூலக வாரியம், சிங்கப்பூர் கலைகள் மன்றம் போன்ற அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றி வருகிறது. தமிழ் எழுத்தாளர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ‘முத்தமிழ் விழா’, சிங்கப்பூரில் நடைபெறும் தமிழ் விழாக்களில் சிறந்த ஒரு விழாவாகப் போற்றப்படுகிறது. தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், அங்கீகரிக்கவும், தமிழவேள் கோ. சாரங்கபாணியின் பெயரில் விருது வழங்கப்படுகிறது.

தமிழ்க் கல்வியின் நாட்டமுடைய அனைத்து நடவடிக்கைகளிலும், தமிழ் எழுத்தாளர் கழகம், மற்ற சமூக அமைப்புகளுடன் இணைந்து, தோள் கொடுத்து வருகிறது.

மேற்கண்ட அமைப்புகளோடு, சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும், தமிழ்க் கல்வியின் பிரதான தூண்களாக விளங்குகின்ற தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுக்கும் பல முக்கிய அமைப்புகள் தொடர்ந்து போட்டிகளையும், நடவடிக்கைகளையும், விழாக்களையும் நடத்திவருகின்றன. தமிழ்க் கல்விக்கு ஆக்கமூட்டும் நடவடிக்கைகளை இவை மேற்கொண்டு வருகின்றன. மாதவி இலக்கிய மன்றம், சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்திச் சங்கம், மக்கள் கவிஞர் மன்றம், கவிமாலை, தங்கமீன் இலக்கியக் களம் ஆகிய அமைப்புகளும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழ்க் கல்விக்கும் பாடுபட்டுவருகின்றன.

**நிதி உதவி**

தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் சமூக அமைப்புகள் நிதி ஆதரவின்றி நிகழ்ச்சியை நடத்திடவும், வெற்றி காணவும் இயலாது. சமூக அமைப்புகள் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருவதைப் பதிவு செய்கின்ற நேரத்தில், நிதி ஆதரவு அளித்து வருகின்ற நிறுவனங்களையும் கண்டிப்பாகப் பாராட்டி, அவற்றின் பணியை நினைவு கூர்வது மிக முக்கியமாகும். அந்த வகையில், தமிழ்ச் சமூகம் நிதி ஆதரவு வழங்கி வருகின்ற நிதி நிறுவனங்களுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.

MES குழுமம், MMI, லிட்டில் இந்திய கடைக்காரர்கள் சங்கம், இந்திய உணவுக் கடைக்காரர்கள் சங்கம், ஆனந்த பவன், ஜோதி புஷ்பக்கடை, காயத்ரி, அப்போலோ, அபிராமி, ஹனிஃபா டெக்ஸ்டைல்ஸ், போப் ராஜு, முஸ்தஃபா அறக்கட்டளை, ஜோதி மாணிக்கவாசகம், செல்வி ஸ்டோர், கோமள விலாஸ் ஆகிய நிறுவனங்கள் சிங்கப்பூரின் தமிழ் வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்டி, நல்லெண்ணத்தைப் புலப்படுத்திய நிறுவனங்களாகும்.

பள்ளியில் மாணவர்கள் பயிலுகின்ற தமிழை, பள்ளிக்கு வெளியே எடுத்துச் சென்று, மாணவர்களையும் பெற்றோர்களையும் நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தி, தமிழ்த் தீபம் அணையாமல் சமூக அமைப்புகள் காத்து வந்திருக்கின்றன. தமிழ்மொழியைத் தங்கள் நிகழ்ச்சிகளில் பிரதானமாகக் கருதிப் பல சிரமங்களுக்கு இடையே நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. அரசாங்கம் தமிழுக்குச் சமதகுதியை வழங்கியிருப்பதை நன்றியுடன் நினைவுகூறும் தமிழ்ச் சமூக அமைப்புகள், தங்களது எதிர்காலச் சவால்களையும் நன்கு உணர்ந்து செயல்பட்டு வருவது சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகும்.

# சிங்கப்பூரில் தமிழ் வளர்த்த அறிஞர்கள்

**முனைவர் மா இராஜிக்கண்ணு**
துணை விரிவுரையாளர்
சிம் பல்கலைக்கழகம்

**தமிழவேள் கோ சாரங்கபாணி**

உயர்தனிச் செம்மொழியாம் தமிழன்னைக்கு அணி செய்தவர்கள் பலர். அவர்தம் தொண்டினால் சிங்கப்பூரில் தமிழ்மொழி நாடோறும் வளர்ந்துவருவது கண்கூடு.பொன்விழா படைக்கும் நம் நாட்டில் அம்மொழியைப் பேணி வளர்ப்பவர்கள் மொழியின்பால் நாட்டங் கொள்ளும் நற்றமிழ் அறிஞர்களின் தொண்டு அளப்பரியது. சிங்கையில் தமிழர்கள் காலூன்றியதிலிருந்து இன்றுவரை தமிழ் செம்மாந்து விளங்குகிறது. சிங்கப்பூரில் தமிழ் வளர்த்த தமிழறிஞர்கள் பலர் ஆயினும், இருவரைப் பற்றியே என் கட்டுரை அமைகிறது.

என் நோக்கில் முதன்மையானவர் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் புகழ் சேர்த்த தமிழவேள் கோ சாரங்கபாணி அவர்களே ஆவர். இந்திய சமூகத்திற்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பல்லாற்றானும் தொண்டாற்றிய அவரை அறியாதார் இலர். அன்னவர் இந்நாட்டில் தமிழர்கள் தமிழ்மொழியைப் கேணிக் காத்திடத் தமிழ்முரசு நாளேட்டின் வாயிலாக ஊக்கம் அளித்தவர்.

தமிழவேள் அவர்கள் மூன்று அணுகுமுறைகள் வாயிலாகத் தமிழமொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டார் எனலாம். தமிழ் முரசு நாளேட்டின் வழி தமிழர்களைத் தட்டி எழுப்பினார் எனில் மிகையாகாது. எண்பது ஆண்டு விழாவைக் காணும் தமிழ் முரசு தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரிய பங்குகனை ஆற்றிவருவது பெருமையுடைத்து. அவர் உயிரோடிருந்த காலத்தில் அவ்வப்போது முரசில் தலையங்கம் எழுதி தமிழ்மொழிக்குப் பெருமை சேர்த்தார். தமிழறிஞர்களின் அரிய கட்டுரைகளை முரசில் இடம்பெறச் செய்தார். இதனால் தமிழ் மக்கள் பயனடைந்தார்கள் என்பதில் ஐய்யமில்லை. மலேசியா. சிங்கப்பூர் வாழ் தமிழ் இளைஞர்களின் எழுத்தாற்றலை வளர்க்க இணை இதழாக 'மாணவர் மன்ற மலர்' என்பதனை உருவாக்கினார். (இந்நாளில் மாணவ முரசு என்று அழைக்கப்படுகிறது)

'மாணவப் பருவம் முதல் எழுத்து ஆர்வத்தை வளர்ப்பதற்காகத் தமிழ் முரசில் 1952 இல் மாணவ மணிமன்ற மலரைத் தொடங்கினார். ஏராளமான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் கொண்ட ஆண்டு மலர்களையும் சிறப்பு மலர்களையும் வெளியிட்டார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளில் ஞாயிறுதோறும் வெண்பாக்கள் நிறைந்த முரசாக வெளிவந்தது நினைவுகூரத்தக்கது. அவ்வமயம் தமிழ் முரசின் துணையாசிரியராகப் பணிபுரிந்த அமரர் முருகு சுப்பிரமணியம் அவர்கள் இப்பகுதியை நன்முறையில் வழிநடத்திச் சென்றார்.

"கவிஞர்களில் பெரும்பாலோர் முறையான யாப்பிலக்கணப் பயிற்சி தரமான மரபுக் கவிதைகளை எழுதவும் அறுபதுகளின் வெண்பாப் போட்டியும், இலக்கண விளக்கங்களும் கவிதைப் பக்கமும் பெரிதும் துணைபுரிந்தன"
(இலக்கியம் வளர்த்த தமிழவேள் சாரங்கபாணி, பக்கம் 6)

என்னும் கூற்று நோக்கற்பாலது.

1952ஆம் ஆண்டில் தமிழர் திருநாள் என்னும் பெருவிழா கொண்டாட்டத்தைத் தொடங்கிவைத்தார். அவ்விழா சிங்கப்பூர் முதல் பெர்லிஸ் (மலேசிய மாநிலம்) வரை மிக்க சிறப்புடன் கொண்டாடப்பட்டது. விழாவுக்கெனச் சிறப்பினை நல்க தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுதோறும் தமிழ்ப் பேராசிரியர் இருவரை அழைத்துச் சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடு செய்தார். மேடைதோறும் சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் முன்னேற்றத்திற்காகச் சொற்பொழிவு ஆற்றித் தமிழர்களைத் தட்டி எழுப்பிய பெருமை அன்னாரையே சாரும். அந்நாளில் சிங்கப்பூரில் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்த பகுதிகளான லோரோங் லாலாட், ஜூச்சியாட், ஜாலான் காயு, நேவல் பேஸ், பாசிர் பாஞ்சாங், புக்கிட் பாஞ்சாங், துறைமுகப் பகுதி போன்றவற்றில் தமிழர் திருநாள் கொண்டாடப்படும். இன்று சிங்கப்பூர் மாதவி இலக்கிய மன்றம் ஆண்டுதோறும் தமிழர் திருநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

மலாயாப் பல்கலைக் கழகம் சிங்கப்பூரில் இயங்கிய காலத்தில்(1955) இந்தியப் பகுதியை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசால் வரலாற்று ஆசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி என்பார் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டார். அன்னவர் தமிழுக்குப் பதிலாக வடமொழியைப் பரிந்துரை செய்தார். இஃது இங்கிருந்த தமிழர்களிடம் வெறுப்பினை உண்டாக்கியது. வீறுகொண்டெழுந்த தமிழவேள், தமிழறிஞர் அ.சி. சுப்பையா, சா.சி. சின்னப்பனார் போன்றோர் சாஸ்திரி அவர்களுக்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

சாஸ்திரி அவர்கள் ஏமாற்றத்துடன் இந்தியா திரும்பினார். 2.10.1956 இல் மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வியல் துறை உருவாக்கப்பட்டது. பேராசிரியர் முத்து இராசாக்கண்ணனார் அவர்கள் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தது நினைவுக்-கூரத்தக்கதாகும். (இலக்கியம் வளர்த்த தமிழவேள் சாரங்கபாணி, பக்கம் 6)

தமிழவேள் அவர்கள் முயற்சியால் ‘தமிழ் எங்கள் உயிர்‘ என்னும் பெயரில் நிதி திரட்டப்பட்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்கள் இடம்பெற வழங்கப்பட்டது. 1959-இல் இப்பல்கலைக் கழகம் மலேசியத் தலைநகர் கோலாலும்பூருக்கு மாற்றம் செய்யப்பட்டது. அதனுடன் இந்தியக் கல்வியல் துறையும் சென்றுவிட்டது. ஆனால் இங்குத் தோற்று-விக்கப்பட்ட சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வியல் துறை இல்லாது போயிற்று.

தமிழவேள் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் தமிழ் வளர்ச்சிக்காக அவர் விதைத்த விதை இன்று வளர்ந்து பயன் தருகின்றதைக் கண்கூடாகக் காணலாம்.

> “சிங்கையில் தமிழ், தமிழர் சமுதாயம் தொடர்பான சிந்தனைகள் கோ.சா.வின் மனத்தில் எப்போதுமே இருந்து வந்தன. தமிழ் முரசைத் தமிழர்களின் குரலாகவும் சமுதாய வளர்ச்சிக்கான கருவியாகவும் பயன்படுத்திப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி முன்நின்றார்.”
> (சிங்கப்பூர்த் தமிழ் முன்னோடிகள், பக்கம் 170)

தமிழவேளின் நினைவாகத் தமிழ் முரசு நாளேடு தாங்கிவருவது அன்னவர்க்குப் பெருமை சேர்ப்பதாகும். ‘சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ்’ (SPH) நிறுவனத்தில் தமிழ் முரசு இணைந்துவிட்டது. எனினும் நாளேட்டின் முதல் பக்கத்தில் ‘நிறுவனர் தமிழவேள் கோ சாரங்கபாணி‘ என்னும் அவரது திருப்பெயர் அமைந்திருப்பது அன்னாரை என்றும் நினைவுகூரச் செய்கிறது.

தமிழவேள் அவர்களை நினைவுகூரும் வகையில் ‘மன்னார்குடி - திருத்துறைப்பூண்டி தாலுகா ஆதிதிராவிடர் சங்கம்’ என்னும் அமைப்பு, ‘தமிழவேள் நற்பணி மன்றம்’ என்னும் பெயரில் 2.7.1996 முதல் இயங்கிவருகிறது. முன்னாள் சிங்கப்பூர் அதிபர் திரு எஸ் ஆர் நாதன் அவர்களால் 18.1.2004 ஆம் நாளன்று கோ சாரங்கபாணி கல்வி அறக்கட்டளை

நிதி என்பது நிறுவப்பட்டது. மேலும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் ‘தமிழவேள் விருது’ என்பதனை ஆண்டுதோறும் எழுத்து, சமூகத் தொண்டு போன்றவற்றில் சிறந்து-விளங்கும் தமிழன்பர்களுக்கு வழங்கி வருகிறது. இவ்விருது கழகம் ஏற்பாடு செய்யும் ‘முத்தமிழ் விழாவன்று வழங்கப்படுகிறது. ‘தமிழவேள் நாடக மன்றம்’ என்ற அமைப்பும் இயங்கிவருவது பெருமைக்குரியது.

27.6.2015 ஆம் நாளன்று சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழக கலாசார அரங்கில் ‘முரசு’ என்னும் பெயரில் நாடகம் நடந்தேறியது. இது தமிழவேள் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டுவதாகும். திரு நல்லு தினகரன் அவர்களால் எழுதப்பட்ட இந்நாடகம் ரவீந்திரன் நாடகக் குழுவால் மேடையேறியது. தமிழவேள் பாத்திரத்தில் புகழ்பெற்ற கலைஞர் திரு சோ கார்த்திக்கேயன் அவர்கள் திறம்பட நடித்திருந்தார். திருமதி சாரங்கபாணி வேடத்தில் ஜில்லியன் டான் அவர்கள் நடித்திருந்தார். இது தமிழவேள் அவர்களை நினைவுகூர்வதாக அமைந்திருந்தது பெருமைபடத்தக்கதாகும்.
(காண்க : ‘முரசு’ காட்டிய தமிழவேள் சாரங்கபாணியின் கதை - தமிழ்முரசு 29.6.2015)

வாழ்நாள் முழுவதும் தமிழர் முன்னேற்றம், தமிழ்மொழி வளர்ச்சி ஆகியவற்றிற்கு அரும்பாடுபட்ட தமிழவேள் அவர்களின் திருப்பெயர் சிங்கப்பூர் வரலாற்றில் என்றும் நிலைத்து விளங்குவதாக. மறைந்த சிங்கப்பூர் முதல் பிரதமர் திரு லீ குவான் இயூ அவர்கள் தமிழவேள் பற்றி பெருமையாகப் பாராட்டியுள்ளார்.

> *‘Tamil is the spoken and written language among the majority of Indians in Singapore. Sarangapany’s efforts to promote the language contributed to the providence of the language among Indians.’*
>
> (Ismath Mohamed 2013, the Legacy of G Sarangapany)

தமிழ்ப் பெருமகன் தமிழவேள் அவர்களின் முரசு என்றென்றும் ஒலிக்கட்டும். நாமும் ஒளிர்வோமாக.

**திரு அ நா மெய்தீன்**

“தமிழ்க்கல்வி எனும்விளக்கு எரிவதற்கு
தம்முடலைத் திரியாக மாற்றிக் கொண்டு
இமைப்பொழுதும் சோராத உழைப்பு என்னும்
எண்ணெய்வார்த்த அரும் மனிதர் ஏ என் மெய்தீன்”

என்னும், நம் நாட்டு முதுகவிஞர் க து மு இக்பால் அவர்களின் புகழாரத்திற்கு உரியவர் அமரர் அ நா மெய்தீன் அவர்கள். உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப்பள்ளி என்றாலே அவர் பெயர்தான் நம் விழித்திரையில் விரியும். ஆரம்பக் கல்வி சிறிதளவே கற்றிருந்தாலும் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியில் அதிக நாட்டம் கொண்டவர். ஒரு நிறுவனத்தில் சாதாரண ஊழியராகவே கடைசிவரை பணிபுரிந்தார். அன்பான பார்வையும் எளிய தோற்றமும் மெலிந்த உடலும் உறுதிமிக்க நெஞ்சமும் கொண்டவர். அவரை இந்நாள் இளைஞர் பலர் அறியார்.

சிங்கப்பூரில் இயங்கும் ‘கடையநல்லூர் முஸ்லிம் லீக்‘ என்னும் அமைப்பால் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளியில் அதிகமான பிள்ளைகள் பயின்றனர். அவர்களுக்கு உயர்நிலைக் கல்வியும் அளிக்க வேண்டும் என்னும் நன்நோக்கில் உயர்நிலைப் பள்ளியை உருவாக்கும் திட்டம் ஏற்பட்டது. அத்திட்டத்தினை வழிநடத்திச் செல்ல அ நா மெய்தீன் அவர்கள் முற்பட்டார். அதற்கென நிதியைத் திரட்டுவதில் அமைப்பு உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கலானார்.

அ நா மெய்தீன் அவர்கள் தம் குழுவினருடன் கொடைவள்ளல் டத்தோ லீ கோங் சியான் அவர்களைக் காணச் சென்றார். "வசூல் பணியைத் தொடங்கி ஏழெட்டு மாதங்கள்ளாகிறது. இதுவரை எங்களால் சேர்க்க முடிந்தது 2,000 வெள்ளிதான். தாங்கள் ஒரு பெரிய தொகையை அளித்தால், அதனைப் பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லி உற்சாகத்துடன் எங்களால் வசூலில் இறங்க முடியும்’ என்று டத்தோ அவர்களிடம் கூறினார். **(மெய்தீன் என்னும் மாமனிதர், பக்கம் 63)**

இதனைக் கேட்டு மனம் நெகிழ்ந்த வள்ளல் உடனே 10,000 வெள்ளிக்கான காசோலையை அளித்தார். குழுவினர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அன்னார்க்கு நன்றி கூறி விடைபெற்றுச் சென்றனர்.

அ நா மெய்தீன் அவர்களது சிந்தனையோட்டமும் பொதுநல ஆர்வமும் ஒரு செயலை முடித்துவிட முடிவு செய்தால் அதனை முடிக்கும்வரை ஓய்வதில்லை. கிடைத்த நன்கொடையைக் கொண்டு உயர்நிலைப் பள்ளி கட்டும் பணி தொடங்கியது.

1959இல் சிங்கப்பூர் முதலமைச்சராக இருந்த திரு லிம் இயூ ஹாக் அவர்கள் மெய்தீனுடன் நெருங்கிய நட்பு பூண்டவர். அதுபோல தமிழவேள் அவர்களிடமும் நெருங்கிய நட்பு கொண்டொழுகினார். திரு லிம் இயூ ஹாக் அவர்கள் 9.4.1959 ஆம் நாளன்று எண் 41 மேக்ஸ்வெல் ரோட்டில் உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

கட்டட வேலை தொடங்கிய காலத்தில் 18,000 வெள்ளி நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனைத் தமிழவேளிடம் அ நா மெய்தீன் அவர்கள் முறையிட்டார். அன்னார் ஆவன செய்வதாக உறுதி அளித்தார். தமிழ்முரசு நாளிதழும் தமிழர் சீர்திருத்த சங்கமும் நிதி திரட்ட ஏன்பாடுகள் செய்தன. 1959 ஆம் ஆண்டு டிசம்பர் 25, 26 ஆம் நாள்களில் நாடு முழுவதும் ஆயிரம் தொண்டூழியர்கள் கொடி தினத்தின் வாயிலாக நிதி திரட்டினார்கள். மொத்தம் 16,000 வெள்ளி திரட்டப்பட்டது.

உயர்நிலைப்பள்ளி கட்டும் அவர் கனவு நனவானது. 1960இல் அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு யோங் நியுக் லின் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தொடக்கப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளியும் ஒரே கட்டடத்தில் இயங்கிவந்தன. அவ்வாண்டில் உயர்நிலைப் பள்ளியில் 23 மாணவர்கள் சேர்ந்தனர்.

பள்ளியில் முறையான நூலகம் அமைக்க மெய்தீன் அவர்கள் அரும்பாடுபட்டார். அதற்கென அவர் மனம் உளைச்சல் கொண்டார். ஊருக்குப் பயணம் மேற்கொண்டார்.

> ‘நூலகத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது முக்கியமான நாட்டம். அங்கு சென்று சேர்ந்ததும் தெரிந்தவர்கள் வேண்டியவர்களிடமெல்லாம் சொல்லிவைத்து நல்ல நூல்களைச் சேகரிக்க ஆரம்பித்தேன். அந்தச் சமயத்தில் ம நா இப்ராஹிமும் இந்தியாவுக்கு என்னுடன் வந்துவிட்டார். எனது முயற்சிக்கு அவர் துணையாக இருந்தார். ஏறத்தாழ 1,700 நூல்கள்வரை சேகரித்துவிட்டேன். நூல்களைச் சேகரித்து 3 மாதங்களில் எனக்கு இங்கு அனுப்புவதற்கு ஏற்பட்ட 800 ரூபாய்

செலவையும் பள்ளிக் கணக்கில் சேர்க்காது என் சொந்த செலவாகவே பற்று எழுதிக்கொண்டேன்.*

**(நெஞ்சில் பதித்த நினைவுச் சுவடுகள், பக்கம் 106, அ நா மெய்தீன்)**

இங்ஙனம் பொதுநல வாழ்க்கையில் தன்னலமின்றி வாழ்ந்தவர். அவரைப் போன்ற அன்பர்கள் சிலரே உள்ளனர். அவர் எழுதிய 'நெஞ்சில் பதித்த நினைவுச் சுவடுகள்' என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்கிய தமிழறிஞர் அமரர் வை திருநாவக்கரசு அவர்கள்,

'மெய்தீன் அவர்கள் அரை நூற்றாண்டுக் காலம்
சமுதாயத்திற்கும் தமிழுக்கும் இடையறாத
உழைப்பை அளித்தவர். தென் கிழக்கு ஆசியாவில்
ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவித்த
முன்னணி தொண்டர்.

எனப் புகழாரம் சூட்டி மகிழ்வது என்றும் நெஞ்சில் நிலைக்கவல்லது. மேலும் மூத்த தமிழாசிரியரும் கடையநல்லூர் முஸ்லிம் லீக் செயலாளருமான திரு மு அ மசூது அவர்கள்,

'கல்வியில் பின்தங்கியிருந்த மக்களைத் தட்டியெழுப்பிக்
கல்வியின் அருமை பெருமைகளை உணரச் செய்து
கல்விச் சாலையையும் எழுப்பி, கல்வி அறங்காவல் நிதியையும்
உருவாக்கி, இன்று பல நூறு இளைஞர்கள்
உயர்கல்வி பெற நெம்புகோலாய் இருந்தவர்
அ நா மெய்தீன்.**(மெய்தீன் என்னும் மாமனிதர், பக்கம் 195)**

என்னும் புகழுரை வானத்தில் உறைந்திருக்கும் என்று நம்புவோமாக.

பல காரணங்களால் உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளி மூடும் நிலை வந்தபோது உடைந்துபோனார். ஆனால் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டார். எனினும் உமறுப்புலவர் பெயர் நிலைக்க வேண்டும் என்பதனை மனத்தில்கொண்டு, செயிண்ட் ஜியார்ஜஸ் தமிழ்மொழி நிலையத்தினை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் எனப் பெயர் மாற்றக் கோரி அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார். இவ்வேண்டுகோளை நன்கு ஆராய்ந்த அரசு அவ்வண்ணமே செய்தது. 1983ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் கண்ட நிலையம் இன்றும் புகழுடன் திகழ்கிறது. கல்வி அமைச்சின் மொழிவள கூடமாக விளங்கிவருவது கண்டு பெருமிதம் கொள்வோம்.

அமரர் அ நா மெய்தீன் அவர்களை நினைவுகூரும் வண்ணம் 'ஏ என் மெய்தீன் விருது' 2011 ஆண்டில் தொடக்கம் கண்டது. ஈராண்டுக்கு ஒருமுறை இவ்விருது தமிழ்த்

தொண்டு ஆற்றியோர்க்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்வு அவரைப் போற்றிப் பாராட்டுவதாக அமைகிறது. அவர் புகழ் தமிழ்க் கல்வி வரலாற்றில் என்றும் நிலையானதாக இருக்கும். அவர் ஊன் உடல் மறையினும் புகழுடம்பு யாண்டும் மறையாது நிலைபெறுவதாக.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்னும் குறட்பாவுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் என்பதில் எவர்க்கேனும் ஐயம் உண்டோ?

**மேற்கோள் நூல்கள்**


1. இலக்கியம் வளர்த்த தமிழவேள் கோ சாரங்கபாணி, *2013, தமிழ்முரசு & National Arts Council, Singapore*

2. சிங்கப்பூர்த் தமிழ் முன்னோடிகள், *2014, செ.ப. பன்னீர்செல்வம், தங்கமீன் பதிப்பகம், சிங்கப்பூர்*

3. நெஞ்சில் பதித்த நினைவுச் சுவடுகள், *1959, தோழமைப் பதிப்பகம், கும்பகோணம், தமிழ்நாடு*

4. மெய்தீன் என்ற மாமனிதர், *டாக்டர் அசகய்யது இப்ராஹீம் (ஹிமானா சையது), 2013, சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், சிங்கப்பூர்*

5. The Legacy of G Sarangapany*, 2013, Irshath Mohamed, Thamizhavel Narpani Mandram, Singapore*

# சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் தமிழாசிரியர்கள்

**பொன் சுந்தரராசு**
மேனாள் முதன்மையாசிரியர் (தமிழ்மொழி)
தமிழாசிரியர், கலைகள் பள்ளி

**முன்னுரை**

ஒரு நாட்டின் புற அழகை மேம்படுத்துவது கணக்கியலும் அறிவியலும் என்றால், அந்நாட்டின் அக அழகைப் பொலிவுறச் செய்வது அந்நாட்டின் இலக்கியங்களே! ஒரு நாட்டு மக்களின் உள்ளத்து உணர்வுகளையும் அவர்கள் அடைந்த ஏற்றங்களையும் இறக்கங்களையும் உணர்ச்சி மோதல்களையும் அழகுணர்ச்சியோடு வெளிப்படுத்தும் சிறப்பு இலக்கியங்களுக்கு உண்டு. பொதுவாக மக்களின் வாழ்க்கையைக் காலக்கணக்கோடு கணித்துக் கூறுவது இலக்கியங்கள். அதனால்தான் இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி என்று சிறப்பிக்கப்படுகின்றன.

சிங்கப்பூர் இலக்கியம் சுமார் 185 ஆண்டுகளைக் கடந்து வளர்ச்சியையும் உன்னத நிலையையும் நோக்கிப் பீடு நடை போடுகின்றது. 'பிரான்சிஸ் பி இங்' என்பார்தான் முதன் முதலில் 'டி எஸ் எலியட்' என்ற நூலை இங்கிலாந்தில் 1935இல் பதிப்பித்ததாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (T.S. Eliot by Francis P.Ng, 1935) சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சியில் தமிழ் இலக்கியங்களுக்குச் சிறப்பான இடமுண்டு. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் 1872ஆம் ஆண்டு முதல் இம்மண்ணில் வேர்விட்டு வளர்ந்து வருகிறது. தமிழ் இலக்கியம் சிங்கை மண்ணில் செழித்து வளர உழைத்தவர்களுள் தமிழாசிரியர்களுக்குத் தனி இடம் உண்டு. தமிழாசிரியர்களால் சிங்கைத் தமிழ் இலக்கியம் அழகு பெற்றது என்றுகூடச் சொல்லலாம். அவர்களுள் பலர் சீரிய இலக்கியப் பணியில் ஒன்றாகிய படைப்பிலக்கியத்தின் புதினத் துறையில் (fiction) ஈடுபட்டு எடுப்பான இலக்கியங்கள் படைத்துள்ளனர். இக்கட்டுரை அவர்களை அடையாளம் காட்டும்.

ஆனால், திரு. பா. கேசவன், திரு. சி. முத்தையா ஆகிய இருவரும் சிங்கப்பூர்த் தமிழ்மொழியின் தரத்தையும் தமிழாசிரியர்களின் பெருமையையும் உலக அரங்கில் உயர்த்தியவர்கள். அவர்களைத் தவிர்க்க இயலவில்லை.

**பா கேசவன்**

சிறந்த கல்விமானாகிய திரு பா. கேசவன் அவர்கள் 36 ஆண்டுகள் தமிழ்க் கல்விப் பணியாற்றியுள்ளார். இவர் இயல்பாகவே எழுதுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவர்

கட்டுரை நூல்கள் பல எழுதியுள்ளார். ஒரு சிறுகதை நூலும் நாடக நூலும் விரைவில் வெளிவரவிருக்கின்றன. இருந்தாலும் எல்லாற்றையும் விஞ்சி நிற்பது இவர் வெளியிட்டுள்ள 'இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம் ' எனும் இலக்கண நூல்தான். தமிழுலகம் போற்றும் அரிய நூலான இது தமிழக அரசின் சிறந்த நூலுக்கான (இலக்கணம்) விருதும் (2006), அனந்தாச்சாரியார் அறக்கட்டளையின் சிறந்த நூலுக்கான விருதும் (2006) பெற்றுள்ளது. சிங்கப்பூர்த் தமிழும் தமிழாசிரியரும் உலக அரங்கில் நினைவில் கொள்ளப்படுவதற்கு வழி வகுத்த நூல் இதுவென்றால் அது மிகையன்று.

**சி முத்தையா**

சுமார் 40 ஆண்டுகள் கல்வித் துறையில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். பணி ஓய்வு பெறுவதற்கு முன் கல்வியமைச்சில் மூத்த பாடத்திட்ட சிறப்பு அதிகாரியாகப் பொறுப்பு வகித்தார். இவர் மாணவர்களுக்கு உதவும் பல கையேடுகளையும் சிறிய நூல்களையும் வெளிட்டிருந்தாலும் பணி ஓய்வு பெற்ற பிறகு வெளியிட்ட 'லட்சுமியின் மாணவர் தமிழ் அகராதி' (2008) எனும் நூல் உச்சிமேல் வைத்துப் உயர்த்தத் தக்க-தொரு முயற்சியாகும். சிங்கப்பூர்த் தமிழாசிரியர் ஒருவர் தமிழ் அகராதி வெளிட்டமை போற்றுதலுக்குரிய ஓர் அரிய பணியாகும்.

**S ஜேசுதாசன்**

சுமார் 45 ஆண்டுகாலம் தமிழிசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தற்போது அவருக்கு வயது 85. அவர் ராஃபிள்ஸ் கல்வி நிலையத்தில் தமிழாசிரியராக இருந்தபோது, 'முன்னேறு வாலிபா...'என்று தொடங்கும் பாடலை எழுதினார். அப்பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1967ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் இருந்த அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் பிள்ளைகள் ஒரு சமூகப் பாடலாகப் பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

1985 முதல் சிங்கைத் தேசிய நாள் கொண்டாட்டத்தில் நான்குமொழிச் சமூகப் பாடல்கள் இடம்பெறத் தொடங்கியபோது, தமிழ்ப் பாடலுக்கான இடத்திற்கு முன்னேறு வாலிபா பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை அப்பாடல் சிங்கையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தேசிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பாடலை இயற்றிய திரு ஜேசுதாசன் ஒரு முன்னோடி தமிழிசிரியர் மட்டுமன்று, ஒரு முன்மாதிரித் தமிழாசிரியருமாவார்.

**மு தங்கராசன்**

இவர் 1959ஆம் ஆண்டு மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு வந்து தமிழ்ப் பள்ளிகளில் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும், உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப்-பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். அத்துடன் இன்னும் பல்வேறு இடங்களிலும்

பணிபுரிந்துள்ளார். 2001ஆம் ஆண்டு இறுதிவரை தமிழாசிரியராகப் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றவர். கவிதை நாடகம் சிறுகதை கட்டுரை எனப் பல துறைகளில் திரு தங்கராசன் அவர்கள் பல படைப்புக்களைப் படைத்துள்ளார். இவர் இதுவரை 25 நூல்கள் வெளியிட்டுள்ளார். இவர் மூத்த முன்னோடித் தமிழிசிரியர் அணியைச் சேர்ந்தவர் என்பது ஒரு பெருகைக்குரிய செய்தி.

**அமரர் அ பார்வதி**

சுமார் 40 ஆண்டுகள் தமிழிசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்ற பார்வதி அவர்கள் இளமையிலிருந்தே எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்டு எழுதி வந்தவர். அவர் கலைத்துறையிலும் பங்கெடுத்துள்ளார். 2015ஆம் ஆண்டு இவ்வுலகைவிட்டுப் பிரிந்து சென்ற பார்வதி அவர்கள் மூன்று கவிதை நூல்கள் வெளியிட்டுள்ளார். இளவேனிற் பூக்கள் (1997), அருள்மலர்கள்(2014), தமிழ் உலா( 2014) என்பனவே அவை. பார்வதி தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தமிழவேள் விருதும் பெற்றவர். இவர் அமைதியாக இருந்து அரும்பணியாற்றியவர்.

**திரு பெ சிவசாமி**

37 ஆண்டுகள் தமிழாசிரியர் பணியாற்றியவர் திரு சிவசாமி. தமிழார்வமும் பொதுத் தொண்டில் ஆர்வமும் கொண்ட இவர், தமிழா (2004), சிங்கப்பூரில் தமிழ்ப் பள்ளிகள் வேரிலிருந்து கிளைகள் வரை (2015) ஆகிய நூல்களை வெளியிட்டிருந்தாலும் 1990ஆம் ஆண்டு இந்தியர் பண்பாட்டு மாதத்தின் தொடர்பில் இவருடைய 'தனிமனிதன்' என்ற சிறுகதை நூல் வெளியிடப்பட்டமை குறிப்படத்தக்கது. பணி ஓய்வுக்குப் பின் 'தமிழ் அமுதம்' என்னும் இதழைக் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

**அமரர் நா கோவிந்தசாமி**

தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கிக் கல்விக் கழக விரிவுரையாளராக உயர்ந்தவர். சிங்கைத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். இவர் இதுவரை வேள்வி, தேடி, சிங்கைத் தமிழ்ச்சிறுகதைகள் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். பல நூல்களுக்குத் தொகுப்பாசிரியராக இருந்தவர். திறனாய்வுத் துறையிலும் இவர் மேலோங்கி இருந்தார்.

1994ஆம் ஆண்டு, தாய்லந்தின் 'தென்கிழக்காசிய விருது' இவருக்கு வழங்கப்பட்டது. கணினியில் தமிழ்மொழி இடம்பெறக் காரணமாய் இருந்தவர். அதனால், '

தமிழ் கணினித் தந்தை' என்றும் போற்றப்படுகின்றார். இவர் மறைவு சிங்கப்பூர்த் தமிழுக்கும் இலக்கியத்திற்கும் ஒரு பேரிழப்பாக ஆயிற்று.

**இராம கண்ணபிரான்**

சுமார் 40 ஆண்டுகள் தமிழாசிரியராகவிருந்து 1985 இல் ஓய்வு பெற்றவர். சிங்கப்பூரின் மிகவும் புகழ் பெற்ற மூத்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர்.

இவர் தம் படைப்புகளுக்காகப் பல பரிசுகளைப் பெற்றுள்ளார். தேசியப் புத்தக மேம்பாட்டு மன்றத்தின் புத்தகப்பரிசைப் பெற்ற சிறப்புக்குரியவர.1990ஆம் ஆண்டில் தென்கிழக்காசிய எழுத்தாளர் விருதையும் 1998ஆம் ஆண்டில் 'மாண்ட் பிளாங்க்' இலக்கிய விருதையும் பெற்றார். இலக்கியத்திற்காகக் 'கலாசாரப் பதக்கத்தை 1999ஆம் ஆண்டில் பெற்றுள்ளார்.

**இரா துரைமாணிக்கம்**

இவர் ஓர் இளங்கலைப் பட்டதாரி. சுமார் 47 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி-புரிந்துள்ளார். சிங்கப்பூரில் தமிழில் சிறுவர் இதழ் தொடங்கி நடத்தியவர்களில் முன்னோடி இவர். மாணவர் பூங்கா என்ற சிறுவர் இதழைப் பல ஆண்டுகள் நடத்தியுள்ளார். இவர் இதுவரை காலம் கடந்துவிட்டது, எல்லைக்கோடு, வளர்பிறை ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் துணைத் தலைவராக இருக்கும் இவர், கடந்த காலங்களில் பல பொது அமைப்புகளில் பொறுப்பான பதவிகள் வகித்துள்ளார்.

**பொன் சுந்தரராசு**

ஒரு முதுலைப் பட்டதாரியான இவர் 1970இல் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கித் தாய்மொழித்துறைத் தலைவர், முதன்மையாசிரியர் ஆகிய பதவிகளுக்கு உயர்ந்தார். 48 ஆண்டுகளாகத் தமிழ் கற்பிக்கும் பணியில் இருந்து வருகிறார்.

1963இல் எழுதத் தொடங்கிய இவர் இது வரை இருபதுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களும் ஒரு தொடர் நாடகமும் முப்பதுக்கு மேற்பட்ட தொலைக்காட்சி நாடகங்களும் இரண்டு தொடர் நாடகங்களும் எழுதியுள்ளார். 1973இல் சிறுகதை எழுதத் தொடங்-கினார். என்னதான் செய்வது? (1981), புதிய அலைகள் (1981), உதயத்தை நோக்கி (நாடகத் தொகுப்பு - 1990), பொன் சுந்தரராசு படைப்புக்கள் (2007), பொன் சுந்தர-

ராசுவின் சிறுகதைகள் (முன்னைய சிறுகதைகளின் மூன்றாம் பதிப்பு 2011) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவர் தம் இலக்கியப் படைப்புக்களுக்காக ஏராளமான பரிசுகள் பெற்றுள்ளார். இவர் ஒரு புகழ்பெற்ற முன்னாள் வானொலி, தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பாளர்.

**மு.அ.மசூது**

சுமார் 50 ஆண்டுகள் தமிழாசிரியர் பணி; சமூகப் பணி. பல்வேறு அமைப்புக்களில் பொறுப்பான பதவி வகிப்பவர். தொண்டுள்ளம் கொண்டவர். இவர் தம்முடைய பல்வேறு பணிகளுக்கிடையில் இலக்கியப் பங்களிப்பையும் மறக்கவில்லை. உணர்வுகளின் ஊர்வலங்கள்(1994), பிறைத்தோணி (1997) எனும் இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவர் சிறுவர் கதைகள், கிராமியக் கதைகள், மூக்குக் கண்ணாடி, சிறுவர் கவிதைத் தொகுப்பு, கிராமியக் கதைகள், போன்ற சிறுவருக்கான நூல்களைத் தொகுத்து வெளிட்டுள்ளார். இவர் ஒரு பன்முகத் திறனாளர்.

**முனைவர் சீதாலட்சுமி**

சிங்கப்பூரில் தமிழ்மொழியில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்மணி இவர். தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும்போதே தமிழ்மொழி, கதை, கவிதை, கட்டுரை சார்ந்த போட்டிகளில் அதிகமாகப் பங்கேற்றுப் பரிசுகளைப் பெற்றவர். பட்டிமன்றம், கவிதை வாசித்தல், படைப்பிலக்கியம் எழுதுதல் எனப் பல துறைகளில் சிறந்து விளங்குபவர்.

தேசியக் கல்விக் கழகத்தில் இணைப்பேராசிரியரான இவர் தனியாகவும் பிறருடன் இணைந்தும் 10க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகிய படைப்புத் துறையில் பல பரிசுகளைப் பெற்றுள்ளார். தேசியக் கலைகள் மன்றமும் சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸூம் (SPH) இணைந்து நடத்திய தங்கமுனை விருதுப்போட்டியில் 1995இல் தங்கமுனை விருதைப் பெற்றுள்ளார். முஸ்தபா தமிழ் அறக்கட்டளையின் 2010ஆம் ஆண்டுக்கான கரிகாலன் விருதைப் பெற்றுள்ளார்.

**திருமதி வீரப்பன் லெட்சுமி**

தமிழ்மொழி, இலக்கியத்தில் முதுகலை (M.A) பட்டம் பெற்றவர். பள்ளிப் பருவத்தில் எழுதத் தொடங்கிய இவர் இதுவரைப் பல கட்டுரைகள், சிறுகதைகள், சிறுவர் மேடை

நாடகங்கள், தொடர் நாடகங்கள் என நூற்றுக்கு மேற்பட்ட படைப்புகளைப் படைத்துள்ளார். 2001ஆம் ஆண்டில் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் தன் பொன்விழாவை முன்னிட்டு நடத்திய குறுநாவல் போட்டியில் இவர் எழுதிய 'புது வாத்தியார்' என்ற படைப்பு இரண்டாம் பரிசு பெற்றது.

**பூச்சோங் சேகர்**

தமிழ்மொழி, தமிழ் இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம் (BA) பெற்றுள்ள இவர் ஒரு இளம் தமிழாசிரியர். கதை, கவிதை, தொடர்கதை, நாவல், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள். திறனாய்வுக் கட்டுரைகள் எழுதுவதில் விருப்பமுடையவர். கதை, கவிதைப் பட்டறைகள் நடத்துதல் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டுள்ளார். புது வாழ்வு (சிறுகதைத் தொகுப்பு), என் நிலா (சிறுகதைத் தொகுப்பு), நண்பன் (கவிதைத் தொகுப்பு), அட்டைப்பெட்டிப் படுக்கையும் வெள்ளைத் தாடித் தாத்தாவும் (சிறுகதைத் தொகுப்பு) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

1983இல் சிறந்த கவிஞர் விருது, சிறந்த சிறுகதை விருது ஆகியவற்றைப் பெற்றுள்ள இவர் வளர்ந்துவரும் ஓர் இளம் எழுத்தாளர்.

தமிழாசிரியர்களுள் தம் படைப்புக்களை நூல்களாகத் தொகுத்துள்ளவர்கள்தாம் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளனர். இன்னும் தமிழாசிரியர் பலர் கதை, கவிதை, நாடகம் போன்ற தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுள் சிலரின் படைப்புக்கள் பிறர் வெளியிட்டுள்ள தொகுப்புக்களில் இடம் பெற்றும் உள்ளன. எழுத்தாளர்கள் தம் படைப்புக்களை நூல்களாக வெளியிடுங்காலை அவர்கள் பெயர்களும் நூலாசிரியர்கள் பட்டியலில் இடம்பெறும். அதன்வழித் தமிழாசிரியர்கள் இலக்கியத்திற்களித்த பங்கும் பதிவு செய்யப்படும்.

சிங்கப்பூரில் கடந்த 50 ஆண்டுகளாகத் (1965 – 2015) தமிழ்மொழிக் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியையும் மாற்றங்களையும் ஆவணப்படுத்தும் 25 கட்டுரைகள்.



ISBN: 978-981-11-1370-3

STTU

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்
Singapore Tamil Teachers' Union